ஓசை: 25 குரல்: 034 ஞாயிற்றுக்கிழமை 12 டிசம்பர் Sunday 12th December 2021. Postbox : 1615 Postbox : 1615 Phone: 011 7778700, 0117322760

பாரம்பரியம் பரைசாற்றும் பட்டாடைகளுக்கு ஒரே இடம்...!
SARITA Textorium
Right Place for Right Choice
#99, Main Street, Colombo - 11
Tel - 2446023, 2345649 | www.sarita.lk

ஞாயிறு
தினக்குரல்
THINAKKURAL
An Independent Daily Voice In Tamil
25th ANNIVERSARY 1997-2021
An Independent Daily Voice In Tamil
Registered in the Department of Post of Sri Lanka Under No.QD/151/ NEWS/2021
weekly@thinakkural.lk, www.thinakkural.lk

சர்வ லக்ஷணம் அடங்கிய சுபமுகூர்த்த பட்டுகளுக்கான ஒரே சாம்ராஜ்யம்!
SARITA Textorium
Right Place for Right Choice
#99, Main Street, Colombo - 11
Tel - 2446023, 2345649 | www.sarita.lk

பக்கங்கள்: 32 | விலை: ரூபா 50/-

## உள்ளே...



வெளிநாடுகளுக்கான கடன் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும்

# கடன் இல்லாத நாட்டையே சஜித்துக்கு கொடுப்போம்

**கடனுடன் நாட்டை கொடுக்கமாட்டோம் என்கிறார் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச**

**பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்**

நாங்கள் வெளிநாடுகளுக்கு செலுத்த இருக்கின்ற ஒவ்வொரு டொலரும் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும் என்பதனை ஜனாதிபதி, பிரதமரை சாட் சியாக வைத்து உறுதியுடன் இங்கு கூறுகின்றேன் எனத்தெரிவித்த நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச, அடுத்த வருடம் சஜித் அரசு வரும் என்று கூறினார்கள். அப்படி அவர் ஆட்சி வரும்போது நாம் கடன் இல்லாத நாட்டைத் தான் அவருக்கு கொடுப்போம். கடனுடன் நாட்டை கொடுக்க மாட்டோம் என்றார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள்

பக்கம் 04



## தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்கு முயற்சி

**சாணக்கியன் எம்.பி.குற்றச்சாட்டு**

**பா.கிருபாகரன், ந. ஜெயகாந்தன்**

தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் குற்றம் சாட்டினார்.



பக்கம் 04

அடுத்த வருடத்தில் நாட்டில்

## கொவிட் தொற்று முடிவுக்கு வரும்

**பொருளாதாரத்தை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முடியும்; பிரதமர் மகிந்த நம்பிக்கை**



**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

அடுத்த வருடத்தில் கொவிட் தொற்று நிலைமை முடிவுக்கு வந்து நாட்டின் பொருளாதாரத்தை திட்டமிட்டவாறு

பக்கம் 04

வரவு -செலவுத் திட்டத்தின்

## மூன்றாம் மதிப்பீடு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றம்

**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

இலங்கையின் 76 ஆவதும் கோத்தபாய ராஜபக்ச அரசின் 3 ஆவதும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவின் முதலாவதுமான 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாம் மதிப்பீடு 93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

பக்கம் 04

## 225 எம்.பி.க்களையும் கொல்ல வேண்டுமென்று கூறும் மக்கள்

**பாராளுமன்றத்திற்கு ஏன் குண்டுத்தாக்குதல் நடத்தவில்லை என கேட்கும் நிலையும் உருவாகியுள்ளது; டிலான் எம்.பி.**

**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

நாட்டில் மக்களுக்கு அரசியல் வெறுத்துவிட்டது, அன்று பாராளுமன்றத்திற்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட்ட போது எதிர்த்த மக்கள், இன்று ஏன் பாராளுமன்றத்திற்கு குண்டுத்தாக்குதல் நடத்தவில்லை என கேட்கு நிலை

பக்கம் 04

## அனைத்தும் இராணுவத் தளபதி வசமாகும் நிலை

**டொலர் பிச்சை எடுக்கும் நிலைமை**
**எதிர்க்கட்சித் தலைவர் சஜித்**

**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

நாடு போகிற போக்கைப் பார்த்தால் இறுதியில் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சரின் பொறுப்புகளையும் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கும்



பக்கம் 04

## அடுத்த இரு வாரங்களுக்குள் பூஸ்டரை செலுத்தி முடிக்கவும்

**ஜனாதிபதி பணிப்புரை**

எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் கொவிட் தொற்றுப் பரவல் ஏற்படுவதைக்கட்டுப்படுத்துவதற்காக, அடுத்த இரண்டு வாரங்களுக்குள் பூஸ்டர் தடுப்பூசி ஏற்றலை முழுமைப்படுத்துமாறு,

பக்கம் 04

பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்ட

## 35,000 கண்களும் யாருடையது?

**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

இலங்கையால் பாகிஸ்தானுக்கு தானமாக வழங்கப்பட்ட 35000 கண்களும் சிங்களவர்களுடையதா தமிழர்களுடையதா? அவ்வாறு கண்களை தானம் செய்தவர்களின் பெயர் பட்டியல் எங்கே? எனகேள்வி எழுப்பிய தமிழ் தேசியக்கூட்டமைப்பின் யாழ் மாவட்ட எம்.பி. யான எஸ்.ஸ்ரீதரன் ஆட்கள் காணாமலாக்கப்பட்ட நிலையில் தற்போது யாழ் கடற்கரையோரத்தில் கரையொதுங்கிய உடல் கூட காணாமலாக்கப்பட்டுள்ளது என்றார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,

பக்கம் 04

## புதிய எரிவாயு சிலிண்டர்களும் வெடிக்கின்றன!

**க.பிரசன்னா**



புதிய பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ள எரிவாயு சிலிண்டரை கொள்வனவு செய்யுமாறு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை பொதுமக்களுக்கு அறிவித்திருந்த நிலையில் புதிய லேபலின் கீழ் விநியோகம் செய்யப்பட்ட எரிவாயு சிலிண்டரிலும் வெடிப்பு சம்பவம் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்து ஹங்குராங்கெத்த பிரதேசத்தில் இருந்து பதிவாகியுள்ளது. இது தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்று விசாரணை நடத்தப்பட்டு வருவதாக நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

பக்கம் 04

## பிளாஸ்ரிக் கேன்களில் உரமும் வெடிக்கிறது


**இறக்குமதியால் 700 கோடி ரூபா இழப்பு**

**க.பிரசன்னா**

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட திரவ நனோ நைட்ரஜன் உரம் அடங்கிய பிளாஸ்ரிக் கேன்கள் வெடித்தமை தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

திரவ சேதன பசளை இறக்குமதி செய்யப்பட்டதன் மூலம் நாட்டுக்கு 7 பில்லியன் ரூபா ( 700 கோடி ரூபா)

பக்கம் 04







செலான் வங்கியிடமிருந்து
உங்கள் தங்கப் பவுணின் கரட் எதுவாயினும்
முற்பணம் மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது.
ரூ.87,000/=
• அதிகபட்ச இரகசியதன்மை
• சிநேகபூர்வமான உடனடி சேவை
• சிறந்த பாதுகாப்பு
011 200 88 88
செலான் வங்கி

## ஐ.நா. உதவி செயலாளர் நாயகம் கன்னி விக்னராஜா இலங்கை வருகிறார்

ஐ.நா. வின் உதவிச்செயலாளர் நாயகமும் ஐ.நா.அபிவிருத்தித் திட்டம் (யு.என்.டி. பி. ) உதவி நிர்வாகி யும் ஆசிய மற்றும் பசிபிக் பிராந்தியத்திற்கானயு.என் .டி . பி . யின் பிராந்திய பணியகத்தின் பணிப்பாளருமான திருமதி. கன்னி விக்னராஜாஎதிர்வரும் திங்கட்கிழமைங்13 டிசம்பர்சி இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.



பக்கம் 04

# 1500 வைத்தியர்களுக்கு இன்னும் வைத்திய நியமனம் வழங்கப்படவில்லை

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம்

**க.பிரசன்னா**

உள்ளகப் பயிற்சியினை நிறைவு செய்துள்ள சுமார் 1500 வைத்தியர்களுக்கு இன்னும் வைத்திய நியமனம் வழங்கப்படவில்லை எனவும் சுகாதார அமைச்சின் வினைதிறனற்ற செயற்பாடுகள் காரணமாக வைத்தியர்களின் இடமாற்றம் மற்றும் நியமனம் என்பன தாமதமாவதாகவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் மத்தியக் குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் டொக்டர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார்.

வைத்தியர்களின் இடமாற்றத்திலுள்ள தாமதம், இடமாற்ற பட்டியலை வெளியிடுதல், அமுல்படுத்துதலில் உள்ள தாமதம் மற்றும் சுகாதார அமைச்சின் வினைத்திறனற்ற செயற்பாடுகள் காரணமாக வைத்தியர்களின் இடமாற்றம் நியமனம் என்பன தாமதமாகின்றது. தற்போது 1500 வைத்தியர்கள் நிரந்தர நியமனத்துக்காக காத்திருக்கின்றனர். அவர்களுக்கான நியமனத்தை வழங்காது வேறு இடங்களில் அவர்களை பணிக்கமர்த்த சுகாதார அமைச்சு முயற்சிக்கின்றது.

இவர்களுடைய நியமனங்கள் தாமதப்படுத்தப்படுவதால் அவர்களுடைய பட்டப்படிப்புகள் மற்றும் தூர பிரதேசங்களுக்கான வைத்திய சேவைகள் என்பன தாமதமாகும் நிலை உருவாகியுள்ளது. தற்போது எம்.பி.பி.எஸ். கற்கைநெறியை நிறைவு செய்வதற்கு 28 வயதாவதுடன் பின்னர் உள்ளகப் பயிற்சியை நிறைவு செய்து வைத்தியராக பதிவு செய்வதற்கு 30 வயதாகின்றது. மேற்படிப்பை மேற்கொண்டு விசேட வைத்திய நிபுணராக நியமனம் பெறுவதற்கு 38 வயதுக்கும் மேல் செல்கின்றது.

இவ்வாறு தேவையற்ற ரீதியில் தாமதங்கள் நிகழ்வதால் நாட்டுக்கு வைத்தியர்களால் கிடைக்கப்பெறக்கூடிய சேவை காலம் குறைவடைகின்றது. எனவே சீரான சேவை கிடைக்க வேண்டுமாயின் வைத்தியரின் நியமனம் மற்றும் இடமாற்றம் என்பன உரிய முறையில் இடம்பெற வேண்டும். சுகாதாரத் துறையினை மேம்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாகவே வைத்தியர்களின் நியமனமும் இடமாற்றமும் காணப்படுகின்றது. இதனை தொடர்ச்சியாக நாங்கள் சுகாதார அமைச்சிடம் வலியுறுத்தியுள்ளோம்.

நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் கடமைக்கு 148 வைத்தியர்கள் தேவைப்படும் நிலையில் 108 வைத்தியர்களே பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். இவர்களில் 34 வைத்தியர்கள் இடமாற்றத்துக்காக காத்திருக்கின்றனர். எனவே வைத்திய நியமனம் மற்றும் இடமாற்றங்களை முறையாக மேற்கொள்ளாவிட்டால் பல்வேறு வைத்திய சாலைகளில் சேவை குறைபாடுகள் உருவாகும் வாய்ப்புள்ளதாகவும் இவற்றுக்கு உடனடியாக சுகாதார அமைச்சு தீர்வு வழங்க வேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ்ப்பாணம் நோக்கி சென்ற சொகுசு பஸ் விபத்துக்குள்ளானது

## ஒருவர் உயிரிழப்பு; ஏழு பேர் காயம்

**அநுராதபுரம் நிருபர்**

கொழும்பு வெள்ளவத்தை பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி சென்று கொண்டிருந்த சொகுசு பஸ் வண்டியொன்று விபத்துக்குள்ளானதில் பஸ்சில் பயணித்த ஒருவர் உயிரிழந்ததுடன் ஏழு பேர் காயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அதிகாலை யாழ்பாணம் கண்டி ஏ9 பிரதான வீதியின் மதவாச்சி இக்கிரிகொள்ளாவ ரணவிரு கம்மான சந்தி வயல் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர். பஸ்சில் 46 பேர் பயணித்துள்ளார்கள் என்பது தெரியவந்துள்ளது. விபத்துடன் தொடர்புடைய பஸ்சின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் கிளிநொச்சி கோணாவில் அணியங்குளம் பகுதியை சேர்ந்த தேவராஜா உதயரஞ்சன் (26 வயது) என்பவரே உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.






# வீட்டு படியில் தவறி விழுந்தவர் உயிரிழப்பு



**தலவாக்கலை நிருபர்**

தலவாக்கலை ஹொலிரூட் பகுதியில் ஆண் ஒருவர் படியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தில் உயிரிழந்தவர் ஒரு பிள்ளையின் தந்தையான இராமையா இந்திரக்குமார் (வயது 52) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவரது மனைவி சில வருடங்களுக்கு முன் உயிரிழந்துவிட்ட தாகவும் அந்த வீட்டில் இவர் மாத்திரம் வசித்து வந்ததாகவும் இவரின் ஒரே ஒரு மகன் கொழும்பில் வேலை செய்து வருவதாகவும் அயலவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவர் மது போதையில் வீட்டிலிருந்து படிக்கட்டுகளில் இறங்கி வரும்போது தவறி விழுந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

சடலத்தை பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளதோடு இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தலவாக்கலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வீடு ஒன்றில் தாலிக்கொடி உட்பட தங்க நகைகளை கொள்ளையிட்ட பெண் கைது

## மட்டு. தாளங்குடாவில் சம்பவம்

**திருக்கோவில் நிருபர்**

மட்டு காத்தான்குடி பொலிஸ் பிரிவிலுள்ள தாளங்குடா பிரதேசத்தில் வீடு ஒன்றில் கால் செய்தற்கான பூஜை செய்யச் சென்று அங்கிருந்த தாலிக்கொடி, தங்கசங்கிலி உட்பட சுமார் 10 இலட்சம் ரூபா பெறுமதியான 7 கால் பவுண் தங்க நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற பெண் ஒருவரை வெள்ளிக்கிழமை கைது செய்துள்ளதாக காத்தான்குடி பொலிசார் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றின் உரிமையாளர் தமது வீட்டை காவல் செய்வதற்கான சடங்கு பூஜை ஒன்றை செய்வதற்காக சம்பவதினமான கடந்த 8 ம் திகதி புதன்கிழமை கொக்கட்டிச்சோலை பிரதேசத்தைச் சேர்ந்த பெண்ணை வரவழைத்து இரவில் தங்கவைத்து பூஜை நடவடிக்கை இடம்பெற்ற பின்னர் காலையில் அந்தப் பெண் அங்கிருந்து சென்றுள்ளார்.

இந்த நிலையில் வீட்டின் அலுமாரியில் கழற்றி வைத்திருந்த 6 பவுண் தாலிக்கொடி, ஒருபவுண்தங்கசங்கிலி, கால் பவுண் கொண்ட மோதிரம் திருட்டுப்போயிருந்துள்ளது. இதனையடுத்து காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து பொலிஸ் நிலைய பெருங்குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி சப்இன்பெக்டர் வை. விஜயராஜா தலைமையிலான பொலிசார் விசாரணையை மேற்கொண்ட நிலையில் கொக்கட்டிச்சோலையை சேர்ந்த 31 வயதுடைய பெண்ணை கைது செய்ததுடன் அவர்திருடிச்சென்ற தங்க ஆபரணங்களை ஈடு வைத்து பினான்ஸ் கொம்பனி மற்றும் தங்க நகைகடைகளில் இருந்து கொள்ளையிட்ட தங்க ஆபரணங்களை மீட்டனர்.

இதேவேளை கைது செய்யப்பட்ட பெண் அக்கரைப்பற்று, கொக்கட்டிச்சோலை, களுவாஞ்சிக்குடி பொலிஸ நிலையங்களில் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்ற பிணையில் வெளிவந்துள்ளதுடன் வழக்கு தொடர்ந்து இடம் பெற்றுவருவதாக பொலிசாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது

இச்சம்பவத்தில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

# கடற்படை பஸ் - வான் மோதுண்டதில் வான் சாரதி பலி; 14 பேர் படுகாயம்

**அநுராதபுரம் நிருபர்**

அநுராதபுரம் புத்தளம் பிரதான வீதியின் மஹபுளங்குளம பகுதியில் வான் ஒன்றும் கடற்படைக்கு சொந்தமான பஸ் ஒன்றும் நேருக்கு நேர் மோதுண்டதில் வானின் சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததுடன் வானில் பயணித்த ஆறுபேர் மற்றும் கடற்படையினர் எட்டு பேர் படுகாயமடைந்த நிலையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக எலயாபத்துவ பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் வெள்ளிக்கிழமை அதிகாலை 5.10 மணியளவில் மஹபுளங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் காயமடைந்த கடற்படை பஸ்ஸில் பயணித்த எட்டுபேரும் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். நொந்சியாகம பகுதியை வசிப்பிடமாக கொண்ட 23 வயதுடய வான் சாரதியே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார் என்பது தெரியவந்துள்ளது. மதவாசாசி பூனாவ கடற்படை முகாமிலிருந்து புத்தளம் கற்பிட்டி கடற்படை முகாமிற்கு கடற்படை வீரர்களை ஏற்றிச் சென்ற கடற்படை பஸ்சும் நொச்சியாகம பகுதியிலிருந்து அநுராதபுரம் பகுதிக்கு பயணித்துக் கொண்டிருந்த வானும் நேருக்கு நேர் மோதுண்டதிலேயே இவ் விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் எலயாபத்துவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை முதல் ‘சட்டப்படி வேலை’ தொழிற்சங்க நடவடிக்கை

## புகையிரத நிலைய அதிபர்கள் சங்கம்

**க.பிரசன்னா**

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்தும் தமது கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் அசௌகரியங்கள் காரணமாக நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமை முதல் ‘சட்டப்படி வேலை’ தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளதாக புகையிரத நிலைய அதிபர்கள் சங்கத்தின் தலைவர் சுமேதா சோமரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளில் வினைத்திறனான சமிக்ஞை முறைமைகளை பேணுவதற்கு புகையிரத திணைக்களம் தவறியுள்ளது. 50 வீதத்துக்கும் அதிகமான சமிக்ஞை முறைமைகள் சேதமடைந்துள்ளதால் பெரும்பாலான புகையிரதங்கள் பயணிப்பதில் தாமதங்கள் ஏற்படுகின்றன.

இதுபோன்ற சேதமடைந்த கட்டமைப்புகள் பயணிகளின் உயிருக்கும் ஆபத்தை விளைவிக்கும். தமது கடமைகளை நிறைவேற்றும் போது ஏற்படும் பல அசௌகரியங்கள் காரணமாக, நாடளாவிய ரீதியில் திங்கட்கிழமையன்று சட்டப்படி வேலை செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளது.

செயற்பாட்டிலுள்ள புகையிரத கடவைகளில் இருந்து அகற்றப்பட்ட பகுதிகளின் மூலம் செயற்பாடற்ற புகையிரத கடவைகளை திருத்தியமைப்பதற்கு திறமையற்ற நிலையில் இலங்கை புகையிரத திணைக்களம் இருக்கின்றது. அத்துடன் புகையிரத நிலைய அதிபர்களின் பதவி உயர்வுகள் மற்றும் ஆட்சேர்ப்பு கொள்கைகளை புதுப்பிக்கக் கோரி இத்தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படாவிட்டால் எதிர்வரும் 26ஆம் திகதிக்கு பின்னர் அனைத்து தொழிற்சங்க உறுப்பினர்களும் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இந்திய முப்படைத் தளபதியின் மறைவுக்கு சபையில் அனுதாபம்

## தமிழ்க் கூட்டமைப்பு, தமிழ் முற்போக்கு கூட்டணி தெரிவித்தன

**பா.கிருபாகரன், ந.ஜெயகாந்தன்**

இந்திய முப்படைத்தளபதியான பிபின் ராவத்தின் மரணத்துக்கு தமிழ் தேசியக்கூட்டமைப்பும் தமிழ் முற்போக்கு கூட்டணியும் சபையில் அனுதாபம் தெரிவித்தன.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே தமிழ் தேசியக்கூட்டமைப்பின் எம்.பி. யான ஸ்ரீதரனும் தமிழ் முற்போக்கு கூட்டணி எம்.பி. யான இராத கிருஷ்ணனும் தமது கட்சிகள் சார்பில் அனுதாபங்களை பதிவு செய்தனர்.

இந்திய முப்படைத்தளபதியான பிபின் ராவத்,அவருடைய மனைவி உள்ளிட்ட 14 பேர் தமிழ் நாட்டின் வான் பகுதியில் ஹெலிகொப்டர் விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளனர். இந்திய பாரத தேசம் இன்று மிக சோகமயமாக அந்த முப்படைகளின் தளபதிக்கு அஞ்சலி செலுத்துகின்ற நாளில் இந்த உயர்ந்த சபைக்கூடாக நாங்களும் எங்களுடைய இரங்கலையும் கவலையை யும் தெரிவித்துக்கொள்கின்றோம். பாரதத்தின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம் என்றனர்.

## பிளாஸ்ரிக் ...

முன்பக்கத் தொடர்ச்சி...

இழப்பு ஏற்பட்டுள்ளது. சேதன பசளை அடங்கிய கேன்கள் வெடிப்பது, கசிவு மற்றும் கேன்களின் மூடிகள் திறத்தல் போன்ற செயற்பாடுகளின் காரணமாக விவசாயிகள் மற்றும் விவசாய சேவை நிலையங்களின் அதிகாரிகள் அச்சத்தில் உள்ளனர்.

இறக்குமதி செய்யப்பட்ட திரவ சேதன பசளை தரமான தாயின் அவ்வாறான வெடிப்புக்களுக்கு காரணம் என்ன?. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இரசாயன உரத்தின் காப்புரிமை அந்நிறுவனத்துக்கே காணப்படுகின்றது. எனவே இலங்கைக்கு நனோ நைட்ரஜன் உரத்துக்குப் பதிலாக நனோ யூரியா உரமே இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் இரசாயன உரங்களின் இறக்குமதிக்கு தடை விதிக்கப்பட்ட நிலையில் சீனாவிலிருந்து சேதன பசளையினை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. எனினும் சேதன பசளை மாதிரிகளில் தீங்கு விளைவிக்கும் நுண்ணுயிரிகள் காணப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்ட நிலையில் குறித்த பசளைக்கு தடை விதிக்கப்பட்டது.

சேதன பசளையை இறக்குமதி செய்வதற்காக சீன நிறுவனத்திடம் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட நிலையில் இந்தியாவிலிருந்து திரவ நனோ நைட்ரஜன் பசளையினை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் திரவ நைட்ரஜன் பசளை தொடர்பிலும் சர்ச்சைகள் எழுந்த நிலையில் மீண்டும் இரசாயன உர இறக்குமதிக்கு கடந்த மாதம் முதல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

## அடுத்த இரு...

முன்பக்கத் தொடர்ச்சி...

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ , கொவிட் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்துவதற்கான விசேட குழு உறுப்பினர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

வெள்ளிக்கிழமை முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் விசேட கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டு 3 மாதங்கள் நிறைவடைந்த அனைவரும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதி பெறுவர். அதன்படி, தடுப்பூசி வழங்கப்படும் எந்தவோர் இடத்திலும் இன்று முதல், தினசரி பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளுக்கேற்ப, இன்றைய நாட்களில் அடையாளம் காணப்படும் கொவிட் நோயாளிகளில் அதிக சதவீதமானவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ளாதவர்களாக இருப்பதுடன், அவர்களில் பெரும்பாலானவர்கள் இள வயதுடையவர்கள் என்று சுகாதாரப் பிரிவு அதிகாரிகள் சுட்டிக்காட்டினர்.

கொவிட் தொற்றுக்கு ஆளாகுதல் மற்றும் மரண எண்ணிக்கையைக் குறைத்துக் கொள்வதற்காக தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது கட்டாயமாகும். இது தொடர்பாக இளம் வயதினருக்கு தெளிவுபடுத்தி, விரைவாகத் தடுப்பூசியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி , பணிப்புரை விடுத்தார்.

கொவிட் தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தடுப்பூசியைப் பெறாதவர்கள், பொது இடங்களுக்குச் செல்வதைத் தடுப்பதற்காக தற்போது சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அதைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் பொது இடங்களுக்குச் செல்லும்போது தடுப்பூசி அட்டையைக் கொண்டு செல்வதைக் கட்டாயமாக்க கொவிட் குழு இன்று தீர்மானித்தது.

16 19 வயதுகளுக்கிடையிலான பிள்ளைகளுக்கு இரண்டாவது டோஸ் தடுப்பூசியையும் மற்றும் 1215 வயதுடைய பிள்ளைகள் அனைவருக்கும் முதலாவது தடுப்பூசியை வழங்குவதற்கும் அனுமதிக் கிடைத்துள்ளது. இதன்படி கல்வி அமைச்சுடன் இணைந்துத் திட்டமிட்டு, தடுப்பூசி ஏற்றலை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. விமான நிறுவனங்கள் விமானப் பயணங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளன. சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகளை மேலும் தளர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்.

# அநுராதபுரம் பொலிஸ் பிரிவில் 3 விபத்துக்களில் மூவர் உயிரிழப்பு

**அநுராதபுரம் நிருபர்**

அநுராதபுரம் பொலிஸ் வலயத்தின் மதவாச்சி மற்றும் எலயாபத்துவ பொலிஸ் பிரிவுகளில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற மூன்று வெவ்வேறு வாகன விபத்துக்களில் மூவர் உயிரிழந்துள்ளதாக வலய போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நியாஸ் தெரிவித்தார்.

அநுராதபுரம் புத்தளம் வீதியின் புளங்குளம் பகுதியில் கடற்படை பஸ் வண்டியொன்றும் வான் ஒன்றும் நேருக்கு நேர் மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவரும் மதவாச்சி பொலிஸ் பிரிவின் இக்கிரிகொள்ளாவ மற்றும் இசின்பெஸ்ஸகல பகுதிகளில் இடம்பெற்ற இரு வெவ்வேறு விபத்துக்களான பஸ்விபத்து மற்றும் கார் முச்சக்கர வண்டி மோதி இடம்பெற்ற விபத்துக்களில் இருவருமாக மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இவர்கள் 23,26.55 வயதுடைய நொச்சியாகம மற்றும் மதவாச்சி,கிளிநொச்சி பகுதிகளை வசிப்பிடமாக கொண்டவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

காயமடைந்த மேலும் இருபது பேர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் அவர்களில் எட்டுபேர் கடற்படை வீரர்கள்.

சம்பவங்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை மதவாச்சி மற்றும் எலயாபத்துவ பொலிஸ் நிலைய போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டுவருவதாக அநுராதபுரம் வலய போக்குவரத்து பொலிஸ் பிரிவின் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் நியாஸ் மேலும் தெரிவித்தார்.

# பாகிஸ்தானில் படுகொலை செய்யப்பட்ட பிரியந்தவிற்கு தமிழ்க் கூட்டமைப்பு இரங்கல்

பாகிஸ்தானில் அண்மையில் கொடூரமாக தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்ட இலங்கையரான பிரியந்த குமாரவிற்கு தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரங்கல் தெரிவித்துள்ளது.

பாராளுமன்றில் வெள்ளிக்கிழமை உரையாற்றிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் இவ்வாறு கூறியுள்ளார். இது குறித்து தொடர்ந்தும் பேசிய அவர்,

அண்மையில் பாகிஸ்தானில் வைத்து இலங்கையரான பிரியந்த குமார மிக கொடூரமாக படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்நேரத்தில் அவருக்கும் அவரது குடும்பத்திற்கு அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த சம்பவம் போல் இலங்கையிலும் இடம்பெற்றுள்ளன. விடுதலைப் புலிகளின் தளபதியாக இருந்த ரமேஷ் மெல்ல மெல்ல வெட்டிக்கொல்லப்பட்டார். இது குறித்த படங்களும் வெளியாகியிருந்தன.

இசைப்பிரியா, பாலச்சந்திரன் போன்றவர்களும் அந்த காலத்தில் படுகொலை செய்யப்பட்டதையும், அது குறித்த படங்களும் வெளியாகியிருந்தன. பிரியந்தவின் மரணத்திற்கு பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் மன்னிப்பு கோரியிருந்தார்.

எனினும், இலங்கையில் இவ்வளவு மரணங்கள் ஏற்பட்டும் மன்னிப்பு கோரும் அந்த பண்பாடு இல்லையென அவர் கூறியுள்ளார்.

# இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதியின் பூதவுடலுக்கு இலங்கை இராணுவத் தளபதி அஞ்சலி

இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி பிபின் ராவத்தின் இறுதிக் கிரியைகளில் பங்குபற்றிய இலங்கை இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்தினார்.

இராணுவ ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்த இந்திய முப்படைகளின் தலைமைத் தளபதி ஜெனரல் பிபின் ராவத் மற்றும் அவரது மனைவியின் பூதவுடல்கள் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு, டெல்லி காமராஜர் மார்க் பகுதியில் உள்ள அவருடைய வீட்டில் வைக்கப்பட்டன.

அங்கு உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து காமராஜ் மார்க் வழியாக டெல்லி கண்டோன்மெண்ட் பகுதிக்கு பிபின் ராவத் உள்ளிட்டோரின் உடல் எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு, இலங்கை, பூட்டான், நேபாளம், பங்களாதேஷ் உள்ளிட்ட நாடுகளின் இராணுவத் தளபதிகள் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் பங்கேற்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

## சர்வதேச மனித உரிமைகள் தினத்தில்

# ஹிஷாலினிக்கு நீதி கோரி டயகமவில் போராட்டம்




**பத்தனை நிருபர்**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு பெண்களுக்காக குரல் கொடுக்கும் அமைப்பான புரொடெக்ட் .அமைப்பின் தலைமையில் வெள்ளிக்கிழமை டயகம தோட்டம் 5ம் பிரிவு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக விழிப்புணர்வு வீதி நாடகமும், கவனயீர்ப்பு போராட்டமும் இடம்பெற்றது.

சிறுவர் தொழில் மற்றும் சிறுவர்களை வீட்டுத் தொழிலுக்கு அமர்த்துவதை நிறுத்து எனும் தொனிப்பொருளில் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 4 மாதங்களுக்கு முன்பு கொழும்பில் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியூதீன் வீட்டில் பணிப்புரிந்துக் கொண்டிருந்த 16 வயதுடைய ஹிஷாலினியின் மரண விசாரணை இதுவரை ஈழுப்பறியாக இருப்பதாகவும் இதற்கு உடனடியாக தீர்வு கோரியும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு, மக்கள் எதிர்நோக்கும், காணி, தொழிலாளர்களின் பிரச்சினைகள், அத்தியாவசிய பொருட்களுக்கான விலைவாசி அதிகரிப்பு, கல்வி தொடர்பான பிரச்சினைகள், சிறுவர், பெண்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் பதாதைகளை ஏந்தியவாறு எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

## இந்திய முப்படைகளின் தளபதி மறைவு

# பிரதமர் மஹிந்த இரங்கல்

இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத்தின் மறைவு குறித்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு தனது இரங்கலை தெரிவித்துள்ளார்.

இந்திய முப்படைகளின் தளபதி ஜெனரல் பிபின் ராவத், அவரது பாரியார் மதுலிகா ராவத் மற்றும் 11 பேர் 8 ஆம் திகதி இடம்பெற்ற ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தமை தொடர்பில் இந்திய அரசாங்கத்திற்கும், மக்களுக்கும் தனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜெனரல் பிபின் ராவத், அவரது பாரியார் உள்ளிட்ட பதினான்கு பேர் பயணித்த ஹெலிகொப்டர் தமிழ்நாட்டில் விபத்துக்குள்ளாகியது.

இத்துயர சம்பவத்தில் உயிரிழந்த அனைவரது குடும்ப உறுப்பினர்களுக்கும், உறவினர்களுக்கும் இலங்கை அரசாங்கத்தினதும், மக்களினதும் சார்பில் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்தியஇலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கு பெரும் பங்களிப்பை வழங்கிய ஒருவர் என்ற வகையில் ஜெனரல் பிபின் ராவத்தினது நினைவு மிக நீண்டகாலமாக நிலைத்திருக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.



## அடுத்த வருடத்தில்...

முன்பக்கத் தொடர்ச்சி...

முன்னேற்றப் பாதைக்கு கொண்டு செல்ல முடியுமாக இருக்கும் என்று எதிர்பார்ப்பதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தின் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் விவாதத்தில் உரையாற்றும் போது தெரிவிக்கையில்,

சாவல்களை வெற்றிக்கொள்ளக் கூடியவாறு பொருளாதார கொள்கைத் திட்டங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த கொள்கைத் திடடங்கள் தற்காலத்தை போன்று எதிர்கால சவால்களுக்கும் முகம் கொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். அனைத்து திட்டங்களும் முறையான புள்ளிவிபரங்களுடன் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இதேவேளை கொவிட்டுக்கு பின்னரான நெருக்கடி நிலைமையில் பெரும்பாலான நாடுகளை போன்று இலங்கையும் பொருளாதார அபிவிருத்தியில் கடுமையான நிலையில் இருக்கின்றது. அந்த சவாலை வெற்றிக்கொண்டும் நிலையான பொருளாதார மறுசீரமைப்பை செய்வதற்காகவும் தேவையான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் வருடத்திற்குள் கொவிட் தொற்று நிலைமை முடிவடைந்து எமது பொருளாதாரத்தை மிகவும் திட்டமிட்டவாறும் மற்றும் செயற்திரனான வகையிலும் கொண்ட செல்ல முடியுமாக இருக்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். அதற்கு ததேவையான பொருளாதார கொள்கை மற்றும் திட்டங்கள் செயற்படுத்தல் அமைச்சு பெரும் பங்களிப்பை வழங்கும் என்றார்.

## தமிழ் பேசும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குற்றம்சாட்டிய அவர் மேலும் கூறுகையில்,

அரசாங்கத்தின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்திற்கு எதிராக வடக்கு கிழக்கிலுள்ள அனைத்து தமிழ் பேசும் எம்.பி.க்களும் வாக்களிக்க வேண்டும். விசேடமாக நீங்கள் தமிழ் பேசும் எம்.பி.யாக இருந்தால், இதற்கு ஆதரவாக வாக்களிக்க நீங்கள் சில நிபந்தனைகளை விதிக்க வேண்டும். நீண்டகாலமாக சிறைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை, முகநூல் பதிவுகளுக்காக சிறைகளிலுள்ளவர்களின் விடுதலை, வடக்கு கிழக்கில் இடம்பெறும் காணி அபகரிப்பினை தடுத்து நிறுத்துங்கள். என நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம். அதேபோன்று முஸ்லீம் எம்.பி.க்களாக இருந்தால், உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டுத்தால் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகதத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களின் விடுதலை, கொரோனாவினால் உயிரிழப்போரின் ஜனாசாக்களை ஓட்டமாவடியில் அடக்கம் செய்வதனை நிறுத்துங்கள், ஞானசார தேரர் தலைமையிலான செயலணியினை கலையுங்கள். உள்ளிட்ட நிபந்தனைகளை வைத்து நீங்கள் வாக்களிக்கலாம்.

மேலும் அண்மையில் கிண்ணியாவில் படகுவிபத்தில் உயிரிழந்த சிறுவர்களை நினைத்துக் கொண்டு நீங்கள் அனைவரும் வரவு செலவுத்திட்டத்திற்கு வாக்களிக்க வேண்டும். அங்கே சிறுவர்கள் உயிரிழந்த நிலையில் இங்கே களனிபாலம் திறந்து வைக்கப்பட்டிருந்தது. அதனையும் நீங்கள் சிந்தித்து பார்க்க வேண்டும்.

அத்துடன், இலங்கையிலுள்ள தமிழ் பேசும் மக்களை பிரிப்பதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதற்கு பிள்ளையானும் துணைபோகின்றார் என்றார்.

## புதிய எரிவாயு...

முன்பக்கத் தொடர்ச்சி...

எரிவாயு கலவையில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக எரிவாயு வெடிப்புச் சம்பவங்கள் பதிவு செய்யப்படுவதாக தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டதுடன் விநியோகிப்பட்ட எரிவாயு சிலிண்டர்களை திரும்பப்பெறுமாறு அறிவுறுத்தப்பட்டது. இந்நிலையில் எரிவாயு சிலிண்டர் விநியோகம் இடைநிறுத்தப்பட்டதுடன் எரிவாயுவின் வாசனையை அறிய உதவும் எதேய்ல் மெர்கெப்டன் எனும் வேதிப்பொருள் உரிய அளவு சேர்க்கப்படும் வரை எரிவாயு விநியோகத்தை நிறுத்துமாறு எரிவாயு நிறுவனங்களுக்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

எரிவாயுவில் நிர்ணயிக்கப்பட்ட தரநிலையின்படி எதையில் மெர்கெப்டேன் என்ற வேதிப்பொருள் 14 அலகுகளில் இருக்க வேண்டும். ஆனால், சமீபத்தில் விநியோகிக்கப்பட்ட எரிவாயு சிலிண்டர்களில் 5 அலகுகளே இருப்பது உறுதி செய்யப்பட்டிருந்தது.

இதனால் நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபையின் நிபந்தனைகளின் அடிப்படையில் புதிய சிலிண்டர்களை விநியோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. புதிய லிட்ரோ எரிவாயு சிலிண்டரை அடையாளம் காண்பதற்காக சிலிண்டரில் வெள்ளை நிற பின்னணியில் சிவப்பு நிறத்திலான லிட்ரோ நிறுவனத்தின் இலட்சினை கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளது. புதிய லாஃப்ஸ் எரிவாயு சிலிண்டரில் மஞ்சள் நிறப் பின்னணியில் நீல நிற இலட்சினைக் கொண்ட பொலித்தீன் சீல் வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

அத்துடன் ஏற்கனவே இறக்குமதி செய்த எரிவாயுவை விநியோகிக்காமல் இருப்பதுடன் புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட எரிவாயுவினை விநியோகிப்பதற்கு முன்னர் உரிய தரத்துக்கு அமைய வாசத்தை உணர்ந்து கொள்வதற்கு எதேய்ல் மெர்கெப்டன் இரசாயனத்தை சேர்ப்பது அவசியமென நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபை முன்வைத்துள்ள நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்டிருந்தது.

100 சமையல் எரிவாயு சிலிண்டர்களில் ஒரு சிலிண்டரை பரிசோதித்து அதற்கான தொடரிலக்கத்தை பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபைக்கு அனுப்ப வேண்டும் எனவும் இந்நிபந்தனைகளை பூரணப்படுத்தி தரத்தை ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகளுக்கு அமைவாக எரிவாயுவினை விநியோகிக்க வேண்டும். அத்துடன் எரிவாயு உற்பத்தி நிறுவனங்களின் உற்பத்தி செயற்பாடுகள் தொடர்பில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் குறித்த குழுவினூடாக விசாரணைகளை மேற்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## 225 எம்.பி.க்களையும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

உருவாக்கியுள்ளது.இதனால் தேர்தலினால் தெரிவுசெய்யப்படாத அதிகாரவர்க்கத்திற்கு நாட்டை கொடுப்போம் என்ற மனநிலைக்கு மக்கள் தள்ளப்படுவார்கள்.அதனால் மக்களை,தேர்தலை சந்திக்காத தரப்பினரால் அரசாங்கத்தை அமைக்கும் சூழல் உருவாகலாம் என அரச தரப்பு எம்.பி. யான டிலான் பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே தெரிவித்த மேலும் கூறுகையில்,

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ எதிர்பார்த்த பொறிமுறை மாற்றம் இன்று இடம்பெற்றுள்ளது . இன்று பிரதான எதிர்க்கட்சியினர் இனவாதத்திற்கு எதிராக பேசுகின்றனர். ஆனால் வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ் மக்கள் பிரதிநிதிகளை உரையாற்றக்கூட அனுமதிக்காத எதிர்க்கட்சி சட்ட ஆட்சி பற்றிப்பேசுகின்றது. . நீதியின் சுயாதீனம் பற்றி பேசும் இவர்கள் ஆட்சியில் நீதித்துறையை கையில் எடுத்து செய்த செயற்பாடுகள் என்னவென்பது எமக்கும் தெரியும். அவ்வாறான நிலையில் இருந்து ஜனாதிபதி நாட்டை மாற்றியுள்ளார்.

இன்று நாட்டில் பொது மக்களுக்கு அரசியல் வெறுத்துவிட்டது, அன்று பாராளுமன்றத்திற்கு வெடிகுண்டு தாக்குதல் நடத்தப்பட வேளையில் எதிர்த்த மக்கள் இன்று ஏன் பாராளுமன்றத்திற்கு குண்டுத்தாக்குதல் நடத்தவில்லை என கேட்கும் நிலை உருவாக்கியுள்ளது. 225 பேரையும் கொல்லவேண்டும் என்றே மக்கள் கூறுகின்றனர். இப்போது முகங்கொடுக்கும் கொரோனா நிலைமைகளுடன் அடுத்த சவால்களை மக்கள் முகங்கொடுக்கும் வேளையில் மக்களுக்கு அரசியல் வெறுக்கப்படும். இந்தியாவில் சில பிராந்தியங்களில் உள்ளது போன்று அதிகாரவாதம் இலங்கையிலும் உருவாகும் நிலை ஏற்படும்.

இலங்கையில் இன்றும் இந்த அதிகாரவாதம் வெளிப்படுகின்றது.

இராணுவத்தின் அதிகாரிகளின் மூலமாக உருவாகும் அதிகாரவாதத்தை மட்டுமே நான் கூறவில்லை, அதையும் தாண்டிய ஒட்டுமொத்த அதிகாரவாதமும் தலைதூக்கும். ஏனென்றால் மக்களுக்கு அரசியல்வாதிகளை விட அதிகாரவர்க்கம் நல்லதென்ற நிலைமை உருவாகும். தேர்தலினால் தெரிவுசெய்யப்படாத அதிகாரவர்க்கத்திற்கு நாட்டை கொடுப்போம் என்ற மனநிலைக்கு மக்களே தள்ளப்படுவார்கள். அதனால் மக்களை,தேர்தலை சந்திக்காத தரப்பினரால் அரசாங்கத்தை அமைக்கும் சூழல் உருவாகலாம்.அதற்கு அரசியல்வாதிகளின் பிரிவினை செயற்பாடுகளே காரணமாக இருக்கும்.

நான் இந்த சபையை 2% வருடங்களாக பிரதிநிதித்துவப்படுத்துகின்றேன். எனினும் இந்த அரசியல்வாதிகளின் பிரிவினை செயற்பாடுகளில் மாற்றங்கள் ஏற்படவில்லையானால் அடுத்தமுறை நான் இந்த சபையை பிரதிநிதித்துவப்படுத்த மாட்டேன் என்றார்.

## வெளிநாடுகளுக்கான...

முன்பக்கத் தொடர்ச்சி...

மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு, நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார,நுண்நிதிய, சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் பதிலளித்து உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

எதிர்க்கட்சியினர் இங்கு கூறிய விடயங்களை நான் சவாலுக்குட்படுத்தவில்லை. வெளிநாட்டு ஒதுக்கங்கள், நிதி நெருக்கடிகளில் நாங்கள் இருக்கின்றோம்.ஆனாலும் நாங்கள் செலுத்த இருக்கின்ற ஒவ்வொரு டொலரும் அடுத்த ஆண்டு செலுத்தி முடிக்கப்படும் என்பதனை ஜனாதிபதி, பிரதமரை சாட் சியாக வைத்து உறுதியுடன் இங்கு கூறுகின்றேன் .எமது இன்றைய நிதி பற்றாக்குறைகளுக்கு கொரோனா எப்படி ஒரு காரணமோ அதேபோன்று கடந்த 5 வருட ஆட்சியும் ஒரு காரணம் என்பதனை மறுக்க முடியாது.

வெளிநாடுகளுக்கு தொழிலுக்கு எமவர்கள் செல்வது குறைந்ததும் எமக்கு வெளிநாட்டுப்பண அனுப்பல் குறைவடையக் காரணமாக இருந்தது. 2,30,000 பேர் வருடமொன்றுக்கு சென்ற நிலையில் அது தற்போது 53,000 ஆக குறைவடைந்துள்ளது. அதனால் வெளிநாட்டு தொழிவாய்ப்புக்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம்.

நினைத்த மாதிரி வெளிநாட்டு முதலீடுகள்வராது. முதலீட்டாளர்கள் இலாபத்தை மட்டுமே சிந்திப்பார்கள். ஆனால் நாங்கள் நாட்டைப்பற்றியும் சிந்திக்க வேண்டும். அவர்கள் கூடுதல் இலாபம் கிடைக்கும் நாடுகளை நோக்கியும் செல்லலாம். முதலில் பணம் இங்கு வருகின்றது. பின்னர் வெளியே போகின்றது. நாம் சுற்றுலாத்துறையை மிக வேகமாக கட்டியலிப்பு முயற்சிக்கின்றோம். கொரோனாவால் நாம் மு டக்கத்துக்கு போனோம். மக்கள் காப்பாற்றினோம். ஆனால் வாழ்வியலை இழந்தோம். நாம் வரையறையின்றி நாட்டைத் திறந்தால் வாழ்க்கைத்தரம் உயரும். ஆனால் உயிர்கள் போய்விடும்.

சேவைத்துறையை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம். கடல்சேவை, வான் சேவையை விரிவு படுத்தி வருமானத்தை அதிகரிக்க எதிர்பார்க்கின்றோம். தகவல் தொழில் நுட்ப துறையிலும் நாம் அதிக இளைஞர்,யுவதிகளை இணைத்துக் கொள்ள வழிவகைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இங்குள்ள தகவல் தொழில் நுட்ப கம்பெனிகள் பலருக்கு வேலைவாய்ப்புக்கள் வழங்குகின்றன. இன்னும் சில கம்பெனிகள் இலங்கை வரவுள்ளன.

அந்நிய நெருக்கடி உள்ளது.மிக இக்கட்டான நிலை என்று கூடச்சொல்லலாம். சர்வதேச நாணய நிதியத்தை நாடுவது புதிய விடயமல்ல.நாம் யுத்தம் முடிந்த பின்னர் நாடினோம். இப்போது கூட அதன் பிரதிநிதிகள் இங்கே தான் உள்ளனர்.தேவையேற்பட்டால் நாம் அவர்களை நாடுவோம். உலகவங்கி, ஆசிய வங்கியை நாட வேண்டிய தேவை எழவில்லை

அடுத்த வருடம் சஜித் அரசு வரும் என்று கூறினார்கள். அப்படி அவர் ஆட்சி வரும் போது நாம் கடன் இல்லாத நாட்டைத்தான் அவருக்கு கொடுப்போம். கடனுடன் நாட்டை கொடுக்க மாட்டோம். ஆசிரியர்களின் சம்பள பிரச்சினையை தீர்த்ததை, கிராமங்களுக்கு 15 மில்லியன் ஒதுக்கியதை ,பட்டதாரிகளை நிரந்தரமாக்கியதை பிடிக்கவில்லையென்றால், எதிர்த்து வாக்களியுங்கள் என்றார்.

## ஐ.நா. உதவி...

முன்பக்கத் தொடர்ச்சி...

இந்து நாள் விஜயம்மேற்கொள்ளும் கன்னி விக்னராஜா, நாட்டின் முன்னுரிமைகளை புரிந்துகொள்வது மற்றும் யு.என் .டி . பி .யிலிருந்து இலங்கைக்கு ஆதரவளிப்பதற்கான புதிய வழிவகைகளை ஆராயும் நோக்கத்துடன் இலங்கைக்கு விஜயம் செய்கிறார் .

குறிப்பாக சமீபத்தில் முடிவடைந்த ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டின் சிஓ பி .26,பிராந்தியத்தில் கோவிட்19 க்குப் பின்னரான சமூகபொருளாதாரமீட்பு, நாட்டிற்கு அதிகளவு அபிவிருத்திக்கான நிதியுதவியைப் பயன்படுத்துதல்போன்ற விடயங்களில்அவர் கவனம் செலுத்துவார் . உத்தியோக பூர்வ விஜயதின்போது மனித அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் ,நிலையான அபிவிருத்தி இலக்குகளை விரைவுபடுத்துதல்ஆகிய வற்றில் கவனம் செலுத்தும், அதேவேளை இலங்கையின் மனித அபிவிருத்தி சாதனைகள் விஜ யத்தின்போது முக்கியமாகக் கொண்டாடப்படவுள்ளது.

உதவி செயலாளர்நாயகம் விக்னராஜாதனது விஜயத்தின் போது அரசாங்க உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் ஏனைய பங்காளிகளைச் சந்திப்பார், அத்துடன் ஆதரவுடன் களத்தில் மேற்கொள்ளப்படும் சில வேலைத்திட்டங்களையும் அவர் நேரடியாகப் பார்வையிடுவார்.

## அனைத்தும்...

முன்பக்கத் தொடர்ச்சி...

நிலைமை வரலாம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு ,பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு ,நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார ,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், ஒக்டோபர் 28 மற்றும் நவம்பர் முதலாம் திகதியும் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி தனிப்பட்ட வர்களுக்காக வெளிநாட்டு பணம் மற்றும் பொருட்கள், சேவைகள் வருமானத்தை தற்போது மத்திய வங்கி பலவந்தமாக கையாண்டு வருகின்றது. இதனை எப்படி மத்திய வங்கிக்கு தீர்மானிக்க முடியும் என்று கேட்கின்றோம். இது டிசம்பர் 7 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுகின்றது. இதுவா அந்நிய செலாவணி பிரச்சனைக்கான தீர்வு என்று கேட்கின்றேன்.

பல்வேறு கட்டுப்பாடுகளை விதித்து முன்னெடுக்கும் செயற்பாடுகளால் பாரதூரமான நிலைமையே ஏற்படும். இதனால் ஏற்றுமதியாளர்கள் இலங்கைக்கு வெளியே அலுவலங்களை அமைத்து லாபம் தேடும் நிலைமையே ஏற்படும். இதனால் எமது நாட்டுக்கு வரும் அந்நிய செலாவணி குறைந்துகொண்டே போகும்.

இப்போது அந்நிய செலாவணி இருப்பு பூச்சியமாகின்றது. இப்போது தரப்படுத்தலில் நாடு குறைந்துகொண்டே போகும் போது குறைந்த வட்டிக்கு கடன் பெறவும் முடியாத நிலைமையே ஏற்படும். தரப்படுத்தலில் நாங்கள் மேலே சென்றாலே குறைந்த வட்டியில் கடனை பெற முடியும். இப்போது டொலர் பிச்சை எடுக்கும் நிலைமை உருவாகியுள்ளது.

மாற்று வழிகள் பல உள்ளன. சர்வதேச நாணய நிதியத்துடன் பேசுங்கள். நாங்கள் தேவையான ஒத்துழைப்பை வழங்குவோம். நாங்கள் உலகத்துடன் கொடுக்கல் வாங்கலை செய்ய வேண்டுமென்றே கூறுகின்றோம்.

இதேவேளை எரிவாயு சிலிண்டர் வெடிப்புகள் இன்னும் நிற்கவில்லை. இதற்கு அச்சமடைய தேவையில்லை. தரமற்ற சிலிண்டர்களை மீளப் பெற்று புதிய சிலிண்டர்களை விநியோகிப்பதாக கூறினர். அவ்வாறு புதிய சிலிண்டர்களும் இப்போது வெடிக்கின்றன.

அத்துடன் தற்போது எரிவாயு சிலிண்டர் வெடிப்புகளுக்கு மேலதிகமாக திரவ உரம் களஞ்சியமும் வெடிக்கின்றது. இறக்குமதி செய்யப்பட்ட உரம் வெடிக்கின்றது. எரிவாயு சிலிண்டரும் வெடிக்கின்றது, உரமும் வெடிக்கிறது. அந்நிய செலாவணியும் குறைகையில் அரசாங்கம் என்ன செய்கிறது.

இதற்குள் விவசாய அமைச்சருக்கும், உர அமைச்சருக்கும் இதனை செய்ய முடியாது என்று கூறி இராணுவத் தளபதியிடம் கொடுக்க தீர்மானமொன்று எடுக்கப்பட்டுள்ளது. அடுத்ததாக எரிவாயுவையும் இராணுவத் தளபதியிடம் கொடுக்க வேண்டி வரும். அதேபோன்று அந்நிய செலவணியை அதிகரிப்பதாக கப்ரால் கூறியிருந்தால் அதனை செய்ய முடியாவிட்டால் அதனையும் இராணுவத் தளபதியிடம் ஒப்படைக்கலாம்.

இறுதியில் நிதி அமைச்சருக்கும் அந்நிய செலாவணி பிரச்சி னையை, பொருளாதார பிரச்சனையை தீர்க்க முடியாவிட்டால் அந்த அமைச்சின் பொறுப்பையும் இராணுவத் தளபதியிடம் கொடுக்க வேண்டி வரலாம். நாடு ஆபத்தான நிலைக்கு சென்றுகொண்டிருக்கின்றது என்றார்.

## வரவு- செலவுத் திட்டத்தின்...

முன்பக்கத் தொடர்ச்சி...

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு ஆதரவாக 157 வாக்குகளும் எதிராக 64வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையிலேயே93 மேலதிக வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டது.

வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு எதிர்க்கட்சிகளின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. வாக்கெடுப்பை கோரியதனையடுத்து இலத்திரனியல் முறைப்படி மாலை 6.05 மணிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தின்மூன்றாம் மதிப்பீடு மீது நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஆதரவாக அரச தரப்புடன் இணைந்து பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் அநு ராதபுரம் மாவட்ட எம்.பி.யான இஷாக் ரஹ்மான், பதுளை மாவட்ட எம்.பி.யான அரவிந்த குமார் தேசியப்பட்டியல் எம்.பி.யான டயானா கமகே,மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் பங்காளிக்கட்சிகளாகவுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் எம்.பி.க்களான ஹரீஸ்,பைசல் ஹாசிம்,தௌபீக் ,நசீர் அஹமட், முஸ்லிம் தேசிய கூட்டணியின் புத்தளம் மாவட்ட எம்.பி.யான அலிசப்ரி ரஹீம் ,அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் திகாமடுல்ல மாவட்ட எம்.பி. யான முஷாரப்,சுயேச்சையாக செயற்படும் எம்.பி.யான அத்துரலிய இரத்தின தேரர் ஆகியோர் வாக்களித்தனர்.

அதேவேளை 2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் மூன்றாம் மதிப்பீட்டுக்கு எதிராக எதிர்க்கட்சிகளான சஜித் பிரேமதாச தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி,இரா.சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பு, அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே .வி.பி. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி, ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சி விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய கூட்டணி ஆகியன வாக்களித்தன ,ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. குமார வெல்கம் உட்பட 4 எம்.பி. க்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட சட்டமூலம் ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அதன் இரண்டாவது வாசிப்பு கடந்த 12 ஆம் திகதி நிதி அமைச்சர் பசில்ராஜபக்ச வினால் சபையில் முன்வைக்கப்பட்டு சுமார் இரு மணிநேரம் வரவு செலவுத்திட்ட உரையாற்றியிருந்தார். இந்நிலையில் மறுநாள் 13ஆம் திகதி சனிக்கிழமை முதல் 22ஆம் திகதி திங்கட்கிழமை வரை ஏழு நாட்கள் வரவுசெலவுத்திட்ட இரண்டாவது மதிப்பீடு மீதான விவாதம் இடம்பெற்ற நிலையில் அன்று மாலை 5.10 மணிக்கு இரண்டாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடைபெற்றது.இதன்போது ஆதரவாக 153 வாக்குகளும் எதிராக 60வாக்குகளும் அளிக்கப்பட்ட நிலையில் 93 மேலதிக வாக்குகளினால் இரண்டாம் மதிப்பீடு நிறைவேற்றப்பட்டது.

2022ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் மதிப்பீடு நிரைவேற்றப்பட்ட ட நிலையில் 23 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் குழு நிலையிலான விவாதம் ஆரம்பமானதுடன், சனிக்கிழமை உள்ளடங்கலாக டிசம்பர் 10ஆம் திகதி வரை 16 நாட்கள் விவாதத்தை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வெள்ளிக்கிழமை 10ஆம் திகதி மாலை 6.05 மணிக்கு மூன்றாவது மதிப்பீடு மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது.

இதேவேளை 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தின் இதுவரையான விவாதங்களில் தமிழ் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் ,முஸ்லிம் தேசிய கூட்டமைப்பு தலைவர் அலி சப்ரி ரஹீம் ஆகியோர் உரையாற்றவில்லை.

## பாகிஸ்தானுக்கு...

முன்பக்கத் தொடர்ச்சி...

சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இது தொடர்பில் கேள்வி எழுப்பிய ஸ்ரீதரன் எம்.பி. மேலும் கூறுகையில்,

பாகிஸ்தானில் இலங்கையரான பிரியந்த குமார அடித்து க்கொலை செய்யப்பட்ட போது அங்குள்ள கண் வைத்தியர் ஒருவர் கூறியதாக ஊடகங்களில் ஒரு செய்தி வெளியானது. இலங்கையிலிருந்து 35000 கண்கள் தானமாக பாகிஸ்தானிலுள்ள வைத்தியசாலைகளுக்கு அனுப்பப்பட்டதாக பாகிஸ்தானின் கண் சிகிச்சை நிபுணர் ஒருவர் கூறியுள்ளார் என்பதே அந்த செய்தி. இது உண்மையா பொய்யா ?இவ்வாறு 35000 கண்கள் பாகிஸ்தானுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றால் அவை யாருடைய கண்கள்? அவ்வாறு வழங்கப்பட்டிருந்தால் அவ்வாறு வழங்கியவர்களின் பெயர் பட்டியல் எங்கே? இந்த கண்கள் சிங்களமக்களுடைய கண்களா அல்லது தமிழ் மக்களினுடைய கண்களா?யாருடைய கண்கள் அவ்வாறு தானம் செய்யப்பட்டன?இது பொய்யென்றால் பாகிஸ்தானின் ஒரு பிரபல வைத்தியர் ஏன் பொய் கூறுகின்றார் ?இவையெல்லாம் எமக்கு முன்னாலுள்ள பெரிய கேள்விகள்.

கடந்த 27 ஆம் திகதி வல்வெட்டித்துறை ,மணல்காடு ஆகிய இரு இடங்களிலும் கடற்கரையோரமாக இரு உடல்கள் கரையொதுங்கியுள்ளன. 28 ஆம் திகதி நெடுந்தீவில் ஒரு உடல் கரையொதுங்கியுள்ளது.30ஆம் திகதி கட்டைக்காட்டில் ஒரு உடல் கரையொதுங்கியுள்ளது.2 ஆம் திகதி பருத்தித்துறை சக்கோட்டையில் ஒரு உடலும் வெற்றிலைக்கேணியில் ஒரு உடலுமாக இரு உடல்கள் கரையொதுங்கியுள்ளன.இவ்வாறு 6 மனித உடல்கள் கரையொதுங்கியுள்ளன.

இதுவரை இந்த உடல்கள் யாருடையவை?இவர்கள் எந்த நாட் டை சேர்ந்தவர்கள்?என்ற எந்த விடயமும் வெளியில் வரவில்லை. இதில் நெடுந்தீவில் கரையொதுங்கிய உடல் யாழ் வைத்தியசாலையில் இப்போதும் வைக்கப்பட்டுள்ளது. வல்வெட்டித்துறை மணல்காடு, சக்கோட்டையில் கரையொதுங்கிய 3 உடல்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. கட்டைக்காட்டில் கரையொதுங்கிய உடல் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. வெற்றிலைக்கேணியில் கரையொதுங்கிய உடல் எங்கேயென யாருக்கும் தெரியாது.

மருதங்கேணி பொலிஸார் அந்த உடலை சென்று பார்த்துள்ளனர் . ஊடகங்களில் அந்த உடல் பற்றிய செய்தி வெளிவந்துள்ளது. ஆனால் இப்போது அந்த உடலை காணவில்லை. எவ்வாறு ஒரு கரையொதுங்கிய உடல் காணாமல்போகும்?அதனை யார் எங்கே கொண்டு சென்றனர் என்பது தெரியாதுள்ளது. கரையொதுங்கியுள்ள உடல்கள் யாருடையவை என்றும் தெரியவில்லை. கரையொதுங்கிய உடல் காணாமலும் போயுள்ளது.இது பல்வேறு சந்தேகங்களைக் கொடுக்கின்றது.

சரணடைந்தவர்கள், காணாமல்போனவர்களை இப்போது வைத்துத்தான் கொலை செய்து கடலில் வீசியுள்ளார்களா?அந்த உடல்கள்தான் கரையொதுங்கியுள்ளனவா?என்று கூட காணாமல் போனவர்களின் உறவுகளினால் சந்தேகங்கள் தெரிவிக்கப்படுகின்றன. இந்த கண்தானம் மற்றும் கரையொதுங்கும் உடல் களினால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.இவளோ தொடர்பில்ப்பொறுப்போடும் உணர்வோடும் அரசு பதிலளிக்க வேண்டும். இதற்கான பதிலை கொடுக்காதவரை மக்களிடம் அச்சம் அதிகரிக்கும் .எனவே இந்த உயர்ந்த சபை ஊடாக கரையொதுங்கும் உடல்கள், காணாமல்போன உடல் மற்றும் 35000 கண் தானம் தொடர்பில் உரிய பதிலை எதிர்பார்க்கின்றோம். விசாரணையை கோருகின்றோம் என்றார்.

# அடுத்த வருடம் முதல் இரு தடுப்பூசி செலுத்தியிருப்பது கட்டாயமாக்கப்படும்

## சுகாதார அமைச்சர் கெஹலிய

க.பிரசன்னா

இலங்கையில் கொவிட் தடுப்பூசியினை கட்டாயமாக்குவது தொடர்பில் அரசாங்கம் ஆலோசனை மேற்கொண்டுவரும் நிலையில் அடுத்த வருடம் முதல் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்றுக்கொள்வது கட்டாயமாக்கப்படுமென சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இந்த நடைமுறையினை இறுதி செய்வதற்கு மூன்று மாதங்கள் செல்லும். ஒவ்வொருவரும் கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதில் எவ்வித சமரசமும் இல்லையெனவும் அதற்கான சட்ட நடைமுறைகள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவித்துள்ளார்.

கொவிட் தடுப்பூசியின் இரண்டு தடுப்பூசிகளில் ஒன்றை செலுத்திக் கொண்டமைக்கு தடுப்பூசி அட்டைகளுக்குப் பதிலாக செயலியொன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.



முன்னதாக பொது இடங்களுக்கு செல்லும்போது கொவிட் தடுப்பூசி அட்டையினை கட்டாயமாக்குவதற்கு சட்டரீதியாக எவ்வித தடையும் இல்லையென சட்டமா அதிபர் அறிவித்திருப்பதாக தெரிவித்திருந்தார்.

நாட்டில் தற்போது கொவிட் தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் 60 வயதுக்கும் மேற்பட்ட 6% ஆயிரம் நபர்கள் இன்னும் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளவில்லை என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு மேற்கொண்ட ஆய்வில் தெரிய வந்துள்ளது. தடுப்பூசிகள் மீது காணப்படும் தேவையற்ற அச்சம் காரணமாக பலர் தடுப்பூசிகளை பெற்றுக்கொள்வதில் தயக்கம் கொண்டுள்ளனர்.

இதே வேளை நாட்டின் சனத்தொகையில் 20 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 94 வீதமானோர் முழுமையாக தடுப்பூசியினை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களில் 101.7 வீதம் பேர் கொவிட்19 தடுப்பூசியின் முதல் டோஸைப் பெற்றுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

# 2022 ஆம் ஆண்டின் முதலாவது பாராளுமன்ற அமர்வு ஜனவரி 11

பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்



2022ஆம் ஆண்டுக்கான பாராளுமன்ற அமர்வுகளை எதிர்வரும் ஜனவரி 11ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நடைபெற்ற பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக தசநாயக தெரிவித்தார்.

இதற்கமைய எதிர்வரும் ஜனவரி 11, 12 மற்றும் 13ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தைக் கூட்டுவதற்கு இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஜனவரி 11ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குப் பாராளுமன்றம் கூடவிருப்பதுடன் முற்பகல் 10 மணி முதல் முற்பகல் 11 மணி வரை வாய்மூல விடைக்கான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் மு.ப 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை மஹாபொலஉயர் கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் (திருத்தச்) சட்டமூலத்தின்இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அத்துடன் அன்றையதினம்

அரசாங்கத்தின் தினப்பணிகளின் பின்னர் ஸ்ரீசாக்கியசிங்காராம விகாரஸ்த கார்யசாதகசங்விதான (கூட்டிணைத்தல்) சட்டமூலம் இரண்டாவது வாசிப்பைத் தொடர்ந்து சட்டவாக்க நிலையியற் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படவிருப்பதாகவும் செயலாளர் நாயகம் குறிப்பிட்டார்.

ஜனவரி 12ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குக் கூடவிருப்பதுடன், முற்பகல் 10 மணிமுதல் 11 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. முற்பகல் 11 மணி முதல் மாலை 4.30 மணி வரை குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம், ஆளணியினருக்கெதிரான கண்ணிவெடிகளைத் தடைசெய்தல் சட்டமூலம், நீதித்துறை (திருத்தச்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்)சட்டமூலம் போன்றவை இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்துக்குஎடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஜனவரி 11 மற்றும் 12ஆம் ஆகிய தினங்களில் மாலை 4.30 மணி முதல் 4.50 மணிவரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், 4.50 மணி முதல் பி.ப 5.30 மணிவரையான காலப் பகுதியில் சபை ஒத்திவைப்பு நேரத்தின்போதான பிரேரணை மீதான விவாதமும் இடம்பெறும்.

அத்துடன், ஜனவரி 13ஆம் திகதி முற்பகல் 10 மணி முதல் மாலை 4.30 மணி வரை மறைந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர தொடர்பான அனுதாபப் பிரேரணை மீதான விவாதத்தை நடத்த இங்கு தீர்மானிக்கப்பட்டதாகவும் செயலாளர் நாயகம் மேலும்தெரிவித்தார்.

# மனித உரிமை தினத்தில் விழிப்புணர்வு பேரணி









சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு பெண்கள் வாழ்வுரிமை சங்கத்தினர் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் விழிப்புணர்வு பேரணி ஒன்றை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி ஏ9 வீதியில் ஆரம்பித்து பெண்கள் வாழ்வுரிமை சங்க கட்டிடத்தில் முடிவடைந்தது இதன்போது எல்லா மனிதர்களும் சுதந்திரமாகவும் கண்ணியத்திலும் உரிமைகளிலும் சமமாக பிறந்தவர்கள் எனும் தொனிப்பொருளில் ஆரம்பிக்கப்பட்ட விழிப்புணர்வு பேரணியில் பெண் குலத்தை மதித்து பெண்ணியம் காத்திடு, வேண்டாம் வேண்டாம் பாலியல் துஷ்பிரயோகம் வேண்டாம், பெண்கள் மீதான வன்முறைகளை சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும், ஆண் பெண் ஊதிய பாகுபாடு வேண்டாம் என்று சர்வதேச மனித உரிமை தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பதாதைகளை ஏந்தியவாறு தங்களின் விழிப்புணர்வை மேற்கொண்டிருந்தார்கள்.

# கொழும்பு மாநகரில் 3,25,000 பேர் பூஸ்டர் தடுப்பூசி பெறத் தகுதி

க.பிரசன்னா

கொழும்பு மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் 3,25,000 பேர் பூஸ்டர் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ளத் தகுதியுடையவர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக கொழும்பு மாநகரசபையின் சிரேஸ்ட தொற்றுநோயியல் நிபுணர் டொக்டர் தினுகா குருகே தெரிவித்துள்ளார்.

30 வயதுக்கும் மேற்பட்ட தடுப்பூசியின் இரண்டு டோஸ் பெற்று மூன்று மாதங்கள் கடந்த நபர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசியாக பைசர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தடுப்பூசி வழங்கப்படும் இடங்கள் மற்றும் திகதி தொடர்பான விடயங்கள் குறுஞ்செய்தி மூலம் அனுப்பி வைக்கப்படுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. தடுப்பூசியினை பெற்றுக்கொள்வதற்கு தகுதியுடைய நபர்கள் தடுப்பூசியினை பெற்றுக்கொள்ள வேண்டிய நாளில் மாத்திரம் வருகைத்தர வேண்டுமெனவும் தடுப்பூசி நிலையங்களுக்கு தேவையில்லாமல் செல்வதை தவிர்க்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

30 வயதுக்கும் மேற்பட்ட நபர்களுக்கு தடுப்பூசியின் மூன்றாவது டோஸ் வழங்கும் நடவடிக்கைகள் மேல் மாகாணத்தில் நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பொருளாதார மத்திய நிலையங்கள், ஆடைத் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய தொழிற்சாலைகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் தற்போதைய கொவிட் அபாயத்தினை குறைப்பதே பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்படுவதின் நோக்கமெனவும் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனைத்து மாவட்டங்களிலும் அதிக ஆபத்துள்ள குழுக்களுக்கு முன்னுரிமையின் அடிப்படையில் பூஸ்டர் தடுப்பூசியினை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களை பெற்று மூன்று மாதங்கள் கடந்த நபர்களுக்கு தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.



# சுவஸ்திகா, துர்க்கா அரங்கேற்றம்

நாட்டிய கலா மந்திர் நடனக் கல்லூரி அதிபர் திருமதி வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவிகள் செல்வி. சுவஸ்திகா சுவீந்திரன், செல்வி துர்க்கா அசோகன் ஆகியோரின் அரங்கேற்றம் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5.30மணிக்கு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக சட்டமா அதிபர் சஞ்ஜே இராஜரட்னம் (ஜனாதிபதி சட்டத்தரணி) மற்றும் சிறப்பு விருந்தினர்களாக கொழும்பு மகளிர் கல்லூரி அதிபர் ஈஷா ஸ்பெல்ட்டிவைன்ட்(Mrs. EashaSpeldewinde), தெஹிவளை கேற்வே கல்லூரி அதிபர்அன்டனி செல்லையா(Mr.Anthony Chelliahsr) ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.அணிசேர் கலைஞர்களாக ஸ்ரீ ஆரூரன்(குரலிசை), ஸ்ரீ கண்ணதாசன் (மிருதங்கம்), ஸ்ரீ திபாகரன் (வயலின்), ஸ்ரீ இரட்ணம் ரட்ணதுரை(தாளதரங்கம்),ஸ்ரீ பிரியந்த (புல்லாங்குழல்) ஆகிய கலைஞர்கள் பங்கேற்கின்றனர்.

# ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் 14 செவ்வாயன்று கீதா ஜெயந்தி

கொட்டாஞ்சேனை ஸ்ரீஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி செவ்வாயன்று கீதா ஜெயந்தி அனுஷ்டிக்கப்படும்.

அன்றைய தினம் மாலை 5 மணிமுதல் பகவத் கீதை பாராயணம் நடைபெறும். பாராயண நிகழ்வில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கு பகவத்கீதை அன்பளிப்பாக வழங்கப்படும்.

பக்தர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டு பகவான் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முகவரி; இல. 188 புதுச்செட்டித்தெரு, கொழும்பு13 தொலைபேசி இல: 0772288166 ,மின்னஞ்சல்: iskconslt.lk, Facebook:- Iskcon Sri Lanka





| | | |
|---|---|---|
| Santa's Special Visit to CCC | 12th Sunday | 11.00am - 1.00pm & 5.30pm - 7.00pm |
| Kids Craft Village - Christmas Special | 12th Sunday | 10.30am - 1.30pm |
| Christmas Movie Time | 12th Sunday | 2.00pm - 3.00pm |
| Special Kids' Activity | 12th Sunday | 4.00pm - 5.00pm |
| Christmas Carols & Christmas Play By Kingdom City | 12th Sunday | 6.00pm - 7.30pm |
| Classical Instrument Performance | 12th Sunday | 7.00pm - 9.00pm |
| Santa's Special Visit to CCC | 17th Friday | 11.00am - 1.00pm & 5.30pm - 7.00pm |
| Jazzy Christmas at CCC | 17th Friday | 7.00pm - 10.00pm |
| Santa's Special Visit to CCC | 18th Saturday | 11.00am - 1.00pm & 5.30pm - 7.00pm |
| Kids Craft Village - Christmas Special | 18th Saturday | 10.30am - 1.30pm |
| Christmas Workshop for Kids | 18th Saturday | 11.00am - 1.00pm |
| Christmas Movie Time | 18th Saturday | 2.00pm - 3.00pm |
| Christmas Face Painting for Kids | 18th Saturday | 4.00pm - 5.00pm |
| Christmas Carols & Christmas Play By Kingdom City | 18th Saturday | 6.00pm - 7.30pm |

Colombo City Centre (Pvt) Ltd
No.137, Sir James Pieris Mawatha, Colombo 02.
ColomboCityCentre ColomboCityCentre

தினக்குரல்
An Independent Daily Voice in Tamil
ஏசியன் மீடியா பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட்,
இல:185, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு - 14.
தொலைபேசி இலக்கம்: 011 7322760, 011 7322761, 011 7322797
weekly@thinakkural.lk, chiefeditor@thinakkural.lk
Circulation - 011 7322776 Email : cm@thinakkural.lk
Advertising - 011 7322775 Email : advt@thinakkural.lk
ஞாயிற்றுக்கிழமை 12 டிசம்பர் Sunday 12th December 2021

## சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக உரிமைகள் தொடர்பான வேறுபாடுகள்

நாடொன்றில் முன்னேற்றகரமான சமுதாயத்தின் அடித்தளமாக சமத்துவமே அமைகிறது.அத்துடன் சமத்துவத்தின் பெறுமானமே அரசியல் நிர்வாகத்திற்கும், பொருளாதாரத்திற்கும் மையமாக விளங்குகிறது.ஆனால் இங்கு வேற்றுமை அல்லது வித்தியாசம் என்ற எண்ணப்பாடு துடைத்தெறியப்பட்டுள்ளது என்று அர்த்தமில்லை.அதே சமயம் ஒருவரால் என்ன செய்ய முடியும் என்பதையும் , உண்மையில்அவர் என்ன செய்கிறார் என்பதையும் பொருட்படுத்தாமல், அனைவருக்கும் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.சமத்துவம் என்ற எண்ணப் பாடு ,ஒவ்வொருவரும் எந்தவொரு பாகுபாடுமின்றி சமமாக கருதப்படுவதை உறுதி செய்ய வேண்டும் என்பதாகும்.இனம், மதம், பொருளாதார நிலை அல்லது பாலினம் ஆகியவற்றின் அடிப்படையில் எந்த வொரு மேன்மையையும் சிறப்புரிமையையும் கோரக்கூடாது. அடிப்படை வசதிகளில்அனைவருக்கும் சம வாய்ப்புகள் கிடைக்க வேண்டும்.துரதிர்ஷ்டவசமாக, எமது சமூகங்களில் பாகுபாட்டின் சகல அம்சங்களும் எங்கும் விரவி காணப்படுவதே சகல பிரச்சினைகளுக்கும் அடிப்படை காரணமாகும்.

இலங்கையை பொறுத்தவரை தேசியவாதமும் இன வாதமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதை எதிரொலிப்பதாக தோன்றுகிறது.காலனித்துவ ஆட்சிக்கு எதிராக சகல இன, மத சமூகங்களும் ஒன்றுபட்டு குரல் எழுப்பிய காலகட்டத்தில் அனைத்து சமூகங்களும் சமமானவர்கள் என்ற உணர்வே மேலோங்கிக் காணப்பட்டது.ஆயினும் ஆட்சியதிகாரத்தில் நீடித்து நிலைத்திருப்பதற்காக தேசத்தின் சுதந்திரத்திற்காக ஒன்றுபட்டு எழுப்பப்பட்ட தேசியவாத உணர்வு மிக விரைவில் இன,மத வாதமாக மாற்றமடைந்தமையும் அதனால் தொடர்ந்து கொண்டிருக்கும் பாதிப்புகளும் பின்னடைவுகளும் கவலையளிப்பவை. அத்துடன் மதம் சார்ந்த பூசல்களும் சமூகங்களுக்கிடையில் வெறுப்பு உணர்வு அதிகரிப்பதற்கு பங்களிப்பு செலுத்தி வருகிறது.இதனால் இன , மத சமூகங்கள் ஒன்றுக்கொன்று எதிரிகளாக மாறும் போக்கும் அதிகரித்தது. அதனால் பெரும்பாலானவர்கள் தங்கள் இன, மத ரீதியான நலன்களை முன்னிலைப்படுத்தியதுடன் தேசியவாத நலன்களை விட்டு வெளியேற ஆரம்பித்தனர்.

இதுவே நிச்சயமற்ற எதிர்காலத்திற்கு வழிவகுத்த அடிப்படைக் காரணமாகும்.தேசிய நலனை முன்னிலைப்படுத்துவதன் மூலம் மக்களைத் தூண்டிவிட முடியாது. மாறாக ஒற்றுமைப்படுத்த முடியும்.அதேசமயம் இன மதவாத நலன்களுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கும்போது எண்ணிக்கையில் பெரும்பான்மையான சமூகங்கள் அனுகூலத்தை பெறுவதற்கான வாய்ப்பு கள் அதிகம்.உலகில் மனிதர்கள் யாவரும் சமமானவர்களெனவும் மேன்மையானதென எந்தவொரு சமூகமும் இல்லையென்ற கருத்து மேலோங்கி வந்ததற்கு நவீன கல்விக்கே நன்றி கூற வேண்டும்.ஆயினும் எப்படிக் கூறினாலும், பழைய பாரத்தை இன்னும் பலர் மனங்களில் சுமந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.எமது அன்றாட சமூக ,பொருளாதார உறவுகளில் மேன்மை பற்றிய எண்ணங்களை புறக்கணிக்க பெரும்பாலானவர்கள் தயாராக இல்லையென்பதையும் மறுக்கமுடியாது.உண்மையில் இது ஒரு துன்பமான நிலை. இலங்கையை பொறுத்தவரை சுதந்திரத்தின் பின் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்கள் இன,மத ரீதியான வேறுபாடுகளை நிராகரித்து சமவுரிமைகளை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உறுதியான விதத்தில் மேற்கொள் ளாதமையே இப்போதும் நெருக்கடிகள் தொடர்வதற்கு அடிப்படை காரணமாகும்.

அரசியலமைப்பின் வழிகாட்டுதல், கோட்பாடுகள் சமத்துவத்திற்கு போதுமான அளவு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும்.நிர்வாகத்தின் பிரதான அங்கங்களில் உண்மையான வெளிப்பாடு திருப்திகரமாக இல்லாதிருப்பதே இனங்கள் மத்தியில் நீடித்ததும் நிலையானதுமான நல்லிணக்கத்திற்கு சவாலாக காணப்படுகிறது.அவ்வப்போது உருவாக்கப்பட்ட சட்டங்களும் முன்னேற்றத்தின் பலன்களை சகல மட்டத்திற்கும் எடுத்துச் செல்வதில் சாதகமான பங்களிப்பை வழங்கியிருக்கவில்லை.சமூகங்கள் சமத்துவமாக இருப்பதாக கூறப்பட்டாலும் மேன்மை பற்றிய கருத்துக்களும் உரிமைகள் தொடர்பான வேறுபாடுகளும் சமத்துவத்திற்கு அச்சுறுத்தலாக உள்ளன.தற்போது ஒதுக்கப்பட்டதாக உணரும் இன ,மத சமூகங்களுக்கு சம வாய்ப்புகளை உருவாக்குவது அரசாங்கமொன்றின் கடமையாகும்.இதற்காக விசேட திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டும்.யாவற்றுக்கும் மேலாக தற்போதைய அணுகுமுறை மாற வேண்டும். அனைவரும் சமமாக பிறந்தவர்கள், சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியாக மேம்பட சம வாய்ப்புகள் இருக்க வேண்டும்.இதனை உத்தேச புதிய அரசியலமைப்பில் உத்தரவாதப்படுத்துவது நாட்டில் இன நெருக்கடிக்கு சுமுகமான தீர்வை கண்டுகொள்வதற்கு ஆரம்பப்புள்ளியிடுவதாக அமையக்கூடும் .

# இராணுவத் தீர்வின் மாயத் தோற்றம் ?






**திசராணி குணசேகர**

இதை ஒரு உருவக எச்சரிக்கை சன்னம் என்று அழைக்கவும். ஜனாதிபதியின் மருமகன் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்கள், ஹக்மன (மாத்தறை) பொதுக் கூட்டத்தில் இருந்தபோது, பிக்கு ஒருவர் மேடைக்கு வந்து உரை நிகழ்த்தினார்.

''இந்த அரசு நாட்டுக்கு என்ன செய்தது?'' அவர் முற்றிலும் சொல்லாட்சிக்கலை உணர்வில் கேட்டார். ''இந்த முட்டாள்தனமான ஜனநாயகம் அல்ல, ஆனால் (நீங்கள்) தாய்நாட்டை நேசித்தால், மக்களே, கோத்தாபய அடுத்த 10 ஆண்டுகளுக்கு நாட்டை இராணுவத்திடம் ஒப்படைக்கவும். 'ஆட்சியின் தோல்வி' குறித்து அவர் தனது பதிலை அளித்தார்

பிக்குவின் நேர்மையை சந்தேகிக்க முடியாது. அவர் 6.9 மில்லியன் மக்களில் ஒருவர், கோத்தாபய ராஜபக்சவை 'உழைக்கும் எங்கள் கதாநாயகன்' என்று அரவணைத்த உண்மையான விசுவாசி. அவரது வார்த்தைகள் வலியின் இடத்திலிருந்து வந்தவை, அவர் பரிந்துரைத்த 'பரிகாரம்' விரக்திக்கான அவநம்பிக்கையான பதில்.

அவரது தலையீடு, ராஜபக்சவின் அதிகாரத்தின் அடிவாரத்தில் உள்ள கட்டிடத்தை உறுதியானமுறையில் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதைக் குறிக்கிறது. பிரதேச சபைகள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிற்குப் பெருகிவரும் தோல்விகளின் தொடர்ச்சியும் ஏனைய அடையாளங்களாகும்.

அரசாங்கம் ஆளுவதற்கு தகுதியற்றதாக அதிகளவுக்கு பார்க்கப்படுகிறது. ஆனால் எந்த ஒரு எதிர்க்கட்சியும் அல்லது ஆளுமையும்இடைவெளிக்குள் பிரவேசிக்கும் திறன் கொண்டவர்களாக காணப்படவில்லை. இதன் விளைவாக முறைமையின் இதயத்தில் ஒரு இடைவெளி உள்ளது. ஹக்மன பிக்குவின் கருத்துக்கள் சிந்திக்கப்பட வேண்டிய சூழல் இதுவாகும். அவர் பிரபலமான குங்குமப் பூ வகைகளில் ஒருவரல்ல, ஆனால் தேசிய தோற்ற வடிவம் அல்லது பெரிய நிகழ்ச்சி நிரல் இல்லாத ஒரு சராசரி பிக்கு . இதுவே ராஜபக்ச ஆட்சியின் துயரங்களுக்கு அவர் பகிரங்கமாக பரிந்துரைத்த இராணுவ தீர்வை பாரதூரமான கவலைக்குரிய விடயமாக ஆக்குகிறது.

சுதந்திரத்திற்குப் பின்னரான இலங்கையின் வரலாற்றில் எல்லாமே தவறாகப் போய்விட்டது. ஆனால் நாங்கள் இன்னும் ஒரு முக்கியமான விடயத்தை சரியாகப் பெற்றுள்ளோம் - இராணுவத்தை அரசியலில் இருந்து விலக்கி வைப்பது என்பதே அதுவாகும்.இலங்கை வாக்காளர்கள் ஏமாற்றம், விரக்திக்கு கூட புதியவர்கள் அல்ல. ஆனால் அவர்கள் எப்போதும் ஜனநாயக அமைப்பில் ஒரு தீர்வைக் கண்டார்கள். இலங்கை இராணுவமும் அரசியலில் ஈடுபட விருப்பம் காட்டவில்லை (1960 களில் முறியடிக்கப்பட்ட இரண்டு ஆட்சிக்கவிழ்ப்புகளும் அற்பமானவை). வாக்காளர்கள் இராணுவத்தை நிர்வாகப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகக் கருதவில்லை.இராணுவம் தன்னை ஒரு அரசியல் மீட்பராகக் கருதவில்லை.

இந்த கண்ணுக்குத் தெரியாத பாதுகாப்பு அரண்களை குறைமதிப்பிற்கு உட்படுத்துவது மகிந்த ராஜபக்சவின் ஜனாதிபதி பதவிக் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டது.முதன் முதலில், பல உயர் மட்ட இராணுவத் தளபதிகள் தங்கள் சீருடையில் அரசு தொலைக்காட்சியில் தோன்றி 2010 ஜனாதிபதித் தேர்தலின் போது வேட்பாளர் ராஜபக்சவைப் பாராட்டினர். இன்னும் குறிப்பிடத்தக்க விடயம் , 'போர் கதாநாயகன்' வழிபாட்டு முறையை உருவாக்கியது, சீருடை அணிந்த மனிதருக்கு பௌத்த மதகுருமார்கள் (உண்மையான வீரர்கள் பெரும்பாலும் குறிப்பிட்டநோக்கத்துக்காக மட்டும் பயன்படுத்தப்பட்ட மற்றும் ஊதியம் இல்லாத உழைப்பு போன்றே நடத்தப்பட்டனர்) சமமான புனிதமான அந்தஸ்தை வழங்கினர்.

அணிபவரின் குணங்களைப் பொருட்படுத்தாமல் காவி அங்கியை வணங்கும் பழக்கம், தெளிவாகப் பழமையானது. 1934 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் திகதி லக்மினி பஹனாவில் எழுதப்பட்ட தலையங்கத்தில் முனிதாச குமாரதுங்க இந்த நடைமுறைக்கு எதிராக எச்சரிக்கிறார். 'வேடம்/தோற்றத்தை' வணங்குவது அரங்குடன் மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும் என்று அவர் சுட்டிக்காட்டுகிறார்.காவி அங்கியை அணிபவரின் குணங்களைப் பொருட்படுத்தாமல் வணங்கும் வழக்கம் நீடித்தால், காவி வஸ்திரத்தை ஆடைவரிசையில் வழிபடுபடுவதுடன் முடிவடையும் என்று அவர் எச்சரிக்கிறார்.

ராஜபக்சாக்கள் இந்தப் பழைய பழக்கத்தை தழுவிக் கொண்டது மட்டுமன்றி, போர் கதாநாயகர் வழிபாட்டுடன் கொடிய புதிய பழக்கத்தையும் உருவாக்கினர். இறுதி ஈழப்போர் மனிதாபிமானத் தாக்குதலாக மாறியது, அது பொதுமக்கள் உயிரிழப்பில்லாதது, மேலும் போர் வீரர் ஒரு தார்மீக மற்றும் நடைமுறை சுப்பர்மான் ஆனார் ,அந்த வீரருடைய ஒவ்வொரு செயலும் சரியானதாகவும் சிறந்ததாகவும் இருந்தது.இராணுவமானது திறமை, நேர்மை, திறன் மற்றும் நிச்சயமாக ஒழுக்கத்தின் அதி உன்னதமான வளமாக சித்தரிக்கப்பட்டது.

2011 ஆம் ஆண்டு பல்கலைக்கழக மாணவர்களுக்கான முதலாவது 'தலைமைத்துவப் பயிற்சித் திட்டத்தை' ஆரம்பித்து வைத்த ஜனாதிபதி மகி ந்தராஜபக்ச, 'நல்ல மனப்பான்மை மற்றும் நாட்டின் மீதான அன்புடன் உடல் மற்றும் மன ஒழுக்கத்துடன் கூடிய கற்றறிந்த பிரஜையை உருவாக்குவதே எமது நோக்கமாகும்' என அறிவித்தார்.டெய்லி நியூஸ் 24 மே 2011). விரைவில் அரச பாடசாலைகளின் அதிபர்கள் உட்பட அனைத்து வகையான பொது மக்களும் தலைமைத்துவப் பயிற்சிக்காக இராணுவ முகாம்களில் வைக்கப்பட்டனர், , அவர்களுக்கு சேவைத்தரங்களும் வழங்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ராஜபக்சாக்கள் தோற்கடிக்கப்பட்டதால், தொழில்சார் நிபுணர்களை இராணுவத்தில் தன்னார்வலர்களாக சேர்ப்பதை இலக்காகக் கொண்ட 'எமது இராணுவம் ' நிகழ்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்த முடியவில்லை.

இராணுவத்தை நல்லொழுக்கமுள்ள மற்றும் திறமையான சுப்பர்மான்கள் என்று மீள்வார்ப்பு செய்வது ராஜபக்சவின் அதிகாரத்தை வலுப்படுத்தும் ஒரு தந்திரமாகும். ஆனால், ராஜபக்ச தளத்தின் பெரும் பகுதியினர், சாதாரண மற்றும் நியமிக்கப்பட்டவர்கள், இந்த மாயையை யை உள்வாங்கியிருப்பார்கள். ராஜபக்சாக்கள் தோல்வியில் இருந்து பெரும் தோல்வியை நோக்கிக் கவலைப்படுவதால், இந்தப் பிரிவினர் சீருடை அணிந்த சுப்பர்மான்களை மாற்றாகப் பார்க்கத் தொடங்கலாம். அப்படியானால், ராஜபக்சவின் திகில் நிறைந்த கனவு வெற்றியடையக் கூடும், குறைவான கனவினால் அல்ல, மாறாக எல்லையற்ற ஒன்றுதான்.

ஆபத்தான இருவகைகள்

இலங்கையில், ரூபா மற்றும் அந்நிய செலாவணி கையிருப்பு வீழ்ச்சியடையும் போது பங்குகள் உயர்கின்றன. பங்குச் சந்தை ஆரோக்கியத்துடனும் உற்சாகத்துடனும் மலர்கிறது.பொருளாதாரம் ஒருபோதும் நோய்வாய்ப்பட்டதில்லை.

எந்தவொரு பாதகமான பொருளாதார விளைவுகளும் இல்லாமல் அரசாங்கம் பணத்தை அச்சிட முடியும் என்று அவர்கள் நம்பியது போல் - இன்னும் ஒரு வேளை இன்னும் நம்புவது போல, பங்குச் சந்தை உண்மையான பொருளாதாரத்தை பிரதிபலிக்கிறது என்று ராஜபக்சக்கள் நினைக்கலாம். பொருளாதாரம் பற்றிய அடிப்படை புரிதல் குறைவாக இருப்பதால் , அவர்கள் எந்தவொரு கிறுக்குத்தனமான கோட்பாட்டினாலும் பாதிக்கப்படக்கூடிய நலிந்த நிலையில் இருந்தார்கள் /இருக்கிறார்கள்

அக்டோபர் 7ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தமது அரசியல் அனுபவமின்மையை ஒப்புக்கொண்டதாகவும், மேலும் தனது மூத்த சகோதரர் மகிந்தவை அதிகளவுக்கு அரசியலில் ஈடுபடுமாறு கேட்டுக் கொண்டதாகவும் ஊடகங்கள் தெரிவிக்கின்றன. ஜனாதிபதி என்ற வகையில் தாம் அரசியல் அனுபவத்தை பெற்று வருவதாக அவர் தெரிவித்ததாக கூறப்படுகிறது. மத்திய வங்கியின் உயர் அதிகாரிகளை வரவழைத்து, புதிய ஆ ற்றலுடன் வருமாறு தொலைக்காட்சியில் கடுமையாக கண்டித்தார் . அவர் வேலையில் அனுபவத்தைப் பெற முயற்சிக்கும்போது, காஸ் மூலம் சமைப்பதற்கு ஒரு விபத்து தலைக்கவசம் ஹெல்மெட் அவசியமான துணைப் பொருளாகிவிட்டது.

பெரிய மற்றும் சிறிய வழிகளில்.யதார்த்தபூர்வம ற்ற விதிகள்,

செயற்கையாக உயர்த்தப்பட்ட ரூபாயை மிச்சப்படுத்துவதற்காக தமது கஜானாவுக்கு பெரும் டொலர்கள் வரவிருக்கும் கனவில் மத்திய வங்கி ஆளுநர் வாழ்கிறார். அதிகரித்து வரும் மக்கள் எண்ணிக்கையில் மூன்று அல்லது இரண்டு வேளை உணவு கிடைக்காத மக்கள் எண்ணிக்கை அதிகரித்துவரும் நாட்டில், ஆட்சியானது நடைபாதைகளுக்கு முன்னுரிமை அளிக்கிறது. கொஸ்கலை, தம்புள்ளையில் நடைபாதை அமைப்பதற்காக கடைகள் இடிக்கப்பட்டனதொழிலின்மை ,வருமானமிழப்பு, வறுமையை அதிகரிக்கசெய்யும் . திக்வெல்ல கடற்கரையும் அதே நோக்கத்திற்காக அழிக்கப்பட்டது.

பொருளாதாரம் சீர்குலைந்த நிலையில், சட்டம் நகைச்சுவையாக மாற்றப்படுகிறது. பொலிஸாருக்குப் பொறுப்பான அமைச்சரின் செயலாளர் ஒருவர் தங்கம் தோண்டியதில் பிடிபட்டுள்ளார். ராஜபக்சவின் கூட்டாளிகளைக் காப்பாற்றுவதிலும், ராஜபக்ச எதிர்ப்பாளர்களைத் தண்டிப்பதிலும் சட்டமா அதிபர் திணைக்களம் மும்முரமாக ஈடுபட்டுள்ளது. 11 இளைஞர்களைக் கடத்திய வழக்கில் இருந்து முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னாகொட விடுவிக்கப்பட்டதுடன், மிதக்கும் ஆயுதக் கிடங்கில் இருந்து அவன்ட் கார்ட் நிறுவனத்தின் தலைவர் விடுவிக்கப்பட்ட நிலையில், ஹெஜாஸ் ஹிஸ்புல்லா 600 நாட்களை சிறையில் பூர்த்தி செய்துள்ளார் .

சட்டம் மற்றும் பௌத்தம் இரண்டையும் இழிவுபடுத்தும் ராஜபக்சவின் முயற்சிகள், பிக்கு கலகொட அத்தே ஞானசாரரின் அண்மைய நேர்மையற்ற செயல்களை விட வேறு எதனையும் வெளிச்சதிற்கு கொண்டுவரவில்லை.

தபோவனே ரத்ன தேரர் என்ற பிக்கு ஒருவர், பேஸ்புக்கில் வாராந்த தம்ம விவாதத்தின் ஒரு பகுதியாக, பிக்குகள் அரசியலில் ஈடுபடுவதை விமர்சித்திருந்தார்.கோத்தாபய ராஜபக்சவின் கரத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுபவர் இந்த கருத்துக்கு விதிவிலக்கு அளித்தார். அவர் ரத்ன தேரோவை அழைத்து, சிங்களத்தில் அநாகரிகவார்த்தைகளால் நிரப் பி னார் . நாய் என்பது ஒரு நாடு, ஒரே சட்டம் என்ற செயலணி க்குழுவின் தலைவரின் உரையாடலில் நாகரி கமான வடிவமாகும்.

அவரது மேலும் அச்சிடக்கூடிய இ ரத்தினங்களில் சில, உங்களுக்கும் தம்பிக்கும் எந்த வித்தியாசமும் இல்லை (இலங்கை முஸ்லிம்களுக்குப் பயன்படுத்தப்படும் இழிவான சொல்); நீங்கள் காட்டில் தியானம் செய்ய விரும்பினால் அதைச் செய்யுங்கள். நீங்கள் நிபாணம் அடைய விரும்பினால் அதைச் செய்யுங்கள். வீடியோவை உடனடியாக அகற்றவும். அல்லது (நான்) உன்னை தரையில் அடித்து நொறுக்கி விடுவேன். (https://www.youtube.com/watch?v=d8UD5mO7vR8 சுமார் 31.00 முதல் 34.00 வரை)

ஒரே நாடு, ஒரே சட்டம் குறித்த தம து செயல ணிக்குழுவின் தலைவராக குடியரசுத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர் இவர்தான்.

சமீபத்தில் அரசுக்கு சொந்தமான லிட்ரோ எரிவாயுவின் உற்பத்தி மேலாளர் நிறுவனம் எரிவாயுவின் கலவையை மாற்றி சில மாதிரிகளை சந்தைக்கு வெளியிட்டதாக ஒப்புக்கொண்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதானால், அரசுக்கு சொந்தமான லிட்ரோ மக்களின் வாழ்க்கையை பரிசோதித்தது.

ராஜபக்சா க்களை கேலி செய்வது பல சமூக ஊடக பயனா ளி களின் விருப்பமான செயலாக தெரிகிறது. அதிருப்தியில் உள்ள ராஜபக்ச வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பது ராஜபக்சவின் 'கடினத்தன்மையின்மை'யே அனைத்து தவறுக்கும் காரணமேன்பதற்கு பங்களிப்பு செய்வதாக தோன்றுகிறது. இந்த விமர்சகர்கள் புடினாகவோ அல்லது ஹிட்லராகவோ கூட மாறுவதற்கு ஜனாதிபதிகோத்தபாயவின் இயலாமை குறித்து புலம்புகின்றனர். இந்த உளவியல் -அரசியல் மசோகிசம்அடக்கிக் கொடுமைசெய்வதை ஏற்றின்பமடையும் முரணியல் சிற்றின்பநிலை . ஒரு உலகளாவிய பொது வோட்டத்தின் ஒரு பகுதியாகும், இது ''கடினத்தன்மையின் ஆரோக்கியமற்ற தன்மையை மிக உயர்ந்த கோட்பாடாக '' இலட்சியப்படுத்துகிறது (புதிய வலதுசாரிகளின் விசித்திரமான மற்றும் ஆபத்தான கடினத்தன்மை - தி அட்லாண்டிக் - 1 டிசம்பர் 2021). இந்த ஒழுங்கமைப்பில் கண்ணியம், இரக்கம், இரக்கம், புத்திசாலித்தனம் கூட பலவீனமானது டன் குறிப்பாக உணரப்பட்ட அச்சுறுத்தல்கள் மற்றும் எதிரிகளைக் கையாள்வதில். மிருகத்தனம், சகிப்புணர்வி ன்மை மற்றும் புத்தியில்லாத வன்முறை ஆகியவை விரும்பப்படுகின்றன,

7ஆம் பக்கம் பார்க்க..

**அரசுரிமை சின்னங்களின் கடினத்தன்மை குறைவாக இருப்பதே தற்போதைய அனைத்து துயரங்களுக்கும் காரணமென ஹக்மன பிக்கு வெளிப்படையாக கூறுகிறார். தார்மீக, நேர்மையான, திறமையான படைவீரர் என்ற மாயையும் அவர் நம்புகிறாரெனத் தோன்றுகிறது.தற்போதைய முட்டுக்கட்டையிலிருந்து வெளியேறுவதற்கு விரும்பிய வழியாக 10 ஆண்டுகளுக்கு இராணுவத்திற்கு தானாக முன்வந்து அதிகாரத்தை வழங்குவதை அவர் பரிந்துரைக்கிறார். இணையத்தில் சாதாரணமான ராஜபக்ச ஆதரவாளர்கள் பலர் இதனை எதிரொலிக்கின்றனர். ராஜபக்சாக்கள் தோற்றுப்போனார்கள். ஏனெனில் அறியாமையும் அவர்களின் அறியாமையின் அளவு மட்டத்தை அறிந்திருக்காததாலுமாகும். இலங்கையர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், 2019 இல் போன்று ராஜபக்சாக்களுக்குஅதிகளவுக்கு அறியாமையுடைய ஆட்கள் செய்த அனைத்து நற்பண்புகளையும் திறன்களையும் அவர்களுக்குக் கூறி, அறியாமையுடைய மக்களிடமிருந்து இரட்சிப்பை தேடலாம். நிவாரணம் 2019 இல் போன்று தீர்த்து வைப்பதற்கு உறுதியளிக்கும் நோயை விட மிகவும் ஆபத்தானது**

# வடக்கிலுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் உறுதியுடன் இருக்கிறேன்



## ஆளுநர் ஜீவன் தியாகராஜா கூறுகிறார்

**இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் உறுப்பினரும் மனிதாபிமான முகவரமைப்புகள் கூட்டமைப்பின் முன்னாள் தலைவருமான ஜீவன் தியாகராஜா அண்மையில் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டார்.**

**அவர் வடக்கில் உள்ள அதிகாரிகள்,அரசியல்வாதிகள் , வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பல சந்திப்புகளை மேற்கொண்டிருக்கும் அதே வேளை,முன்னுரிமையளித்து கவனம் செலுத்த எதிர்பார்க்கும் சில முக்கியமான விடயங்கள் தொடர்பாக டெய்லி மிரர் பத்திரிகைக்கு அளித்திருக்கும் பேட்டியில் அவர் தமது கருத்துக்களை தெரிவித்துள்ளார். பேட்டி வருமாறு.**

**கேள்வி; வடக்கில் இந்த மிக முக்கியமான பதவியை உங்களை ஏற்க வைத்தது எது?**

பதில்;நான் மிகவும் வித்தியாசமான கருத்தை பெற்றிருந்தேன் .நான் ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினராக பணியாற்றியிருந்தேன். சாத்தியமான ஐந்து வருட காலத்தின் 11 மாதங்களை நான் நிறைவுசெய்திருந்தேன்.இப்போது தேர்தல் ஆணைக்குழுவில் பணியாற்றுவது என்பது அதிகளவுக்கு பொது சேவையாகும். மிகவும் அதிகளவுக்கு பொது மக்கள் சேவை. எனவே நான் ஏற்கனவே ஒரு பொது சேவைக்கான வகிபாகத்தை ஏற்றுக்கொண்டேன். எனது வேலையை மாற்றும்படி என்னிடம் கேட்கப்பட்டபோது, அது அடிப்படையில் மற்றொரு பொது சேவையின் நீடிப்பாகும். அதன் பிற்பகுதி என்னவென்றால், 1983 முதல் எனது பணியும் வாழ்க்கையும் கர்வமோ, பெருமிதமோ இல்லாமல்,முற்றிலும் சமகால வரலாற்றைப் பற்றியதாக இருந்தது. அதாவது நீங்கள் ஆரம்பத்தில் கதைத்த சமகால விவகாரங்களைப் பற்றியது. ஆகவே, கடந்த மூன்றரை தசாப்தங்களில் என்ன நடந்தது, யாரிடம் இருக்க வேண்டும் அல்லது என்ன நடந்திருக்கக் கூடாது என்பதைப் பற்றி நான் கற்றுக் கொள்ளவில்லை என்றால், நான் முழு முட்டாள் ஆவேன். எனவே ஆளுநரின் வேலையை கையாள முயற்சிப்பது பெரிய சவாலாக இல்லை.

**கேள்வி;வடக்கில் தீவிரமானமுறையில் கவனம் செலுத்த வேண்டிய பல பிரச்சினைகளை நீங்கள் பார்க்கிறீர்களா? ஊடகங்களில் குறிப்பாக சமூக ஊடகங்களில் அதிகளவானவை முன்னிலைப் படுத்துவதைப் பார்க்கிறோம். இந்த பிரச்சினைகளில் சிலவற்றை நீங்கள் களத்தில் காண்கிறீர்களா?**

பதில் ;ஆம். இந்தமாதிரி வைத்துக்கொள்வோம்.விவகாரங்கள் உள்ளன. பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் உள்ளன. இப்போது அது முடிவடையாமல் இருப்பதற்கு காரணம் வெவ்வேறு காரணிகளாக இருக்கலாம். ஆனால் அது எதுவாக இருந்தாலும், சமாளிக்க வேண்டிய விடயங்கள் உள்ளன. களத்தில் உள்ள பொது மக்கள் தொடர்பான பிரச்சினைகள், வர்த்தகம் தொடர்பான பிரச்சினைகள், முதலீட்டாளர்கள் மற்றும் முதலீடுகள் தொடர்பான பிரச்சினைகள்.அரசாங்க சேவை உறுப்பினர்கள் தொடர்பான பிரச்சினைகள், கல்வி, சுகாதாரம். சுற்றுச்சூழல் பிரச்சினைகள், வடிகால்கள் முற்றிலும் அசுத்தமாகவும், கவனிக்கப்படாமலும், அடைக்கப்பட்டும் காணப்படுகின்றன. நாளொன்றில் பெரும்பாலான நேரங்களில் உயிரை பறிக்கும் கொசுக்கள். ஆம், கையாளப்பட வேண்டியஅதிகளவிலான விவகாரங்கள் உள்ளன.

**கேள்வி; அதனால் அடுத்தடுத்து பதவி வகித்த ஆளுநர்கள் உண்மையில் இந்த பிரச்சினைகளை கவனிக்கவில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்து**மே?

பதில்;இந்தக் கேள்வி என்னிடம் சில காலத்துக்கு முன்பு கேட்கப்பட்டது.ஆளுநர்கள் வந்து செல்கின்றனர். ஆளுநர்கள் குறிப்பிட்ட காலத்தில் வந்து குறிப்பிட்ட காலத்தில் சென்று விடுவார்கள்.நாங்கள் 10 ஆண்டு காலம் பற்றி பேசுவதால் நான் வரலாற்றை சொல்ல மாட்டேன். எனவே ஜெனரல் சந்திரசிறி ஒரு குறிப்பிட்ட காலத்தில் வந்தார். குரே மற்றொரு முறை வந்தார். பளிக்கார வேறொரு சமயம் வந்தார்.சுரேன் ராகவன் இன்னொரு சமயம் வந்தார். சார்ள்ஸ் மற்றொரு சமயம் வந்தார். ஒவ்வொருவருக்கும் அவரவர் காலப் பிரச்சினைகளைச் சமாளிக்க ஒரு தருணம் இருந்தது. இப்போது, என்ன சூழல் இருந்தது என்று தெரியவில்லை.பயன்படுத்துவதற்கு அவர்கள் வசம் இருந்தவை என்ன? அவர்கள் அதை எப்படிப் பார்த்தார்கள் என்பதைப் புரிந்துகொள்ள என்னால் முடியவில்லை. எனவே, அவர்கள் என்ன செய்தார்கள் அல்லது செய்யவில்லை என்பதைப் பற்றி நான் உண்மையில் கருத்து தெரிவிக்கமாட்டேன். நான் என்ன செய்வேன் என்பதை என்னால் நிச்சயமாக சொல்ல முடியும்.

வெள்ளம், முன்னெச்சரிக்கை நடவடிக்கை, இயற்கை பேரழிவுகள் ஆகியவற்றை கையாள்வதற்கான 24/7 நாள்முழுக்க, வாரம் முழுக்க செயற்பாட்டு அறை இருக்கப் போகிறது. ஆனால் என்னைப் பொறுத்தவரை வறுமை மனிதனுக்கு பேரனர்த்தமாகும். அடிப்படை தேவைகள், அது ஒரு பேரனர்த்தம்.அதை மிக விரைவாகக் கேட்கவும், பதிலளிக்கவும், செயற்படவும் நாங்கள் விரும்புகிறோம்.எனவே, நாங்கள் நிச்சயமாக அந்த வகையான பதிலளிக்கும் பொறிமுறையை ஒன்றாக இணைப்போம்.

மேலும் ஊழல் என்பதுஅடிப்படையில் இந்த மாகாணத்தில் நாம் அறிந்த அளவிற்கு பேசக்கூடிய விடயம் அல்ல.மணல் அகழ்வு போன்ற சட்டவிரோதமான விடயங்கள் மற்றும் அதுபோன்ற அனைத்து விட யங்களும், அவர்கள் வேறு எங்காவது சென்று அதைச் செய்ய வேண்டியிருக்கும்.அது வேலை செய்யாது வன்முறை என்பது இல்லை.

எனது இறுதிக் கருத்து என்னவென்றால், மக்களை அவர்களுக்கு இரண்டாவது வீடாக இருக்க வரவேற்கும் ஒரு மாகாணமாக நாங்கள் இருக்க விரும்புகிறோம்.அந்த திசையில் தான் நாங்கள் செல்கிறோம், நாங்கள் உண்மையில், வெளிப்படையாக பேச விரும்புகிறோம், இந்த பிள்ளைகளுக்காக பணம் சம்பாதிக்க விரும்புகிறோம். இந்தத் தொழிலில் முதலீடு செய்து அதை மேம்படுத்த விரும்புகிறோம். மேலும் இது சிங்கப்பூர் பயன்படுத்தும் உத்தியும் மலேசிய வளர்ச்சியின் கலவையாகும்.

முற்றிலும் செயற்படாமல் இருப்பதால் மக்களால் பெரிதாகவும் உரத்தும் விமர்சிக்கப்படுவோம்.எனவே, எம்மில் பெரும்பாலானோர் முற்றிலும் திறமையற்றவர்கள் அல்லது செயற் படாதவர்கள் என்று விமர்சிக்க விரும்பவில்லை என்று நான் நினைக்கவில்லை.

**கேள்வி ;இராணுவமு ம் அடங்குகின்றதா ?**

ஏனென்றால்,அங்கு சிவில் நிர்வாகத்தை விட இராணுவ நிர்வாகம் முன்னுரிமை பெறும் அதிகளவுக்கு உணர்வுபூர்வமான விடயங்களில் ஒன்றாகவிருக்கிறது.

ஒவ்வொருவரும் தங்கள் மேலாளரின் பலம் மற்றும் பலவீனங்களைப் பார்க்கிறார்கள். என்னைப் பொறுத்த வரையில், நாங்கள் வேலை செய்யும் அரசியலமைப்பு ஒன்று உள்ளது. இராணுவத்திற்கு தலைமை தளபதி ஒருவர் உள்ளார். அந்தத் தளபதிதான் என்னை நியமிக்கும் மற்றும் பதவி நீக்கம் செய்யும் அதிகாரம் உடையவர்.பாதுகாப்புப் படையினர் மற்றும் பொலிஸ் துறையினரை நான் ஒரே இடத்தில் அடிக்கடி சந்திப்பேன். நாங்கள் அதே பிரச்சினைகளைப் பற்றி பேசுகிறோம். நிர்வாகத்தைப் போலவே நாங்கள் அதே விவகாரங்களை முடித்து வைக்கின்றோம்

**கேள்வி; அண்மைக்காலமாக யாழ்பாணத்தின் பாதுகாப்பு பிரச்சினை பேசப்பட்ட விடயமாகும் .யாழ்ப்பாணத்தில் வாள்வெட்டு குழு ஒன்று செயற்படுவதாக செய்திகள் வெளியாகியுள்ளன. மேலும், வடக்கில் புலிகள் நடமாட்டம் இருப்பதாகவும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன.பாதுகாப்பு பிரச்சினை உள்ளதா?**

> **இலங்கையில் வடக்கு மாகாணம் தொடர்ந்து பதற்றமான பிராந்தியமாக உள்ளது. இராணுவமயமாக்கல், மனித உரிமை மீறல்கள் மற்றும் இப்பகுதிக்கு போதிய நிதி ஒதுக்கீடு செய்யப்படாமை போன்ற குற்றச்சாட்டுகள் அடிக்கடி எழுப்பப்படும் சில பிரச்சினைகளாகும்.**

பதில்;ஆம். வெளிப்படையாக , எங்களிடம் பரந்த அளவில், குறிப்பாக கஞ்சா மற்றும் எதிரான பொருட்கள் உள்ளன. எனவே இது இலங்கையின் மற்ற பகுதிகளுக்குவீதி வழி,யாக செல்வதற்கு தரையிறங்கும் இடமாகும் இது உண்மையாகவே சரியானது. தீவிரவாதத்தை ஊக்குவிப்பதில் எங்களுக்கும் ஒரு வகையான விருப்பம் உள்ளது. மத சகிப்பின்மை உள்ளது. எந்தவொரு குறிப்பிட்ட நிறுவனத்தையும் முத்திரை குத்தாமல், நாட்டில் ஒழிந்திருக்கக்கூடிய வன்முறை தீவிரவாத வடிவங்கள், வடமாகாணத்தில் வேரூன்றிய மற்றும் அந்த வேர்கள் செயலில் உள்ள கடல்கடந்த நாடுகளில் வாழ்கின்றன. பரிவர்த்தனைகள் உள்ளன, இந்த உரையாடல்கள் நடக்கின்றன. இது மிகவும் ஆரோக்கியமற்றது. இதனை ஆரோக்கியமற்றது என்று சொல்வதன் மூலம் நான் ஒரு வகையான மாதிரியாக இருக்கிறேன். அதில் எந்தவொரு நல்ல நோக்கமும் இல்லை. எனவே அது உள்ளது. ஒரு அச்சுறுத்தல் உள்ளது, அதில் எந்த சந்தேகமும் இல்லை. அந்த அச்சுறுத்தல் இருக்கும் வரை, பாதுகாப்புப் படையினர் தங்கள் கதவுகளை திறந்து வைத்திருப்பார்கள் என்று நான் நினைக்கிறேன். சந்தேகமில்லை.

நான்காவது பரிமாணம் ஆவா . அது ஒரு ஃபேஷனாக மாறியது.

உங்களுக்கு தெரியும், பொ லிவுட்பாணி . அவர்கள் உண்மையில் அலங்கார வாள்களின் அனைத்து பவழக்கங்களையும் மாற்றி அதை வடிவமைத்து ள்ளனர். வெளிப்படையாக, அவ ர்களில் சிலர், மோட்டார் சைக்கிளில்வீதியில் யில் செல்லும்போது, இந்த வாள்களை தரையில் இழுத்துச் செல்கிறார்கள். தீப்பொறி பறக்க. முழுக்க முழுக்க சினிமா விட யங்கள் நடக்கின்றன. நிச்சயமாக வீடுகளுக்குள் குதிப்பது, கராத்தே கிட், கைகளை வெட்டுவது மற்றும் அனைத்தும், அது போய்விட்டது. அறிவுறுத்தல்கள் மிகவும் கண்டிப்பானவை. நிச்சயமாக, பணம் கை மாறுகிறது, இதனால் சில நேரங்களில் குற்றத்திற்கும் சட்டத்திற்கும் இடையே ஒரு தொடர்பு உள்ளது, அதை நீங்கள் முழுமையாக கட்டுப்படுத்த முடியாது. ஆனால் கொள்கையோ, அதனைப்பற்றி யோசிக்கவே வேண்டாம்.

**கேள்வி;வடக்கில் பாதுகாப்பு சோதனைச் சாவடிகள் இருப்பது சமூக ஊடகங்களில் விவாதிக்கப்பட்ட ஒன்று. சிலர் தேவை என்று கூறுகிறார்கள், மற்றவர்கள் இல்லை என்று கூறுகிறார்கள். நீங்கள் என்ன கூறுகிறீர்கள் ?**

பதில்; சோதனைச் சாவடிகள் உள்ளன, ஆம். ஆனால், நாட்டின்ஏனைய பகுதிகளைப் பற்றி கருத்துத் தெரிவிக்காமல், உங்களுக்குத் தெரியுமா, நள்ளிரவில் கொழும்பு நகரில் திடீர் சோதனைச் சாவடிகள் இல்லையா? சோதனைச் சாவடிகள் உள்ளன, ஆனால் நீங்கள் உண்மையிலேயே மக்களை மோப்பம் பிடிக்க விரும்பினால் நான் கூறுவேன்

காரியங்களைச் செய்யக்கூடாது, அவர்கள் வந்து என் பேட்ஜைப் பார்த்தீர்களா? நான் இதில் உறுப்பினர். என்று கூறுவதைபோன்றதாகும் எனவே நீங்கள் நிறைய முன் தகவல்களைப் பயன்படுத்த வேண்டும் என்று நினைக்கிறேன். தகவல் மற்றும் தரவைப் பயன்படுத்துவதில் நீங்கள் மிகவும் புத்திசாலியாக இருக்க வேண்டும்.

பிரிட்டிஷ் பிரதமரின் பாதுகாப்பு படையணி வீதியில் யில் செல்வதைப் பார்த்தால், அவருக்கு பாதுகாப்பு எங்கே என்று மக்கள் கேட்கிறார்கள் என்று ஒரு ஒப்பீடு இருக்கும். எப்படி வந்தது? அதைச் சுற்றி சில கார்களும் சில பைக்குகளும் ஓடுகின்றன.இங்கு இன்னொன்றையும் சொல்கிறேன். இந்த விடயங்களில் சிலவற்றை எதிர்கொள்வதில் நீங்கள்ஏனைய முறைகளைப் பயன்படுத்துகிறீர்கள், அதை எதிர்கொள்ள சகல நேரத்திலும் பார்க்க முடியாத பிற முறைகள்.

**கேள்வி ; எனவே சாராம்சத்தில், இந்த சோதனைச் சாவடிகள் உண்மையில் தேவையில்லை என்று கூறுகிறீர்கள்?.**

பதில் ;நான் அதைச் சொல்லவில்லை. ஆய்வு அவசியம் என்பதால் இதைப் பற்றிய ஆய்வு அவசியம் என்று நான் சொன்னேன். ஆனால், நீங்கள் பிரதான வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது, நீங்கள் ஜெலிக்னைட் டை எடுத்துச் செல்லப் போவதில்லை என்பது உங்களுக்குத் தெரியும். ஆனால்இ து சட்டம் ஒழுங்கு உங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறது என்று சொல்வதைப்போன்றதாகும் நாங்கள் உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

**கேள்வி;ஆனால் அது வடக்கில் குறிப்பாக வெளியில் இருந்து வரும் மக்களிடையே அச்சத்தை ஏற்படுத்தவில்லையா ?**

பதில் ;முடியாது என நம்புகிறேன். அப்படித்தான் நான் வைத்தேன். ஆனால், இந்த இரவில் எத்தனை பேருந்துகள் ஓடுகின்றன என்பதுதான் விடயத்துக்கு ஆதாரம் என்று நினைக்கிறேன். பேருந்துகள் அதிக அளவில் இயக்கப்படுகின்றன. சோதனைச் சாவடிகளின் நிலைப்பாடு, அந்த சோதனைச் சாவடிகளில் நிறுத்தப்படாமல் வாகனம் ஓட்ட முடியாது. இந்தச் சோதனைச் சாவடிகளில் நடைமுறையைப் பற்றி எனது அவதானிப்புகளைச் செய்துள்ளேன். சோதனைச் சாவடிகளில் எனது அவதானிப்புகளைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளேன்.

**கேள்வி;வடக்கின் முதலமைச்சராக சி.வி.விக்னேஸ்வரன் பதவியேற்றதில் இருந்து நிலவும் பிரச்சினை என்னவென்றால்ஆளுநருடன் மாகாணசபை சரியாகச் செயற் படவில்லை என்பது தான். மாகாண சபை தற்போது கலைக்கப்பட்டுள்ளது, ஆனால் வடக்கில் இருக்கும் சில முக்கிய சவால்கள், முக்கிய பிரச்சினைகளை தீர்க்க அவர்களுடன் இணைந்து பணியாற்ற முடியும் என்று நினைக்கிறீர்களா?**

பதில்; கண்டிப்பாக. ஏனென்றால்,எ ம்முடைய தனிப்பட்ட குணங்கள், ஆளுமைகள், விருப்பங்கள் எதுவாக இருந்தாலும், நாம் ஒன்றாகச் செயற் பட வேண்டும் என்று நான் நினைக்கிறேன். நாங்கள் ஒன்றாக வேலை செய்ய வேண்டும்.இலகுவாக சொன்னால், நாங்கள் அரசியலமைப்பை மீறுவோம்., நாங்கள் வளங்களை வீணாக்குவோம்,.

முற்றிலும் செயல்படாமல் இருப்பதால் மக்களால் பெரிதாகவும் சத்தமாகவும் விமர்சிக்கப்படுவோம்,. எனவே, நம்மில் பெரும்பாலோர் முற்றிலும் திறமையற்றவர்கள் அல்லது செயல்படாதவர்கள் என்று விமர்சிக்கப்படுவதை நான் விரும்பவில்லை.

9ஆம் பக்கம் பார்க்க..

## இராணுவத் தீர்வின்...

6ஆம் பக்கத்தொடர்ச்சி...

ஒரு பிரச்சனையின் உணரப்பட்ட தன்மை பெரும்பாலும் தீர்வு மீது தீர்மானிக்கும் செல்வாக்கைக் கொண்டுள்ளது. இலங்கை வாக்காளர்களில் பெரும் பகுதியினர் தவறுகள் அனைத்தையும் ஆட்சியாளர்களின் 'பலவீனம்' என்று தவறாகக் கூறினால், அவர்கள் ஒரு 'கடினமான' மாற்றீட்டைக் கண்டுபிடிப்பதில் தங்கள் முயற்சிகளில் கவனம் செலுத்துவார்கள்.

ஹக்மனபிக்கு வெளிப்படையாக தற்போதைய அனைத்து துயரங்களுக்கும் கடினத் தன்மையின் பற்றாக்குறையை காரணமாகக் கூறுகிறார். அவர் தார்மீக, நேர்மையான, திறமையான படைவீரர் என்ற மாயையும் நம்புகிறார். தற்போதைய இக்கட்டான நிலையிலிருந்து வெளியேற விரும்பிய வழியாக 10 ஆண்டுகளுக்கு இராணுவத்திற்கு தானாக முன்வந்து அதிகாரத்தை வழங்குவதை அவர் பரிந்துரைக்கிறார். இதை இணையத்தில்பல சாதாரணமான ராஜபக்ச ஆதரவாளர்கள் எதிரொலிக்கின்றனர்.

ராஜபக்சாக்கள் தோற்றுப்போனார்கள். ஏனெனில் அறியாமையும் அவர்களின் அறியாமையின் அளவு மட்டத்தை அறிந்திருக்காததாலுமாகும் . இலங்கையர்கள் இந்த உண்மையைப் புரிந்து கொள்ளவில்லை என்றால், 2019 இல்போன்று ராஜபக்சாக்களுக்குஅதிகளவுக்கு அறியாமையுடைய ஆட்கள் செய்த அனைத்து நற்பண்புகளையும் திறன்களையும் அவர்களுக்குக் கூறி, அறியாமையுடைய மக்களிடமிருந்து இரட்சிப்பைத் தேடலாம். 'நிவாரணம்' 2019 இல் போன்று தீர்த்து வைப்பதற்கு உறுதியளிக்கும் நோயை விட மிகவும் ஆபத்தானது'

### கொடிய வெவ்வேறு விடயங்களின் கலவை

இஸ்லாமிய சுவரொட்டியைபிரியந்த தியவதன கிழிக்கவில்லை என்றும், அவர் மீதான விரோதம் சம்பளப் பிரச்சினையால் உருவானது என்றும் அவரது குடும்பத்தினர் வலியுறுத்துகின்றனர். அது எப்படியிருந்தாலும், மத வெறியே ஒரு கும்பலை உருவாக்குவதற்கும், காட்டுமிராண்டித்தனமான படுகொலைகளை நிகழ்த்துவதற்கும் வழி வகுத்தது.

பாகிஸ்தானை நிறுவியவர்கள் ஷரியா சட்டத்தை விதிக்கவில்லை. இது ஜியா உல் ஹக்கின் இராணுவ ஆட்சியின் வேலை பிராந்தியத்தில் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியான ஜெனரல் ஹக்கிற்கு ஒரு தளம் தேவைப்பட்டது அத்துடன் இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு அவர் கொடுத்த விலையாகும்.

அப்போதிருந்து, அரசியலுக்கும் மதத்திற்கும், இராணுவத்திற்கும் முல்லாக்களுக்கும் இடையிலான கொடிய அரவணைப்பை பாகிஸ்தானால் உடைக்க முடியவில்லை. கும்பல் அடித்துக்கொலை செய்வது, குறிப்பாக மத நிந்தனையை தண்டிக்கும் பதாகையின் கீழ்,ஒழுங்கான தன்மை அங்கு இல்லை 'விசுவாசம்' கொண்டவர்கள், நம்பிக்கை மிகவும் பலவீனமாக இருப்பவர்கள் என்று பார்க்கும் எவரையும் கொலை செய்யும் பழக்கம் கொண்டவர்கள்.. அதாவது

மதவெறியர்களாக இருந்தாலும், விசுவாச துரோகிகளாக இருந்தாலும் அல்லது நம்பிக்கை மிகவும் பலவீனமாக இருப்பவர்களாய் இருந்தாலும், நம்பிக்கையில் குறைவுள்ளவர்கள் என்று பார்க்கும் எவரையும் கொலை செய்யும் பழக்கம் கொண்டவர்கள்.

இராணுவம் மற்றும் மதரீதியான உரிமைகளின் ஆசியுடன் இம்ரான் கான் தேர்தலில் வெற்றி பெற்றார். குறைந்த பட்சம் பிரியந்த தியவதனவின் விடயத்திலாவது நீதி வழங்கப்படுவதை அவர் காண விரும்பலாம். உண்மையில் பாகிஸ்தானைக் கட்டுப்படுத்தும் சக்திகளால் அவர் அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படுவார்களா என்பது வேறு விட யம். இம்ரான் கான் அரசாங்கத்தால் சமீபத்தில் தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-லப்பை அமைப்பு பாகிஸ்தானின் ஆதரவாளர்களை முதன்மையாகக் கொண்டதாகக் கூறப்படுகிறது. பாகிஸ்தானின் முதன்மையான நாளிதழானடோ செய்தி வெளியிட்டது போல், பாதுகாப்பு அமைச்சர் பே ர்வேஸ் கட்டாக் இந்த படுகொலை பற்றி கூறினார், (இந்த சம்பவத்தின் பின்னணியில்) காரணங்கள் உங்களுக்குத் தெரியும். பிள்ளைகள் கள்... வளரும்போது, அவர்கள் உற்சாகமாகி, உணர்ச்சிகளின் மூலம் விட யங்களைச் செய்கிறார்கள்'' என்று கூறியிருந்தார்..

ஆம் ,மூர்க்கத்தனமானது , ஆனால் அறிமுகமில்லாதது.

1983 ஜூலையில், புலிகள் 13 இராணுவத்தினரைக் கொன்றதால், இலங்கையில் சக ல இடங்களிலி ருந்தும் ஒவ்வொரு தமிழனையும் சிங்களக் கும்பல் கொல்ல முயன்றது. 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம், பிக்கு கலகொட அத்தே ஞானசாரர் , போக்குவரத்துச் சம்பவத்தைப் பயன்படுத்தி சிங்கள-பௌத்த கும்பலை உருவாக்கி, அளுத்கம முஸ்லிம்களுக்கு எதிராக அனுப்பி நான்கு மரணங்களை ஏற்படுத்தினார்.

இந்த நாட்டில் இன்னும் சிங்கள பொலிஸ் , சிங்கள இராணுவம் உள்ளது முழங்கினார். இன்றைக்குப் பிறகு ஒரு முஸ்லிமோ அல்லது வேறு சிலவேறா ட் களோ ஒரு சிங்களவரின் மீது கை வைத்தால், ஒரு மேலங்கி ஒருபுறம் இருக்கட்டும், அது இந்தபிராணிகளின் முடிவாகும். என்று ஒரு பொதுக்கூட்டத்தில் அவர் முழங்கினார்

இதே பிக்கு அரசாங்கத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமியற்றுபவர் அல்ல. 2018மார்ச்சில் , திகன முஸ்லிம் எதிர்ப்புக் கலவரத்தைக் கட்டவிழ்த்துவிடுவதற்கு ஒரு வீதி சம்பவம் ம் பயன்படுத்தப்பட்டது. இந்த குற்றங்கல் தொடர்பாக சில குற்றவாளிகள் கைது செய்யப்பட்டனர், ஆனால் எவரும் விசாரணை செய்யப்பட்டு தண்டனை வழங்கப்படவில்லை. எ மது சொந்த காவி-தீவிரவாதிகள் சிலர் இந்த காட்டுமிராண்டித்தனமான படுகொலையைப் பயன்படுத்தி மற்றொரு சுற்று முஸ்லிம்-விரோத வன்முறையைக் கட்டவிழ்த்துவிடலாம் என்று கனவு காண்கிறார்கள்.

தீவிரவாதம், எந்த மதத்தை ஆதரித்தாலும், அது கொடியது,மனசாட் சிய ற்றது , காட்டுமிராண்டித்தனமானது. பாகிஸ்தானில் அது இன்னும் கொடியது என்றால், அது தன்னை வேரூன்றி மனதைக் கெடுக்க அதிக காலம் கிடைத்ததால் தான். பல தசாப்தங்களாக, முல்லாக்கள், அரசியல்வாதிகள் மற்றும் இராணுவம் கூட்டாக இணைந்து, ஒவ்வொருவரும் மற்றவர்களைப் பயன்படுத்த முயற்சிக்கின்றனர், இந்த செயற் பாட்டில் நாட்டை நாசமாக்குகிறார்கள்.

2019 இல், ராஜபக்சா க்கள் தங்களை இலங்கையின் கடைசி நம்பிக்கையாக சித்தரித்துக் கொண்டனர். இரண்டு வருடங்களில் பொங்கி எழும் ஏமாற்றமாக மாறிவிட்டனர். இலங்கையிலும், சங்கத்திலும், இராணுவத்திலும் மிக அதிகமான ஒற்றை இன அமைப்புகள் மட்டுமே உள்ளன. அதிர்ஷ்டவசமாக இதுவரை, தலைமை பீடாதிபதிகளோ அல்லது இராணுவத் தலைவர்களோ நாட்டை ஆள்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால், அரசாங்கம் தொடர்ந்து தோல்வியடைந்து, எதிர்க்கட்சிகள் ஊக்கமளிக்கத் தவறினால், தப்பில்லாத இராணுவம் மற்றும் தவறிழைக்காத துறவறம் என்ற மாயை களுக்கு இலவச அனுமதி வழங்கப்பட்டால், ஏதாவது இடமளிக்கப்படலாம்.

அது நடைபெறும்வரை வரை.முன்னொரு போதுமில்லாதது பெரும்பாலும் நினைத்துப் பார்க்க முடியாததொன்றாகும்.

**பினான்சியல் டைம்ஸ்**

# காணாமல் போனோருக்கு நீதி வழங்குங்கள்: தீப்பந்தம் ஏந்தி மக்கள் பெரும் பேரணி







**வவுனியா, நெளுக்குளம் நிருபர்கள்**

சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக்கிழமை வவுனியா வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் தீப்பந்தம் ஏந்தி பேரணி ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வெள்ளிக்கிழமை காலை வவுனியா கந்தசாமி ஆலயத்தில் ஆரம்பமாகிய இந்தப் பேரணி மணிக்கூட்டுக் கோபுர சந்தியினை அடைந்து அங்கிருந்து கண்டி வீதி வழியாக பழைய பஸ் நிலையப் பகுதியை அடைந்து அங்கு ஆர்ப்பாட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டவர்கள், வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும், நீதி கிடைக்கும் வரை போராடுவோம், நீதியில்லாத நாட்டில் நீதிமன்றம் எதற்கு போன்ற கோசங்களை எழுப்பியிருந்ததுடன், சுலோக அட்டைகளையும் ஏந்தியிருந்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ.மயூரன் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் என பலர் கலந்துகொண்டனர்.

## காசல்ரீ நீரேந்தும் பகுதியில் குப்பைகள் சேகரிப்பு

**பத்தனை நிருபர்**

காசல்ரீ நீர்த்தேக்கத்தில் குப்பைகள் அதிகரிக்கப்பட்டு சூழல் மாசடைவு ஏற்பட்டதனாலும் களனி கங்கைக்கு செல்லும் இந்த நீரில் மாசு தன்மை ஏற்பட்டுள்ளதாலும், இந்த காசல்ரீ நீர்த்தேக்கத்தில் கரையோரப் பகுதிகள் மற்றும் நீரேந்தும் பகுதிகளில் நிரம்பி இருக்கும் குப்பைகளை சேகரிக்கும் வேலைத்திட்டம் ஒன்று வெள்ளிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

இவ்வேலைத்திட்டத்தினை அட்டன், வட்டவளை மற்றும் நோர்வூட் பொலிஸார் மற்றும் சிவில் அமைப்பினர், கடற்படையினர் ஆகியோர் ஒன்றிணைந்து மேற்கொண்டனர்.

இதன்போது நீர்த்தேக்கத்தின் கரையோரப் பகுதியில் துர்நாற்றத்தை வீசக்கூடிய நிலையில் காணப்பட்ட குப்பைகளை அகற்றும் பணி விறுவிறுப்பாக முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.




இலங்கைக்கு வந்துள்ள இந்தியன் முஸ்லிம் லீக் கட்சியின் தேசியத் தலைவர் காதர் மொய்தீன் தலைமையிலான குழு கல்லொழுவை அல்- அமான் முஸ்லிம் மகா வித்தியாலய அதிபர் எம்.ரி.எம்.ஆஸிம் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்க குழுவினர் கொழும்பில் சந்தித்து அல்- அமான் வித்தியாலய பணிகள் குறித்து கலந்துரையாடியபோது அபிவிருத்திக் குழுவின் தலைவர் எம்.ஜி,எம்.சியாத் ( கலில் ஹாஜி ) காதர் மொய்தீனினால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் அதிபர் ஆஸிம் உரையாடுவதையும் சிரேஷ்ட ஊடகவியலாளர் எம்.ஏ.எம்.நிலாம் மற்றும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் இங்கு காணலாம்.

படப்பிடிப்பு;லியாகத் அலிகான்

## அக்கரைப்பற்று கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான கராத்தே போட்டி

**சம்மாந்துறை நிருபர்**





அக்கரைப்பற்று கோட்ட பாடசாலை மாணவர்களுக்கான கராத்தே தரப்படுத்தல் போட்டி அண்மையில் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று முஸ்லிம் தேசிய கல்லூரியில் பிரதி அதிபரும் ராம் கராத்தே தோ நிறுவனத்தின் இலங்கைக்கான செயலாளரும் சிரேஷ்ட போதனாசிரியருமான சென்சில் எம்.பி.சைருல் ஆப்தீன் தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது.

இத் தரப்படுத்தல் போட்டியை ராம் கராத்தே தோ நிறுவனத்தின் இலங்கைக்கான பிரதம போதனாசிரியரும் பிரதம பரீட்சகருமான சிஹான் கே.கேந்திரமூர்த்தி கலந்துகொண்டு நடத்தினார்.

இத் தரப்படுத்தல் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன், அண்மையில் இலங்கை கராத்தே தோ சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட தேசிய காட்டா சுற்றுப்போட்டி 2021 இல் கலந்துகொண்ட மாணவர்களும் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

## மட்டக்களப்பு மாநகரசபை பட்ஜெட் 23 வாக்குகளால் நிறைவேற்றம்



**திருக்கோவில்,பட்டிருப்பு நிருபர்கள்**

மட்டக்களப்பு மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டம் வெள்ளிக்கிழமை 23 வாக்குகளால் வெற்றி பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

மாநகரசபையின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்திற்கான சபை அமர்வு வெள்ளிக்கிழமை மாநகரசபை மண்டபத்தில் சபை முதல்வர் ரி. சரவணபவான் தலைமையில் இடம்பெற்றபோது 37 மாநகர சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது, வரவு- செலவுத் திட்டத்தை சபை முதல்வர் ரி.சரவணபவான் முன்வைத்து வாக்கெடுப்பு இடம்பெற்றது. இதில் வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக 23 வாக்குகளும் எதிராக 13 வாக்குகளும், நடுநிலையாக ஒரு வாக்கும் கிடைத்த நிலையில் 10 வாக்குகளால் வரவு- செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்டது.

இதனடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சி,ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள்,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இரண்டு உறுப்பினர்கள்,ஈ.பி.டி.பி. கட்சியின் ஒரு உறுப்பினர்,சுயேச்சைக் குழுவின் இரண்டு உறுப்பினர்கள் வரவு- செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களில் ஒருவர் நடுநிலை வகித்ததுடன்,ஐக்கிய தேசியக் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும், ,ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு உறுப்பினரும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நான்கு உறுப்பினர்களும் வரவு- செலவுத் திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

## காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்ற பெண்ணை காணவில்லை

**பத்தனை நிருபர்**



நுவரெலியா - வலப்பனை கும்புக்வெல பகுதியில் விறகு சேகரிக்கச் சென்ற பெண் ஒருவர் காணாமல் போயுள்ளார்.

கும்புக்வெல மெதிலந்த பகுதியில் வசித்த 72 வயதான பீ.எம். டிங்கிரி மெனிக்கா என்ற பெண்ணே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவர் கடந்த 6 ஆம் திகதி காலை 9.30 மணியளவில் வீட்டுக்கு அருகில் உள்ள காட்டுப் பகுதிக்கு விறகு சேகரிக்கச் சென்றுள்ளார்.

அவர் இதுவரை வீடு திரும்பாத நிலையில் அவரின் புதல்வர்களும் பிரதேச மக்களும் தேடி வருகின்றனர்.

இது தொடர்பில் அருகில் உள்ள தெரிபே பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பொலிஸாரும் இணைந்து தேடுதலை முன்னெடுத்தபோதிலும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

எனினும் கடந்த 8 ஆம் திகதி முன்னெடுத்த தேடுதலில் இந்தப் பெண் விறகு வெட்டுவதற்காக எடுத்துச் சென்ற கத்தியை கண்டுபிடித்தனர்.

அதனைத் தொடர்ந்து அருகில் உள்ள காட்டில் தேடியபோது, உடைந்த மரக் குற்றியில் மூதாட்டி அணிந்திருந்த உடையும், விறகு தூக்கும் போது தலையில் வைத்துக் கொள்ள எடுத்துச் சென்ற சேலையும் கண்டெடுக்கப்பட்டுள்ளது. எனினும் மூதாட்டியை கண்டுபிடிக்க முடியாமல் போயுள்ளது.

இதனால் மோப்ப நாய்களை பயன்படுத்தி மூதாட்டியை கண்டுபிடிக்க பொலிஸார் நடவடிக்கை எடுத்தனர்.

எனினும் இதுவரை காணாமல் போன டிங்கிரி மெனிக்கா தொடர்பில் எந்தத் தகவலும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியா மாவட்ட இணைய ஊடகவியலாளர் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் சங்கத்தின் தலைவர் கனீஸியஸ் தலைமையில் இடம்பெற்றது.

தொடர்ந்து செயலாளரின் கூட்ட அறிக்கையுடன் ஆரம்பித்த கூட்டமானது தலைவரின் உரையின் பின் புதிய நிர்வாகிகள் தெரிவு இடம்பெற்றது.

புதிய நிர்வாகத்தில் தலைவராக நடராசா ஜனகதீபன் , செயலாளராக பரமேஸ்வரன் கார்த்தீபன் , பொருளாளராக சசிகரன் , உபதலைவராக பாலநாதன் சதீஸன் , உபசெயலாளராக பாஸ்கரன் கதீஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டதுடன் அருள்மதி மற்றும் கனிஸீயஸ் ஆகியோர் ஆலோசகர்களாகவும் , சஜீபன் மற்றும் வேந்தன் ஆகியோர் நிர்வாக உறுப்பினர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

## பெண்ணின் இறப்புக்கு நீதிகோரி டயகம மக்கள் ஆர்ப்பாட்டம்

**அக்கரப்பத்தனை, பத்தனை நிருபர்கள்**




டயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டயகம மேற்கு தோட்டம் 5 ஆம் பிரிவில் கடந்த 6 ஆம் திகதி மாலை 5 மணியளவில் சாமிநாதன் தங்கேஸ்வரி என்ற 53 வயதுடைய பெண் ஆற்றில் சடலமாக மீட்கப்பட்டார். இவரது மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக தெரிவித்து அப்பகுதி மக்கள் வெள்ளிக்கிழமை காலை 9 மணி முதல் 11 மணி வரை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 100 பேர் வேலைநிறுத்த போராட்டத்தில் ஈடுபட்ட தோட்ட மக்கள், தன்னிச்சையாக வீதிக்கு இறங்கி சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி கறுப்புக் கொடி பிடித்தவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதுடன், ஆர்ப்பாட்டக்காரர்கள் தோட்ட ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்திற்கு முன்பாக பேரணியாக வந்து அந்தப் பெண்ணின் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

சந்தேகத்துக்கு இடமான இந்தச் சம்பவத்தில் நீதி வேண்டும்,முறைகேடான விடயங்கள் நடந்திருப்பின் சட்டத்தின் முன் குற்றவாளியை முன்னிறுத்த வேண்டும்,பிரேத பரிசோதனை அறிக்கை திருப்தி இல்லை,இது தொடர்பான அறிக்கை பொலிஸாரால் உறவினர்களுக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்தோம். பொலிஸார் சரியான விசாரணையை முன்னெடுத்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பிரேத பரிசோதனையின் போது இறந்தவரின் உடலை பார்க்கவிடாமல் பெட்டி திறக்கப்படாமல் நல்லடக்கம் செய்ய பொலிஸார் தெரிவித்ததாகவும் ஆற்றில் மிதந்த சடலம் உடையின்றி கிடந்தமையால் இதில் சந்தேகம் நிலவுவதாகவும் தெரிவித்தனர்.

# கிழக்கு விஜயம் குறித்த பூர்வாங்க அறிக்கை செயலணியால் மாத இறுதியில் சமர்ப்பிப்பு

## உறுப்பினர் பேராசிரியர் நந்தன தெரிவிப்பு

**காரைதீவு நிருபர்**

ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் குறித்த பூர்வாங்க அறிக்கை இம்மாத இறுதியில் ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஸவுக்கு சமர்பிக்கப்படுகிறது என்று இச்செயலணியின் முன்னிலை உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் நந்தன விஜேசிங்க தெரிவித்தார்.

ஞானசார தேரர் தலைமையிலான இச்செயலணி கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது. முன்னதாக வட மாகாணத்துக்கு சென்று இருந்தது.

நாம் கிழக்கு மாகாணத்துக்கான விஜயம் குறித்து நந்தன விஜேசிங்கவிடம் கேட்ட போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண விஜயம் குறித்த அறிக்கையை ஏற்கனவே ஜனாதிபதிக்கு சமர்ப்பித்து விட்டோம். கிழக்குக்கான விஜயம் குறித்த அறிக்கையை இம்மாத இறுதியில் சமர்ப்பிக்கின்றோம்.

கிழக்குக்கான விஜயம் மிகுந்த திருப்தியாகவும் ரொம்ப மகிழ்ச்சியாகவும் அமைந்தது. இதில் எம்மை மகிழ்ச்சியின் உச்சத்துக்கு கொண்டு சென்ற விடயம் என்னவென்றால் இலங்கையின் பாரம்பரிய முஸ்லிம்களை நாம் சந்தித்தோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடியிலும் அம்பாறை மாவட்டத்தில் கல்முனைக்குடியிலும் சந்தித்தோம். அவர்களுடைய பள்ளிவாசல்களில் வைத்து ஞானசார தேரருக்கும் செயலணி உறுப்பினர்களுக்கும் மகத்தான வரவேற்புகள் தரப்பட்டன.

அவர்கள் இந்நாட்டில் பாரம்பரியம் பாரம்பரியமாக வாழ்ந்து வருகிற முஸ்லிம்கள் ஆவர். அவர்கள் இந்நாட்டின் பாரம்பரிய கலாசாரங்களை பின்பற்றுபவர்கள். இந்நாட்டின் ஏனைய இன மக்களுடன் அன்பாக வாழ்பவர்கள்.

அத்துடன் நாட்டு பற்றாளர்கள். தீவிரவாதத்துடன் சம்பந்தம் இல்லாதவர்கள். அராபிய கலாசாரத்தை பின்பற்றுபவர்களாக இல்லாமல் இலங்கையின் ஏனைய இன மக்களை போலவே வாழ்கின்றனர்.

ஆனால் தீவிரவாத முஸ்லிம் குழுவினரால் பேராபத்துகளை தொடர்ந்து எதிர்நோக்கி வருகின்றனர். அவர்களை பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு உள்ளது. அவர்களை பாதுகாப்பதற்கென புதிய சட்டம் கொண்டு வரப்பட வேண்டும். அதற்கான சிபாரிசை செயலணி மேற்கொள்ளும் என்றார்.

**வடக்கிலுள்ள பிரச்சினைகளுக்கு**

7ஆம் பக்கத் தொடர்ச்சி...

**கேள்வி: இலங்கை மக்களை தமிழ்நாட்டிலிருந்து கொண்டு வர வேண்டும் என்ற யோசனை முன்னாள் ஆளுநராலும் பரிசீலிக்கப்பட்டு வந்தது. நீங்கள் அந்த நடவடிக்கைக்ளில் ஈடுபடப்போகிறீர்களா ?**

பதில்;ஆம், முதல்வர் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதுவதற்கான அனுமதி கிடைத்துள்ளது என்பதை இப்போது பகிரங்கமாகப் பேசலாம். எனவே நான் உண்மையில் ஒரு வரைவைதயாரித்து அனுமதியைப் பெற்றேன். கடிதத்தின் நகலை அவர் மிக விரைவாகப் பெறுவதை உறுதி செய்வதற்கான வழிகளைக் கண்டுபிடிக்க நான் தேடுகிறேன். மேலும் நான் அவருடன் கலந்துரையாட விரும்பும் ஒரு விடயம் என்னவென்றால், அனைவரும் இணங்கிக்கொள்வதற்கு உட்பட்டு, தமிழ்நாட்டில் அகதிகளாக இருக்கும் இலங்கையர்களை இங்கு வரச் செய்வதாகும். சிலகாலத்தை செலவிடவேண்டும், ஒருவேளை, இரண்டு வருடங்கள் என்று வைத்துக்கொள்வோம், அது செயற் படுகிறதா என்று பாருங்கள், அது செயற்பட்டால் நன்றாக இருக்கும். அது வேலை செய்யவில்லை என்றால், அவர்கள் இருந்த இடத்திற்குத் திரும்புவதற்கு அவர்களுக்கு உரிமை உண்டு. எனவே ஆம், என்பதே பதில். அவர்கள் வருவதற்கு முன்பு, அவர்கள் எங்கு இருந்தார்கள்அவர்கள் எங்கு இருக்க விரும்புகிறார்கள் என்பதைத் தயார்படுத்துவதற்கு அவர்களுக்கு உதவ விரும்புகிறோம். அவர்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகள் என்ன? நாங்கள் அதைச் செய்ய விரும்புகிறோம் என்பதில் சந்தேகமில்லை.


**கேள்வி ;வடக்கு பற்றி பேசப்படும் ஒவ்வொரு முறையும் மனித உரிமைகள் விவகாரம் முக்கிய இடத்தைப் பெறுகிறது. காணாமல் போனவர்களின் குடும்பத்தினர் பதிலைத் தேடுகின்றனர். போரின் போது கொல்லப்பட்டவர்களின் குடும்பங்கள் பதில்களைத் தேடிக்கொண்டிருக்கின்றன. இந்தவிவகாரங்களில் சிலவற்றைத் தீர்த்துவைக்க நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் ?**

பதில்;நிச்சயமாக,. . உங்களிடம் காணாமல் போனோர் அலுவலகம்,இழப்பீட்டிற்கான அலுவலகம் ,நல்லிணக்க அலுவலகம் என்பன உள்ளன . குறைந்தபட்சம் சொல்வதற்கு அவர்கள் ஒரு பிரகாசமான கொள்கை கொண்டுள்ளனர். அவர்கள் இப்போது அதை உண்மையாக்க வேண்டும். எனவே நாங்கள் அதை கையாண்டு வருகிறோம். நாம் நேர்மை மற்றும் நம்பகத்தன்மை யுடன் பதிலளிக்க வேண்டும். உண்மையில்இதை அவர்கள் முன்வைக்க வேண்டியு ள்ளது. அதற்கு எங்களின் ஆதரவுக்கு பஞ்சமில்லை. இலங்கை மற்றும் ஜெனிவா தொடர்பான தொடர்பு குழுவில் அல்லது இணைத் தலைமைகளில் இரண்டு நாடுகள் மட்டுமே உள்ளன, ஆனால் ஒவ்வொருவரும் என்னை இங்கு சந்தித்தனர்.சந்திப்புக்கு அழைத்துள்ளோம். நாங்கள் ஒருவருக்கொருவர் அடிக்கடி பேச விரும்புகிறோம்.

அவர்கள் எங்களுக்கு மிகவும் பயனுள்ள யோசனைகளைக் கொண்டுள்ளனர், உங்களுக்குத் தெரியுமா, 2022 இல் இந்த விடயத்தில் என்ன இருக்கிறது என்று உங்களுக்குத் தெரியுமா? அவை பற்றிய உங்கள் திட்டம் என்ன?வெளிவிவகார அமைச்சும் சில விடயங்களை செய்கின்றது ஆகவே, நாம்விடயங்களைபொறுப்புடன் செய்வதற்கும் பூர்த்திசெய்வதற்கும் ஜீவிதத் துடன் இருக்கவேண்டிய தேவை யுள்ளது.

# ரயில் பாதையில் தலையைவைத்து குடும்பஸ்தர் தற்கொலை

**வவுனியா, நெளுக்குளம் நிருபர்கள்**



வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் ரயில் பாதையில் வீழ்ந்து ஒருவர் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

வெள்ளி மாலை கொழும்பில் இருந்து காங்கேசன்துறை நோக்கி பயணித்துக்கொண்டிருந்த ரயில் வவுனியா ஈரற்பெரிய குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்தபோது ஒருவர் ரயில் பாதையில் தலையைவைத்து தற்கொலை செய்துகொண்டார்.

சம்பவத்தில் வவுனியா தவசிகுளம் பகுதியை சேர்ந்த கந்தையா ரவி என்ற 55 வயதான குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார். அவரது உடமையில் இருந்து கடிதம் ஒன்றும் மீட்கப்பட்டதுடன், குடும்ப விவகாரமே இந்தத் தற்கொலைக்கு காரணம் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவ இடத்திற்கு சென்ற வவுனியா பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்

# வாள் வைத்திருந்த நபர் கைது

நீர்வேலியில் தம் வசம் வாள் வைத்திருந்தார் என்றகுற்றச்சாட்டில் ஒருவரை விசேடஅதிரடிப் படையினர் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நீர்வேலி மேற்குநீர்வேலியைச் சேர்ந்த கணபதி சுதர்சன் என்பவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரிடமிருந்து 3 வாள்கள் மீட்கட்டப்பட்டுள்ள நிலையில்சந்தேக நபரை விசேட அதிரடிப்படையினர் கோப்பாய் பொலிஸ்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட நிலையில் கோப்பாய் பொலிஸார்மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புத்தளத்தில் தெய்வீக கிராம நிகழ்வு

இந்து சமய கலாசார திணைக்களத்தினால் தெய்வீக கிராம நிகழ்வு புத்தள மாவட்டம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் 11ஆம் திகதி சனிக்கிழமை நடைப்பெறவுள்ளது.

காலை 9 மணியளவில் புத்தளம் மாவட்ட அறநெறி பாடசாலை மாணவர்களினால் கலை,கலாசார நிகழ்வுகள் இடம்பெறும். ஆசியுரையை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வெங்கட சுந்தர ராம குருக்கள் நிகழ்த்துவார்.பிரதம அதீதியாக புத்தசாசன மத விவகார அமைச்சரும், பிரதமரின் இந்து மத இணைப்பாளர் சிவஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா மற்றும் இந்து கலாசார திணைக்களத்தின் அபிவிருத்தி உத்தியோகத்தர் பவானி முகுந்தனும் கலந்து சிறப்பிப்பார்கள்.

# பல்கலைக்கழக பதிவு கால எல்லை நீடிப்பு

2020 ஆம் ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கு தகுதி பெற்ற மாணவர்களுக்கான விசேட அறிவிப்பு ஒன்றை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இந்த அறிவிப்பில் வெள்ளிக்கிழமையுடன் நிறைவடையும், பல்கலைக்கழக மாணவர்களை பதிவு செய்யும் கால அவகாசம் எதிர்வரும் 16 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க இதனை குறிப்பிட்டுள்ளார்.

# மூன்றாவது சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா மட்டக்களப்பில்

சிறகுநுனி கலை, ஊடக மையம் ஏற்பாடு செய்துள்ள 3ஆவது 'சிறகுநுனி சர்வதேச திரைப்பட விழா 2021' எதிர்வரும் டிசம்பர் 17 - 19 ஆம் திகதி வரை மட்டக்களப்பில் நடைபெறவுள்ளது. 2018 டிசம்பர் முதல் நடைபெற்று வரும் இந்நிகழ்வு கொரோனா பரவல் காரணமாக கடந்த ஆண்டு இடம்பெறவில்லை. வழக்கமாக கல்லடி சாந்தி திரையரங்கில் ஏற்பாடு செய்யப்படும் இத் திரைப்பட விழா இம்முறை ஆரையம்பதி பிரதேசத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ச்சியாக மூன்று தினங்கள் நடைபெறும் இவ்விழாவில் உலகத் தரமான முழுநீளத் திரைப்படங்கள்/ ஆவணப்படங்கள், குறும்படங்கள் காண்பிக்கப்படவுள்ளன. திரையிடல்களின் நிறைவில் பார்வையாளர் கருத்துப்பகிர்வு இடம்பெறும்.திரைப்படங்கள் யாவும் ஆங்கிலத்தில் / தமிழில் உபதலைப்பிடப்பட்டுள்ளன.

திரைப்பட விழாவின் ஆரம்ப நிகழ்வும் முதலாவது திரைப்படமும் டிசம்பர் 17 (வெள்ளி) பி. ப. 4.00 மணிக்கு இடம்பெறும்.தொடர்ந்து வரும் சனி, ஞாயிறு தினங்களில் காலை 10.00, பி. ப. 4.00, மாலை 7.00 மணி என தினமும் மூன்று காட்சிகளாக மொத்தம் 7 திரைப்படங்கள் இவ்விழாவில் திரையிடப்படவுள்ளன.

முற்றிலும் இலவசமான இத் திரைப்பட விழா தொடர்பான மேலதிக விபரங்களை Sirahununi அல்லது Aathmaa En ஆகிய முகநூல்களிலும் www.sirahununi.com இணையத்தளத்திலும் sirahununigmail.com மின்னஞ்சல் மூலமாகவும் திரைப்பட ஆர்வலர்கள் பெற்றுக் கொள்ள முடியும். தமிழ், முஸ்லிம் சகவாழ்வையும் நல்லிணக்கத்தையும் கருத்திற் கொண்டு சிறகுநுனி இச்செயற்பாட்டை ஆண்டு தோறும் முன்னெடுப்பதாக திரைப்பட விழா இயக்குனர் ஆத்மா ஜாபிர் தெரிவித்தார்.


ராசி அதிர்ஷ்டம்
திகதி : 2021-12-09
வெற்றி வாரம் : 3300
வர்ணம் : கபிலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,594,915/-
வெற்றி இலக்கங்கள்: 13 17 41 47
மீனம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,533,760/-

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1588 | நிறம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2021.12.09 | தினம் வியாழக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்: G 37 39 48 53
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,130,260/-
அபிவிருத்தி லொத்தர் சபை

සංවර්ධන වාසනාව
திகதி : 2021-12-09
வெற்றி வாரம் : 466 | வர்ணம் : நீலம்
சுப்பர் ஜக்பொட் ரூ. 11,438,924/-
ஆங்கில எழுத்து P | வெற்றி இலக்கங்கள் 50 56 32 | விதி எண் 7
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,933,520/-
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 11,560,764/-
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
www.dlb.lk

சனிதா Shanida
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி: 2021.12.09
சீட்டிழுப்பு இல: 3749
வர்ணம்: சிவப்பு
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,701,580/-
வெற்றி இலக்கங்கள்: 25 50 60 61
ஆங்கில எழுத்து Q
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1414
வர்ணம்: கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2021.12.09
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 5,534,600/-
வெற்றி இலக்கங்கள்: 25 27 33 50
ஆங்கில எழுத்து B
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
www.dlb.lk



வீட்டுப் பணிப் பெண் தேவை
கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள எமது வீட்டிற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
கவர்ச்சிகரமான சம்பளம், தங்குமிட வசதி, உணவு இலவசம்
Contact - 072 640 1350
GOODWIN

ஞாயிறு தினக்குரல் சிறு விளம்பரங்கள்

வேலைவாய்ப்பு
வவுனியாவில் இயங்கிவரும் பிரபல ஐஸ் கிறீம் கடை ஒன்றிற்கு ஆண் வேலையாட்கள் தேவை. 20 - 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். தொடர்புகளுக்கு - 077 3788746

உங்கள் விளம்பர தேவைகளுக்கு
011 7522775
011 7322735

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா திருமண சேவை
266, பலாலி வீதி, கந்தர்மடம்.
தொடர்புகளுக்கு: 0771971667/0773164796

மணமகன் விபரம்

பிறந்த திகதி :22.10.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம் :உத்தரட்டாதி கி.பா. : (21) செவ்/சூரி(2)
தகைமை: M.B.B.S தொழில்: Doctor
எதிர்பார்ப்பு: Doctor/விரிவுரையாளர்
மணமகள் (சூரி/செவ்) சைவபோசனம் தேவை

பிறந்த திகதி : 16.06.1989 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: விசாகம் (03) கி.பா.: 28 செவ் 9 இல்
தகைமை:CIMA தொழில் :AUSTRALIYA PR
எதிர்பார்ப்பு:பட்டதாரி AUSTRALIA , CEYLON மணமகள்

பிறந்த திகதி:16.05.1989 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: உத்தரம் (04) கி.பா.: 25 செவ் 1 ல்
தகைமை: B.A தொழில் : FILED OFFICER அரச சேவை
எதிர்பார்ப்பு:அரசேவை , தனியார் மணமகள்

பிறந்த திகதி: 11.04.1991 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: சதயம் (2) கி.பா. : 4 செவ் 3இல்
தகைமை: B.Sc, M.Sc PHD தொழில்:MECHANICAL ENGINEERING
எதிர்பார்ப்பு: பட்டதாரி வெளிநாடு PR மணமகள்

பிறந்த திகதி: 14.01.1984 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: கார்த்திகை (04) கி.பா.: 30 செவ் 5 ல்
தகைமை:B.A, M.A தொழில்:D.O அரசசேவை
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகள்

பிறந்த திகதி:22.04.1984 மதம்: இந்து (V) சைவம்
நட்சத்திரம்: உத்தராடம் (1) கி.பா.: 11 செவ் 6 ல்
தகைமை: MAAT, HNDA தொழில்: அரச சேவை
எதிர்பார்ப்பு: சைவபோசனம் அரச சேவை மணமகள்

பிறந்த திகதி: 24.04.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: ரேவதி (04) கி.பா.: 66 செவ் 8 ல்
தகைமை: B.Sc, M.Sc PHD தொழில்: AUSTRALIYA PR
எதிர்பார்ப்பு : பட்டதாரி இலங்கை, அவுஸ்ரேலியா மணமகள்

பிறந்த திகதி:12.04.1981 மதம்: இந்து (P பகுதி)
நட்சத்திரம்: பூசம் கி.பா.: 61 செவ்/சூரி 7 இல்
தகைமை: B.A தொழில்:D.O அரசசேவை
எதிர்பார்ப்பு: அரசசேவை, தனியார் மணமகள்

மணமகள் விபரம்

பிறந்த திகதி:27.11.1993 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: பரணி கி.பா.:91 செவ் / சூரி 7 இல்
தகைமை: B.Sc
தொழில்: ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி அரசசேவை மணமகன்

பிறந்த திகதி:01.08.1993 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: திருகோணம் கி.பா.: 89 செவ் 8 ல்
தகைமை: SOFTWARE ENGINEERING தொழில்: சிங்கப்பூர்
எதிர்பார்ப்பு: சிங்கப்பூர், இலங்கை பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 24.07.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: மகம் கி.பா.: 09 செவ் 6 ல்
தகைமை: BACHELOR OF OPTOMETRY
தொழில்: AUSTRALIA PR
எதிர்பார்ப்பு : DOCTOR/ ENG, CIMA பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி: 12.02.1996 மதம்: இந்து (V)
நட்சத்திரம் : விசாகம் (04) கி.பா. :26 செவ் 09 இல்
தகைமை: B.Sc CIVIL ENG தொழில்:AUSTRALIYA PR
எதிர்பார்ப்பு : ENG, ACCOUNTANT மணமகன் தேவை

பிறந்த திகதி:24.05.1987 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி கி.பா. : 55 செவ் 8 ல்
தகைமை: M.B.B.S தொழில்:DOCTOR
எதிர்பார்ப்பு: DOCTOR/ ENG/ விரிவுரையாளர் /ACCOUNTANT

பிறந்த திகதி : 14.04.1991 மதம் : இந்து (V)
நட்சத்திரம் :ரேவதி கி.பா. : 17 செவ் 3 இல்
தகைமை: B.S.C தொழில்: அரச சேவை
எதிர்பார்ப்பு : UK, CANADA, AUSTRALIYA மணமகன்

பிறந்த திகதி: 08.12.1990 மதம்: இந்து (V)
நட்சத்திரம்: மகம் கி.பா.: 24 செவ் 8 ல்
தகைமை: M.B.B.S
தொழில்: DOCTOR
எதிர்பார்ப்பு: DOCTOR/ ENG/ விரிவுரையாளர்

பிறந்த திகதி: 15.11.1998 மதம்: இந்து (Vசெட்டி )
நட்சத்திரம்: அத்தம் (02) கி.பா.:64 செவ் 8 இல்
தகைமை: G.C.E A/L தொழில்: STUDENT
எதிர்பார்ப்பு: வெளிநாடு PR மணமகன்

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் யாழ்.தினக்குரல் பதிப்பிலும் மற்றும் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கொழும்பு தினக்குரல் பதிப்பிலும் வெளிவரும் இம்மாங்கல்யாபகுதியில் மணமக்கள் விபரங்கள் பிரசுரிக்க விரும்பின் பின்வரும் தொலைபேசி இலக்கத்தினூடாகவோ அல்லது நேரடியாகவோ அலுவலகத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.
தொ.இலக்கம்: 0779687613/0217388307

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் முல்லைத்தீவில் போராட்டம்





**முல்லைத்தீவு நிருபர்**

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக் கிழமை தமது உறவுகளின் உரிமைகளை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் தொடர் போராட்டத்தை முன்னெடுத்துவரும் முல்லைத்தீவு மாங்குளம் வீதியில் அமைந்துள்ள அலுவலகத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யுத்தம் முடிவடைந்த நாள் முதல் இன்று வரை 12 வருடங்களாக தமது உறவுகளைத் தேடி போராடி வருகின்ற நிலையில், 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எட்டாம் திகதி முதல் வீதியில் அமர்ந்து தொடர்ச்சியான போராட்டத்தை ஆரம்பித்த நிலையில், வெள்ளிக் கிழமை 1737 ஆவது நாளாகவும் போராடி வருகின்றனர்.

இந்நிலையில் யுத்தம் முடிவடைந்த பின்னர் இலங்கை இராணுவத்திடம் கையளித்து காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளையும் யுத்த காலங்களில் கைதுசெய்யப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளையும் வெள்ளை வான்களில்கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளையும் என பல்வேறு வழிகளில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகளை தம்மிடம் ஒப்படைக்குமாறு கோரியே இந்த தொடர் போராட்டத்தை முன்னெடுத்தனர். பல ஆண்டுகளாக போராடிவரும் மக்கள் உள்நாட்டில் தமக்கு எந்தத் தீர்வையும் தராது எனவும் சர்வதேசமே தமக்கான தீர்வை தர வேண்டும் எனவும் தமது உறவுகளின் உரிமைகளை உறுதிப்படுத்துமாறும் கோரி சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக்கிழமை தமது உறவுகளின் உரிமைகளை வேண்டி கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

# இலங்கை கடற்படையின் 71 ஆம் ஆண்டு நிறைவு விழா





**க.பிரசன்னா, படப்பிடிப்பு எஸ்.ரி.ரமேஷ்**

இலங்கை கடற்படையின் 71 ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த வியாழக்கிழமை கொண்டாடப்பட்டது.

1950 இல் 34 ஆம் இலக்க கடற்படைச் சட்டத்தின் அடிப்படையில் 1950 ஆம் ஆண்டு டிசம்பர் 9 ஆம் திகதி 'ரோயல் சிலோன் நேவி' உருவாக்கப்பட்டது. பின்னர் இலங்கை குடியரசாக மாறிய பின்னர் 1972 மே 22 ஆம் திகதி 'இலங்கை கடற்படை'யாக மாற்றப்பட்டது. இலங்கை கடற்படையின் 71 ஆம் ஆண்டு நிறைவினை கொண்டாடும் வகையில் கொழும்பு காலி முகத்திடலுக்கு அருகாமையிலுள்ள கடற்பரப்பில் இலங்கை கடற்படைக்குச் சொந்தமான கப்பல்கள் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

காலி முகத்திடலுக்கு அருகாமையிலுள்ள கடற்பரப்பில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த அமெரிக்க அரசாங்கத்தினால் இலங்கை அரசாங்கத்துக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட 'கஜபாகு' கப்பலானது கடல்வழி மூலமான போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுப்பதுடன் கப்பலானது 120 கடற்படை வீரர்களைக் கொண்டுள்ளது.

சமீப காலங்களில் போதைப் பொருள் தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். இலங்கை கடற்படையின் 71 ஆம் ஆண்டு நிறைவு விழாவில் 'கஜபாகு' கப்பலும் பங்குகொள்வதில் பெருமை கொள்வதாகவும் கப்பல் கெப்டன் மாலக பெரேரா தெரிவித்திருந்தார்.

# 'நீரிழிவு நோயும் யோகாசனமும்' வவுனியாவில் நூல் வெளியீட்டு விழா

வவுனியாதமிழ்ச்சங்கம் நடத்தும், வைத்திய கலாநிதி திருமதி சரஸ்வதி பிரபாகரனின் 'நீரிழிவு நோயும் யோகாசனமும்' என்னும் மருத்துவ நூல் வெளியீட்டு விழா 12 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை வவுனியா சுத்தானந்தா இந்து இளைஞர்சங்க மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு இடம் பெறவுள்ளது. தமிழருவி த. சிவகுமாரன் தலைமையில் நடைபெறும் இந்நூல் வெளியீட்டு விழாவில் சிறப்பு அதிதியாக வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் கலாநிதி த.மங்களேஸ்வரன் கலந்து கொள்கிறார்.

விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்தினை ஆசிரியை திருமதி த. சிவசோதி இசைக்க, வரவேற்புரையினை ஆசிரியர் சபா. குகதாஸ¬ம் ஆசியுரையினை சிவஸ்ரீ நா.பிரபாகரக் குருக்களும் வாழ்த்துரையினை சுத்தானந்தா இந்து இளைஞர் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி ப.சத்தியநாதனும் நிகழ்த்துவர்.

தலைமையுரையினைத் தொடர்ந்து நூலின் வெளியீட்டுரையினை மனவளக்கலை துணைப் பேராசிரியர் அருள்நிதி எஸ்.சந்திரன் வழங்குவார்.நூலின் முதற் பிரதியினை வவுனியா வெங்கடேஸ்வரா சுப்ப மார்க்கற் உரிமையாளர் ஏ.இராஜேந்திரன் பெற்றுக்கொள்ள, தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் வழங்கல் இடம் பெறும். நூலின் ஆய்வுரையினை கலாபூஷணம்,தமிழ்மணி மேழிக்குமரனும் சிறப்புரையினை விழாவின் சிறப்பதிதியும் ஏற்புரையினை, நன்றியுரையினை நூலாசிரியரும் வழங்குவர்.

# மன்னாரில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடுவோர் போராட்டம்

**தலைமன்னார் நிருபர்**

சர்வதேச மனித உரிமைகள் தினமான வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத்தின் ஏற்பாட்டில் மன்னார் பஸ் தரிப்பிடத்திற்கு முன் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெற்றது.





மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடும் குடும்பங்களின் சங்கத் தலைவி மனுவல் உதயச்சந்திரா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கவனயீர்ப்பு போராட்டத்தில், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், அருட் தந்தையர்கள், மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள், மன்னார் நகர சபையின் தலைவர், உப தலைவர், உறுப்பினர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, மனிதம் பாதுகாக்கப்படுகிறதா?, அரசே காணாமல் ஆக்கப்பட்ட எம் உறவுகள் எங்கே?, காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தருவீர்களா? உள்ளடங்களாக பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# திருகோணமலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் ஆர்ப்பாட்டம்

**தோப்பூர் நிருபர்**

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு திருகோணமலை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்திற்கு முன்பாக வெள்ளிக்கிழமை சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனைத் தொடர்ந்து ஆர்ப்பாட்ட இடத்திலிருந்து பேரணியாகச் சென்று திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு முன்பாகவும் சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் தமது உறவுகளை மீட்டுத்தர ஐ.நா. சபையும், அரசாங்கமும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுத்ததோடு, திருகோணமலை மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் மகஜர் ஒன்றினையும் கையளித்தனர்.

# கிண்ணியா நகர சபைத் தவிசாளருக்கு பிணை

**மூதூர் நிருபர்**

கிண்ணியா குறிஞ்சாக்கேணி படகுப்பாதை விபத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் கிண்ணியா நகர சபைத் தவிசாளர் எஸ்.எச்.எம். நளீமுக்கு திருகோணமலை நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது.

திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் வெள்ளிக்கிழமை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டது. கடந்த நவம்பர் 23 ஆம் திகதி கிண்ணியா குறிஞ்சாக்கேணி பிரதேசத்தில் படகுப் பாதை கவிழ்ந்த சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு எதிர்வரும் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் கிண்ணியா பொலிஸாரினால் இந்தப் படகுப் பாதையில் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு அனுமதி வழங்கிய குற்றச்சாட்டில் நான்காவது சந்தேகநபராக குற்றம் சுமத்தப்பட்ட கிண்ணியா நகரசபைத் தவிசாளரின் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, தவிசாளர் சுகவீனமுற்ற நிலையில் அதற்கான மருந்துகளைப் பயன்படுத்தி வருவதாக அவர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி, நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேகநபரான கிண்ணியா நகர சபைத் தவிசாளரை பிணையில் விடுவிக்குமாறும் எதிர்வரும் 16 ஆம் திகதி மன்றில் ஆஜராகுமாறும் நீதவான் பயாஸ் ரசாக் உத்தரவிட்டார்.

# கனேடிய கொன்சியூலருடன் சர்வமத அமைப்பு சந்திப்பு



**வத்துகாமம் நிருபர்**

இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் அரசியல் பிரிவு கொன்சியூலர் டேனியல் பூட் அண்மையில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு நிர்வாக அங்கத்தவர்களைச் சந்தித்து இலங்கையின் அரசியல், சமூக நிலைமைகள் குறித்து கலந்துரையாடினார்.

கண்டி அமாயா ஹோட்டலில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இன, சமய, சமூக, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் கண்டி மாவட்ட சர்வமத அமைப்பு மேற்கொண்டு வரும் பணிகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

2019 ஆம் ஆண்டு கண்டியில் இடம்பெற்ற திகன கலவரம் தொடர்பாக மேற்படி அமைப்பு மேற்கொண்ட சுயாதீன விசாரணைக் குழு அறிக்கையின் பிரதி ஒன்றும் அவரிடம் கையளிக்கப்பட்டது. இச்சந்திப்பில் மௌலவி ரிஸ்வான், அருட்தந்தை யோகான் பெர்னாண்டோ, வண. பாண்டி குலமே ஸ்ரீ ஜினரத்தன ஹிமி, கண்டி மாவட்ட சர்வமத அமைப்பின் அழைப்பாளர் காமினி ஜயவீர, திருமதி ரேனுகா மல்லியகொட ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# வவுனியாவில் பஸ்களில் பயணிக்கும் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல்

**நெளுக்குளம் நிருபர்**

வவுனியாவிலுள்ள பஸ்களில் அலுவலக உத்தியோகத்தர் போல் சீரான முறையில் ஆடையணிந்து வருகின்ற ஓர் சில இளைஞர்கள் பாலியல் ரீதியாக துன்புறுத்தலில் ஈடுபட்டு வருவதாக பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

காலை மற்றும் மாலை நேரங்களில் பாடசாலை மாணவர்கள் , அலுவலக உத்தியோகத்தர்கள் , தனியார் நிறுவனங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் பணியாற்றும் ஊழியர்கள் , தனியார் வகுப்புகளுக்குச் செல்லும் பெண்கள் மற்றும் மாணவிகள் அதிகளவில் தனியார் மற்றும் அரச பஸ்களை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நேரங்களில் அலுவலக உத்தியோகத்தர் போல் சீரான முறையில் ஆடையணிந்து வருகின்ற ஓர் சில இளைஞர்கள் பஸ்ஸில் பெண்களுக்கு அருகேயுள்ள ஆசனத்தில் இருந்து பாலியல் ரீதியான துன்புறுத்தல் மேற்கொள்வதாகவும் சன நெரிசல் காணப்படுகின்ற சமயங்களில் பெண்களுடன் வேண்டுமென்றே உரசுவது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருவதாகவும் பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

பெண்களுடன் பாலியல் ரீதியான செயற்பாட்டில் ஈடுபடும் இவ்வாறான ஓர் சில இளைஞர்களினால் பல பெண்கள் வேலையினை இடைவிட்டுள்ளனர். எனவே பொலிஸார், அதிகாரிகள் சிவில் உடையில் சென்று இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடும் இளைஞர்களை கைது செய்து சட்ட நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட பெண்கள் தெரிவித்துள்ளனர்.

# புனரமைப்பு செய்யப்பட்ட கலபட வீதி மக்களிடம் கையளிப்பு

**நாவலப்பிட்டி நிருபர்**



பெருந்தோட்டத் தொழிலாளர்கள் அதிகம் வாழும் நாவலப்பிட்டி தேர்தல் தொகுதியில் உள்ள கலபட பிரதேசத்திற்கு விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே விஜயம் செய்து கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 221 இலட்சம் ரூபா செலவில் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் காபட் செய்து புனரமைப்பு செய்யப்பட்ட கலபட வீதியை மக்களிடம் கையளித்தார்.

கலபட மக்களின் பெரும் பிரச்சினையாக இருந்த கலபட பாலத்தின் பணிகளையும் அவர் ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பஸ்பாகே கோரளை பிரதேச சபையின் தலைவர் ஓ.ஜி.ரோஹன பண்டார, உப தலைவர் எச்.ஏ. நந்தசோம, பிரதேசசபை உறுப்பினர் மைக்கல் துஷார, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள் மற்றும் பிரதேசத்தைச் சேர்ந்த நட்புறவுக் குழுவினர் கலந்துகொண்டனர்.

# கஞ்சாவுடன் கைதான நபருக்கு விளக்கமறியல்

**முள்ளிப்பொத்தானை நிருபர்**

திருகோணமலை உப்புவெளி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 5 கிலோ கேரள கஞ்சாவுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு திருகோணமலை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. திருகோணமலை நீதிமன்ற நீதவான் பயாஸ் ரசாக் முன்னிலையில் சந்தேக நபரை முன்னிலைப்படுத்திய போதே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் மோட்டார் சைக்கிளில் விற்பனைக்காக கஞ்சா போதைப்பொருளை கொண்டு செல்வதாக கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து திருகோணமலை பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போது குறித்த சந்தேக நபரிடமிருந்து கேரளகஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

Copyright

## சுவிஸ் தூதுவருடன் கூட்டமைப்பினர் சந்திப்பு



**வவுனியா நிருபர்**

சுவிற்ஸர்லாந்தின் இலங்கைக்கான தூதுவர் டொமினிக் வர்கலர் மன்றும் அரசியல் துறை செயலாளர் சிடோனியா கபிரியல் அம்மையார் ஆகியோருடனான அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு ஒன்றை கூட்டமைப்பினர் மேற்கொண்டிருந்தனர். வெள்ளி காலை 9 மணிக்கு கொழும்பில் தூதரகத்தில் இச்சந்திப்பு நடைபெற்றது.

இதில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இணைத்தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் பாராளுமன்ற உறுப்பினர்கள் கோ. கருணாகரம், வினோ நோகராதலிங்கம் மற்றும் ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தற்போதுள் அரசியல் சூழ்நிலைகள், எதிர்கால நடவடிக்கைகள் பற்றி விளக்கமளிக்கப் பட்டது. தமிழ் மக்களின் அரசியல் உரிமை சார்ந்து தொடர்ந்து உறுதியான ஆதரவு நிலைப் பாட்டில் உள்ள நாடான சுவிஸிலாந்துடன் தமிழ் தரப்பின் மிகவும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த இச்சந்திப்பு ஒன்றரை மணி நேரம் நடைபெற்றது.

## எல்லா முஸ்லிம்களும் தீவிரவாதிகள் அல்லர் என்ற எண்ணத்தை தேரருக்கு விதைத்தோம்

### கிழக்கு தேசம் வஃபா பாருக் கூறுகிறார்

**காரைதீவு நிருபர்**

முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்கிற எண்ணத்தை ஞானசார தேரரின் மனத்தில் விதைத்து உள்ளோம் என்று கிழக்குதேசம் வஃபா பாருக் தெரிவித்தார்.

ஞானசார தேரர் தலைமையிலான ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி கடந்த வாரம் கிழக்கு மாகாணத்துக்கு விஜயம் மேற்கொண்டது. இது அம்பாறை மாவட்டத்துக்கு வந்தபோது தாருஸ்சபா குழுமத்தின் ஏற்பாட்டில் அதன் தலைமையகத்தில் கல்முனையில் மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

இதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபக பொருளாளரும், கிழக்குதேசம் அமைப்பின் ஸ்தாபகருமான வஃபா பாருக் அடங்கலாக அரசியல் சமூக பொது நல ஊடக செயற்பாட்டாளர்கள் பங்கேற்றதுடன் செயலணி முன்னிலையில் கருத்துகளை பதிவேற்றினார்கள். நாம் இது தொடர்பாக வஃபா பாருக்கை நேற்று வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு கேட்ட போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஞானசார தேரர் தேசியவாத சிந்தனை உடையவர். அவருக்கென தனியான பாதை ஒன்றை வகுத்து செயற்பட்டு கொண்டு இருக்கின்றார்.


இந்நாட்டில் எல்லா மக்களுக்கும் பொதுவான சட்டத்தை கொண்டு வர ஜனாதிபதி முயல்கின்றார். இதற்கான ஆலோசனைகளை பெற செயலணி அமைத்து அதன் தலைவராக ஞானசார தேரரை நியமித்து உள்ளார்.

ஞானசார தேரருக்கு முஸ்லிம்கள் குறித்து அபிப்பிராயம் உள்ளது. எல்லா முஸ்லிம்களும் தீவிரவாத போக்கு உள்ளவர்கள் என்று நம்புகின்றார். அவரின் நம்பிக்கை தவறானது.

நாம் அவரை வரவேற்றோம். அவருக்கு அன்பளிப்புகள் வழங்கினோம். இதன் மூலமாக முஸ்லிம்கள் குறித்த அவரின் எண்ணம் மாறும் என்பது எமது நம்பிக்கை. அதற்கான சமிக்ஞைகள் தெரிய தொடங்கி உள்ளன.

ஜனாதிபதிக்கு செயலணி பெப்ரவரி மாதம் அதன் இறுதி அறிக்கையை சமர்ப்பிக்க உள்ளது. அதில் இம்மாற்றங்கள் எதிரொலிக்கும் என்பது எமது விசுவாசம். முக்கியமாக முஸ்லிம்கள் எல்லோரும் தீவிரவாதிகள் அல்லர் என்று ஞானசார தேரர் தலைமையிலான செயலணி அறிக்கையிட வேண்டும். அதுவே எமது பெருவிருப்பம் ஆகும்.







தேசிய ஓவியம் மற்றும் சிற்பக்கலைகளுக்கான விருது வழங்கும் நிகழ்வு தேசிய மரபுரிமைகள் அலுவல்கள் மற்றும் சிற்பக்கலைகள் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்கவின் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மருதானை எல்பின்ஸ்டன் கலையரங்கில் இடம்பெற்றது. நிகழ்வில் அரச உயர் விருதான கலாபிமானி வாழ்நாள் சாதனை விருதை பேராசிரியரும் மிகச்சிறந்த ஓவியருமான எல்பட் தர்மசிறியும் ஓவியத்திற்கான சான்றிதழை மொஹமட் நுஜ்வாத், செல்வி யுவராணி ஆகியோர் அமைச்சரிடமிருந்து பெறுவதையும் இங்கு காணலாம்.

படங்கள் : ஏ.கே.விஜயபாலன்

## இராதாகிருஷ்ணன் எம்.பி. பேச 4 நிமிடம் மேலும் 3 நிமிடங்களை வழங்கிய அரச தரப்பு

**பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்**

தமிழ் முற்போக்கு முன்னணி எம்.பி. இராதகிருஷ்ணன் பேசுவதற்கு எதிர்க் கட்சியினால் 4 நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கப்பட்டிருந்த நிலையில் அவருக்கு மேலதிகமாக 3 நிமிடங்களை அரச தரப்பு வழங்கியது.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிதி அமைச்சு , பொருளாதார கொள்கைகள் மற்றும் திட்ட செயற்படுத்துகை அமைச்சு , நிதி மூலதன சந்தை மற்றும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சு,சமுர்த்தி உள்ளக பொருளாதார,நுண்நிதிய ,சுயதொழில் மற்றும் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடுகள் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுவதற்காக இராதாகிருஷ்ணன் எம்.பி.யை அழைத்த சபைக்கு தமைமை தாங்கிய அங்கஜன் இராமநாதன் எம்.பி. உங்களுக்கு 4 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதென கூறினார்.

இதனையடுத்து இராதாகிருஷ்ணன் எம்.பி உரையாற்ற தன்னை தயார் படுத்தியபோதே உங்களுக்கு இன்னும் இரு நிமிடங்கள் மட்டுமே உள்ளன என சபைக்கு தமைமை தாங்கிய அங்கஜன் இராமநாதன் எம்.பி. கூறினார்.

இதனால் சற்று விசனமடைந்த இராதாகிருஷ்ணன் எம்.பி. நான் இன்னும் ஆரம்பிக்கவில்லை. அதற்குள் இன்னும் 2 நிமிடங்கள்தான் உள்ளன என்கிறீர்கள். இந்த இரண்டு நிமிடங்களுக்குள் நான் எதனை பேச முடியும் எனக்கேட்டார். இதன்போது எதிர்க் கட்சிகளின் பிரதமகொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல சபைக்குள் வந்தபோது தான் உரையாற்ற சில நிமிடங்களை பெற்றுத்தருமாறு அவரிடம் இராதாகிருஷ்ணன் கோரினார் .ஆனால் அவர் அதனை காதில் வாங்கவில்லை.

இதனையடுத்து இராதாகிருஷ்ணன் எம்.பி. அரசதரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் ,, நாம் எமது மக்கள் பிரச்சினைகளை பேசவே இங்கு வந்துள்ளோம்.. பேசதொடங்குவதற்கு முன்னர் 4நிமிடங்கள் என்றார்கள். பேசத்தொடங்குவதற்குள் இன்னும் 2 நிமிடங்களே உள்ளன என்கிறார்கள். எனவே தயவு செய்து நீங்களாவது எனக்கு சில நிமிடங்களை அரசதரப்பிலிருந்தாவது பெற்றுத் தாருங்கள் என்றார்.

இதனையடுத்து இராதாகிருஷ்ணன் எம்.பி. க்கு தமது தரப்பிலிருந்து 3 நிமிடங்கள் வழங்குவதாக அரசதரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ சபைக் குதலைமை தாங்கிய அங்கஜன் இராமநாதன் எம்.பி. க்கு கூறினார்.

இதன்போது இராதாகிருஷ்ணன் எம்.பி. அரசதரப்பு பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவுக்கு நன்றி கூறியபோது , எதிர்க்கட்சியைக்கூட நாம் இப்படித்தான் கவனிப்போம் என அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

## முல்லைத்தீவு பேருந்து சாலை பணத்தை கையாடியவர் தொடர்பில் முறைப்பாடு

முல்லைத்தீவு அரச பேருந்து சாலைக்கு சொந்தமான பணத்தினை கையாடிய உத்தியோகத்தர் தொடர்பில் முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் பிராந்திய பாதுகாப்பு முகாமையாளர்களால் முறைப்பாடு ஒன்று செய்யப்பட்டுள்ளது.

கடந்த 9 ஆம் திகதி காலை 10 மணியளவில் வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளரும் , பாதுகாப்பு உத்தியோகத்தரும் திடீரென இலங்கை போக்குவரத்து சபை முல்லைத்தீவு சாலைக்கு பரிசோதனைக்காக சென்றுள்ளார்கள்.

அப்பொழுது வங்கியில் வைப்பிலிட வேண்டிய சாலையினுடைய பணத்தினை பரிசோதனை செய்த போது அந்த பணத்தில் 8000 ரூபா குறைவாக இருப்பது தெரியவந்துள்ளது.

அந்த நாளில் கடமையில் இருந்த சாலை பரிசோதகரை கேட்டபோது அவர் முன்னுக்கு பின் முரணான தகவல் வழங்கியுள்ளதுடன் பின்னர் வெளியில் இருந்து அந்த பணத்தினை கொண்டுவந்து ஒப்படைத்துள்ளார்.

இது தொடர்பில் வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளரால் முல்லைத்தீவு பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த சாலை பரிசோதகர் கடமையில் இருக்கின்ற வேளைகளில் இவ்வாறான நிதி முறைகேட்டு சம்பவங்கள் இடம்பெற்று வருவதாக சாலை பணியாளர்கள் சிலர் தெரிவித்துள்ளார்கள்.

இது தொடர்பில் சாலை முகாமையாளரினை கேட்டபோது வடபிராந்திய பாதுகாப்பு முகாமையாளர்கள் மேற்கொண்டுள்ள இந்த நடவடிக்கை உண்மையானது அவர்கள்தான் இது தொடர்பான அறிக்கையினை தயாரித்து முல்லைத்தீவு சாலைக்கு அனுப்பவேண்டும் என தெரிவித்துள்ளார்.

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பில் ஆர்ப்பாட்டம்











**திருக்கோவில், பட்டிருப்பு நிருபர்கள்**

சர்வதேச மனித உரிமை தினத்தையிட்டு வடக்கு கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் நீதி கோரி மட்டக்களப்பு காந்தி பூங்கவிற்கு முன்னால் வெள்ளிக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கத்தின் ஏற்பாட்டில் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்டத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான ஞா.சிறிநேசன், பா.அரியேந்திரன், ஒய்வு பெற்ற மட்டு அரசாங்க அதிபர் மா. உதயகுமார், மாநகரசபை உறுப்பினர்கள் மற்றும் காணாமல் போன உறவுகள் உட்பட நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

இதன்போது சர்வதேசமே இலங்கை அரசுக்கு துணைபேகாதே, அச்சுறுத்தாதே அச்சுறுத்தாதே. புலனாய்வாளர்களால் அச்சுறுத்தாதே, இலங்கை அரசே ஒப்படைக்கப்பட்டு சரணடைந்த உறவுகள் எங்கே?, ஐ.நாவே ஒஎம்பியை திணிக்க இலங்கை அரசுக்கு துனைபோகாதே, இலங்கை அரசே எமது உறவுகளுக்கும் மதிப்பளி போன்ற சுலோகங்கள் ஏந்திய வாறு கோஷங்கள் எழுப்பி சுமார் ஒருமணித்தியாலம் ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட ஆர்ப்பாட்டகாரர்கள் பின் அங்கிருந்து விலகிச் சென்றனர்.

## பிரியந்த குமாரவை பாதுகாக்க போராடிய பாக் .பிரஜையான மாலிக் அத்னனை இலங்கை பாராளுமன்றத்துக்கு அழைத்து கௌரவியுங்கள்

**பா. கிருபாகரன், ந. ஜெயகாந்தன்**

பாகிஸ்தானில் வைத்து இலங்கையரான பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்ட போது பிரியந்த குமாரவை கொலை காரர்களிடமிருந்து பாதுகாக்க தனது உயிரையும் பொருட்படுத்தாது போராடிய அந்நாட்டு பிரஜையான மாலிக் அத்னனை இலங்கை பாராளுமன்றத்துக்கு அழைத்து கௌரவிக்க வேண்டுமென அரச தரப்பு எம்.பி. யான ஜயந்தா கொட்டகொட சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை விசேட கூற்றோன்றை முன்வைத்தே இந்தக் கோரிக்கையை விடுத்த ஜயந்தாகொட்டகொட எம்.பி. மேலும் கூறுகையில், பாகிஸ்தானில் வைத்து இலங்கையரான பிரியந்த குமார படுகொலை செய்யப்பட்டபோது பிரியந்த குமாரவை கொலை காரர்களிடமிருந்து பாதுகாக்க தனது உயிரையும்துச்சமென மதித்து போராடிய அந்நாட்டு பிரஜையான மாலிக் அத்னனை , அந்நாட்டு பிரதமர் இம்ரான் கான் உள்ளிட்ட பா கிஸ்தான் அரசாங்கம் கௌரவித்துள்ளது. எனவே மாலிக் அத்னனை இலங்கைப் பாராளுமன்றத்துக்கு அழைத்து அரசாங்கம் அவரை கௌரவிக்க வேண்டும் என்றார்.









யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது ஜேர்மனியிலிருந்து தமிழ்ப் பணியாற்றிவரும் கவிஞர் தியானின் கவிதைகளை 'சொற்காடு' என்ற தலைப்பில் இனிய நந்தவனம் பதிப்பகம் நூலாக வெளியிட்டுள்ளது. இந்நூலின் வெளியீட்டு விழா கடந்த 5 ஆம் திகதி தமிழ்நாட்டில் சென்னை அண்ணாநகர் நான் ஒரு ஐ.ஏ.எஸ் அக்கடமி கூட்ட அரங்கில் கலைமாமணி ஏர்வாடி எஸ். இராதாகிருஸ்ணன் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில் முனைவர் தமிழ்மணவாளன் வாழ்த்துரை வழங்க எழுத்தாளர் வே. எழிலரசு ,கவிஞர் சொர்ணபாரதி, கவிஞர் பா.தென்றல் ஆகியோர் நூலாய்வு செய்தனர். வழக்கறிஞர் வைதேகி பாலாஜி. தொழிலதிபர் தாரை கு.திருஞானசம்மந்தம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டு நூலை வெளியிட்டுச் சிறப்பித்தனர்.

# பதவி விலகிய கோஹ்லியும்!

## பதவி விலக்கப்பட்ட கோஹ்லியும்!

ரி20, ஒருநாள் போட்டிக்கு என தனித்தனியாக இரு கப்டன் இருக்க முடியாது. இதனால் தான் ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து கோஹ்லி நீக்கப்பட்டார், என பி.சி.சி.ஐ., தலைவர் கங்குலி தெரிவித்தார்.

இந்திய கிரிக்கெட்டின் மூன்று வித அணிக்கும் கப்டனாக கோஹ்லி இருந்தார். சமீபத்திய உலக கிண்ணத் தொடருக்குப் பின் 'ரி -20' போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து தன்னிச்சையாக விலகினார். இது இந்திய கிரிக்கெட் சபைக்கு (பி.சி.சி.ஐ.,) பிடிக்கவில்லை. புதிய 'ரி -20' கப்டனாக ரோகித் சர்மாவை நியமித்தது. ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்தும் விலகும்படி கோஹ்லியை வலியுறுத்தியது. இதனை அவர் ஏற்கவில்லை. 'முடிந்தால் நீக்கட்டும்' என்ற தொனியில் நடந்து கொண்டார்.

ஏனெனில் 2017ல் ஒருநாள் கப்டன் பொறுப்பை ஏற்ற இவர், 95 போட்டிகளில் 65ல் வெற்றியை தேடிக்கொடுத்தார். இதன் வெற்றி சதவீதம் 70.43. தவிர, சிறப்பாகவும் துடுப்பாட்டம் செய்ததால் தன்னை நீக்க மாட்டார்கள் என தப்புக்கணக்கு போட்டார். ஆனால், பி.சி.சி.ஐ., தலைவர் கங்குலி, செயலர் ஜெய் ஷா, தேர்வுக் குழு தலைவர் சேட்டன் சர்மாவின் ஆதரவு இவருக்கு இல்லை. டெஸ்ட் போட்டிக்கு மட்டும் கோஹ்லி கப்டனாக இருந்தால் போதும் என முடிவு செய்தனர். ரோகித் சர்மாவுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

**கப்டன் ரோகித்:**

அடுத்து நடக்க உள்ள தென் ஆபிரிக்க தொடருக்கான(டிச. 26-ஜன.23) இந்திய டெஸ்ட் அணி கப்டனாக கோஹ்லியை நியமித்தனர். துணைக் கப்டன் பொறுப்பு ரகானேக்கு பதில் ரோகித் சர்மாவுக்கு வழங்கப்பட்டது. ஒருநாள் போட்டிக்கான கப்டன் பதவியில் இருந்து கோஹ்லியை நீக்கினர். இவருக்கு பதிலாக ரோகித் சர்மாவை புதிய கப்டனாக்கினர். இது அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியது.



ஒருகாலத்தில் இந்திய அணியில் கோஹ்லி தான் 'கிங்'. இவருக்காகவே கும்ளே நீக்கப்பட்டு பயிற்சியாளராக ரவி சாஸ்திரி நியமிக்கப்பட்டார். தனக்கு பிடிக்காதவர்களையும் புறக்கணித்தார். உதாரணமாக இங்கிலாந்து டெஸ்ட் தொடரில் அஷ்வினுக்கு வாய்ப்பு மறுத்தார். இப்படி உச்சத்தில் இருந்த கோஹ்லிக்கு, ஐ.சி.சி., நடத்தும் தொடர்களில் கிண்ணத்தை வெல்லாதது வினையாக அமைந்தது. 2023ல் இந்தியாவில் நடக்க உள்ள உலக கிண்ணத் தொடரில் (50 ஓவர்) சாதிக்க, ரோகித் சர்மாவை கப்டனாக நியமிப்பதே சரியானது என பி.சி.சி.ஐ., முடிவு செய்தது. ஐ.பி.எல்., தொடரில் மும்பை அணிக்கு 5 கிண்ணத்தை வென்று கொடுத்தது ரோகித்துக்கு சாதகமான விஷயம்.

இது குறித்து கங்குலி கூறியது:

'ரி -20' கப்டன் பதவியில் இருந்து விலக வேண்டாமென கோஹ்லியிடம் வலியுறுத்தினோம். ஆனால் கப்டனாக தொடர முடியாது எனத் தெரிவித்து விட்டார். ஒருநாள் போட்டி, 'ரி -20'க்கு என இரண்டு கப்டன் இருப்பதை தேர்வாளர்கள் விரும்பவில்லை. நிறைய கப்டன்கள் இருந்தால் வீண் குழப்பம் ஏற்படும் என சேட்டன் சர்மா தலைமையிலான தேர்வு குழுவினர் கருதினர். இதையடுத்து டெஸ்டுக்கு கோஹ்லி, ஒருநாள் மற்றும் 'ரி-20' போட்டிக்கு ரோகித் சர்மாவை கப்டனாக நியமிப்பது என முடிவு செய்தோம்.

இது பற்றி கோஹ்லியிடம் தனிப்பட்ட முறையில் நானும் சேட்டன் சர்மாவும் பேசினோம். எங்களது முடிவை ஏற்றுக் கொண்டார். ஒருநாள் போட்டியில் கப்டனாக ரோகித் சர்மா சிறப்பாக செயல்பட வாழ்த்துகள்,'என்றார்.

**தேவை அவரது சேவை**

புதிய கப்டன் ரோகித் சர்மா கூறுகையில், துடுப்பாட்டம் தலைமை பண்பில் சிறந்தவர் கோஹ்லி. இக்கட்டான கட்டத்தில் இருந்து இந்திய அணியை பல முறை மீட்டுள்ளார். இவரது சேவை அணிக்கு அவசியம் தேவை. கப்டன் என்பவர் அணியை முன்னின்று வழிநடத்த வேண்டும். களத்தில் கப்டன் பணி என்பது 20 சதவீதம் தான். மீதி 80 சதவீதம் களத்திற்கு வெளியே உள்ளது. சரியான வெற்றிக் கூட்டணியை தேர்வு செய்வது, வியூகம் வகுப்பது, வீரர்களுடன் சகஜமாக பேசி அவர்களது பங்களிப்பை உணர்த்துவது என பல பணிகள் களத்திற்கு வெளியே தான் உள்ளன,'என்றார்.

**கேப்டனாக எப்படி**

ஒருநாள் அரங்கில் இந்தியாவுக்கு அதிக வெற்றி பெற்றுத்தந்த கப்டனாக கோஹ்லி உள்ளார். அடுத்த இடத்தில் தோனி(200 போட்டி, 110 வெற்றி) உள்ளார்.

**கேப்டனாக கோஹ்லி செயல்பாடு:**

| | |
|---|---|
| போட்டி | 95 |
| வெற்றி | 65 |
| சதவீதம் | 70.43 |
| எடுத்த ஓட்டம் | 5449 |
| சராசரி ஓட்டம் | 72.65 |

# சம்பியன்ஸ் லீக்:

## வெளியேறியது பார்சிலோனா

சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் தொடா்ந்து 17 ஆண்டுகளாக நொக் அவுட் சுற்றுக்கு முன்னேறி வந்த பார்சிலோனா அணி, இந்த சீசனில் அந்த வாய்ப்பை இழந்து போட்டியிலிருந்து வியாழக்கிழமை வெளியேறியது.

கடைசி ஆட்டத்தில் அந்த அணி 03 என்ற கணக்கில் பேயா்ன் முனீச் அணியிடம் தோற்றது. குரூப் 'இ'யில் இடம் பிடித்திருந்த பார்சிலோனா மொத்தம் 6 ஆட்டங்களில் 2 வெற்றிகளே பெற்று % புள்ளிகளுடன் 3ஆம் இடம் பிடித்தது. பேயா்ன் முனீச் அணியோ 6 ஆட்டங்களிலும் வென்று 18 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தது.

நட்சத்திர வீரா் மெஸ்ஸி வெளியேறியதை அடுத்து பார்சிலோனா இறங்கு முகத்தை சந்தித்து வந்த நிலையில், அதன் பயிற்சியாளா் ரொனால்ட் கோமென் நீக்கப்பட்டு, புதிய பயிற்சியாளராக ஜாவி ஹொ்னாண்டஸ் இணைந்தார். எனினும் அந்த அணி பெரிதாக முன்னேற்றத்தை சந்திக்கவில்லை.

இதர ஆட்டங்களில் ஆர்பி சால்ஸ்பார்க் செவில்லாவையும் (10), லிலே வோல்ஃப்ஸ்பா்கையும் (31), பெனிஃபிகா டைனமோ கீவையும் (20), ஜுவென்டஸ் மால்மோவையும் (10) வீழ்த்தின. செல்சி ஜெனித் (33), மான்செஸ்டா் யுனைடெட் யங் பாய்ஸ் (11) அணிகள் மோதிய ஆட்டம் டிரா ஆனது.

### பாக். சென்ற மேற்கிந்திய கிரிக்கெட்

# அணிக்கு பலத்த பாதுகாப்பு

மூன்று ரி 20 மற்றும் 3 ஒருநாள் கிரிக்கெட் தொடர்களில் பங்கேற்பதற்காக 26 பேர் கொண்ட மேற்கிந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தான் சென்றுள்ளது.

2018 ஆம் ஆண்டுக்கு பிறகு மேற்கிந்திய அணி பாகிஸ்தான் செல்வது இதுவே முதல் முறையாகும்.

மூன்று மாதங்களுக்கு முன்பு பாதுகாப்பு பிரச்சினையை காரணம் காட்டி நியூசிலாந்து அணி தனது பாகிஸ்தான் கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை இறுதி நேரத்தில் ரத்துச் செய்து போட்டியில் பங்கேற்காமல் நாடு திரும்பியது.

இதனால் பாகிஸ்தான் சென்றடைந்த மேற்கிந்திய தீவுகள் அணியினர், கராச்சி விமான நிலையத்தில் இருந்து பலத்த பாதுகாப்புடன் விடுதிகளுக்கு அழைத்து செல்லப்பட்டனர்.

பாகிஸ்தான் மேற்கிந்திய அணிகளுக்கு இடையிலான போட்டித் தொடர் சிறப்பு பாதுகாப்புக்கு மத்தியில் கராச்சியில் ஆரம்பமாகவுள்ளது. இதில் எதிர்வரும் 13, 14, 16 ஆம் திகதிகளில் ரி20 போட்டிகள் இடம்பெறவுள்ளன. அத்துடன் 18, 20, 22 ஆகிய திகதிகளிலும் ஒருநாள் சர்வதேச போட்டிகள் இடம்பெறவுள்ளன.

தலைவர் கைரன் பொலார்ட், பொபியன் அலென், ஒபெட் மெக்காய் ஆகியோர் காயம் காரணமாகவும், இவின் லூயிஸ், ஹெட்மயர், அண்ட்ரே ரஸல், சிமன்ஸ் ஆகியோர் தனிப்பட்ட காரணத்தினாலும் இந்த போட்டி தொடரில் இருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையில், முன்னாள் தலைவர் ஜேசன் ஹோல்டருக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இதனால் முக்கிய சிரேஷ்ட வீரர்கள் இல்லாத மேற்கிந்திய தீவுகள் அணி இந்த தொடரில் பங்கேற்கிறது.

ரி 20 அணியின் தலைவராக நிகோலஸ் பூரனும், ஒருநாள் சர்வதேச அணியின் தலைவராக ஷாய் ஹோப்பும் பெயரிடப்பட்டுள்ளனர்.

# தோல்வியை தவிர்க்குமா இங்கிலாந்து?

## 2- 220 ஓட்டங்கள்; ஆஸி. 425 ஓட்டங்கள்







டேவிட் வார்னர் சதத்தை தவறவிட, டிராவிஸ் ஹெட் அபாரமாக விளையாடி 152 ஓட்டங்கள் விளாசியதால் அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 425 ஓட்டங்கள் குவித்தது. இங்கிலாந்து அணி வெள்ளிக்கிழமை 3வது நாள் ஆட்ட நேர முடிவில் தனது 2 ஆவது இனிங்ஸில் 2விக்கெட் இழப்பிற்கு 220 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் முதல் டெஸ்ட் பிரிஸ்பேன் நகரில் நடைபெற்று வருகிறது.

நாணயச் சுழற்சியில் வென்று துடுப்பாட்டத்தை தேர்வு செய்த இங்கிலாந்து, பட் கம்மின்ஸின் பந்து வீச்சை தாக்குப்பிடிக்க முடியாமல் 14% ஓட்டங்களில் சுருண்டது. கம்மின்ஸ் ஐந்து விக்கெட்டுகள் சாய்த்தார். பின்னர் அவுஸ்திரேலியா முதல் இனிங்சை தொடங்கியது. தொடக்க வீரர் டேவிட் வார்னர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவர் சதம் அடிப்பார் என்று எதிர்பார்த்த நிலையில் 94ஓட்டங்களில் வெளியேறினார். மார்னஸ் லாபஸ்சேன் 74 ஓட்டங்கள் எடுத்தார்.

ஸ்டீவ் ஸ்மித் 12 ஓட்டங்களுடன் ஏமாற்றம் அளித்தாலும், டிராவிஸ் ஹெட் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி சதம் அடித்தார். இவரது ஆட்டத்தால் அவுஸ்திரேலியா வியாழக்கிழமை 2வது நாள் ஆட்டத்தில் 7 விக்கெட் இழப்பிற்கு 343 ஓட்டங்கள் எடுத்திருந்தது. டிராவிஸ் ஹெட் 112 ஓட்டங்களுடனும், மிட்செல் ஸ்டார்க் 10 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

வெள்ளிக்கிழமை 3வது நாள் ஆட்டம் தொடங்கியது. தொடர்ந்து விளையாடி டிராவிஸ் ஹெட் 152 ஓட்டங்கள் விளாசினார். ஸ்டார்க் 35 ஓட்டங்கள் அடித்தார். இதனால் அவுஸ்திரேலியா முதல் இனிங்சில் 104.3 ஓவர்களில் விளையாடி 425 ஓட்டங்கள் குவித்தது.

இங்கிலாந்து அணி தரப்பில் ஓலி ரொபின்சன், கிறிஸ் வோக்ஸ், மார்க் வுட் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். முதல் இனிங்சில் அவுஸ்திரேலியா 278 ஓட்டங்கள் முன்னிலை பெற்றுள்ளது.

278 ஓட்டங்களை கடந்தால்தான் இனிங்ஸ் தோல்வியை தவிர்க்க முடியும் என்ற நிலையில் 2வது இனிங்சில் ஆடி வரும் இங்கிலாந்து அணி வெள்ளிக்கிழமை 3வது நாள் ஆட்ட நேர முடிவில் தனது 2 ஆவது இனிங்ஸில் 2விக்கெட் இழப்பிற்கு 220 ஓட்டங்கள் எடுத்திருந்தது. கப்டன் ஜோ ரூட் 86 ஓட்டங்களுடனும், டேவிட் மாலன் 80 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

# 4 தடவைகள் 'நோ போல்' வீசிய பென் ஸ்டொக்ஸ்

### நடுவரின் தீர்ப்பால் சர்ச்சை

அவுஸ்திரேலியா இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி பிரிஸ்பேனில் நடைபெறுகிறது.

அதில் நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்து முதல் இனிங்சில் 147 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

பதிலுக்கு துடுப்பாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதல் இனிங்சில் துடுப்பாட களமிறங்கிய போது, மழை குறுக்கிட்டதால் முதல் நாள் போட்டி பாதியில் கைவிடப்பட்டது.

இதையடுத்து, 2 ஆம் நாள் போட்டி வியாழக்கிழமை தொடங்கியது. தமது முதலாவது இனிங்ஸை ஆரம்பித்த அவுஸ்திரேலிய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது.

இங்கிலாந்து பந்துவீச்சாளர் பென் ஸ்டோக்ஸ் வீசிய தவறான பந்துவீச்சு(நோ போல்) குறித்து சர்ச்சை எழுந்துள்ளது. அவர் ஒரே ஓவரில் 4 முறை தவறாக பந்துவீசியதாகவும், அதி[...] இரண்டு தடவை மட்டுமே நடுவ[...] சைகை காண்பித்ததாகவும், ஊட[...] மொன்று செய்தி வெளியிட்டது.

எனினும், இதற்கடுத்து சமூக வலை[...] தளங்களில் வெளியான காணொ[...] காட்சிகளில் பென் ஸ்டோக்ஸ் மொ[...] தமாக 14 செல்லுபடியற்ற பந்துவீச்[...] களை மேற்கொண்டுள்ளமை தெரி[...] வந்துள்ளது.

அதில் இரண்டு முறை மட்டு[...] நடுவர் நோ போல் சைகை வழங்[...] யுள்ளார். புதிய நடைமுறைகளின்ப[...] செல்லுப்படியற்ற பந்துவீச்சுகளை[...] மூன்றாவது நடுவரே அவதானிக்[...] வேண்டும்.

ஆனால் முன் காலைக் கோட்டுக்[...] வெளியே வைத்து வீசப்படும் செ[...] லுப்படியற்ற பந்துவீச்சுகளை கணி[...] கும் தொழில்நுட்பத்தில் போட்[...] ஆரம்பத்துக்கு முன்னதாகவே பழு[...] ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இதனால் ஆட்டமிழப்பை ஏற்[...] படுத்தும் பந்து வீச்சு செல்லுப்படிய[...] னதா என்பதை அவதானிக்க பழை[...] நடைமுறை பின்பற்றப்பட்டது.

### 19 வயதுக்குட்பட்ட இலங்கை கால்பந்தாட்ட அணியில்

# தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவிகள் நால்வருக்கு இடம்

பங்களாதேஷில் நடைபெறவுள்ள 19 வயதுக்குட்பட்ட தெற்காசிய பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியில் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மாணவிகள் நால்வர் இடம் பெறுகின்றனர்.

பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, நேபாளம், இலங்கை ஆகிய 5 நாடுகள் இப் போட்டியில் பங்குபற்றுகின்றன. இப் போட்டியில் பங்குபற்றும் இலங்கை அணியினர் பங்களாதேஷை சென்றடைந்துள்ளனர். இலங்கை அணியில் மகாஜன கல்லூரியைச் சேர்ந்த சிவநேஸ்வரன் தர்மிகா, உருத்திரகுமார் யோகிதா, ரகுதாஸ் கிருசாந்தினி, மரியநாயகம் வெலன்டினா ஆகியோர் இடம்பெறுகின்றனர்.

இவர்களில் தர்மிகா உதவி அணித் தலைவர்களில் ஒருவராக நியமிக்கப்பட்டுள்ளார்.



இலங்கை பெண்கள் கால்பந்தாட்ட வரலாற்றில் வட மாகாணத்தைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர், 19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் உதவித் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

அத்துடன் இவ்வணியின் பொறுப்பாசிரியையாக மகாஜன கல்லூரி கால்பந்தாட்ட அணியின் பொறுப்பாசிரியை பத்மநிதி செல்லையா நியமிக்கப்பட்டுள்ளமை மற்றொரு விசேட அம்சமாகும்.

20 வயதுக்குட்பட்ட அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான பெண்கள் கால்பந்தாட்டப் போட்டியில் 2019இல் சாம்பியனாகிய மகாஜன கல்லூரி அணியின் தர்மிகா தலைமை தாங்கியருந்தார். அத்துடன் நேபாளத்தில் 2015இல் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கான தெற்காசிய கால்பந்தாட்டப் போட்டியிலும் இலங்கை அணியில் இடம்பெற்றிருந்தார்.

யோகிதா, கிருசாந்தினி ஆகிய இருவரும் 201%இல் இலங்கையில் நடைபெற்ற 14 வயதுக்குட்பட்ட சிறுமிகளுக்கான தெற்காசிய கால்பந்தாட்டப் போட்டியிலும் இந்தியாவில் நடைபெற்ற சுற்றுலாப் போட்டியிலும் இலங்கை அணியில் விளையாடியிருந்தனர்.

இதேவேளை, இம்முறை 19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் தலைவராக விசாகா வித்தியாலய மாணவி இமேஷா வர்ணகுலசூரியவும் இரண்டாவது உதவி அணித் தலைவராக கேட்வே கல்லூரி மாணவி மாலிகா அமித்தும் பெயரிடப்பட்டுள்ளனர். இவ்வணியில் குருநாகல் மலியதேவ, 19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணி தனது முதலாவது போட்டியில் பூட்டானை11 ஆம் திகதி சனிக்கிழமையும் 2ஆவது போட்டியில் இந்தியாவை 13 ஆம் திகதியும் தொடர்ந்து நேபாளத்தை 15ஆம் திகதியும் கடைசிப் போட்டியில் பங்களாதேஷை 19ஆம் திகதியும் எதிர்த்தாடவுள்ளது.

லீக் சுற்று முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் 21ஆம் திகதி நடைபெறும் இறுதிப் போட்டியில் ஒன்றையொன்று எதிர்த்தாடும்.

19 வயதுக்குட்பட்ட இலங்கை பெண்கள் அணியின் தலைமைப் பயிற்றுநராக முன்னாள் இலங்கை வீரர் மஞ்சுள சிறிசேன செயற்படுகின்றார்.

Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road, colombo -14 on Sunday 12th of December 2021.

# அரசியல் களரி

ஞாயிறு, டிசம்பர் 12, 2021



நஜீப் பின் கபூர்

# வன்முறையாளர் கூடாரமாகின்றதா பாராளுமன்றம்?

ஆளும் தரப்பு இந்த நாடாளுமன்றத்துக்கு பதவிக்கு ஆட்களை நியமனம் செய்யும் போதே இது வன்முறைக்கான துவக்கம் என்று நாம் அன்று பதிவு செய்திருந்தோம்.குறிப்பாக அமைச்சர் ஜோன்ஸ்டனை ஆளும் தரப்பு கொரோடாவாக நியமனம் செய்தபோதே இந்த அச்சத்தை நாம் வெளியிட்டிருந்தோம். அவர் இந்த நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகளை தொடர்ச்சியாக அச்சுறுத்தி வருகின்றார்-வந்திருக்கின்றார். கௌரவமான பண்பட்ட நல்ல படித்த அனுபவசாலிகள் பலர் இந்தப் பதவிக்கு தகுதியாக இருந்த போதும் அவர்களுக்கு அந்தப் பதவி சென்றடையவில்லை.கடந்த தேர்தலில் குருணாகலையில் களமிறங்கிய மஹிந்த ராஜபக்ஸவின் வெற்றிக்கு ஜோன்ஸ்டன் செய்த பங்களிப்புக்காக இன்று ராஜபக்ஸாக்கள் அவருக்கு நன்றிக் கடனாக மிகப் பெரிய பொறுப்புக்களை ஒப்படைத்திருக்கின்றார்கள் என்பது எமது அவதானம்.

இந்த நியமனங்கள் எல்லாம் விஞ்ஞான ரீதியிலான தெரிவுகள் என்று வேறு கதைகள் சொல்லப்பட்டன.ஆனால் அந்தக் கதைகள் அனைத்தும் தோல்வியைத் தழுவி இருக்கின்றது என்பது ஆளும் தரப்பினரே நன்கு உணர்ந்திருக்கின்றனர். ஆனாலும் அப்படி ஒன்றும் பின்னடைவு இல்லை. எல்லாம் சரியாகத்தான் செய்திருக்கின்றோம் என்றுதான் அதிகாரத்தில் இருக்கின்றவர்கள் இன்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். நாடாளுமன்ற அமர்வுகளைத் தொடர்ந்து உன்னிப்பாக அவதானிப்பவர்களுக்கு ஆளும் கட்சிக் கொரோடாவின் செயல்பாடுகள் பற்றிப் புரிந்து கொள்ள முடியும். சபாநாயகரைக் கூட ஜோன்ஸ்டன் மற்றும் மஹிந்தானந்த போன்ற அமைச்சர்கள் நெறிப்படுத்துவது போல காரியங்கள் அங்கு நடந்து வருவதை நாம் இதற்கு முன்னரும் பதிவு செய்திருந்தோம்.

அந்த வகையில் கடந்த மூன்றாம் திகதி அமர்வின் போது நாடாளுமன்றத்தில் சஜித் தரப்பு உறுப்பினர் மனுஷ நாணயக்கார அரசுக்கு எதிரான கருத்துக்களை சொல்லிக் கொண்டிருந்த போது நாம் முன்பு சொன்ன ஆளும் தரப்பு கொரோடா ஜோன்ஸ்டன், மற்றும் சர்ச்சைக்குரிய லோஹன் ரத்வத்தை போன்றவர்கள் மனுஷ நாணயக்காரவின் தனிப்பட்ட வாழ்க்கை தொடர்பாக நாடாளுமன்றத்தில் கருத்துக்களை வெளியிட்டு அவரது பேச்சுக்கு இடையூறு விளைவித்திருக்கின்றனர்.ஒரு கட்டத்தில் அவர் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தெற்கில் நடந்த குண்டுத் தாக்குதலினால் நோய்வாய்ப்பட்டிருக்கின்ற மஹிந்த விஜேசேகரவின் நாமத்தை உச்சரிக்க முற்பட்டிருக்கின்றார். அவர் என்ன பேச வருகின்றார் என்பது தெளிவில்லாத ஒரு நேரத்தில் நாடாளுமன்றத்தில் மின்சாரம் தடைப்பட்டு விடுகின்றது.

முடமாக இருக்கும் தனது தந்தை பற்றி ஏதோ தப்பாக மனுஷ பேச முயன்றார் என்று கருத்தில் மனுஷ மீது தற்போது நாடாளுமன்றில் இருக்கின்ற மஹிந்த விஜேசேகரவின் மகன் காஞ்சனா விஜேசேகர கோபத்தில் இருந்திருக்கின்றார். எனவே நான்காம் திகதி நாடாளுமன்றம் கூடிய போது ஆளும் தரப்பு உறுப்பினர்கள் குறிப்பாக காஞ்சன விஜேசேகர மனுஷவைத் தாக்கும் எண்ணத்தில் எதிர்க்கட்சி லொபிக்குப் போய் வன்முறையில் இறங்கி இருக்கின்றார்.அவர் துணைக்குப் பெரும் தொகையான ஆளும் தரப்பு உறுப்பினர்கள் ஒன்று சேர்ந்து இந்த தாக்குதல் முயற்சிகள் நடந்திருக்கின்றன. இதற்கு தாக்குதலை மேற்கொண்டவர்கள் கூறுகின்ற காரணம், மனுஷ சபாநாயகரை தாக்க முனைந்தார். அதனால்தான் நாம் அவருக்கு எதிரான நடவடிக்கைகளில் இறங்க வேண்டி வந்தது என்று மலைக்கும் மடுவுக்கும் முடிச்சுப் போட்டு தற்போது இந்த சம்பவத்தை முன்னெடுத்து கொண்டிருக்கின்றனர்.மனுஷ சபாநாயகரை தாக்க முயன்றார் என்று வேறு குற்றச்சாட்டுக்கள். எனவே நாடாளுமன்றத்தில் இதன் பின்னர் உறுப்பினர்கள் கருத்துக்களை சுதந்திரமாக வெளியிட முடியாத ஒரு அவல நிலை இன்று நமது நாட்டில் காணப்படுகின்றது.அப்படிப் பேசுகின்றவர்கள் நாடாளுமன்றத்தில் பின்வாசலால் தப்பி ஓடுகின்ற ஒரு கலாசாரம் இன்று தோன்றி இருக்கின்றது. நாடாளுமன்றத்திலே கருத்துச் சுதந்திரத்திற்கு இடமில்லை.இது பற்றிக் கேட்டால் உலகில் பல நாடுகளில் இப்படியான சம்பவங்கள் நடந்துதானே இருக்கின்றன என்று வேறு நியாயங்கள் சொல்லவும் அதிக வாய்ப்புக்கள் இருக்கின்றன.

எனவே அந்த இரு நாட்களிலும் நடந்த சம்பவங்கள் தொடர்பில் சபாநாயகர் பத்துப் பேர் அடங்கிய விசாரணைக் குழு ஒன்றை இப்போது அமைத்திருக்கின்றார்.இதில் ஆளும் எதிரணிக் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். எனவே அந்த குழு கூடி இது பற்றித் தேடிப் பார்க்கின்ற நேரத்தில் அங்கும் இருதரப்பும் தங்களுக்காக தாமே வாதம் புரியும். அப்படி இதற்கு முன்னர் அமைக்கப்பட்ட விசாரணைக் குழுக்களினால் ஏதாவது உருப்படியான காரியங்கள் இந்த நாட்டில் நிகழ்ந்திருக்கின்றனவா என்று கேட்கத் தோன்றுகின்றது.பண்டோரா பேப்பருக்கு குழு என்றார்கள். ஒரு மாதத்துக்குள் அறிக்கை என்றார்கள்.லோகன் சிறைக்குச் சென்று பண்ணிய துப்பாக்கி அச்சுறுத்தலுக்கு விசாரனை என்றார்கள். இது பற்றிய அறிக்கைகளை நாம் எங்காவது பார்க்க முடிந்ததா? ஈஸ்டர் தாக்குதல் அறிக்கை வெளியே வந்தாலும் பெரும்பாலான பாகங்கள் இன்னும் மறைத்து வைக்கப்பட்டிருக்கின்றது.குதிரைக் கொம்பு போல அறிக்கை வந்தாலும் அதில் என்னதான் அடங்கி இருக்கப் போகின்றது.அது வெறும் சிபார்சுகளைத்தானே முன்வைக்க முடியும். குற்றவாளிகளுக்கு இது எப்போதாவது தண்டனைகளை கொடுத்திருக்கின்றதா? திஸ்ஸ குட்டியாராச்சி போன்றவர்களின் கத்திரிக்காய் கதை எவ்வளவு தூரம் அசிங்கமானது.அதற்குக் கூட நடவடிக்கை இல்லாத ஒரு நாடு இது.

இந்த லச்சணத்தில் நாடாளுமன்ற வன்முறைக்கும் விசாரணைக் குழு என்பது கேலிக் கூத்தன்றி என்னவாக இருக்க முடியும்? எனவே அனுரகுமார சொல்வது போல நாடாளுமன்றத்தில் எல்லா இடங்களிலும் சீசிரிவி கமராக்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன.அதன் மூலம் யார் வன்முறையை ஆரம்பித்தார்கள் என்று கண்டறிவது ஒன்றும் பெரிய காரியம் அல்ல. சபாநாயகரே பக்கச் சார்பாக நடந்து கொள்கின்ற ஒரு நாடாளுமன்றத்தில் விசாரணைக் குழுக்கள் போட்டு தேடுவது என்பது காலத்தை கடத்தி கதையை முடித்து விடுகின்ற இராஜதந்திரம் என்பது இந்த நாட்டில் வாழ்கின்ற மக்களுக்கு நன்கு தெரிந்த கதைதான். தலைவர்கள் தமக்குக் கீழ் இருக்கின்ற உறுப்பினர்களை கட்டுப்படுத்தி வைத்துக் கொள்ள முடியுமாக இருந்தால் இது போன்ற வன்முறைகள் நாடாளுமன்றத்தில் இருக்க மாட்டாது.

ஆனால், தேர்தல் காலங்களில் இருந்து அல்லது அதற்கு முன்பிருந்தே தலைவர்கள் இனவாதத்தையும் வன்முறையையும் வளர்த்து வந்திருப்பதால் தான் இந்த நிலை தோன்றி இருக்கின்றது.மேலும் நாடாளுமன்றத்தில் துறைக்குப் பொறுப்பான அமைச்சுக்களின் விவகாரங்கள் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற போது குறிப்பிட்ட அமைச்சர்கள் அங்கிருந்து தலைமறைவாகும் நிலையும் காணப்படுகின்றது. எனவே இதனைக் கூட ஒரு வன்முறையாகத்தான் நோக்க வேண்டும்.மேலும் அரசை எதிரணியினர் விமர்சிக்கும் போது அதற்கு எதிராக வன்முறையாக செயலாற்றுகின்ற உறுப்பினர்களை எந்த ஒரு இடத்திலும் தலைவர்கள் தடுத்து நிறுத்தியதை நாம் கடந்த காலங்களில் பார்க்க முடியவில்லை.

எனவே இந்த நாட்டில் நாடாளுமன்றம் மட்டுமல்ல அமைச்சரவை தீர்மானங்கள் கூட கோலிக் கூத்தாகி இருக்கின்றது. அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட யுகதனவி ஒப்பந்தங்கள் தொடர்பில் அமைச்சரவையில் விவாதிக்கப்படாமலே அதற்கு அங்கீகாரம் தன்னிச்சையாக பெறப்பட்டிருக்கின்றது. அல்லது பலாத்காரமாக அது மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.இதனை ஆளும் தரப்பினரே கடந்த காலங்களில் பகிரங்கமாக பேசியும் இருந்தார்கள். அதனை நாடாளுமன்றத்தில் அனுரகுமார ஒரு கேள்வியாக எழுப்பிய போது துறைக்குப் பொறுப்பான அமைச்சர் அங்கு இருக்கவில்லை.அதற்கு விளக்கம் கொடுக்க முற்பட்ட அமைச்சர் தினேஷ் ஐக்கிய தேசியக் கட்சிக் காலத்தில் கூட இது மாதிரியான பதில் வழங்காத சம்பவங்கள் நடந்திருக்கின்றன என்று பதில் கொடுத்துத் தப்பிக்க முனைந்ததைப் பார்க்க முடிந்தது.

இந்த அமெரிக்காவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் தொடர்பில் இன்னும் இரண்டு வருடங்களுக்கு வெளியில் தகவல்கள் சொல்லக் கூடாது என்ற ஒரு விதியும் அதில் அடங்கி இருப்பதாக பத்திரிகைக் குறிப்பொன்றில் நாம் பார்க்க முடிந்தது.ஆனால் இலங்கையில் தகவல் அறியும் உரிமை என்று ஒரு சட்டம் அமுலில் இருக்கின்றது. எனவே எல்லாமே இந்த நாட்டில் தலைகீழாக நடந்து கொண்டிருக்கின்றது. அல்லது கேலிக்கூத்தாகிக் கொண்டிருக்கின்றது.

சட்டங்கள் எல்லாம் குப்பையில். வன்முறையில்தான் எல்லாவற்றிற்கும் தீர்வு என்ற நிலைதான் நாட்டில். இதற்கிடையில் ஞான சாரவை வைத்து ஒரு நாடு ஒரு சட்டத்தை நமது ஜனாதிபதி உருவாக்கப் போகின்றாராம்.! இப்படி எல்லாம் நடந்து கொள்கின்றவர்கள் இது பற்றி ஒரு போதும் வெட்கப்பட்டதாகவோ கவலைப்பட்டதாகவோ எந்த ஒரு இடத்திலும் தெரியவில்லை.நாம் செய்வதுதான் சரி என்று அவர்கள் தான் தோன்றித்தனமாக நடந்து கொண்டிருக்கின்றார்கள்.அரசுக்குள் இருந்து கிளர்ச்சி செய்வதாக மக்களுக்கு காட்டிக் கொள்கின்றவர்கள் கூட இது விடயத்தில் பாராமுகமாக நடந்து கொள்கின்றார்கள்.

வரலாற்றில் என்றுமில்லாதவாறு பொருட்களின் விலையேற்றம் நடந்து கொண்டிருக்கின்றது.இது பற்றி நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்படுகின்ற போது அதிகாரிகள் அட்டகாசம்தான் இதற்கு மூலம் காரணம் என்று அவர்கள் பந்தை அதிகாரிகள் பக்கத்தில் எறிந்து விடுகின்றார்கள். அப்படியானால் ஒரு இராணுவ அதிகாரியாக இருந்து சாதனை படைத்ததாக சொல்கின்ற நமது ஜனாதிபதி ஜீ.ஆர். இந்த அதிகாரிகளிடத்திலும் தோற்றுப் போய் இருக்கின்றார்.அல்லது எதிரணிகள் சொல்வது போல் சேர் இது விவகாரத்திலும் சித்தியடையத் தவறி இருக்கின்றார்.

அதே போன்று இந்தியாவுக்குப் பெரும் எதிர்பார்ப்புக்களுடன் சென்ற நமது நிதி அமைச்சர் பசில் பயணமும் வெற்றியளிக்க வில்லை என்று தெரிகின்றது.இது பற்றி நாடாளுமன்றத்துக்கு அவர் விளக்கம் தரவேண்டும் என்று ஐதேக தலைவர் ரணில் வேண்டுகோள் விடுத்தாலும் அந்த வேண்டு கோளும் இன்றுவரை ஏற்றுக் கொள்ளப்படவில்லை.எனவே அமெரிக்காவுடன் யுகதனவிய திட்டம் போல இதிலும் ஏதாவது இரகசியம் இருக்கலாம் என்று ஒரு பேச்சும் அரசியல் வட்டாரங்களில் அடிபடுகின்றது.எனவே இந்த அரசாங்கத்தில் முக்கியமான சில தீர்மானங்களை ஆளும் தரப்பைச் சேர்ந்த ராஜபக்ஸாக்கள் தன்னிச்சையாக எடுத்து வருகின்றார்கள் என்பது தெளிவாகின்றது.தமிழக அரசியல் விமர்சகர்கள் பலர் நமது நிதி அமைச்சரை உயர் மட்டத் தலைவர்கள் கண்டு கொள்ளவில்லை என்று செய்தி வெளியிட்டு வருகின்றனர்.

இந்தியத் தரப்பில் எது செய்வதாக இருந்தாலும் அரசியல் யாப்பில் பதின்மூன்று விவகாரத்தில் இலங்கை நகர்வுகைளச் செய்யாதவரை பெரிதாக ஏதும் இல்லை என்ற நிலைதான் தெரிகின்றது.அதே நேரம் குறைந்தபட்சம் மாகாணசபைத் தேர்தல் விடயத்தில் அழுத்தங்கள் நடந்திருக்க வாய்ப்பு இருக்கின்றது.எனவே அதனை சிங்கள சமூகத்திடம் சந்தைப்படுத்துவது நெருக்கடி என்பதால் இரு தரப்பும் அடக்கி வாசித்திருக்க வேண்டும் என்று எடுத்துக் கொள்ள முடியும். புதிய அரசியல் யாப்பு டிசம்பரில் வருகின்றது என்று சொல்லப்பட்டு வந்தது. இன்று நாம் இந்த கட்டுரையை தயாரிக்கின்ற நேரம் ஏறக்குறைய மாதத்தின் மத்தி என்று வருகின்றது.ஆனால் யாப்பையும் காணவில்லை.அதற்கான குறிப்பையும் காணவில்லை.மொத்தத்தில் இந்த அரசாங்கம் மெல்லவும் முடியாது விழுங்கவும் முடியாது என்ற ஒரு நிலையில் இருக்கின்றது என்றுதான் சொல்ல வேண்டும்.

எனவே இதில் நல்ல தீர்ப்பு வரும் என்று எவரும் நம்பிக் கொள்ளக் கூடாது என்பது எமது உபதேசமாகும்.

இந்த நாட்டில் சஜித் தலைமையிலான எதிரணி நோய்வாய்ப்பட்ட ஒரு எதிர்க் கட்சி.எனவே அதனால் இந்த அரசுடன் மல்லுக் கட்ட முடியாது.எனவே இது விடயத்தில் பகிஷ்கரிப்பை மேற்கொண்டிருக்கும் அவர்கள், விவகாரத்தை சர்வதேசத்தின் கவனத்துக்கு கொண்டு செல்ல இருக்கின்றார்கள்.ஏற்கெனவே சர்வதேசத்திடம் நாடு சிக்கித் தவிக்கின்ற நிலையில் பேரின சமூகங்களே இப்போது அரசுக்கு எதிராக சர்வதேசத்திடம் நீதி கேட்டுப் போகும் அவல நிலை ஏற்பட்டிருக்கின்றது.இன்னும் சில நாட்களில் ஜீஎஸ்பி வரிச்சலுகை பற்றிய தீர்மானம் வர இருக்கின்றது.அடுத்து மார்ச் அளவில் ஜெனிவா அச்சுறுத்தலும் இருக்கின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.



# வாராந்த அரசியல்



## ஞானத்தை நம்பும் ஏமாளி!

கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஞானசார தேரர் தப்போவன ரத்தன தேரருக்கு தொலைபேசியல் தொடர்பு கொண்டு தூசன வார்த்தையில் பேசி அந்தத் தேரரை அச்சுறுத்தி இருந்தார். அவர்களது அந்த உரையாடல் புனிதமான பௌத்த சமயத்துக்கு பெரும் களங்கமாக அமைந்து விட்டது என்பது பெரும்பாலான பௌத்த தேரர்களினதும் சாதாரண சிங்கள மக்களினதும் அபிப்பிராயம். இப்படி எல்லாம் பேசுகின்ற ஒரு மனிதன் எப்படி ஒரு பௌத்த தேரராக இருக்க முடியும் என்று பலரும் கேள்வி எழுப்புகின்றார்கள். ஆனால் வேடிக்கை என்னவென்றால் அந்த உரையாடலிலும் அவர் தம்பியா, மரக்கலயா என்று மறுமுனையில் பேசிய தேரரைத் திட்டித் தீர்த்திருக்கின்றார்.ஆனால் கடிதத் தலைப்பு மட்டும் வைத்து கட்சி நடத்தும் ஒரு முஸ்லிம் தலைவர் என்று தன்னை நினைத்துக் கொண்டிருப்பவர் ஞானத்துக்கு சான்றிதழ் கொடுத்து அவரைப் புகழ்ந்து தள்ளி வருகின்றார். வடக்கு மற்றும் கிழக்கில் ஞானத்துக்கு நல்ல வரவேற்பு என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவும் கதை சொல்லி வருகின்றது.

## டைம்ஸுக்கு வழக்கு!



புகழ்பெற்ற அமெரிக்காவின் நிவ்யோர்க் டைம்ஸ் ஏழு மில்லியன் (7.3) பணம் தொடர்பில் தன்னைப் பற்றி பொய்யான செய்திகளைச் சொல்லி தனக்கு அபகீர்த்தியை உண்டு பண்ணிவிட்டது.எனவே அதற்கு எதிராகத் தான் வழக்குத் தாக்கல் செய்ய இருக்கின்றேன்.இப்படி ஒரு கருத்தை நமது பிரதமர் எம்.ஆர். ஒரு சந்தர்ப்பத்தில் சொல்லி இருந்தார். ஆனால் இன்று வரை அவர் அப்படி டைம்ஸுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.எனவே இதிலிருந்து டைம்ஸ் சொன்ன கருத்து உண்மை என்பது உறுதியாகி இருக்கின்றது. இந்தக் கதையை கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடந்த நாடாளுமன்ற அமர்வில் ஜேவிபி. தலைவர் அனுரகுமார திசாநாயக்க சுட்டிக் காட்டினார்.அந்த வேளை நமது பிரதமருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு எதிராக ஆளும் தரப்பில் எவரும் குரல் எழுப்பாமல் அமைதியாக அனுரவின் பேச்சை செவிமடுத்துக் கொண்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.




## டொலர் பசியின் உச்சம்!

தற்போது நாட்டில் டொலர் நெருக்கடியால் பொருட்களின் இறக்குமதி தடைப்பட்டிருக்கின்றது.நமது தொழிலாளர்கள் வருடாந்தம் ஏழு மில்லியன் வரை நாட்டுக்கு பணம் அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.இது தற்போது மூன்றாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. உள்நாட்டில் ஊழியர்களின் சம்பளத்தை வழங்குவதற்கு பியகம அச்சு இயந்திரத்தை எவ்வளவு வேகமாக இயக்கினாலும் பணப் பசியைத் தீர்க்க முடியாதிருக்கின்றது.எனவே நகர்கள் பூராவிலும் இருக்கின்ற அச்சுக் கந்தோர்களைப் போல் அரசாங்கம் அச்சு இயந்திரங்களை இறக்குமதி செய்துதான் இதனை நிவர்த்தி செய்ய முடியும் என்று தோன்றுகின்றது.இது எவ்வளவு தூரம் ஆபத்தானது,அழிவை நோக்கிய பயணம். தற்போது குறிப்பிட்ட தொகையை விட டொலருக்கு இன்னும் பத்து ரூபாவுக்கு மேல் தருவதாக மத்திய வங்கி ஆளுநர் கப்ரால் கூறுகின்றார்.அவரோ வெளியில் டொலர் இருநூற்றி நாற்பது ரூபாய்க்குப் போகின்றது என்றும் கூறுகின்றார். அப்படி இருக்க எவராவது முப்பது ரூபா நஷ்டத்தில் அரச வங்கிக்கு வந்து இதனை மாற்றுவார்களா? அவர்கள் என்ன மந்த புத்திக்காரர்களா?

## உயிரோடு எரிந்த பிரியந்த!



பாகிஸ்தான் சியல்கோட்டில் உயிரோடு எரிக்கப்பட்ட பிரியந்த குமாரவின் மரணம் முழு உலகத்திற்கும் கடந்த வாரம் கிடைத்த அதிர்ச்சியான அவமானமான ஒரு செய்தியாகும்.இந்த பிரியந்தவின் பல சகோதரர்கள் பாகிஸ்தானில் தான் தொழில் செய்து வருகின்றார்கள்.தனது காரியாலயத்தில் ஒட்டப்பட்ட ஒரு போஸ்டரை பிரியந்த அகற்றி இருக்கின்றார்.பின்னர் ஊழியர்கள் கொதித்த போது தனக்கு அதில் இருந்த வார்த்தைகள் புரியாமல் நடந்த தவறு என்று அவர் தவறை ஏற்றும் மன்னிப்பும் கேட்டு இருக்கின்றார்.அதன் பின்னரும் அவர் அநாகரிகமான முறையில் உயிருடன் தீயில் போட்டு எரிக்கப்பட்டிருக்கின்றார்.இன்று அது பற்றி முழு உலகுமே பேசிக் கொண்டிருக்கின்றது. ஆனால் நமது நாட்டில் மனிதர்களை உயிருடன் எரிக்கின்ற கலாசாரத்துக்கும் நீண்ட வரலாறுகள் இருக்கின்றன என்பதனையும் இங்கு சொல்லித்தான் ஆக வேண்டும்.



## ஆளும் தரப்பு சபாநாயகர்

நமது பாராளுமன்றத்தில் தற்போதைய சபாநாயகர் செயல்படுகின்ற ஒழுங்கைப் பார்க்கின்ற போது அவர் நமது பாராளுமன்றத்தின் சபாநாயகர் என்று சொல்வதை விட ஆளும் தரப்பு அதாவது மொட்டுத் தரப்பு சபாநாயகர் என்றுதான் நாம் அவரை அடையாளப்படுத்த வேண்டும். இன்று நமது பாராளுமன்றம் ஒரு கேலிக் கூத்தாகி இருக்கின்றது. இதிலிருந்து நமது நாடாளுமன்றத்தைக் காப்பாற்ற வேண்டுமானால் முதலில் அதன் மீதான நல்லெண்ணத்தை உண்டு பண்ண வேண்டும். எனவே முதலில் நமது சபாநாயகர் தனது போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும்.அவர் ஆளும் தரப்பை தொடர்ந்து திருப்திப்படுத்த முற்பட்டால் நாடாளுமன்றம் கோமாளிகள் கூடாரமாக மாறி விடும். தற்போதுகூட அதன் நிலை அப்படித்தான் இருக்கின்றது.இது ஜேவிபி தலைவர் அனுரகுமாரவின் ஆதங்கம்.

நஜீப்

> நல்ல பொருளாதார வளமும் சக்தி வாய்ந்த இராணுவமும் ஒரு நாட்டுக்கு நல்ல பாதுகாப்பாக பார்க்கப்பட்டாலும் சமகால போர் தளபாடங்கள் தந்திரங்களின் படி மூன்றாம் உலகப்போர் என்பது கண்ணுக் கெட்டிய தூரத்தில் இல்லவே இல்லை. அதே போன்று இந்திய-பாகிஸ்தான் ஈரான்-அமெரிக்க மற்றும் இஸ்ரேல் என்பவற்றுக்கிடையிலும் முழு அளவிலான போருக்கும் வாய்ப்புக்கள் கிடையாது. என்றாலும் மட்டுப்பட்ட மோதல்களுக்கும் நெருக்கடிகளுக்கும் இடமிருக்கின்றது.

# ரஷ்ய – இந்திய நெருக்கம் சர்வதேச சமநிலையைப் பாதிக்குமா?



**யூசுப் என் யூனுஸ்**

தலைப்புக்கு வருவதற்கு முன்பு மனித இனத்தின் வரலாறு, தற்காலப் போர் அணுகுமுறைகள், பாதுகாப்பு யுக்திகள் என்பன பற்றி ஓரளவுக்கு பேசிவிட்டு கருவுக்குள் வர எண்ணுகின்றோம்.எனவே வாசகர்கள் சற்று பொறுமை காத்து கட்டுரையை வாசிக்க வேண்டி இருக்கும் என்பதை ஒரு குறிப்பாக இங்கு பதிய விரும்புகின்றோம்.மனிதப் பிறப்பு எப்போது ஆரம்பமானதோ அன்று முதல் அவனிடத்தில் கருத்து முரண்பாடுகளும் தோன்றி இருக்க வேண்டும்.சமயக் கருத்துக்களின் படி ஆதம் ஏவால் அல்லது விஞ்ஞானக் கருத்துக்களின் படி பரிணாம வளர்ச்சியில்தான் மனிதப் பிறப்பு நடந்திருக்கின்றது என்று வைத்துக் கொள்வோம். அதன் படி பார்த்தாலும் தொடக்கத்திலே கருத்து முரண்பாடுகள் தோன்றி இருக்க வேண்டும்.நாம் முன்பு சொன்ன ஆதம் ஏவால் இறைபடைப்பு என்று பார்த்தாலும் அவர்களிடையே ஒருமித்த கருத்து இருக்கவில்லை.எனவேதான் ஏவால் இறை கட்டளையை மதிக்கத் தவறியதால் அவர்கள் இருவரும் பூமிக்கு அனுப்பப்பட்டார்கள் என்றுதான் வரலாறுகள் கூறுகின்றன.

அதன் பின்பு விரிவடைந்த அவர்களது சந்ததியினருக்கு இடையேயும் இந்த முரண்பாடுகள் வலுப்பெற்றன. இதுதான் வரலாறு நமக்குச் சொல்லும் செய்தி. மதங்களுக்கிடையே மனிதப் பிறப்புப் பற்றி பல்வேறு கருத்துக்கள் இருந்தாலும் பெரும்பாலானவர்களின் குறிப்பாக கிறிஸ்தவ, இஸ்லாமிய கருத்துக்கள் கணிசமாக இணைந்தே பயணிக்கின்றது.இதற்கு மத்திய கிழக்கில் இந்த இரு சமயங்களின் பிறப்பு தொடங்கியது காரணமோ என்னவோ தெரியாது.

இப்போது தலைப்புக்குள் வருவோம். நாம் கூறும் நியதிப்படி தாய்,தந்தை, உடன் பிறப்புக்களுக்கிடையே முரண்பாடுகள் சர்வசாதாரணமாக பார்க்கக் கூடியதாகவுள்ளது. சமூகம் பல்கிப் பெருகி குடும்பம் சமூகமாக இனம், குலம், மொழி, மண், மதம், நாடு-தேசம் என்றெல்லாம் விரியும் போது அதிகாரப் போட்டி, எல்லைப் பிரச்சினை என்றெல்லாம் வளர்ந்து விட்டது. சமய ரீதியான கருத்துப்படியோ விஞ்ஞான கணக்குப்படியோ பார்க்கின்ற போது ஒன்றிலிருந்துதான் இது தொடங்கி இருக்கின்றது என்பது அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பொது விதியாக இருக்கின்றது. ஆனால் பிற்காலத்தில் ஒன்று இரண்டாகி ஒன்று பத்தாகி பத்து ஆயிரம் என்று இன்று மில்லியன் கணக்கில் உலகில் குடித் தொகை உயர்ந்து நிற்க்கின்றது.2021 இல் இது 770 கோடி என்று வளர்ந்திருக்கின்றது.

நாம் கடந்து வந்திருக்கின்ற இந்த வரலாற்றில் எத்தனையோ போர்களை உலகம் கண்டிருக்கின்றது.இந்திய வரலாற்றில் மகாபாரதப் போர்,உலக வரலாற்றில் ஈருலகப் போர்கள், பிராந்திய ரீதியில் இன்னும் தீர்வு காணப்படாத எத்தனையோ பிரச்சினைகள்,பிணக்குகள் எப்போதும் அங்கு போர் அல்லது வன்முறை வெடிக்கலாம் என்ற நிலை.நாடுகளின் இராணுவப் பலம் போதாக்குறைக்கு நேச நாடுகள் அச்சு நாடுகள் என்றெல்லாம் கூட்டணிகள் துணைக்கு நின்றன.இன்றும் அப்படியான ஒரு நிலை உலக அரங்கில் இருந்து வருகின்றது. அமெரிக்கா-ரஷ்ய என்று ஒரு காலத்தில் இந்த முகாம்கள் வரிந்து கட்டிக் கொண்டு நின்றன. ஒரு கட்டத்தில் அமெரிக்கா ஏக வல்லாதிக்கத்தைப் பெற்றிருந்தது.அது ரஷ்யா பலயீனப் படுத்தப்பட்டிருந்த ஒரு காலம். இன்று புடின் வருகையுடன் நிலைமை மீண்டும் அமெரிக்க-ரஷ்யா என்பதற்கு அப்பால் சீன என்ற இரச்சகனும் தன்னை உலக அரங்கில் பொருளாதார இராணுவ ரீதியில் வளர்த்துக் கொண்டிருக்கின்றன.

பிந்திய புள்ளிவிபரங்களின்படி இன்று உலகில் மிகவும் பண பலம் உள்ள நாடு சீனா.இரண்டாம் நிலைக்கு அமெரிக்கா தள்ளப்பட்டிருக்கின்றது.இதனால் சீனாவின் இராணுவமும் வலிமை அடைந்திருக்கின்றது.எனவே உலக அரங்கில் இன்று சீனாவை ஓரம் கட்டிவிட்டு எந்தக் காரியங்களையும் முன் னெடுக்க முடியாது.எனவேதான் இன்றைய அமெரிக்க ஜனாதிபதி பைடன் மீண்டும் அமெரிக்காவை முதன்மை இடத்துக்குக் கொண்டு வர தன்னாலான அனைத்துக் காரியங்களையும் செய்து கொண்டிருக்கின்றார்.அவர் இந்தியாவை தன் பக்கம் ஈர்த்துக் கொள்ள முடியுமான அனைத்துக் காரியங்களையும் செய்து பார்க்கின்றார்.ஆனால் இந்தியா இது விடயத்தில் மிகவும் நிதானமாக காய்களை நகர்த்தி ஒரேயடியாக அமெரிக்காவின் பக்கம் போய் விழுவதை அது தவிர்த்துக் கொண்டிருக்கின்றது.அந்தத் தேவை அதற்கு உடனடியாக இல்லையும் கூட.

தற்காலத்தில் போர் முறைகளும் முற்றிலும் மாற்றமடைந்திருக்கின்றன.போர் தந்திரமும் அதனை முன்னெடுக்கின்ற ஒழுங்குகளும் முற்றிலும் மாற்றம் அடைந்திருக்கின்றது.சராசரி மனிதர்களினால் இவற்றைக் கற்பனை பண்ணிப் பார்க்க முடியாத நிலை.போர் முனைக்கு வந்துதான் எதிரியைச் சந்திக்க வேண்டும் என்றில்லை.ஒரு மேசையில் அமர்ந்து கொண்டே காரியத்தை செய்து முடிக்கலாம்.எதிரியை துவம்சம் செய்துவிடலாம் என்ற நிலை. இந்தப் பின்னணியில்தான் நாம் இன்று உலக நகர்வுகளையும் பார்க்க வேண்டி இருக்கின்றது.இது எந்தளவுக்கு மாறிப் போய் இருக்கின்றது என்றால் போர்கள் நடக்காமலே எதிரி நாடுகளில் கொடிய வைரஸ்களைப் பரப்பி எதிரிகளைப் பலயீனப்படுத்தும் ஆயுதங்களும் முன்னணி நாடுகள் வைத்திருக்கின்றது. ஆனால் அவை இது பற்றி பகிரங்கமாக வெளியில் சொல்வதில்லை.

இங்கு நாம் ஒரு வலுவான கருத்தை சொல்லி வைக்கின்றோம். சம காலத்தில் மூன்றாம் உலகப் போர் என்று ஒன்று வரப் போவதில்லை என்பதை நாம் அடித்துச் சொல்கின்றோம். பலமான நாடுகள் குறிப்பாக அமெரிக்க-ரஷ்யா மோதல் சீனா-அமெரிக்க போர்.ஏன் இந்திய-பாகிஸ்தான், ஈரான்- அமெரிக்க மற்றும் இஸ்ரேல் என்ற முழு அளவிலான போர் என்பதற்கான வாய்ப்புக்களே கிடையாது.வெறும் மிரட்டல்களும் சிறு சிறு மோதல்கள் அங்காங்கே நடக்கலாம்.ஆனால் முழு அளவிலான போர் என்பது கிடையாது என்ற கருத்தையே நாம் முன்வைக்கின்றோம்.இது போன்றுதான் விடுதலைப் போராட்டங்களின் வடிவிலும் விரைவில் மாற்றங்களுக்கு இடமிருக்கின்றது.அங்கு இந்த யுக்திகள் சம்பிரதாய முறையில் இருந்து மாற்றமடைய இடமிருக்கின்றது.

அரசியல் தலைமைகளும் ஊடகங்களும் மக்களை பயமுறுத்துவதைத் தவிர நாடுகளின் பாதுகாப்பு யுத்த தந்திரங்கள் எல்லாவற்றிலும் மிகப் பெரிய மறைக்கப்பட்ட பக்கங்கள் நிறைய இருக்கின்றன.நாம் முன்பு சொன்ன சம்பிரதாய கதைகளுடன் நாம் இப்போது புடின் இந்தியா விஜயம் பற்றிப் பேசுவோம். நாம் இந்தக் கட்டுரையைத் தயாரித்துக் கொண்டிருந்த நேரம் இந்திய இராணுவத்தின் கூட்டுப் படைகளின் தளபதி அவரது மனைவி என்று இன்னும் பதின் மூன்று பேர் குன்னூரில் நடந்த ஹெலி விபத்தில் மரணித்திருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் இந்து-பாக். மோதல்கள் என்றால் ரஷ்யா இந்தியா பக்கமும் அமெரிக்க மற்றும் சீனா என்பன பாக். பக்கமாக இருந்து வந்திருக்கின்றன. ஆனால் இன்று அமெரிக்கா அந்த நிலைப்பாட்டில் இல்லை என்பது தெளிவான விடயம். ரஷ்யாவுடன் இந்தியா நெருங்குகின்றது என்றால் அது அமெரிக்காவுக்கு வலிக்கின்றது.அதே போன்று சீனாவுக்கும் அந்த வலி வருகின்றது.இது ஏன் என்று விளக்குவதானால் இன்று உலகில் நான்காவது பெரிய இராணுவ பலம் இந்தியாவிடமே இருக்கிறது.எனவே இந்தியா தனித்து இருப்பது வேறு கதை. அது அமெரிக்கா கூட்டிலோ அல்லது ரஷ்யா ஆதிக்கத்தில் வருகின்றது என்றால் அங்கு நிச்சயமாக பாதுகாப்பு துறைகளுடன் நோக்குகின்ற போது இது உலக சமநிலையில் ஆட்டம் காண்கின்ற ஒரு விவகாரம். அங்கே சமநிலை மாறுகின்றது என்பது எமது கருத்து.எனவேதான் நாம் மேற்சொன்ன நாடுகளுக்கு அந்த வலிகள் ஏற்படுகின்றன.

இன்று ரஷ்யாவுடன் சீனாவுக்கு மிக நெருக்கமான உறவுகள் இருக்கின்றன.இது இரு நாடுகளுக்கும் அமெரிக்கா விவகாரத்தில் இருக்கின்ற அச்சம் என்பது தெளிவு.இந்தப் பின்னணியில்தான் அமெரிக்கா இந்தியாவை தன்பக்கம் வளைத்துப் போட விரும்புகின்றது.ஆனால் இதிலுள்ள சாதக பாதக நிலையை இந்தியத் தலைவர்கள் நன்றாக உணர்ந்திருப்பதால் அவர்கள் மிகவும் அவதானமாக காய் நகர்த்தி வருகின்றார்கள்.சீனாவுடன் இந்தியாவுக்கு நல்லுறவு இல்லாவிட்டாலும் சீனாவை சீண்டிப் பார்க்க இந்தியா விரும்பவில்லை.நிச்சயமாக புதின் வருகை இந்தியாவுக்கு பல நன்மைகள் கிடைக்க இருக்கின்றது என்பதில் மாற்றுக் கருத்துக்கள் கிடையாது.



கொரோனா தொற்றுக்குப் பின் இது புடினின் இரண்டாவது வெளிநாட்டுப் பயணம்.இந்திய-அமெரிக்க பக்கம் செல்வதை புடின் ஒரு போதும் விரும்பமாட்டார்.இந்திய எல்லையில் சீனாவுடன் ஏற்படுகின்ற மோதல்களை தவிர்ப்பதில் தான் அவர் ஆர்வமாக இருக்கின்றார். அதேநேரம் இந்தியாவின் நெருக்கமான நாடு ரஷ்யா தனக்குத் தேவையான இராணுவ உபகரணங்களுக்கு அது வழக்கமாக ரஷ்யாவைத் தான் நெடுங்காலமாக நம்பி இருக்கின்றது.மேலும் சர்வதேச அரங்குகளில் இந்தியாவின் கருத்துக்களும் ரஷ்யாவின் கருத்துக்களும் ஏறக்குறைய சமமாக இருக்கின்றன.மத்திய கிழக்கு விவகாரம், ஈரான் விவகாரம் என்பவற்றை நாம் இங்கு சுட்டிக்காட்ட முடியும. அதேநேரம் இஸ்ரேலுக்கும் இந்தியாவுக்கும் வரலாற்றில் என்றுமில்லாத ஒரு உறவு மோடி காலத்தில் வளந்திருக்கின்றது.அது இராணுவ மட்டத்திலும் உயர் நிலையில் இருக்கின்றது என்பதையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டும்.

இந்தியாவின் உத்தர பிரதேசத்தில் இரு நாடுகளும் ஏகே 203 துப்பாக்கிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, மற்றும் 2018ல் 5.43 பில்லயன் அமெரிக்க டொலர்கள் மதிப்பிலான எஸ்-400 வான் பாதுகாப்பு சாதனங்கள் விவகாரத்தில் இந்தியாவுக்கு சாதகமான நிலை இந்த சந்திப்பில் இடம் பெற்றிருந்தன. இந்த சாதனங்களை ஏற்கனவே ரஷ்யா சீனாவுக்கு வழங்கி இருந்தது. அதனை இந்தியாவும் பெறுவது என்பது ஒரு பாதுகாப்பு சம நிலை. அதே போன்று ரஸ்யாவின் தெற்குத் தொலை தூரங்களில் உள்ள இடங்களில் இந்தியா பல அபிவிருத்தி வேலைகளைச் செய்ய ஏற்பாடுகளும் இந்த சந்திப்பில் பேசப்பட்டிருக்கின்றன.

இந்த மோடி-புடின் சந்திப்பில் ஆப்கான் விவகாரமும் முக்கிய பேசு பொருளாக இருந்துள்ளது.ஆப்கான் விவகாரத்தில் சீனாவையும் அமெரிக்காவையும் அழைத்துப் பேசிய ரஷ்யா அதற்கு இந்தியாவை அழைக்கவில்லை. காரணம் தலிபான்கள் விவகாரத்தில் ரஷ்யாவுக்கும் இந்தியாவுக்கும் முரண்பாடுகள் இருக்கின்றன.ரஷ்யா ஆப்கான் விவகாரத்தில் பாகிஸ்தானுடன் இணைந்து செயலாற்றுகின்றது.இந்தியா அமெரிக்காவுடன் நெருக்கமாக போக முயன்றால் ரஷ்யா பாகிஸ்தான் உறவில் ஆர்வம் கொள்வது தவிர்க்க முடியாத ஒன்று.ஆப்கான் விவகாரத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் இந்திய அழைப்பை ஏற்று ரஷ்யா அதில் கலந்து கொண்டு நல்லெண்ணத்தை காட்டி இருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஏஸ்.400 விவகாரத்தில் அமெரிக்க எதிர்ப்பையும் மீறி இந்தியா ரஷ்யாவுடன் நெருக்கமாவது அமெரிக்காவுக்கு அசௌகரியமான ஒன்று.பெரும்பாலும் இந்தியா முன்பைவிட அமெரிக்காவுடன் நெருக்கமாக செல்வதையும் அவதானிக்க முடியாது.இது சீனா மீதுள்ள நெருக்கடியாகவே நாம் பார்க்க வேண்டும். என்றாலும் ரஷ்யாவையும் பகைத்துக் கொள்ளாமல் இந்தப் பயணத்தை தொடர வேண்டிய கட்டாயமும் இந்தியாவுக்கு இருக்கின்றது.சீனாவும் ரஷ்யாவும் ஒரு அணியில் இருக்கின்ற போது தொலைவில் இருக்கும் அமெரிக்காவை நம்புவதும் சிக்கலான ஒன்றுதான்.நமது நியதிப்படி நாடுகள் தமது தேவைக்காக பகைவர்களுடன் இணைவதும் நண்பர்களை கைவிட்டு விடுவதும் வரலாறுகள் பூராவிலும் நடந்துதான் வந்திருக்கின்றன. என்னதான் இருந்தாலும் நாடுகள் பாதுகாப்பு விவகாரங்களில் ஆர்வமாக இருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்தாலும் அது தமது பாதுகாப்புக்கு ஒரு உந்துசக்திதான் என்பதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். இன்று ஆளற்ற விமானங்கள் போர்க் களத்தில் இது வரை பெரிய படைப்பலமாக பாவிக்கப்பட்ட டாங்கிகளின் செயல்பாடுகளை பெறுமதியற்றதாக்கி இருக்கின்றது. என்னதான் இருந்தாலும் பாரியளவில் அல்லது முழு அளவிலான போர்களுக்கு சமகாலத்தில் வாய்ப்புக்களே கிடையாது.

எனவேதான் எதிரியின் முதுகெலும்பை முறித்து தமது பாதுகாப்பை உறுதிப்படுத்துகின்ற ஒரு இராஜதந்திர நகர்வும் உலக அரங்கில் தற்போது நடந்து கொண்டு வருகின்றது.சீனா, இஸ்ரேல் போன்ற நாடுகள் இந்த உத்திகளைத் தான் தற்போது வெற்றிகரமாக செய்து கொண்டிருக்கின்றன.சீன பொருளாதார ரீதியிலும் இஸ்ரேல் சதிவேலைகள் மூலமாகவும் அந்தக் காரியத்தில் நல்ல அறுவடைகளை இது வரை பெற்றிருக்கின்றன. ஈரானில் நடக்கின்ற வெடிப்பு சம்பவங்களும் இதில் அடங்குகின்றன.

இந்திய-பாகிஸ்தான் அரசியல் உறவுகளில் என்னதான் பகைமைகள் இருந்தாலும் முறுகல் நிலைகள் இருந்தாலும் அங்கும் முழு அளவிலான போருக்கு வாய்ப்புக் கிடையாது. அதே போன்றுதான் சீன விவகாரத்திலும் இருக்கின்றது. பொருளாதாரமும் இராணுவ வல்லமையும் அத்தியாவசியமானதுதான். ஆனால் அதன் யுக்திகள் அனைத்தும் இன்று மாற்றமடைந்திருக்கின்றன. இதனை நாடுகள் புரிந்து கொள்ள இன்னும் சில காலம் செல்லும்.

# பாதிக்கப்பட்டவர்களின் குரல் கேட்கிறதா...?




**வ.சக்திவேல்**

வருடம் தோறும் டிசம்பர் - 10 ஆம் திகதி சர்வதேசம் எங்கும் மனித உரிமைகள் தினம் அனுஸ்ட்டிக்கப்பட்டு வரப்படுகின்றது. கலாசாரம், சமூகம் மற்றும் உரிமைகள் குறித்த விழிப்புணர்வுகளை ஏற்படுத்தவும், ஏதுவான அனைத்து சூழல்களிலும் சமூகத்தின் நலனை உறுதிப்படுத்தவும் இந்த மனித உரிமைகள் தினம் அனுஸ்ட்டிக்கப்படுகின்றது. 1948 இல் மனித உரிமைகளுக்கான உலகளாவிய பிரகடனம் வெளியிடப்பட்டது.

எனினும் கடந்த காலங்களிலிருந்து இலங்கையில் பல்துறை விடையதானங்களிலும், மனித உரிமை மீறல்கள் இன்னும் இடம்பெற்றுக் கொண்டுதான் இருப்பதாக மனித உரிமை செயற்பாட்டாளர்களும், ஆர்வலர்களும் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் இலங்கையிலிருந்து செயற்பட்டு வரும் மனித உரிமை ஆர்வலரும் சமூக நீதிக்கான செயற்பாட்டாளருமான, அருட்தந்தை மா.சக்திவேல் அவர்களிடம் சர்வதேச மனித உரிமைகள் தினம் தொடர்பில் தொடர்பு கொண்டு கேட்டபோது அவர் இவ்வாறு தெரிவிக்கின்றார்.

சுயமாக சிந்திக்கவும், அதனை வாய்மொழி மூலம் வெளிப்படுத்தவும், எழுதவும், சுதந்திரமாக நடமாடவும் மட்டுமல்ல தம்வாழ்விடத்தில் பாதுகாப்போடு வாழவும்,இனம்,மொழி,சமயம் சார்ந்த மரபு உரிமைகளை பாதுகாத்து தான்விரும்பிய தொழிலை தொழில் உரிமைகளோடு செய்யவும், கௌரவமான வாழ்வை உரித்தாக்கவும்,அடிப்படை மனித உரிமை வழிவகுக்கின்றது. அதனை வலியுறுத்தவே ஐ.நா மனித உரிமை சாசனம் வரையப்பட்டது. அதில் நாடுகளும் உடன்பட்டு கையெழுத்திட்டுள்ளன. தாம் கையெழுத்திட்டுள்ள சாசனத்தின் அடிப்படைக் கொள்கையை ஒவ்வொரு நாடும் பாதுகாத்திட வேண்டும்.

ஆனால் இதனை பகிரங்கமாகவே செய்யத் தவறும் நாடுகள் வருடம்தோறும் கூடி கும்மாளமிடும் ஓர் இடமாகவே மனித உரிமைப் பேரவை அமைந்துள்ளது.அதனால் அடிமட்ட மக்கள் தன்வாழ்வுக்கான உரிமையை கேட்டு தினமும் வீதி போராட்டம் நடத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

குறிப்பாக இந்த நூற்றாண்டின் மிகப்பெரும் மனிதப் பேரவலம் சர்வதேச நாடுகளின் அங்கீகாரத்துடனும் அவற்றின் மேற்பார்வையின் கீழும் இலங்கையில் நடந்து 12 ஆண்டுகள் கடந்த பின்னரும் அதற்கான நீதியை, தமிழ் மக்களுக்கான பாதுகாப்பான வாழ்வை பெற்றுக் கொடுக்க மனித உரிமை திருவிழா நடத்தும் நாடுகளினால் இயலவில்லை. இயலவில்லை என்பதைவிட வல்லரசுகள் தமது புவிசார் நலனுக்காக குற்றமிழைத்த இலங்கையை சினந்து கொள்வதும் பாதுகாப்பதுமான செயற்பாட்டையே முன்னெடுக்கின்றன.

இலங்கைவாழ் தமிழ் மக்களுக்கு ஐ.நா மனித உரிமை பேரவை மீது நம்பிக்கையை இழந்துவிட்டனர். இதனால் இனப்படுகொலை செய்த இலங்கையை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுங்கள் எனக்கேட்டுக் கொண்டிருக்கின்றனர். காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தம் உறவுகளுக்கு என்ன நடந்தது? என கேட்டு 5 வருடங்களுக்கு மேலாக தொடர் போராட்டம் நடத்துகின்றனர். பேரினவாத ஆட்சியாளரின் ராணுவம் தமிழர் நிலங்களை கையகப்படுத்த தினமும் தீவிரமாக செயற்படுகின்றது. இன அழிப்பை தொடர,புதியஇனவாத குடியேற்றங்களை அமைக்க ஆட்சியாளர்கள் திட்டமிடுகின்றனர். இன்னொருபக்கம் தமிழர்களின் மரபு உரிமையை அழிக்க செயலணி உருவாக்கி செயல்படுகின்றனர். இவற்றுக்கு எதிராக தமிழர்கள் நாளாதம் போராட்டம் நடத்துவதை ஐரோப்பிய யூனியன் தெரிந்தும் எகுக வரிச்சலுகையை உறுதியளித்துள்ளது.

இதனை விடவும் நான்கு தசாப்தங்களுக்கு மேலாக அரச பயங்கரவாதத்தை ஊக்குவிக்கும், மனித உரிமையை மீறுவதற்கு வழிவகுக்கும், அதனை செய்பவர்களை பாதுகாக்கும் பயங்கரவாத தடைசட்டம் அமுலில் உள்ளது. இதற்குப் பதிலாக புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அறிமுகப்படுத்துவதாக பயங்கரவாத தடைச் சட்டம் திருத்தப்படுவதாக சர்வதேசத்திற்கு வாக்களித்த போதும் இன்றுவரை அது நிறைவேற்றப்படவில்லை.

பயங்கரவாத தடைசட்டத்தின் கொடூர முகத்துக்கு மிக அண்மைய இரண்டு உதாரணங்கள். ஒன்று மட்டக்களப்பை சேர்ந்த கதிரவேற்பிள்ளை கபிலன், இரண்டு முன்னாள் ஆளுநர் ஆசாத்சாலி. கபிலன் 18 வயது நிரம்பாத நிலையில் பயங்கரவாத தடைசட்டத்தின் கீழ் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு 12 ஆண்டுகள் கடந்த நிலையில் இவ்வருடம் அக்டோபர் மாதம் குற்றங்கள் இன்றி விடுதலை செய்யப்பட்டார். ஆசாத்சாலி மீது குற்றங்கள் நிரூபிக்க முடியாததால் எட்டு மாதங்களின் பின்னர் டிசம்பர் முதல் வாரத்தில் விடுவிக்கப்பட்டார். தண்டனை காலத்தை விடவும் விசாரணை என மிகநீண்ட காலம் வரை வைத்திருக்க துணை போகும் சட்டத்தை பாதுகாப்பதே மனித உரிமை மீறலாகும்.

மலையக மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளும், தொழில் உரிமைகளும் மறுக்கப்படுகின்றன. அவர்களை இனரீதியில் சிதைக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அத்தோடு தற்போதைய கொரோனா பாதுகாப்பு சட்டமும் அரசியல் பழி வாங்குவதற்காக பாவிக்கப்படுவதாக கூறப்படுகின்றது. இந்நிலையில் சர்வதேச மனித உரிமைதினம் பாதிக்கப்பட்டு நீதிக்காக போராடிக் கொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும், ஒட்டுமொத்த தமிழர்களுக்கும் கரிநாள் என்றே கூறலாம் என அவர் குறிப்பிடுகின்றார்.

தற்கால யுகத்தில் மனிதன் சுதந்திரமாகவும், இறையாண்மை மிக்க நாடொன்றில் ஐ.நா வினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளைத் தன்னகத்தே கொண்டு தமது கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை தழுவியவாறு செயற்படுவதற்கு அனைவரும் வழியமைத்துக் கொடுக்கவேண்டிய தார்மீக பொறுப்பு அமைந்துள்ளது. மனித உரிமை செயற்பாட்டாளர்கள் கூறுவதற்கிணங்க ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், உள்ளிட்ட பல தரப்பினர் மீதும் அவ்வப்போது கட்டவிழ்த்து விடப்படும் மனித உரிமை மீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும். அதுபோல் கடந்த காலங்களில் இடம்பெற்றதாகக் கருதப்படும் மனித உரிமை மீறல்களுக்கு நியாயமான நீதியை நிலைநாட்டிக் கொடுக்க வேண்டும் என்பதுவே அனைவரினதும் எதிர்பார்ப்பாகும்.



# நில உரிமை இனத்தின் ஜீவநாடி

**நடராஜா ஜனகன்**

இம்முறை வரவு செலவுத் திட்ட பாராளுமன்ற விவாதத்தில் வடக்கு, கிழக்கு மக்களின் நிலத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாய நிலை தொடர்பாக தமிழ் பிரதிநிதிகள் தமது கருத்துக்களை ஆணித்தரமாக முன்வைத்திருந்தமையை காணக்கூடியதாக இருந்தது. உலக வங்கி உள்ளிட்ட சகல நிதி நிறுவனங்களும் இலங்கைக்கு வழங்குகின்ற நிதி உதவிகள் மூலம் இந்த ஆக்கிரமிப்பு செயற்பாடுகள் மேலும் மேலும் வலிமை பெற்று வருவதையும் எனவே இத்தகைய உதவிகள் தமிழர் இருப்புகளுக்கு முடிவை தேடுவதற்காக இத்தகைய உதவிகளை வழங்குகின்றீர்களா எனவும் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

அண்மைக்காலமாக வடக்கு, கிழக்கு பகுதிகள் எங்கும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கும் இரண்டு பிரதான நிறுவனங்கள் நில ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன என்ற செய்திகள் தொடர்ச்சியாக வெளிவந்து கொண்டிருக்கிறது. இந்நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு எதிராக மக்கள் பிரதிநிதிகளும் பொதுமக்களும் ஆங்காங்கே எதிர்ப்புகளை காட்டி வருவதும் நில அளவை செயற்பாடுகளை மேற்கொள்ளாதவாறு அவர்களை திருப்பி அனுப்புவதும் வாடிக்கையான விடயமாக மாறி வருகிறது.போரின் காரணமாக கடந்த 30 ஆண்டு காலப்பகுதியில் தம் பிரதேசங்களில் இருந்து விரட்டப்பட்ட இம் மக்கள் போர் முடிந்து பன்னிரண்டு வருடங்கள் கடந்த நிலையிலும் தமது சொந்த நிலங்களில் மீளக்குடியேற முடியாத நிலையில் வாழ்கின்றனர். இம்மக்களிடம் இருந்து கபளீகரம் செய்யப்பட்ட மண்ணை சர்வதேச நாடுகளுக்கு, சர்வதேச நிறுவனங்களுக்கு தனிநபர்களுக்கு தாராளமாகவே தானம் செய்யும் நிலை தொடர்கின்றன.வனபாதுகாப்பு, தொல்லியல் ஆய்வு என்ற தலைப்புகளின் கீழ் பகல் கொள்ளையாக கையகப்படுத்தப்படும் செயற்பாடுகள் தமிழ் மக்களின் சொந்த நிலங்கள் மனம் போன போக்கில் வேண்டத்தகாத சக்திகளுக்கு வழங்கப்படுவதை எவ்வளவு காலம்தான் மக்கள் பொறுத்துக் கொள்வார்கள். நாடு முழுவதும் இந்த எழுத்தமான செயற்பாடுகள் நடைபெறுகிறது என்றால் அதில் ஒரு விளக்கத்தை பெற முடியும் ஆனால் வடக்கு கிழக்கில் மட்டும் எழுந்தமானமாக இந்த துயரம் தொடர்ந்தும் நடைபெறுவது என்னவிதத்தில் நியாயமாகும்.

வடக்கு, கிழக்கில் நாட்டின் ராணுவத்தின் நான்கில் மூன்று பகுதியினர் நிலை கொண்டுள்ளனர். இதன் காரணமாக மக்களின் நிலங்கள் ஏற்கனவே கரைந்து போய்யுள்ளன. இத்தகைய சூழ்நிலையில் ராணுவத்தின் பிரசன்னத்தால் தமிழ் மக்களின் நாளாந்த வாழ்வியல் பல கோணங்களில் பல சவால்களுக்கு உள்ளாகியுள்ளது. அண்மையில் மாவீரர் நினைவுதின வைபவத்திற்கு சென்ற ஊடகவியலாளர் மீது கருக்கு மட்டையில் முட்கம்பி சுற்றப்பட்ட கோலால் ராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளது.

தென்னிலங்கையில் இரண்டு ஆயுத கிளர்ச்சிகள் நடைபெற்றன. 1971ல் நடைபெற்ற முதல் கிளர்ச்சியில் 10 ஆயிரம் இளைஞர்கள் காவுகொள்ளப்பட்டனர்.1988/1989 காலப்பகுதியில் இரண்டாவது முறையாக நடைபெற்ற கிளர்ச்சியில் 60,000 இளைஞர்கள் காவுகொள்ளப்பட்டனர் . ஆனால் தென்னிலங்கையில் இராணுவ பிரசன்னம் இல்லாத நிலை தொடர்கின்றது. வடக்கு, கிழக்கில் யுத்தம் முடிவுக்கு வந்து 12 வருடங்கள் கடந்த நிலையிலும் இலங்கை ராணுவத்தில் நான்கில் மூன்று பகுதியினர் அங்கே நிலை எடுத்து நிற்கின்ற நிலை தொடர்கின்றது. இதை யாரிடம் முறையிடுவது. சர்வதேசத்துடன் முறையிடுவதை தவிர வேறு வழி வகை உள்ளதா?.

ராஜாங்க அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க முல்லைத்தீவு இந்து கோவிலில் பௌத்த சின்னத்தை மிகப் பாதுகாப்பான முறையில் பிரதிஷ்டை செய்துவிட்டு போன கதை பழையது ஆகும். ஆனால் அண்மைய காலப்பகுதியில் வடக்கின் பூநகரி பகுதிக்கு சென்று இந்து கோவில் ஒன்றை புனரமைக்கும் செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கியமை தொடர்பாக பல வகையில் அரசு ஆதரவு சக்திகளால் பாராட்டுக்கள் குவிந்தன .ஆனால் வடக்கில் காணி பதிவக ஆவணங்கள் இரவோடு இரவாக அனுராதபுரம் செயலகத்துக்கு கொண்டு செல்லப்பட்டமையும் பின்னர் சில காலம் கழிந்து மீண்டும் வடக்கு கொண்டுவரப்பட்டமையும் பல சந்தேகங்களை ஏற்படுத்தியிருந்தன. தமிழ் மக்களின் நில கையிருப்பை கணக்கிடவே இந்த நாடகம் மேடையேற்றப்பட்டதாக ஊகங்கள் உள்ளன.

அண்மைய பாராளுமன்ற உரையில் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னை நாள் இராணுவ தளபதியுமான சரத் பொன்சேகா தமிழ் மக்களின் நினைவேந்தலை அனுமதிக்க முடியாதென ஆக்ரோசமாக குரல் கொடுத்திருந்தார். மக்கள் விடுதலை முன்னணியின் சமூக விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்திற்கு பச்சைக்கொடி காட்டி உள்ள சரத்பொன்சேகா தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்கு சிவப்புக் கொடியைக் காட்டியுள்ளார். தனது கருத்தை ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவும் ஏற்றுள்ளார் என்றே அவர் பெருமிதத்துடன் விழித்துள்ளார். எனவே ஐக்கிய மக்கள் சக்தியிலுள்ள பிரதான தமிழ் செயற்பாட்டாளர்கள் மற்றும் பங்காளி உறவினர்கள் சரத் பொன்சேகா கூறியிருக்கும் மாவீரர் நினைவேந்தலை தடுக்கப்பட வேண்டும் என்ற ஐக்கிய மக்கள் சக்தியின் நிலைப்பாடுகள் தொடர்பாக தமது நிலைப்பாடுகளை தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும்.

சீன வியாபாரிகளின் சேதனப் பசளை விடயம் தற்போது சர்வதேச நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தப்பட்டுள்ளது. இலங்கை அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான விடயம் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைப் பேரவையில் மேல் வந்தபோதெல்லாம் சீன தேசம் அந்த விடயம் இலங்கையின் உள்நாட்டு விவகாரம் அதில் தலையிடுவது தவறானது என்றே வாதித்து வந்தது. தமிழ் மக்களின் மனித உயிர்கள் தொடர்பான ஒரு சர்வதேச விடயத்திலேயே சீனதேசம் இந்த நிலைப்பாட்டை பின்பற்றி வந்தது. ஆனால் இன்று சேதனப் பசளை விடயத்தில் சீன வியாபாரிகள் இலங்கையை சர்வதேச நீதி விசாரணைக்கு கொண்டு சென்றுள்ளனர். இது என்னவிதமான சோசலிஸ முன்னெடுப்பு.

இலங்கையின் 70 வருட கால வரலாற்றில் மிக மோசமான பொருளாதார பின்னடைவில் இருக்கும் இந்த நாடு இன்று எதையும் செய்ய முடியாத நிலைக்கு தன்னை சிறைப்படுத்தி வருகின்றது. எரிவாயு சிலிண்டர் வெடிப்பு என்ற விடயத்தில் அரசாங்கம் நடந்துகொள்ளும் விதமே அரசாங்கத்தின் கையகலா தனத்தின் வெளிப்பாடாகும். எனவே தமிழ் மக்கள் தமது நில உரிமை தொடர்பான விடயத்தில் கருத்துக்களை அறிவதில் மட்டும் கவனத்தை ஈர்க்காது தமிழ் மக்களின் இருப்புக்கு ஆணிவேராக அமையும் நில உரிமைக்கான போராட்டங்களே ஒன்றிணைந்து ஒரு முகமாக முன்னெடுக்க திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

# எங்க ஊருக்கு எப்ப பாலம் வரும்?

**செ.துஜியந்தன்**

நம்மட அரசியல்வாதிகள் வாயால தான் வடை சுடுறாங்க. பிரயோசனமா ஒண்டும் செய்யிறாங்கல்ல. அங்க படகு கவிழ்ந்து செத்ததாம். இங்க படகு கவிழ்ந்து செத்ததாம் என்று ஒவ்வொரு முறையும் நியூஸ்சில் கேட்கும் போது நெஞ்சு பதைபதைக்குது. இந்த குறுமண்வெளி- மண்டூர் படகுச் சேவைக்கு எப்பதான் பாலம் கட்டப்போறாங்களோ தெரியாது. இங்கையும் நாலைந்து உசிரு போன பிறகுதான் திரும்பிப்பார்ப்பாங்களாக்கும். இப்ப யாரு சனத்திட கஸ்டத்தையும், பிரச்சினையையும் தீர்க்கிறதில் கரிசனையாக இருக்கிறாங்க. இங்க கல்லுப்பறிக்கிறதும் அடிக்கல் நாட்டுறதும் போட்டோ பிடிக்கிறதும் அறிக்கைவிடுறதுமாத்தான் புதினம் காட்டுறாங்க. இங்க ஒரு வேலையும் நடக்குதில்லை. எங்க ஊருக்கு எப்ப பாலம் வாறது? நாங்க எப்ப நிம்மதியாப் போய்வாறது? பாலம் கட்டுறதுக்கான வேலை ஆரம்பிச்சா மட்டும் தான் இனி நம்புவம் என்றார் குறுமண்வெளியைச் சேர்ந்த நகேந்திரன் என்பவர்.



மண்முனை தென் எருவில் பற்று பிரதேசத்தையும், வெல்லாவெளி பிரதேசத்தையும் இணைக்கும் பிரதான துறையாக மண்டூர் - குருமண்வெளித் துறையுள்ளது. இந்த துறையடிக்கு இது வரை பாலம் ஒன்று அமைக்கப்படவில்லை. இதனால் இத்துறையூடாக இயந்திரப் பாதையில் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பல்வேறு சிரமங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

மண்டூர் - குருமண்வெளி பாலம் அமைக்கும் முயற்சிகள் மூன்று தரம் எடுக்கப்பட்டுள்ளது. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பொன் செல்வராசாவின் காலத்திலும் பின்பு முன்னாள் பிரதியமைச்சர் கருணாம்மான் காலத்திலும் பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இருந்தபோதிலும் அவை கைகூடி வரவில்லை. இதே போல இறுதியாக நல்லாட்சி அரசாங்கத்தில் 2017-10-14 இல் இத்துறைக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வு மிகக்கோலாகலமாக நடைபெற்றிருந்தது.

இப் பால நிர்மாணப்பணிகளுக்கென தேசிய ஒருங்கிணைப்பு நல்லிணக்க அமைச்சு 140 கோடி ரூபாவினை ஒதுக்கீடு செய்திருந்தது. அன்றைய அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு முன்னாள் நெடுஞ்சாலைகள் அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல கலந்து கொண்டிருந்தார். அவரோடு முக்கிய அரசியல்வாதிகளும், அதிகாரிகளும் கலந்து கொண்டிருந்தனர். மக்களும் இவ் வருடம் பாலம் நிர்மாணிக்கப்பட்டுவிடும். இனி நிம்மதியாகப் பயணம் செய்யலாம் என மிகுந்த எதிர்பார்ப்போடு இருந்தனர்.

இன்று அடிக்கல் நாட்டப்பட்ட இடம் பாழடைந்து கிடக்கிறது. ஆடிக்கல்லுக்குப் பக்கத்தில் நாய் படுக்கிறது. இங்க பாலத்திற்கான ஒரு கல் தானும் இப் பாலத்தின் நிர்மாணப்பணிக்காக தூக்கிவைக்கப்படாதுள்ளது. உண்மையில் இப் பாலத்திற்கென அன்று 140 கோடி ரூபா பணம் ஒதுக்கப்பட்டதா? அல்லது அரசியல் பூச்சாண்டிகளுக்காக அவ் விழா நடத்தப்பட்டதா? என்று மக்கள் கேள்வியெழுப்புகின்றனர். கடந்த ஆட்சிதான் மக்களை ஏமாற்றியது என்றால் இம்முறை ஆட்சியிலுள்ள பொதுஜன பெரமுன அரசாங்கம் கூட பாராமுகமாக இருக்கிறது. கொழும்பில் மட்டும் பாலம் கட்டுவதால் படம் காட்ட முடியும். இப்படியான கிராமப்புறங்களிலுள்ள மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளை தீர்த்து வைத்தால் ஆயிரக்கணக்கான மக்களின் பாதுகாப்பையும், உயிரையும் பாதுகாக்க முடியும்.

கிண்ணியாவில் ஆறு உயிர்கள் அநியாயமாக பறிபோனது. இன்றும் அந்த விபத்தில் சிக்கியவர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழக்கின்ற துர்ப்பாக்கிய நிலையிலுள்ளனர். கிண்ணியா படகு விபத்துச் சம்பவம் போல் ஒரு சம்பவம் இந்நாட்டில் நடந்துவிடக்கூடாது. அதற்கு முன்னர் ஆபத்தான நீர் நிலைகள் ஊடாக பயணம் செய்யும் மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைகளை அரசாங்கம் தீர்த்து வைக்கவேண்டும்.

பிள்ளைக்குச் சுகமில்ல தம்பி ஒரு தரம் களுவாஞ்சிகுடி கொஸ்பிட்டலுக்குப் போவம் எண்டு வந்தனான். இன்னும் பதினைந்து நிமிஷத்திலதான் பாதையை எடுப்பாங்களாம் அது தான் பார்த்திட்டு இருக்கிறன். பாலம் கட்டப்போறம் எண்டு அடிக்கல் நாட்டித்துப்போன ஐயாமாரையும் காணல்ல. இப்ப வந்திருக்கிற அரசாங்கத்தின்ட ஐயாமாரையும் காணல்ல. அபிவிருத்தி அபிவிருத்தி என்று சொல்லுறாங்க. எங்கட பகுதியில் ஒரு அபிவிருத்தியையும் காணல்ல என்றார் மண்டூரைச் சேர்ந்த தவமணி என்பவர்.

மண்டூர் - குருமண்வெளி துறையூடாக தினமும் 30 நிமிடத்திற்கு ஒரு தடவையே இயந்திரப் படகுச் சேவை நடைபெறுகிறது. இங்கு இரு படகு (பாதைகள்) சேவையில் ஈடுபடுகின்றன. சில நேரங்களில் படகு பழுதடைந்தால் ஒரு படகே சேவையில் ஈடுபடுவது வழக்கமாகும். துறையூடான ஒரு கிலோ மீற்றர் தூரத்தை இக் கரையில் இருந்து அக்கரைக்குச் செல்வதற்கு சுமார் 15 நிமிடங்கள் எடுக்கின்றது. ஆபத்தான பயணமாகவே மக்கள் செல்கின்றனர். இவ் வாவியில் முதலைகளின் நடமாட்டமும் அதிகரித்துள்ளது.

தினமும் அரசாங்க உத்தியோகஸ்தர்களும், விவசாயிகளும், மாணவர்களும், பொதுமக்களும் பயணம் செய்கின்றனர். குறிப்பாக மண்டூர் வெல்லாவெளிப் பிரதேசத்திலுள்ள மக்கள் களுவாஞ்சிகுடி பகுதிக்கு பிரவேசிப்பதற்கு இலகுவான பாதையாகவும் இத் துறை அமைந்துள்ளது. கடும் மழை, வெள்ள காலங்களில் வெல்லாவெளி, பட்டிருப்பு, கிட்டங்கி ஊடான வீதிகளில் வெள்ளநீர் பாய்ந்தோடுகின்ற வேளைகளில் அதிகமானோர். மண்டூர் -குருமண்வெளிப் பாதையையே பயன்படுத்துகின்றனர். அந்தளவிற்கு முக்கியத்துவம் வாய்ந்த பாதையாக இத்துறை விளங்குகின்றது.

சிலநேரங்களில் கடும் மழை வெள்ளம் காரணமாக ஆற்றில் இழுத்து வரப்படும் ஆற்றுவாழை எனும் (சல்பீனியா) தாவர வகையினால் படகுச் சேவையும் தடைப்பட்டு விடுகின்றது. இதனால் மக்களின் அன்றாடச் செயற்பாடுகள் அனைத்தும் ஸ்தம்பித்தும் போய்விடுகின்றது.

காலங்காலமாக மண்டூர் - குருமண்வெளி துறையூடாகப் பயணிக்கும் மக்கள் கஷ்டங்களுக்கு முகம் கொடுத்தே போக்குவரத்துச் செய்கின்றனர். தமிழ் மக்கள் வாழும் இடங்களில் ஒரு வீதியையோ அல்லது பாதையையோ அமைத்துக்கொடுக்கக்கூட முடியாத நிலையிலே எம் தமிழ் அரசியல்வாதிகள் இருக்கின்றனர். மக்களை எப்படியெல்லாம் ஏமாற்றிப் பிழைக்கலாம். தன்னுடைய அரசியல் இருப்பை எவ்வாறு தக்கவைக்கலாம் என்பதிலே இவர்கள் குறியாக இருக்கின்றனர்.

ஒருவர் ஒரு அபிவிருத்தியைக் கொண்டு வந்தால் அதை மற்றவர் தடுப்பதும். மக்களிடம் சென்று பெயர் எடுப்பதற்கும் நடிப்பதற்கும் தமக்குள்ளே போட்டி போடுகின்றனர். மொத்தத்தில் அரசியல்வாதிகள் எவரும் மக்களின் நலனில் அக்கறை காட்டுவதாக இல்லை. வெறும் பம்மாத்து அரசியலையே செய்கின்றனர்.

அடுத்த வருடமாவது மண்டூர் - குருமண்வெளித் துறைக்கு பாலம் கிட்டுமா? ஏக்கத்தில் இலவு காத்த கிளிபோல காத்திருக்கின்றனர் மக்கள்.

# மறுபக்கம்

**–கோகர்ணன்**

*இலங்கை குடிமகனான ஒரு பொறியியலாளர் பாகிஸ்தானில் ஒரு தொழிற்சாலையில் தொழிலாளர்கள் கும்பல் ஒன்றால் கடுந்தாக்குதலுக்குள்ளான பின் தீ மூட்டிக் கொல்லப்பட்ட செய்தி தன்னளவிலேயே வேதனையும் வெறுப்புமூட்டுவது.*

*அக்கோரக் கொலைக்கு கூறும் காரணம் கொலையுண்டவர் தொழிற்சாலையின் முக்கிய நிருவாகியென்ற முறையில் மதநிந்தனையில் ஈடுபட்டார் என்பதாகும். அவர் செய்ததெல்லாம் அவருக்குத் தெரியாத மொழியில் எழுதிய இஸ்லாமிய வாசகங்கள் பொறித்த சுவரொட்டிகளை அகற்றுவித்தது என்று சிலர் கூறினர். வேறு சிலர் அகற்றியவை இயந்திரங்களின் மீது ஒட்டிய 'ஸ்ற்றிக்கர்' எனக் கூறியுள்ளனர். இது இன்னமும் உறுதியாகாவிடினும் ஒரு தொழில் மனையினுள் தொழிலுக்குத் தொடர்பற்ற எந்த வாசகங்களையும் படங்களையும் காட்சிப்படுத்த அனுமதி தேவை. அனுமதி பெறாத விடயங்களை அகற்ற நிருவாகத்தினருக்கு அதிகாரம் உண்டு.*

*அதிகாரம் இருப்பதால் எதையும் எதேச்சாதிகாரப் போக்கில் அகற்றின் அது சினமூட்ட இடமுண்டு. பொதுவாக அகற்றும் முயற்சி எதற்கும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படின் அது பற்றி நிருவாகமும் ஊழியர்களும் பேசிச் சமரசத்திற்கு வர இயலும். குறிப்பிட்ட நிகழ்வு ஒரு மதப் பூசலின் விளைவாகத் தெரியவில்லை. அயல்நாட்டிலிருந்து முக்கியஸ்தர்கள் வரவுள்ளதையொட்டி சுவரொட்டிகளையோ ஸ்ற்றிக்கர்களையோ அகற்றுமாறு பொறியியலாளர் ஆணை பிறப்பித்தமையை மத நிந்தனை என்று கூறி அவரை ஒரு கும்பல் தாக்கிக் கொன்றது எனின் அது எளிதில் ஒரு தொழிற்சாலைச் சூழலில் நடக்கக்கூடியதல்ல.*

*பாகிஸ்தானில் மத தீவிரவாதிகள் கும்பல்களைத் திரட்டி மாற்றுக் கருத்துடையோரைத் தாக்குவதையும் ஷியா முஸ்லிம் பள்ளிவாசல்களைத் தாக்குவதையும் அறிவோம். கிறிஸ்தவர்களும் தாக்கப்பட்டுள்ளனர். இந்துக்கள் மீது தாக்குதல்கள் நடந்த காலம் பெரிதும் முடிந்துள்ளது. எனினும் பொது வெளியில் கும்பல்களைத் திரட்டி வன்முறை வெறியாட்டம் நடத்துவது போல தொழிற்சாலைகளுள் நிகழ்வது அரிது. அவ்வாறு நிகழ தேசமட்டத்தில் ஏற்படுள்ள ஒரு கொந்தளிப்பான சூழல் காரணமாகலாம். அப்போது கூடத் தொழிலாளர்கள் தம்மிடையே கலந்துரையாடி ஒரு பொது முடிவின் படி செயற்படுவது வழமை. சில வேளைகளில் நிலைமைகள் கட்டுமீறிப் போவதால் இந்தியாவின் மாருதி சுசூகி தொழிற்சாலை நிருவாகி ஒருவர் இறந்த நிகழ்வின் பின் தொழிலாளர்கள் மீது கடுமையான அநீதியான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. அதன் விளைவான கசப்பு இன்னும் ஒரு தசாப்தம் கடந்தும் நீடிக்கிறது.*

*இந்தக் கொலைக்கு அத்தகைய பின்புலம் உள்ளதாகத் தெரியவில்லை. ஓரளவு உறுதியாகத் தெரிந்த விடயங்களை எவையெனின்,கொலையுண்டவர் நிறுவன ஒழுங்கு பற்றிக் கண்டிப்பானவர். அவர் அந்நியர் என்பதாலும் உயர் நிர்வாகி என்பதாலும் கீழ் மட்டங்களுடன் தொடர்பு குறைந்தவர். மற்றப்படி அவருக்கு எந்த மதத்தையும் பற்றித் தீவிரமான கருத்துகள் இருந்ததற்கு ஆதாரமில்லை.*

*சுவரொட்டிகளோ ஸ்றிக்கர்களோ ஒட்டப்பட்டதற்கு ஒரு விசேட காரணமும் இருந்ததாகத் தெரியவில்லை. அவற்றை அகற்றுமாறு அவர் ஆணையிட்டாரா என்பதும் அதை யார் நிறைவேற்றினார் என்பதும் அது பற்றிய கடும் விவாதம் ஏற்பட்டதா என்பதும் இனித்தான் உறுதிப்பட வேண்டியன. அவ்வாறு நிகழ்ந்திருப்பினும் ஒரு குழுவினர் ஒன்று திரண்டு அவரைத் தாக்கவேண்டிய தேவை என்ன? தாக்கியதும் போதாமற் தீ மூட்டி எரிக்கத் தேவை என்ன?*

*மேலோட்டமான நோக்கில் இங்கு மதவெறிக்கான பின்புலம் தெரியவில்லை. ஏனெனில் அதற்கான சூழ்நிலை நாட்டிலோ அயலிலோ இல்லை. எனவே ஒரு கண்டிப்பான நிர்வாகி மீது தொழிலாளர்களிற் பகுதியினருக்கேனும் இருந்த பகையுணர்வை அவருக்கெதிரான தாக்குதலாக்குவதற்கு தற்செயலாகக் கிடைத்த ஒரு வாய்ப்பு எனக் கொள்ளத் தகுமா? அல்லது திட்டமிட்டே அவ் வாய்ப்பு உருவாக்கப்பட்டது எனக் கொள்ளத் தகுமா?*

*இவ்வாறான விசாரணையில்லாமல் எடுத்த எடுப்பிலேயே இஸ்லாமியத் தீவிரவாதம் முஸ்லிம்களிடம் ஊறியுள்ள மதவெறி என்றவாறான கருத்துகளின் அடிப்படையிற் பல விளக்கங்களும் வியாக்கியானங்களும் வந்துள்ளன. இவற்றிற் பல எல்லா முஸ்லிம்களைப் பற்றியும் பகையான ஒரு படிமத்தை உருவாக்கவோ அல்லது ஏலவே உள்ள பகையைத் தூண்டவோ முயல்வன.*

*உடனடி நடவடிக்கை வேண்டி கற்பிட்டியில் புத்த குருமாருடைய பங்குபற்றலுடன் ஆர்ப்பாட்டம் நடந்துள்ளது. அவர்கள் ஏன் பாகிஸ்தான் தூதரகத்தின் முன் அதைச் செய்யவில்லை? பாகிஸ்தான் அரசாங்கம் உடனடியாகவே உரிய நடவடிக்கை எடு ந்துள்ளது. உண்மையில் இதை விட மோசமான கொலைகள் இங்கு நிகழ்ந்த வேளை அரசாங்கம் குற்றவாளிகளைக் காப்பதிற் கூடிய கவனமெடுத்தது. ஒரு கொலை தொடர்பாக இறந்தவரின் உறவினர் ஒருவரது விடாத நெருக்குவாரத்தாலேயே பொலிஸ் விசாரணையும் சட்ட நடவடிக்கையும் தொடங்கின.*

*இன்னமும் போதிய சான்றுகளின் நடுவிலும் எத்தனை கோரப்படு கொலைகளின் விசாரணைகள் முடக்கப்பட்டுள்ளன. பாகிஸ்தான் பிரதமரின் கண்டன அறிக்கையும் துரித விசாரணை நடவடிக்கைகளும் மெச்சத்தக்கன.*

*அவ்வாறு மெச்சத்தக்களவு நமது நாட்டின் தலைவரெவருமோ அண்டையிலுள்ள பெரிய நாட்டின் பிரதமரோ என்றாவது நடந்துள்ளனரா?*

*யாழ்ப்பாணத்தில் 1983ஆம் ஆண்டு யூலை மாதம் விடுதலைப் புலிகளின் பயங்கரவாதத் தாக்குதலில் படையினர் பதின் மூவர் இறந்ததைச் சிங்கள மக்களுக்கு ஆவேசமூட்டும் ஒரு சடங்காக நடத்தி நாடளாவிய ஒரு தமிழர் விரோத வன்முறையை அரங்கேற்றியவரை நாம் பெருமளவும் மறந்து விட்டோம். அதை விடப் படையினரின் சவையடுத்து சம்பவத்தலத்தின் அயலில் இராணுவம் நடத்திய வெறியாட்டமும் அதில் இறந்தோரும் காயமடைந்தோரும் பற்றிப் பேசத் தமிழ்த் தலைமைகட்கு என்றும் தெம்பு இருக்கவில்லை.*

*அதினும் அண்மையில் 2019 உயிர்த்த ஞாயிறன்று முஸ்லிம் தீவிரவாதக்குழுவொன்று நடத்திய தாக்குதல்கள் பற்றிப் பேசுவோர் பலரும் அதையே காரணமாக்கி சம்பவ நாள் முதலாகத் தொடர்ந்து சில வாரங்கட்கு மேல் மாகாணத்திலும் வடமேல் மாகாணத்திலும் சில சிறு நகரங்களில் பவுத்த சிங்கள மதவெறியர்கள் முஸ்லிம்களை இலக்குவைத்து நடத்திய தாக்குதல்களை நினைத்தும் பார்ப்பதில்லை.*

*இது நமது நாட்டின் தேசிய இனங்களின் சமூக நீதி பற்றிய நிலைப்பாட்டை மீளாயக் கோருகிறது.*

*சிங்கள மக்களிடையே சிங்க இனவெறியர்கள் பிறதேசிய இனத்தோருக்கு இழைத்த கொடுமைகளைக் கண்டிக்கும் மனப்பக்குவம் பலரிடமில்லை என முறைப்படுவதில் நியாயமுண்டு எனின் விடுதலைப்புலிகள் அப்பாவிச் சிங்களவருக்கும் முஸ்லிம்கட்கும் இழைத்த கொடுமைகளை கடியும் மனப் பக்குவம் எத்தனை தமிழரிடம் உண்டு? யாராவது துணிந்து விமர்சித்தாலும் அவரைத் தட்டியடக்குமாறு ஏட்டிக்குப் போட்டியாக ஏதாவது மாற்றுக் குற்றச் சாட்டை முன்வைப்பதைப் பலர் வழமையாக்கியுள்ளனர்.*

*அண்மைய கொடுமை பற்றிய கருத்துகளில் நான் அவதானிக்கும் முக்கிய பண்பு ஒன்று, கொல்லப்பட்டவர் பற்றிய மன வருத்தமோ கொடுமை பற்றிய கோபமோ இல்லாது ஒரு முழுச் சமூகத்தின் மீதும் பழிசுமத்தவும் அச்சமூகத்தினர் பற்றி எதிர்மறைச் சிந்தனைகளை வளர்க்கவும் காட்டும் ஆர்வமாகும்.*

*இன, மத, மொழி உணர்வுகள் வெறிகளாகி மனிதரின் சிந்தனை மீது குவியும் போது மனித நியாய உணர்வை மட்டுமன்றி மனிதாபிமானத்தையும் மனிதத் தன்மையையுங் கூட இழக்கும் அபாயத்தை எதிர்நோக்குவர்.*

புதிய பண்பாடு
தினக்குரலின் வார இறுதி அரசியல் இணைப்பிதழ்
ஞாயிற்றுக்கிழமை டிசம்பர் 12, 2021



# இந்தியா இல்லாத தீர்வு ?



யதீந்திரா

கடந்த வாரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான சந்திப்பொன்று இடம்பெறுவதாக திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால், சம்பந்தனின் வேண்டுகோளுக்கு இணங்க குறித்த சந்திப்பு பிற்போடப்பட்டது. சந்திப்பு பிற்போடப்பட்டமை தொடர்பில் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் கலந்துரையாடப்படவில்லை. கடந்த ஒன்றரை வருடங்களாக, இவ்வாறானதொரு சந்திப்பிற்காக கூட்டமைப்பு காத்துக்கிடந்தது. இந்திய தூதுவரை சந்திக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம், சம்பந்தன், இந்திய பிரதமரை சந்திப்பதற்கான நேரத்தை ஒதுக்கித்தருமாறு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த அடிப்படையில்தான், இந்திய தூதரகம், நீண்ட நாட்களாக இவ்வாறானதொரு சந்திப்பிற்கான முயற்சியை மேற்கொண்டு வந்தது. பிரதமர் மோடி, இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் மற்றும் இந்திய வெளியுறவுச் செயலர் ஹர்ஸ் வர்தன் ஆகியோர் புதுடில்லியில் இருக்கும் தருணமொன்றிற்காக இந்திய தூதரகம் காத்திருந்தது. இந்த பின்புலத்தில்தான், கூட்டமைப்பின் புதுடில்லி பயணத்திற்கான ஏற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டன. ஆனால் இவ்வாறானதொரு முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பைத்தான் சம்பந்தன் சாதாரணமாக புறந்தள்ளியிருக்கின்றார்.

சம்பந்தன் ஏன் இந்தச் சந்திப்பை பிற்போட்டார்? சம்பந்தன் இதற்கு மூன்று காரணங்களை கூறியிருக்கின்றார். வரவு– செலவுத் திட்டம் தொடர்பான விவாதத்தில் பங்குகொள்ள வேண்டும், பாஸ்போர்ட் காலாவதியாகிவிட்டது, மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணம் இடம்பெறவுள்ளது. ஒரு பிராந்திய சக்தியான இந்தியாவின் பிரதமரை சந்திப்பதற்கு கிடைத்த வாய்ப்பை தவிர்ப்பதற்காக சம்பந்தன் கூறியிருக்கும் காரணங்கள்தான் இவைகள்! வரவு– செலவுத் திட்ட விவாதங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் போது, நாட்டின் நிதியமைச்சர் பசில் ராஜபக்ஷ புதுடில்லியில் கலந்துரையாடல்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பசில் ராஜபக்ஷவை விடவும் சம்பந்தனுக்கு வரவு –செலவுத் திட்டம் முக்கியமான ஒன்றா? ஒரு வேளை வரவு– செலவுத் திட்டம் முக்கியமானதென்றால், ஏனைய இரண்டு காரணங்களை சம்பந்தன் குறிப்பிட்டிருக்க வேண்டியதில்லை. ஒரு இனத்தின் எதிர்காலம் தொடர்பான விடயத்தின் போது, மாவை சேனாதிராசாவின் மகனின் திருமணத்தை சம்பந்தன் தொடர்புபடுத்தியிருக்கின்றார். இந்திய பிரதமருடனான சந்திப்பை பிற்போடுவதற்காக, சம்பந்தன் குறிப்பிட்டிருக்கும் மூன்று காரணங்களும் நகைச்சுவைக்குரியது என்பதை புரிந்துகொள்வற்கு அரசியல் அறிவு தேவையில்லை. இந்த நகைச்சுவைக்காக நிச்சயம் இந்திய தூதரக அதிகாரிகள் சிரித்திருப்பார்கள்.

தமிழர் பிரச்சினையில் இந்தியா மீளவும் தலையீடு செய்வதை சம்பந்தன் தவிர்க்க விரும்புகின்றாரா? சம்பந்தனின் அண்மைக்கால நடவடிக்கைகள் இப்படியானதொரு கேள்விக்கான அவசியத்தை ஏற்படுத்துகின்றது. இலங்கைக்கு விஜயம் செய்யும் இந்திய உயர் அதிகாரிகள் வழமைபோல் கூட்டமைப்பை சந்தித்துச் செல்கின்றனர். ஆனால், கூட்டமைப்போ இந்தியாவை நோக்கிச் செல்லவில்லை. அவ்வாறு செல்ல வேண்டுமென்று கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகள் கோரும் போதெல்லாம், அதனை சம்பந்தன் தடுக்கின்றார். சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சந்தர்ப்பத்தில், ஒரு முறை கூட புதுடில்லி செல்லவில்லை. ஒரு காலத்தில் அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, அவர் எவ்வாறு புதுடில்லியுடன் உரையாடியிருந்தார். அவருக்கு இந்திராகாந்தி எத்தகைய கௌரவத்தை வழங்கியிருந்தார் என்பது வரலாறு. இது பற்றி அமிர்தலிங்கம் எழுத்திலும் பதிவு செய்திருக்கின்றார். ஆனால் சம்பந்தனோ, சிங்களவர்களை காரணம் காட்டி, புதுடில்லி பயணத்தை தவிர்த்து வருகின்றார். மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்த போது, புதுடில்லி சென்று உரையாடுவோம் என்னும் கோரிக்கையை, அப்போது கூட்டமைப்பின் அங்கமாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்வைத்திருந்தார். அவ்வாறு நாம் செய்தால் சிங்களவர்கள் கோபிப்பார்கள், குழம்புவார்கள் என்னும் காரணத்தைக் கூறி சம்பந்தன் அதனை தட்டிக்கழித்தார்.

ரணில்–மைத்திரி ஆட்சியில், பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள், புதுடில்லி செல்வதற்கான யோசனையை முன்வைத்த போது அப்போதும் கருமங்கள் இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றன. இப்போது நாம் அங்கு சென்றால் தென்னிலங்கையில் பதட்டங்கள் ஏற்படுமென்று கூறி அதனையும் சம்பந்தன் தட்டிக்கழித்தார். இப்போது இந்திய பிரதமர் மோடியுடனான சந்திப்பை பொறுப்பற்ற காரணங்களைக் கூறி பிற்போட்டிருக்கின்றார்.

ரணில்–மைத்திரி கூட்டரசாங்கமும் கூட்டமைப்பும் மிகவும் நெருக்கமாக செயற்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்றை காணமுடியுமென்பதில் சம்பந்தன் நம்பிக்கை கொண்டிருந்தார். அந்த அடிப்படையிலேயே புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் இடம்பெற்றிருந்தன. புதிய அரசியல் யாப்பு வருவதற்கான வாய்ப்பு இல்லையென்பதை சிலர் எதிர்வு கூறியிருந்தனர். புதிய அரசியல் யாப்பு வருவதற்கான வாய்ப்பில்லை. இந்த ஆடம்பரமான சொல்லாடல்கள் அனைத்தும் ஒரு கட்டத்துடன் முடிவுக்குவந்துவிடும் என்பதை இந்தக் கட்டுரையாளரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் சுட்டிக்காட்டியிருந்தார். ஆனால் சம்பந்தன் மற்றும் சுமந்திரன் ஆகியோர் முற்றிலும் உள்நாட்டு நகர்வுகள் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவிட முடியுமென்று நம்பினர்.



**மகிந்த ராஜபக்ஷ இந்தியாவிற்கு வழங்கிய வாக்குறுதியை நிறைவேற்ற மறுத்த போது, புதுடில்லி சென்று உரையாடுவோம் என்னும் கோரிக்கையை, அப்போது கூட்டமைப்பின் அங்கமாக இருந்த ஈ.பி.ஆர்.எல்.எப். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்வைத்திருந்தார். அவ்வாறு நாம் செய்தால் சிங்களவர்கள் கோபிப்பார்கள், குழம்புவார்கள் என்னும் காரணத்தைக் கூறி சம்பந்தன் அதனை தட்டிக்கழித்தார்**

ஆனால் இறுதியில் எதிர்பார்த்தது போன்றே, புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் புஸ்வாணமாகியது. விமர்சனங்கள் இருப்பினும் கூட, சில முயற்சிகள் இடம்பெற்றது உண்மைதான். ஆனால் இப்போது நிலைமைகள் தலைகீழாகிவிட்டது. அமெரிக்க பயணத்தைத் தொடர்ந்து அமெரிக்காவினதும் இந்தியாவினதும் கூட்டு அழுத்தத்தை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் தாங்கள் ஈடுபட்டிருப்பதாக, சுமந்திரன் தெரிவித்திருந்தார். ஜனவரி மாதமளவில் அமெரிக்கா, அதன் கொள்கை நிலைப்பாட்டை அறிவிக்குமென்றும் சுமந்திரன் எதிர்வு கூறுகின்றார். இவ்வாறானதொரு பின்னணியில்தான் சம்பந்தன், இந்தியாவிற்கு செல்வதை வேண்டுமென்றே தவிர்த்திருக்கின்றார். அவ்வாறாயின், அமெரிக்காவின் கொள்கை நிலைப்பாட்டை அறிந்த பின்னர், புதுடில்லிக்கு செல்ல முயற்சிக்கின்றாரா? அல்லது இந்தியா இல்லாமல் ஒரு தீர்வை எதிர்பார்க்கின்றாரா? கோதாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தின் புதிய அரசியல் யாப்பு முற்சியின் கீழ், தமிழ் மக்களுக்கு நியாயமானதொரு அரசியல் தீர்வு கிடைக்குமென்று சம்பந்தன் எதிர்பார்க்கின்றாரா?

தமிழ் மக்களின் அரசியல் போராட்டத்தில் இந்தியா ஒன்றே அரசியல் தீர்வு தொடர்பில் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி வருகின்றது. இலங்கையின் உடனடி அயல்நாடென்னும் வகையில், இந்தியா எப்போதும் இலங்கையின் விவகாரங்களில் தலையிடும் ஆற்றலை கொண்டிருக்கின்றது. இந்த அடிப்படையில்தான், இலங்கையின் இன முரண்பாட்டிற்குள், ஒரு சமரச முயற்சியாளராக இந்தியா தலையீடு செய்தது. முன்னை நாள் இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகரான எம்.கே.நாராயணின் வார்த்தையில் கூறுவதானால் புவியியல் நிலைமையும் வரலாறும் அவ்வாறானதொரு நிலைப்பாட்டை நோக்கி இந்தியாவை தள்ளியிருந்தது. இந்தியாவின் சமரச முயற்சியின் விளைவாக வந்ததுதான் மாகாண சபை முறைமை. அந்த மாகாண சபை முறைமையை தொடர்ந்தும் வைத்திருப்பதா அல்லது நீக்குவதா என்னுமடிப்படையில்தான், புதியதொரு அரசியல் யாப்பு தொடர்பில் விவாதிக்கப்படுகின்றது.

தற்போதைய தென்னிலங்கை ஆட்சியாளரை பொறுத்தவரையில் தமிழர் பிரச்சினையென்பது ஒரு உள்நாட்டு விவகாரம். இதில் இந்தியாவோ வேறு எவரோ தலையீடு செய்யவேண்டியதில்லை. இந்தியாவிற்கான தூதுவர் மிலிந்த மொரகொட, இந்து பத்திரிகைக்கு வழங்கிய நேர்காணலில் இதனை வெளிப்படையாகவே கூறியிருக்கின்றார். அதாவது, அரசியல் தீர்வென்பது முழுக்க முழுக்க உள்நாட்டு விவகாரமாகும். இதன்மூலம் அவர் இந்திய தலையீட்டை முற்றிலுமாக மறுதலிக்கின்றார். அவர் சமர்ப்பித்த மூலோபாய அறிக்கையிலும் தமிழர் பிரச்சினை தொடர்பில் பேசப்படவில்லை. இது தொடர்பில் பேராசிரியர் சூரிய நாராயணன் இந்தியன் எக்ஸ்பிரஸில் எழுதிய கட்டுரையில் விவாதித்திருந்தார். சிங்கள ஆட்சியாளர்கள் தமிழர் பிரச்சினையில் இந்தியாவின் பங்கை புறந்தள்ள முற்படுவது போன்றுதான் சம்பந்தனும் செயற்படுகின்றாரா? தமிழர்களுக்கான அரசியல் தீர்வு முற்றிலும் ஒரு உள்நாட்டு விவகாரம் என்பதுதான் சம்பந்தனதும் நிலைப்பாடா?

இந்திய–இலங்கை ஒப்பந்தத்திற்கு பின்னர், அரசியல் தீர்வு தொடர்பில் இடம்பெற்ற எந்தவொரு முயற்சியும் இதுவரையில் வெற்றிபெறவில்லை. ஏனெனில் அந்த முயற்சிகள் எவற்றிலும் இந்தியாவின் பங்களிப்பு இருந்திருக்கவில்லை. நோர்வேயின் மத்தியஸ்த முயற்சியில் இந்தியாவிற்கு எந்தவொரு பங்களிப்பும் இருக்கவில்லை. இந்தியாவை கோபப்படுத்திவிடக்கூடாதென்னும் முன்னெச்சரிக்கையுடன், எரிக் சொல்ஹெய்ம் விடயங்களை புதுடில்லிக்கு கூறிக்கொண்டிருந்ததை தவிர, இந்தியாவின் எந்தவொரு பங்களிப்பும் ஒஸ்லோ பேச்சுவார்த்தையில் இருந்திருக்கவில்லை. நோர்வேயின் மத்தியஸ்தம் என்பது அடிப்படையில் ஒரு மேற்குலக மத்தியஸ்தமாகவே இருந்தது.

இதன் பின்னர் இடம்பெற்ற பிரதானமான தீர்வு முயற்சி ரணில்–மைத்திரி ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றிருந்தது. ஒரு புதிய அரசியல் யாப்பின் ஊடாக தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்கலாம் என்பதே சம்பந்தனின் திட்டமாக இருந்தது. இதன்போதும் இந்தியா பார்வையாளராகவே இருந்தது. சம்பந்தனை பொறுத்தவரையில், இந்தியாவை சம்பந்தப்படுத்தினால் சிங்களவர்கள் கோபிப்பார்கள். ஆனால் இந்த முயற்சியும் வெற்றிபெறவில்லை. இந்திய– இலங்கை ஒப்பந்தத்தின் அறுவடையான மாகாண சபை முறைமையை இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில்தான், அதனை முற்றிலுமாக புறந்தள்ளும் வகையில் புதிய அரசியல் யாப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. இது தொடர்பில் சம்பந்தன் ஒரு நாகரிகத்திற்காகக் கூட இந்தியாவின் ஆலோசனைகளை கோரியிருக்கவில்லை.

விடயங்களை உற்றுநோக்கினால் ஒரு விடயம் மட்டும் துருத்திக் கொண்டு தெரிகின்றது. தமிழர் பிரச்சினையில் மேற்கொள்ளப்பட்ட ஒரேயொரு விடயம் மட்டுமே இதுவரையில் நடைமுறைக்கு வந்திருக்கின்றது. அது 13 ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையிலான மாகாண சபை முறைமை ஒன்றுதான். அதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொரு முயற்சியும் இதுவரையில் வெற்றிபெறவில்லை. ஏனெனில் அந்த முயற்சிகள் எவற்றிலும், இந்தியாவின் பங்களிப்பு இருந்திருக்கவில்லை. இது தமிழர் தலைமைகளுக்கு கூறும் செய்தி என்ன?

# சுதந்திரக் கட்சியால் தனித்து பயணிக்க முடியுமா?

அக்கரையூரான்

இன்றைய அரசாங்கத்தின் மூன்றிலிரண்டு பெரும்பான்மைப் பலம் எவ்வாறு உருவானது? உண்மையிலேயே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனிப்பெரும் கட்சியாக இவ்வாறான பாராளுமன்ற பெரும்பான்மை இலக்கை எட்டியதா இல்லை, மொட்டு அரசாங்கத்தில் இன்று அங்கம் வகிக்கின்ற கூட்டுக் கட்சிகளினால் பெறப்பட்டிருக்கின்ற பெரும்பான்மைப் பலமா? என்பதும் தற்போதைய சூழலில் கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

இன்றைய பொதுஜன பெரமுனவிற்கு இவ்வாறானதொரு அரசியல் பலத்தினை உருவாக்கிக் கொள்வதற்கு களம் அமைத்துக் கொடுத்தவர் இன்றைய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை கையகப்படுத்தியிருக்கின்ற முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய பாராளுமன்ற உறுப்பினருமான மைத்திரிபால சிறிசேன என்ற உண்மையை புரிந்துகொள்ளவும் ஏற்றுக்கொள்ளவும் பலர் மறுதலிக்கின்ற போக்கு உண்மையிலேயே துரதிர்ஷ்டவசமானதாகும்.

இருந்தபோதிலும் யதார்த்தம் எதுவெனில், தாமரை மொட்டின் இன்றைய பெரும்பான்மைப் பலத்திற்கு பங்காளிக் கட்சிகளென்ற அடிப்படையிலும் சரி கூட்டுக் கட்சிக்குள்ளேயே பெரும்பான்மையான பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கொண்டிருக்கின்ற தரப்பென்ற வியாக்கியானத்தின்படியும் சரி அதற்கான கூடுதல் உரித்துக்காரர் மைத்திரி என்பதே உண்மையுமாகும். அவருடைய கடந்தகால பலவீனமான அரசியல் செயற்பாட்டினாலேயே அரசியலில் பழமும் தின்று விதையும் போட்ட ராஜபக்ஷக்கள் தங்களுக்கான பலத்தை உருவாக்கிக் கொண்டார்களென்பதும் கூட இந்நாட்டு அரசியலில் ஒரு வரலாற்றுப் பதிவு!

மைத்திரிபால சிறிசேன இந்நாட்டின் ஜனாதிபதியாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை பிரதிநிதித்துவப்படுத்தியிருந்தபோதிலும், அக்கால எல்லைக்குள்ளாவது அக்கட்சியினை சக்திமிக்கதாக்குவதற்கு அவரினால் கடைசி வரைக்கும் முடியாமல் போனபோதே ராஜபக்ஷக்களின் தாமரை மொட்டு அவ்வாறானதொரு தேவையான அரசியல் இடைவெளியை இட்டு நிரப்பிக் கொள்வதற்காக உஷாரடைந்தது. அதில் வெற்றியுமடைந்தது!!

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா அம்மையாரைப் போன்றதொரு பலமான கட்சித் தலைவராக மைத்திரி அரசியல் அதிகாரத்தில் இருந்தபோதும் வினைத்திறனுடனும் செயற்பாட்டு அடிப்படையிலும் காணப்பட்டிருக்காததால் மஹிந்தவல்ல ராஜபக்ஷ கொம்பனியே மெதமுலானயிலிருந்து படையெடுத்து வந்திருந்தாலும், எந்தவொரு கொம்பனாலும் பாரம்பரியமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினை உசுப்பியிருக்க முடியாதென்பது யதார்த்தம். நடைபெற்று முடிந்த ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத் தேர்தல்களில் மைத்திரி தரப்பு தனித்துவமாக சுதந்திரக் கட்சி அடையாளத்துடன் களமிறங்கியிருந்தால்கூட இன்று சுதந்திரக் கட்சியாக அவர்கள் பெற்றிருக்கக்கூடிய பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை விடவும் சற்றுக் கூடுதலான பாராளுமன்ற ஆசனங்களைக் கையகப்படுத்தியிருக்கவுமே அதிக வாய்ப்புகள் பிரகாசமாகக் காணப்பட்டிருந்தன.

ஆகக்குறைந்தபட்சம் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சுதந்திரக் கட்சியின் சார்பில் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகின்ற குமார வெல்கம போன்ற ஒருவரை தனித்துக் களமிறக்கியிருந்தால்கூட இன்னும் பல அதிரடியான அரசியல் மாற்றங்கள் அப்போது ஏற்பட்டிருக்கும். பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம அவ்வாறானதொரு எதிர்பார்ப்புடனே காத்திருந்தார். ஆனால், சுதந்திரக் கட்சியோ குமாரவெல்கமவை ஒப்பீட்டளவில் பெரிதாக கணக்கெடுத்திருக்கவில்லை. இருந்தும், இன்றைய ஜனாதிபதியை அக்காலகட்டத்தில் கடுமையாக திட்டித் தீர்த்துமிருந்தார்.

அவரின் அவ்வாறான அன்றைய கருத்தினை மீளவும் நினைவுப்படுத்துவது போல கடந்த இருவாரங்களுக்கு முன்பும் கூட அதே குமார வெல்கம இன்றைய அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் கடுந்தொனியில் பாராளுமன்றத்தில் வைத்து விமர்சித்திருந்தார். இவ்வாறான அவரின் மன ஆதங்கமும்கூட அன்று சுதந்திரக் கட்சி அரசியல் ரீதியான தீர்மானத்தை முறையாக எடுத்திருக்கவில்லை என்பதை கோடுகாட்டுவதாகவும் புரிந்துகொள்ளலாம்.

தான் ஜனாதிபதியாக இருந்த காலகட்டத்தில் இரண்டாவது முறையாகவும் தேர்தலில் போட்டியிடும் எந்தவொரு எண்ணமும் தன்னிடம் இல்லையெனவும் இந்நாட்டு மக்களுக்கு சத்தியம் செய்யாத குறையாக அடித்துக் கூறி இந்நாட்டு அரசியலில் புதியதொரு அத்தியாயத்தை உருவாக்கப் போவதாகவும்கூட வலியுறுத்தியிருந்தார். இவரின் இத்தகைய கருத்து அனைத்தின மக்களுக்குள்ளும் அரசியல் அரங்கிற்குள்ளும் பாரிய வரவேற்பையும் செல்வாக்கையும் ஏற்படுத்தியிருந்தன.

ஆனால், கடந்த காலங்களில் இவ்வாறெல்லாம் கூறியிருந்தவர்தான் இன்று நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தலில் பொலனறுவையில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் உள்ளாரென்பதே அவரின் வாய்ச்சொல்லாகும். இவ்வாறுதான் தொடர்ந்தும் அரசியலில் செயற்படப் போவதென்ற எண்ணமும் சிந்தனையும் மைத்திரிக்கு இருந்திருந்தால் இரண்டாவது முறையாகவும் ஜனாதிபதியாக வருவதற்கான விவேகமான அரசியலை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்துகொண்டே மேற்கொண்டிருக்க வேண்டுமல்லவா? அவ்வாறு செயற்பட்டிருந்தால் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் பலவீனமடைந்திருக்காது. இரண்டாவது முறையாகவும் நிறைவேற்றுத்துறை அதிகார அரியாசனத்தில் அமர்ந்திருக்கலாமல்லவா?

இவை எவற்றையுமே நடப்பு அரசியலில் கவனத்திற் கொள்ளாமல் சிறுபிள்ளைத்தனமாக அவருடைய அதிகார காலத்தில் நடந்துகொண்டதன் தற்போதைய விளைவு இந்நாட்டு அதிகார அரசியலில் உச்சத்தில் இருந்த ஜனாதிபதி தற்போது பாராளுமன்ற உறுப்பினராக அமர்ந்துகொள்கின்ற அபத்தமான சூழலும் துரதிர்ஷ்டமான நிலைமையுமே இன்று ஏற்பட்டிருக்கிறது. மைத்திரி தலைமையிலான சுதந்திரக் கட்சியை ராஜபக்ஷக்கள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இல்லையென்ற உண்மையும் இதனுள்ளே புலப்பட்டு நிற்கிறது. ஏனெனில், இன்றைய பிரதமர் அன்று ஜனாதிபதியாக இருந்தபோது அவரே சுதந்திரக் கட்சியின் பலம்மிக்க தலைவராகவும் காணப்பட்டார். இருந்தபோதிலும், சுதந்திரக் கட்சியை உருவாக்கியதிலும் இலங்கை அரசியலின் வரலாற்றில் அழிக்க முடியாத பல சாதனைகளுக்கு காரணகர்த்தாவாகவுமிருந்த பண்டாரநாயக்க பரம்பரையைச் சேர்ந்த சந்திரிகா அம்மையாருடன் பின்னாளில் அவருக்(மஹிந்த)கு ஏற்பட்டிருந்த அரசியல் ரீதியான கசப்புணர்வுகளினால் சுதந்திரக் கட்சியினை சரியானதொரு சந்தர்ப்பத்தில் கருவறுத்து விடுவதுடன், இலங்கை அரசியலில் இருந்தே அக்கட்சியை விரட்டியடிக்க வேண்டுமென்பதிலே ஒட்டுமொத்தமான ராஜபக்ஷ குழுமமுமே குறியாக இருந்தது.

இவ்வாறான பின்புலங்களையெல்லாம் சரியாகவும் நேர்த்தியாகவும் நாடிபிடித்தறியாத அரசியல் தலைவராகவும் அரசியல் ஆளுமையற்ற அரசியல்வாதியாகவுமே மைத்திரி காணப்பட்டார். இறுதியில் என்னவாகிற்று? இலங்கையின் அரசியல் வரலாற்றில் நீண்ட அரசியல் அனுபவங்களைக் கொண்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வேண்டப்படாத கட்சி போலவே பின்தள்ளப்பட்டு மிகக் குறுகிய காலத்தில் மக்களுக்குள் அறிமுகப்படுத்தப்பட்ட பெரமுன கட்சி அனைத்துக் கட்சிகளுக்கும் தலைமை தாங்குகின்ற கட்சியாகவும் இலங்கை அரசியலில் தீர்மானிக்கின்ற பலம்மிக்க கட்சியாகவும் இன்றுவரை பரிணமித்து நிற்கிறது.

இவ்வாறான அரசியல் போக்கின் மிக மோசமான நிலைமையாக சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கே பெரமுன கட்சியில் உறுப்புரிமை கடந்த காலத்தில் கொடுக்கப்பட்டமைதான் கொடுமையிலும் மோசமான கொடுமை! மைத்திரியின் ஆளுமையில்லாத் தனத்தை அறிந்துகொண்ட சில சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தங்களின் எதிர்கால அரசியலுக்காகவும் பதவிகளுக்காகவும் தாமரை மொட்டில் வேறுவழியில்லாமல் அங்கத்துவத்தினை பெற்றுக்கொண்டனர். இவ்வாறாக, தனது கட்சிக்குள்ளேயே பலரையும் சங்கடத்துக்குள்ளாக்கி எவற்றையுமே அலசி ஆராயாமல் அனைத்தையுமே குழப்பியடித்த பெருமைக்குரியவர் வேறு யாருமல்ல! இன்று கண்ணாடிக் கூட்டுக்குள்ளேயிருந்து கல்லெறிய வேண்டாமென பாராளுமன்றத்தில் வைத்து கருத்து வெளியிடுகின்ற மைத்திரிபால சிறிசேனதான்!

தற்போதைய அரசாங்கத்துடனான பங்காளிக் கட்சிகளுக்குள் ஏற்பட்டிருக்கின்ற பனிப்போரும் நேரடி முரண்பாடுகளுக்குமப்பால் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணை அறிக்கைகளும் கத்தோலிக்க மதத் தரப்பினரின் தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்களும் கருத்துக்களும் நீதிமன்றக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி குற்றவாளியொருவரை விசாரிக்கப்படுவதுபோன்றதான நிலைமையாகவே காணப்படுகிறது.இவற்றோடு நாட்டில் தற்போது விவசாயிகளுக்கான உரத்தை வழங்குமாறுகோரி நடத்தப்படுகின்ற விவசாயிகளின் போராட்டம் ஓரளவு குறைந்திருந்தாலும், அவ்வாறான போராட்டங்கள் , ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கொடும்பாவி எரிப்பு போன்ற அரசுக்கெதிரான அனைத்து செயற்பாடுகளுக்குப் பின்னால் இன்றைய அரசாங்கத்தின் ஆட்சிப் பங்காளியாகவுள்ள சுதந்திரக் கட்சியும் எதிர்க்கட்சிகளாகவுமுள்ள ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஜே.வி.பி. போன்ற கட்சிகளுமே பிரதான காரணமென்ற விமர்சனமும் மொட்டுத் தரப்பிடம் அதிகமாகவே காணப்படுகிறது.



விவசாயிகளின் போராட்டத்தை தத்தமது அரசியல் நிகழ்ச்சி நிரலுக்காக பயன்படுத்திக்கொள்கின்ற போக்குகளைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகள் எமது அரசாங்கத்தில் பங்காளிகளாக இருப்பதென்பதை இனிமேலும் அனுமதிக்க முடியாதென்ற பாரிய குற்றச்சாட்டுக்கள் அக்கட்சிகள்மீது தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகின்றன. இவற்றிற்கும் மேலதிகமாக பெரமுனவின் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்கள் திஸ்ஸ குட்டியாராச்சி போன்றவர்களும் பிரசன்ன ரணதுங்க போன்ற ஒரு சில இராஜாங்க அமைச்சர்களும் சுதந்திரக் கட்சியையும் அதன் தலைவர் மற்றும் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களையும் பாராளுமன்ற அமர்வுகளிலும், ஊடக சந்திப்புக்கள் மற்றும் பொது நிகழ்வுகளிலும் அரசியல் ரீதியாக போட்டுத் தாக்குகின்ற படலம் தொடர்ந்துகொண்டுதான் இருக்கின்றது.

இவ்வாறானதொரு கடைசிக் கட்டத்திலேதான் கடந்தவாரம் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் சுதந்திரக் கட்சியின் தலைவர் மற்றும் செயலாளர் போன்றோர் தங்களின் நீண்ட நாட்களான ஆதங்கத்தினை முழுமையாக கொட்டித் தீர்த்துக் கொண்டனர். இதனுடன் அவர்களுடைய கட்சியின் மத்திய செயற்குழுவினால் அவ்வப்போது எடுக்கப்படுகின்ற ஒவ்வொரு தீர்மானங்களும் பெரமுன அரசாங்கத்தையே வீழ்த்தி விடுவதற்கான திட்டமாகவே மொட்டுத் தரப்பினால் தொடர்ந்தும் நோக்கப்படுகிறது. இறுதியாக நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில்கூட கட்சியை மறுசீரமைப்பது தொடர்பாகவும் மக்களுக்கான சிறந்த அரசியல் செயற்பாட்டை முன்னெடுப்பது பற்றியுமே தீர்மானங்கள் எடுக்கப்பட்டிருப்பதாக அறியக்கிடைக்கிறது. தற்போதைய பாராளுமன்ற அமர்வுகளும் இவ்வருடத்திற்கான விடுமுறையாகவும் ஒத்திவைப்பாகவும் கணிக்கப்படுவதால் அவ்வாறான காலத்தையும் சந்தர்ப்பத்தையும் நாட்டின் சகல மாவட்டங்களிலும் கட்சியைப் புனரமைத்து சக்திமிக்கதாக்கும் அடிப்படையிலேயே தீர்மானங்களும் எடுக்கப்பட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

ஏனெனில், அண்மைக்காலமாக பலராலும் எதிர்வுகூறப்படும் மாகாண சபைத் தேர்தல் நடைபெறுமாக இருந்தால் சுதந்திரக் கட்சி தலைமையில் தனியாகவோ அல்லது இணைந்து கொள்ளக்கூடிய ஏனைய கட்சிகளையும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டு தனியாக அரசியல் பாதையில் பயணிப்பதே சுதந்திரக் கட்சியிலுள்ள பலரினது எண்ணமாகவும் தீர்மானமாகவும் உள்ளது. சுதந்திரக் கட்சியாக இவ்வாறு தனியாக , கூட்டான அரசியல் பயணத்தினை மொட்டுத் தரப்பு குறிப்பாக,ராஜபக்ஷக்கள் இம்மியளவும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லைதான்! ஆனால், அக்கட்சி இந்நாட்டு அரசியலில் ஆதிக்கம் கொள்ளும் அளவிற்கு பலமடைந்துவிடக்கூடாதென்பதிலே அவர்கள் ஆர்வமாகவே உள்ளனர். சுதந்திரக் கட்சி தொடர்பில் பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களின் அபிப்பிராயங்கள் எவ்வாறிருந்தாலும், மொட்டின் தீர்மானம்மிக்க முடிவுகளை மேற்கொள்கின்ற ராஜபக்ஷக்களின் சிந்தனையோ சுதந்திரக் கட்சி தங்களுடனே என்றும் இருக்க வேண்டுமென்ற நோக்கத்திற்கு மாறாக பொதுஜன பெரமுனவிற்கு கீழேயே ஏனைய சிறிய கட்சிகள் இருப்பதைப் போன்று அவர்களும் இருந்துவிட்டுப் போகட்டுமென்ற அரசியல் அதிகாரக் கர்வம் தலைக்கேறி நிற்பதையே ராஜபக்ஷக்களின் செயற்பாடுகள் வெளிப்படுத்தி நிற்கின்றன.

இன்றைய பெரமுன அரசுடனான சுதந்திரக் கட்சியின் முரண்நிலை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் மைத்திரி கூறியிருந்த கருத்துக்களில் ஒரு கூற்று உண்மையானதும் முக்கியமானதுமாகும். அதாவது, சுதந்திரக் கட்சியினைச் சேர்ந்த தற்போதைய பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்தத் தொகையுடன் சேர்த்தே இன்றைய அரசாங்கத்தின் பெரும்பான்மைப் பலம் காணப்படுகின்றதே தவிர தனித்து மொட்டுக் கட்சியினது பெரும்பான்மைப் பலமல்ல என்பது உண்மையே! சுதந்திரக் கட்சி தாமரை மொட்டுடன் பல்வேறுபட்ட விடயங்களில் அரசியல் ரீதியாக முரண்பட்டுக்கொள்வதைப்போல கெரவலப்பிட்டியுகதனவி விவகாரத்தில் அரசாங்கத்துடன் முரண்பட்டு நிற்கின்ற ஏனைய பங்காளிக் கட்சிகளும் மொட்டுத் தரப்பிற்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுக்கும் வகையில் ஏதோவொரு முடிவுபற்றிச் சிந்திப்பார்களேயானால், ராஜபக்ஷாக்களுக்கும் இன்றைய அரசாங்கத்திற்கும் மேலும் கூடுதல் நெருக்கடிகள் அரசியல் ரீதியாக எதிர்காலத்தில் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும் அதிகம் காணப்படுகின்றன.

இவற்றையெல்லாம் முறையாக நாடிபிடித்தறிந்த பிரதமர் கடந்தவாரம் அலரி மாளிகையில் இடம்பெற்றிருந்த மொட்டுத் தரப்புடனான ஒரு கலந்துரையாடலில் இவ்வாறு கூறியிருந்தார். எமது பலதரப்பட்ட வெற்றிக்கு பங்காளிக் கட்சிகளே மிகப்பாரிய பலமாக கடந்த காலங்களில் இருந்திருக்கின்றனர். அத்தகைய பங்களிப்பை எவரும் குறைத்து மதிப்பிடுதல் தவறான பார்வையாகும்! ஏனெனில், அவர்களையும் சேர்த்தே அரசாங்கம்! அந்தவகையில், அவர்களுக்கும் கூடுதல் பொறுப்புகள் இருக்கின்றன. ஏதேனுமொரு விடயத்தில் அவர்களிடத்தில் தெளிவற்ற கருத்துக்கள் காணப்பட்டால்கூட அவற்றைப் பெரிதுபடுத்தாமல் உரிய முறையில் அவற்றைத் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற கோணத்தில் கருத்துக்கூறி பங்காளிக் கட்சிகள் அனைத்திற்குமே தலையில் ஐஸ்வைக்கவும் முயற்சித்திருந்தார்.

இருந்தபோதிலும், சுதந்திரக்கட்சியின் தனித்த வழிப் பயணத்தில் எந்தவித மாற்றங்களும் ஏற்படாதுபோலவே அக்கட்சியின் உள்வீட்டுத் தகவல்களும் கட்டியம் கூறி நிற்கின்றன. இதே நிலையில், நாட்டில் தொடர்ந்துகொண்டிருக்கின்ற சமயலறை வெடிப்புச் சம்பவங்களுடன் இன்றைய அரசாங்கத்திற்கு மேலதிக நெருக்கடிகளாக மின்சார சபை ஊழியர் சங்கம், பெற்றோலிய வளத்துறை ஊழியர் சங்கம் மற்றும் அரச தொழிற்சங்க சம்மேளனமும் சம்பள உயர்வுகோரி போராட்டங்களில் களமிறங்கியிருக்கின்றன.

இத்தகைய போராட்டங்களில் சுகாதாரத்துறையினரும் விதிவிலக்காகக் கருதப்படவில்லை என்பதும் கவனிக்கத்தக்கதாகும். பொருளாதாரத்தினை இலக்காகவும் அவர்களின் சேமநலன்களையும் வலியுறுத்தும் இவ்வாறான போராட்டங்களின் எந்த விடயங்களையும் நிவர்த்தி செய்யக்கூடிய வகையில் அரசின் தற்போதைய நிதி வளமும் நாட்டின் பொருளாதாரமும் ஈடுகொடுத்திருக்காத சூழலிலேயே அவற்றையெல்லாம் வெட்டி வீழ்த்துவதற்கான உத்தியாக ஐ.தே.க .தலைவர் ரணிலுக்கு பிரதமர் பதவியை கொடுப்பதனூடாக சர்வதேச நாடுகளுடனான உறவுகளையும் இன்று படுகுழியில் வீழ்ந்திருக்கின்ற நாட்டின் பொருளாதாரத்தையும் ஓரளவாவது கட்டியெழுப்ப முடியுமென்ற அரசாங்கத்தின் உயர்மட்டக் கருத்தியல் கொழும்பு அரசியலில் பாரிய சர்ச்சைகளை ஏற்படுத்தியிருக்கிறது.அமைச்சரவைப் பேச்சாளர் ரமேஷ் பத்திரண ஊடகத்துறையினரின் இத்தகைய கருத்துக்களை மறுதலித்தாலும், எதிர்காலத்தில் பல்வேறுபட்ட அரசியல் மாற்றங்கள் அரசாங்கத்திற்குள்ளேயே ஏற்படலாமென்ற அரசியல் எதிர்வுகூறல்களும் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன.

ஆக புதிய ஆண்டில் பெரமுன அரசாங்கத்திற்குள் நிகழப்போவதாக நம்பப்படும் அதிரடியான அரசியல் மாற்றங்களினால் ரணில் விக்ரமசிங்க பிரதமராகப் போகின்றாரா? இல்லை, பசில் ராஜபக்ஷவை பிரதமராக்கும் எண்ணம் ஜனாதிபதியிடம் காணப்படுகின்றதா? அவ்வாறென்றால், இன்றைய பிரதமரின் அரசியல் நிலை என்ன? என்ற பல்வேறுபட்ட கேள்விகள் கொழும்பு அரசியலில் களரிகட்டி நிற்கின்றன. ஆனாலும், இவ்வாறான குழப்பத்திற்கு நாட்டின் நிறைவேற்றுத்துறை எத்தகைய தீர்மானத்தை எதிர்காலத்தில் எடுக்கப்போகிறதென்பதிலேயே அனைவரினது அரசியல் எதிர்காலமும் தங்கியிருக்கிறதெனலாம்.

# இந்திய அழைப்பை நிராகரித்த கூட்டமைப்பும் ஈழத்தமிழர் அரசியலும்





பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்

ஈழத்தமிழருடைய அரசியலில் இந்தியாவுடனான உறவு தனித்துவமானது. இந்தியாவை மீறி இலங்கையின் அரசியல் பரப்பு இயங்க முயற்சிக்கின்ற எல்லா சந்தர்ப்பங்களிலும் அதிர்ச்சி தரும் நெருக்கடிகளை சந்திக்கும் ஒரு புவிசார் அரசியல் பரப்பு தொடர்ச்சியானதாக காணப்படுகின்றது. சமகாலத்திலும் இலங்கையின் நிதியமைச்சரின் இந்திய விஜயம் நெருக்கடிக்கு உள்ளானது போல் ஈழத்தமிழரின் அரசியல் தலைமை கொண்டிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான இந்திய உறவு மீளவொரு நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலர் சீன எதிர்ப்புவாதத்தை முன்வைத்தாலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைகளின் அண்மைய நடவடிக்கை அதிக குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இக்கட்டுரையும் இந்தியாவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கான புதுடில்லி அழைப்பும் அது ஏற்படுத்த உள்ள அரசியல் விளைவுகளையும் புரிந்துகொள்ள முயற்சிக்கிறது.

இலங்கைக்கான இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை உட்பட பங்காளிக் கட்சிகளின் தலைவர்களை கடந்த 8,9 ஆம் திகதிகளில் சந்திப்பதற்கான அழைப்பை விடுத்திருந்ததாக ஊடகத் தகவல்கள் உறுதிப்படுத்தின. அத்தகைய அழைப்பை பிற்போடுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் இந்தியாவை கோரியதாக இன்னோர் தகவலும் வெளியாகியது. அதுமட்டுமன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இந்திய பிரதமருடனான சந்திப்பை பிற்போடுவதற்கு பின்வரும் மூன்று காரணங்களை முன்வைத்திருந்தார். ஒன்று, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவரின் குடும்பத்தில் திருமண நிகழ்வு. இரண்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரின் கடவுச்சீட்டு காலாவதியானமை. மூன்று, வரவு– செலவுத் திட்டம் வாக்கெடுப்புக்கு வரவிருந்தமை.

மேற்படி காரணங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தாலும், சரியான காரணம் இந்தியாவுடனான சந்திப்பை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவிர்க்க முனைகிறதா என்ற சந்தேகம் மேற்படி காரணங்களை அடிப்படையாகக் கொண்டே உரையாடப்படுகிறது. மேற்படி காரணங்கள் அனைத்தும் ஏற்றுக் கொள்ளக்கூடியதாக அமையாமை மட்டுமன்றி அத்தகைய காரணங்களை இலகுவில் தீர்த்துக்கொள்ளக் கூடியதாகவும் முக்கியமற்றதாகவும் விவாதிக்கப்படுகிறது. குறிப்பாக, இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமை அவரை குறிப்பிட்டுக் கூறிய காரணத்தை நிராகரித்து பொருத்தமானவர்களுடன் இந்திய பிரதமருடனான சந்திப்பை நிறைவு செய்யுமாறு கோரியதாக உள்ளூர் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. மேலும், பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இராஜதந்திரி கடவுச்சீட்டை பெற்றுக்கொள்வதற்கு மணித்தியாலங்கள் போதுமானது. அதுமட்டுமன்றி, 2/3 பெரும்பான்மை பாராளுமன்றத்தில் இருக்கும் அரசாங்கத்திற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வாக்குகள் எத்தகைய தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அண்மையில் நிகழ்ந்த பாதுகாப்பு தொடர்பான வாக்கெடுப்பிலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளிநடப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதனாலேயே மேற்படி காரணங்களை விட வேறெதும் காரணங்கள் இருக்க வாய்ப்பிருப்பதாக உணர்ந்துகொள்ள முடிகிறது. அதாவது, இந்தியாவுடனான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறவு மைத்திரி–ரணில் அரசாங்க காலப்பகுதியிலேயே மோசமடைய ஆரம்பித்தது. திருகோணமலை மாவட்டத்தின் சம்பூர் அனல் மின்நிலையம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை இந்தியாவிற்கு எதிராக செயற்பட்டது என்ற குற்றச்சாட்டு இந்திய தூதரக மட்டத்தில் நிலவுகிறது. அதுமட்டுமன்றி நல்லாட்சி காலப்பகுதியில் இந்தியாவிற்கு எதிரான அனைத்து நகர்வுகளிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராமுகமாக இருந்ததென்ற குற்றச்சாட்டும் நிலவுகிறது. எனவேதான் சட்ட வல்லுனர் குழுவை அமெரிக்காவிற்கு அனுப்பி இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான தீர்மானங்களில் அமெரிக்காவுடன் இணைந்து பயணிக்க முடியுமெனின், இந்தியாவின் அழைப்பை பிற்போடுவதற்கு முன்வைக்கின்ற காரணங்கள் போலித்தனமாகவும் இராஜதந்திரரீதியில் ஏற்றுக்கொள்ள முடியாததொன்றாகவும் காணப்படுகிறது. இதனை ஆழமாக அவதானித்தல் அவசியமாகும்.

முதலாவது, இந்தியா புவிசார் அரசியல் ரீதியில் முக்கியமான நாடு. இலங்கைத்தீவை தனது பாதுகாப்பு அரணாக கருதும் இந்தியா பூகோள அரசியலிலும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பலமான கட்டுமானங்களைக் கொண்ட அரசாக விளங்குகின்றது. சமகாலத்தில் இந்தோ–பசுபிக் உபாயத்திலும், குவாட் அமைப்புக்களிலும் பிரதான நாடாக இந்து சமுத்திரத்தில் இந்தியா விளங்குவதோடு, வளர்ந்துவரும் பொருளாதார நாடாகவும் அரசியல் உறுதிப்பாடுமிக்க நாடாகவும் காணப்படுகிறது. இந்தியாவை நோக்கி அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், அவுஸ்திரேலியர்கள் தொடர்ச்சியாக விஜயங்களை மேற்கொள்கின்ற போது இராஜதந்திர உரையாடலை நிகழ்த்துகின்ற போது ஈழத்தமிழரின் அரசியல் தலைமையின் இந்தியா மீதான அணுகுமுறையில் மேற்கொண்ட தீர்மானம் ஈழத்தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் ஆபத்தான விளைவுகளை எதிர்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது.

இரண்டாவது, தமிழ்த் தேசியம் என்பது தமிழ் மக்களின் திரட்சியான அரசியல் பிரக்ஞைகளின் வெளிப்பாடாகும். நீண்ட துயரத்தை அனுபவித்த தமிழ் மக்கள் நாட்டின் எல்லைக்குள் தீர்வை எட்ட முடியாது என்ற நிலைக்குள் பிராந்திய மற்றும் சர்வதேச மட்ட சக்திகளை அணுக வேண்டிய சூழலுக்குள் அகப்பட்டுள்ளனர். இந்நிலையில் கிடைத்த வாய்ப்பை தமது தனிப்பட்ட எண்ணங்களுக்காகவும் இலாபங்களுக்காவும் நிராகரித்துள்ளமை ஆபத்தான அரசியலுக்கான இன்னொரு படியாகவே தெரிகிறது. ஸ்ரீபெரம்பத்தூர் ஏற்படுத்திய விளைவின் இன்னொரு கட்டமாகவே சம்பூர் சம்பவமும், இந்தியாவின் அழைப்பினை நிராகரித்தமையும் ஏற்படுத்தியிருக்கிறது. அதாவது, இந்தியாவின் சந்திப்புக்கான அழைப்பினை பிற்போடக் கோரியதற்கான காரணங்களின் பலவீனம் அழைப்பை நிராகரித்ததற்கு சமனாகவே தெரிகிறது. எனவே ஈழத்தமிழர்கள் மீண்டுமொரு வாய்ப்பினை தவறிவிட்டது என்பதைவிட நெருக்கடிக்கு முகம்கொடுக்க தயாராகின்றனர் என்பதனையே கோடிட்டுக் காட்டுகிறது.

மூன்றாவது, தமிழ்த் தேசியம் தனிப்பட்ட நலன்களின் தேசியமாகவே புரிந்துகொள்ளப்படுகிறது. தேர்தல் காலத்திலும், பொதுவெளியிலும், பாராளுமன்ற கட்டிடத் தொகுதியிலும் தமிழ்த் தேசியம் தொடர்பில் முன்வைக்கும் கருத்துக்கள் அனைத்தும் தனிப்பட்ட விருப்பு, வெறுப்பு தொடர்பானவை என்பதை மேற்படி காரணங்கள் உறுதிப்படுத்துகின்றன. ஒரு தேசிய இனத்தின் அபிலாசைகளை அடைவதற்கான வாய்ப்புக்களை பயன்படுத்துபவர்களே அவ் இனத்தின் உண்மையான தலைவராவார். அத்தகைய வாய்ப்பு எதிரியால் வழங்கப்பட்டாலும், நட்பினால் வழங்கப்பட்டாலும், மிகச்சிறிய அளவிலானதாக இருந்தாலும் அதனை பயன்படுத்துவோரே சிறந்த தலைவன் ஆவான் என ஜேர்மனி ஐக்கியத்திற்கு வழிவகுத்த பிஷ்மார்க் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவின் அழைப்பு என்பது எதிரியினதோ, பலவீனமானதொன்றோ அல்லது பெரிய வாய்ப்புக்களை தரக்கூடியதல்ல என்றோ கருதிவிட முடியாது. அப்படியாயின் இத்தகைய அழைப்பை நிராகரித்ததன் விளைவை அனுபவிப்பவர்கள் தமிழ் மக்கள் என்பதில் மாற்று எண்ணப்பாங்கிற்கு இடமில்லையென்றே கூற முடியும். முழுமையாக தனிப்பட்ட விருப்புக்களையும், கட்சியின் விருப்புக்களையும் நிறைவுசெய்ய விளைந்ததாகவே அத்தகைய நகர்வு தெரிகிறது.

நான்காவது, சீனாவை இலங்கையிலிருந்து அகற்றுவதற்கான முனைப்புக்களே அமெரிக்கா மற்றும் இந்திய நாடுகளின் நகர்வுகளின் பிரதான விடயமாகும். அவ்விடயத்தில் ஈழத்தமிழரின் அரசியல் இருப்பும் அத்தகைய நலனோடு இணைந்து பயணிக்கக் கூடிய சூழலொன்று காணப்படுகிறது. அத்தகைய சூழலை பயன்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு அமெரிக்கா–இந்தியா–ஐரோப்பியா கூட்டினால் ஈழத்தமிழருக்கு கிடைத்தது. இந்தியாவை மீறி, இந்திய நலன்களை மீறி அமெரிக்காவோ அல்லது ஐரோப்பிய நாடுகளோ ஈழத்தமிழருக்கு உதவப்போவதில்லை. எனவே, ஈழத்தமிழர்கள் இந்தியாவுக்கூடாகவே அமெரிக்காவையும், ஐரோப்பிய நாடுகளையும் அணுகுவது அவசியமாகும். அதற்கான வாய்ப்பு இராஜதந்திர ரீதியிலான அணுகுமுறைகளுக்கூடாக நிறைவு செய்யக்கூடியதொன்றாகவே இந்தியாவின் அழைப்பு அமைந்துள்ளது.

எனவே, இந்தியாவின் அழைப்பு ஈழத் தமிழர்களுக்கு இராஜதந்திரரீதியிலான நகர்வை மேற்கொள்வதற்கானதொரு வாய்ப்பான சந்தர்ப்பமாகும். இத்தகைய விஜயத்தினூடாக இனப்பிரச்சினை தீர்த்துவிடலாமென்று விவாதிப்பதை விட அதற்கானதொரு ஆரம்பப் படியை உருவாக்கும் சூழல் காணப்படுகிறது. அதாவது, தென்னாசிய மற்றும் இந்து சமுத்திரத்தில் ஏற்பட்டுள்ள வல்லரசு போட்டித்தன்மை. அதில் இந்திய, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய பங்களிப்பு சாதகமான சூழலை உருவாக்க வழிவகுத்திருந்தது. எனினும் பிராந்திய அரசாகிய இந்தியாவின் அழைப்பு நிராகரிப்பு அதிகளவு எதிர்விளைவுகளையே உருவாக்கக்கூடியதாகும். இந்த விளைவுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை விட தமிழ் மக்களுக்கானதாகவே அமைய உள்ளது.

> இந்தியா புவிசார் அரசியல்ரீதியில் முக்கியமான நாடு. இலங்கைத்தீவை தனது பாதுகாப்பு அரணாக கருதும் இந்தியா, பூகோள அரசியலிலும் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய நாடுகளுடன் பலமான கட்டுமானங்களைக் கொண்ட அரசாக விளங்குகின்றது. சமகாலத்தில் இந்தோ-பசுபிக் உபாயத்திலும் குவாட் அமைப்புக்களிலும் பிரதான நாடாக இந்து சமுத்திரத்தில் இந்தியா விளங்குவதோடு, வளர்ந்து வரும் பொருளாதார நாடாகவும் அரசியல் உறுதிப்பாடுமிக்க நாடாகவும் காணப்படுகிறது. இந்தியாவை நோக்கி அமெரிக்கர்கள், ரஷ்யர்கள், அவுஸ்திரேலியர்கள் தொடர்ச்சியாக விஜயங்களை மேற்கொள்கின்ற போது இராஜதந்திர உரையாடலை நிகழ்த்துகின்ற போது ஈழத்தமிழரின் அரசியல் தலைமையின் இந்தியா மீதான அணுகுமுறை யில் மேற்கொண்ட தீர்மானம் ஈழத் தமிழர்களின் அரசியல் பிரச்சினையில் ஆபத்தான விளைவுகளை எதிர்கொள்வதற்கு வழிவகுத்துள்ளது

# இந்து சமுத்திர மகாநாட்டின் மூலோபாயமும்

# இந்தியா–இலங்கை நட்புறவும்

ஐ.வி.மகாசேனன்



சமகால புவிசார் அரசியல் போட்டியில் இந்து சமுத்திரம் உலகின் மிக முக்கியமான களங்களில் ஒன்றாக காணப்படுகிறது. உலகளாவிய எண்ணெய் விநியோகத்திற்கான உலகின் ஏழு முக்கியமான கடல் பாதைகளில் மூன்று இந்த பிராந்தியத்தில் உள்ளன. இதனடிப்படையிலும் இந்து சமுத்திர பிராந்திய நாடுகளின் அரசியல் புவியியல் அமைவிட முக்கியத்துவம் சார்ந்தும் இக்களம் மூலோபாயப் போட்டி நிறைந்துள்ளது. இது இப்பிராந்தியத்துக்கு புறத்தே உள்ள அமெரிக்கா, பிரான்ஸ் மற்றும் சோவியத் யூனியனின் மூலோபாய அரசியல் களமாக வரலாற்றில் இருந்து வந்துள்ளது. இந்து சமுத்திரத்தின் சமீபத்திய வல்லரசாக பிராந்தியத்துக்கு புறத்தே சீனா எழுச்சியடைந்து வருகின்றது. இந்நிலையில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் அடிக்கடி இந்து சமுத்திர கடற்பரப்பில் பயணிப்பதுவும், இந்து சமுத்திர பிராந்திய நாடுகளை மையப்படுத்திய அமெரிக்காவின் இராணுவ பாதுகாப்பு கூட்டுக்களும் இந்து சமுத்திரத்தின் கொதிநிலையை அதிகரித்து வருகின்றது. இந்நிலையில் இக்கட்டுரை டுபாயில் நடைபெற்ற 2021 ஆம் ஆண்டுக்கான இந்து சமுத்திர மாநாட்டின் அரசியல் உரையாடல்களின் தன்மையை தேடுவதாக உருவாக்கப்பட்டுள்ளது.

டிசம்பர் 4–5(2021) திகதிகளில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் தலைநகர் அபுதாபியில் ஐந்தாவது இந்து சமுத்திர மாநாடு இடம்பெற்றது. குறித்த மாநாடு 'இந்து சமுத்திரம்: சூழலியல், பொருளாதாரம், தொற்றுநோய்' எனும் கருப்பொருளில் சுளுஜளு சிங்கப்பூர், இலங்கையின் தேசிய பாதுகாப்பு ஆய்வுகள் நிறுவனம், ஐக்கிய அரபு எமிரேட்ஸின் மூலோபாய ஆய்வுகள் மற்றும் ஆராய்ச்சிக்கான எமிரேட்ஸ் மையம் ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இம்மாநாட்டிற்கு 18 நாடுகளைச் சேர்ந்த வெளியுறவு அமைச்சர்களும், 30 நாடுகளில் இருந்து சுமார் 200 பிரதிநிதிகள் மற்றும் 50க்கும் மேற்பட்ட பேச்சாளர்கள் கலந்துகொண்டிருந்தார்கள். ஆரம்ப உரையை இலங்கை ஜனாதிபதி கோதடபய ராஜபக்ஷ நிகழ்த்தியிருந்ததுடன், இந்தியட சார்பில் இந்தியாவின் வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரும் கலந்துகொண்டிருந்தார். இந்து சமுத்திர மாநாடு இந்து சமுத்திர பிராந்தியத்தில் உள்ள நாடுகள் மற்றும் இந்து சமுத்திரத்தைப் பயன்படுத்தும் பிற நாடுகளுக்கு பொதுவான நலன்கள் மற்றும் கவலைகளைப் பற்றி விவாதிக்கும் நோக்கத்துடன் முதல் இந்து சமுத்திர மாநாடு 2016 இல் தொடங்கியது.

இந்து சமுத்திர நலன் சார்ந்த உரையாடல் இலங்கை அரசியல் வரலாற்றோடு இறுக்கமான பிணைப்பைக் கொண்டுள்ளது. ஐந்து தசாப்தங்களுக்கு முன்னர், 1971 இல், அப்போதைய பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க, ஐ.நா. பொதுச் சபையில், இந்து சமுத்திரத்தை அமைதி வலயமாக மாற்ற வேண்டும் என்று முன்மொழிந்தார். சீனாவைத் தவிர, பாதுகாப்பு கவுன்சிலில் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட அதிகாரங்களின் எதிர்ப்பையும் மீறி உலக அமைப்பு அவரது முன்மொழிவை மிகவும் தீவிரமாக பரிசீலித்தது. அன்றைய பனிப்போர் காலத்தில் அமெரிக்காவின் தலையீடு இந்து சமுத்திரப்பரப்பில் அதிகமாக காணப்பட்டமையால் சோவியத் ஒன்றியம் சார்பான நிலைப்பாட்டிலிருந்த சிறிமாவோ பண்டாரநாயக்க குறித்த முன்மொழிவை நகர்த்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. எனினும் தற்போது 1971 ஆம் ஆண்டிலிருந்து 2021 இல் இந்து சமுத்திர பிராந்தியத்தில் பல மாறுதல்கள் உருவாகியுள்ளன. குறிப்பாக, ஜிபூட்டியில் படைத்தளத்தை உருவாக்கியதன் மூலம் சீனாவும் இந்து சமுத்திரத்தில் தனது இராணுவ அக்கறையை உறுதி செய்துள்ளது. மேலும், பனிப்போர் காலப்பகுதியில் சோவியத் ஒன்றியம் சார்பான சோசலிச முகாமுக்கு ஆதரவாகவும் அமெரிக்காவிற்கு எதிராகவும் நின்ற பிராந்திய பெரிய சக்தியாகிய இந்தியா தற்போது அமெரிக்கா சார்பான நிலைப்பாட்டிலும், இந்து சமுத்திரத்தின் புதிய வீரராக நுழைந்துள்ள சீனாவிற்கு எதிரான நிலைப்பாட்டிலும் உள்ளது.

இம்மாறல்களை இந்து சமுத்திர 5 ஆவது மாநாட்டில் இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்துகொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கரின் உரையிலிருந்து தெளிவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அவரது உரை, மாறிவரும் அமெரிக்க மூலோபாய நிலைப்பாடு மற்றும் சீனாவின் எழுச்சி ஆகிய இரண்டு அபிவிருத்திகள் சமீபத்திய ஆண்டுகளில் இந்தியப் பெருங்கடலின் பரிணாம வளர்ச்சியில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை மையப்படுத்தியதாகவே காணப்பட்டது. ஜெய்சங்கர் முன்வைக்கும் தாக்கங்களை நுணுக்கமாக அவதானிப்பதனூடாகவே இந்து சமுத்திர மாநாட்டின் அரசியல் தாக்கங்களை அறிந்துகொள்ளக்கூடியதாக காணப்படும்.

ஒன்று, இந்தியா அமெரிக்காவை இந்து சமுத்திரத்தின் பாதுகாவலராக பிரகடனப்படுத்த முயல்கின்றது. அமெரிக்காவின் இந்தோ–பசுபிக் மூலோபாயம் மற்றும் குவாட் கட்டமைப்புக்களில் அமெரிக்காவுடன் இணைந்து இந்து சமுத்திர பிராந்தியத்தின் அமெரிக்காவின் முகமாக செயற்படும் இந்தியா தனது பங்காளியான அமெரிக்காவை இந்து சமுத்திரத்தின் பாதுகாவலனாய் பிரகடனப்படுத்துவதில் அதிக கரிசனை கொண்டு செயற்படுவதனை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உரையிலிருந்து தெளிவாக அறிந்துகொள்ள முடிகிறது. அமெரிக்காவை அதிக சுறுசுறுப்பான கூட்டாளியாகப் பாராட்டியுள்ள ஜெய்சங்கர் தனது உரையில் பெரும்பகுதியை அமெரிக்காவிற்கான நற்சான்றிதழை வழங்குவதற்காக ஒதுக்கி உள்ளார். அதாவது, அமெரிக்கா தன்னைப் பற்றியும் உலகத்தைப் பற்றியும் அதிக யதார்த்தத்தை நோக்கி நகர்கிறது. இது பன்முகத்தன்மையுடன் சரிசெய்தல், மறுசீரமைத்தல், அதன் உள்நாட்டு மறுமலர்ச்சி மற்றும் வெளிநாடுகளில் உள்ள கடமைகளுக்கு இடையிலான சமநிலையை மறுபரிசீலனை செய்கிறது. இது இந்து சமுத்திரத்தில் அதன் செல்வாக்கு எவ்வளவு வலுவாக உள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு, மரபுவழி கட்டுமானங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு செயலில் பங்குதாரர் ஆக்குகிறது. இது தாக்கங்களை ஏற்படுத்த முடியாது. அமெரிக்க அரசியலின் தனித்துவம் மற்றும் தன்னைத்தானே மீண்டும் கண்டுபிடிக்கும் திறனையும் நாம் மனதில் கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார். இது இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் இருப்பை ஆதரிக்கும் இந்தியாவின் உறுதியான எண்ணங்களையே உறுதி செய்கின்றது. இந்து சமுத்திரத்தில் டியாகோ கார்சியாவில் காணப்படும் அமெரிக்காவின் இராணுவத்தளத்தின் உரிமம் தொடர்பில் சச்சரவு எழுந்துள்ளது. இது மொரீஷியஸிற்குச் சொந்தமான நிலப்பரப்பாக ஐ.நா.வும் அறிவித்துள்ளது. இந்நிலையில் இந்து சமுத்திரத்தில் காணப்படும் அமெரிக்காவின் பெரிய இராணுவத்தளம் நிலைத்து நிற்குமா என்பதில் சந்தேகங்கள் காணப்படுகிறது. இவ்வாறானதொரு சூழலிலேயே இந்து சமுத்திரத்தில் அமெரிக்காவின் இருப்பை அவசியமானதாக பிரசாரப்படுத்துவதற்கான களமாகவே இந்து சமுத்திர மாநாட்டை இந்தியா பயன்படுத்தியுள்ளது என்பதையே உணர்ந்துகொள்ள முடிகிறது.

**இந்து சமுத்திரத்தில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீட்டை கடுமையாக இந்தியா விமர்சித்துள்ளது. இந்து சமுத்திரத்தின் பிராந்திய பாதுகாப்பிற்கும் உறுதிப்பாட்டுக்கும் கடுமையான நெருக்கடியாக சீனாவின் பிரசன்னத்தை சாடியுள்ளது. உலக அளவில் சீனா உருவானது குறித்து பேசிய ஜெய்சங்கர் அதன் வளர்ச்சியின் விளைவுகளை வலியுறுத்தினார். அதாவது சீனா தனது உள்நாட்டு தடையற்ற தன்மையை வெளி உலகிற்கு விரிவுபடுத்துகின்றமையால், அதன் வளர்ந்து வரும் திறன்களின் விளைவுகள் ஆழமானவை என சுட்டிக் காட்டியிருந்தார்**

இரண்டு, இந்து சமுத்திரத்தில் அதிகரித்து வரும் சீனாவின் தலையீட்டை கடுமையாக இந்தியா விமர்சித்துள்ளது. இந்து சமுத்திரத்தின் பிராந்திய பாதுகாப்பிற்கும் உறுதிப்பாட்டுக்கும் கடுமையான நெருக்கடியாக சீனாவின் பிரசன்னத்தை சாடியுள்ளது. உலக அளவில் சீனா உருவானது குறித்து பேசிய ஜெய்சங்கர் அதன் வளர்ச்சியின் விளைவுகளை வலியுறுத்தினார். அதாவது சீனா தனது உள்நாட்டு தடையற்ற தன்மையை வெளி உலகிற்கு விரிவுபடுத்துகின்றமையால், அதன் வளர்ந்து வரும் திறன்களின் விளைவுகள் ஆழமானவை என சுட்டிக்காட்டியிருந்தார். அதாவது ஜெய்சங்கர் தனது உரையில், இரண்டாவது முக்கிய போக்கு சீனாவின் எழுச்சி. உலக அளவில் ஒரு சக்தி உருவாவது ஒரு அசாதாரண நிகழ்வு. இது ஒரு வேறுபட்ட வகையான அரசியல் என்பது மாற்ற உணர்வை அதிகரிக்கிறது. சில ஒற்றுமைகள் சோவியத் ஒன்றியத்தை சார்ந்திருக்கலாம். ஆனால் இன்று சீனா கொண்டிருக்கும் உலகப் பொருளாதாரத்தின் மையத்தை அது ஒருபோதும் கொண்டிருக்கவில்லை. தனித்தனியாக ஆசியா முழுவதிலும் உள்ள பிராந்திய பிரச்சினைகளில் பதட்டங்கள் கூர்மையாகி வருவதையும் நாங்கள் கண்டிருக்கிறோம். கடந்த கால ஒப்பந்தங்கள் மற்றும் புரிதல்கள் இப்போது சில கேள்விக்குறிகளைக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. காலம் நிச்சயமாக பதில்களை வழங்கும் என்ற எச்சரிக்கையுடன் சீனா தொடர்பான எழுச்சியின் தாக்கத்தை விபரித்துள்ளார்.

மூன்று, குவாட் அமைப்பை இந்து சமுத்திர பிராந்தியத்தின் பாதுகாப்பு கூட்டாக முன்னகர்த்துவதற்கான முன்முயற்சிகளையும் ஜெய்சங்கர் இந்து சமுத்திர மாநாட்டில் எடுத்துள்ளமையை உணரக்கூடியதாக உள்ளது. இந்து சமுத்திர பிராந்தியத்தில் சீனாவின் அதிகரித்துவரும் இராணுவ பிரசன்னத்தின் பின்னணியில் சுதந்திரமான, திறந்த மற்றும் செழிப்பான இந்தோ–பசிபிக் பகுதியை உறுதிப்படுத்த வேண்டியதன் அவசியத்தைப் பற்றி பேசி, கடினமான காலங்களில் வலுவான சர்வதேச ஒத்துழைப்பு தேவை என்று வலியுறுத்திக் குறிப்பிட்டுள்ளார். அதற்கு முன்னுதாரணமாக அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவை உள்ளடக்கிய குவாட் அமைப்பு இந்து சமுத்திரத்தின் ஒரு முனையில் சிறந்த உதாரணம் என ஜெய்சங்கர் தனது உரையில் அடையாளப்படுத்தியுள்ளார். மேலும், அதன் செயற்பாடுகளையும் ஆழமாக தனது உரையில் விபரித்தார். அதாவது, ஒரு வருட இடைவெளியில் கடல்சார் பாதுகாப்பு, சைபர் பாதுகாப்பு, காலநிலை நடவடிக்கை, தடுப்பூசி ஒத்துழைப்பு, வளர்ந்துவரும் தொழில்நுட்பங்கள், உயர்கல்வி, நெகிழ்ச்சியான விநியோகச் சங்கிலிகள், தவறான தகவல், பலதரப்பு நிறுவனங்கள், அரைக்கடத்திகள் மற்றும் எதிர்–கடல் பாதுகாப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வலுவான நிகழ்ச்சி நிரலை உருவாக்கியுள்ளது. பயங்கரவாதம், மனிதாபிமான உதவி, பேரிடர் நிவாரணம் மற்றும் உள்கட்டமைப்பு மேம்பாடு விருப்பம் உள்ள இடத்தில் ஒரு வழி இருக்கும் என்ற பழைய பழமொழி, அதில் நிறைய உள்ளது என சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்திய வெளிவிவகார அமைச்சரின் இந்து சமுத்திர மாநாட்டு உரை அதிகம் அமெரிக்க முகவர் செயற்பாட்டையே வெளிப்படுத்தி நிற்கிறது. இந்து சமுத்திர பிராந்தியத்தின் பிராந்திய நலனுக்கு அப்பால் அதிகம் அமெரிக்காவின் இந்தோ–பசுபிக் மூலோபாய உரையாடல்களையே முன்னிலைப்படுத்தியுள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது. இது இந்து சமுத்திரத்தின் சுயாதீனத்திற்கு அபத்தமானதாகும். 21 ஆம் நூற்றாண்டு இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தினடிப்படையில் ஆசிய நூற்றாண்டாக அடையாளப்படுத்தப்படுகையில், இந்து சமுத்திர பிராந்திய சக்திவாய்ந்த அரசு வேறொரு அரசின் முகவராக செயற்படுவது இந்து சமுத்திரத்தின் சுயாதீனத்தை சவாலுக்குட்படுத்தக்கூடியது என்பது மறுக்க இயலாத நிலைமையாகும்.

Copyright

க.பிரசன்னா



# 1000 ரூபா வேதன அதிகரிப்பு

## தொழிலாளர்களின் வருமானத்தை அதிகரித்துள்ளதா?

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2021 ஆம் ஆண்டு வரவு – செலவுத் திட்டத்தின் மூலம் 1000 ரூபா சம்பள அதிகரிப்பு வழங்கப்படுமென அரசாங்கம் அறிவித்த பின்னர் பெருந்தோட்ட நிறுவனங்கள் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளன. கூட்டு ஒப்பந்தத்தில் இருந்து வெளியேறுதல், உயர் நீதிமன்றத்தில் வழக்கு மற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தொடர்ச்சியாக வழங்கப்படும் நெருக்கடிகள் என பல்வேறு பிரச்சினைகள் எழுந்தன. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டு ஒரு வருடம் கடந்துள்ள நிலையில், இன்னும் அவர்கள் அத்தொகையினை பெற்றுக்கொள்ளவில்லை. தினசரி 20 கிலோ கொழுந்து பறித்தால் மாத்திரமே 1000 ரூபா வழங்கப்படுமென கம்பனிகள் அறிவித்துள்ளன.

எனவே தற்போது அரசாங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் என்பன தொழிலாளர்களை நிர்க்கதி நிலைக்குத் தள்ளியுள்ளதால் தோட்ட நிர்வாகங்கள் தங்களுடைய விருப்பத்துக்கு தொழிலாளர்கள் மீது அழுத்தங்களை பிரயோகிக்கின்றன. இந்நிலையில் 1000 ரூபா தினசரி சம்பள அதிகரிப்புக்குப் பின்னர் தொழிலாளர்களுடைய வருமானம் அதிகரித்துள்ளதா? என்பது தொடர்பில் ஆராய முற்பட்ட வேளை அவர்களுடைய வருமானம் சரிபாதியாக குறைந்துள்ளமையை அவதானிக்க முடிந்தது.

2017 – 2021 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பெருந்தோட்டத் தொழிலாளர் ஒருவர் மாதாந்தம் பெற்றுக் கொண்ட வருமானம், செலவீனம் மற்றும் மொத்த சம்பளம் என்ற அடிப்படையில் சம்பளச் சீட்டை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் 2017 ஆம் ஆண்டு பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த வருமானம் 22,679 ரூபாவாக இருக்கும் நிலையில், 2021 ஆம் ஆண்டு அத்தொகை 13,000 ரூபாவாக குறைவடைந்துள்ளது. இதேவேளை தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால் மொத்தக் கழிவுகள் உட்பட மிகுதிச் சம்பளமாக தொழிலாளி ஒருவருக்கு 2017 ஆம் ஆண்டு 17,880 ரூபா கிடைக்கப்பெற்ற அதேவேளை, 2021 ஆம் ஆண்டு 8570 ரூபாவே கிடைக்கப்பெற்றுள்ளது.

**2017 ஆம் ஆண்டு பெற்றுக் கொள்ளப்பட்ட மொத்த வருமானம் 22,679 ரூபாவாக இருக்கும் நிலையில் 2021 ஆம் ஆண்டு அத்தொகை 13,000 ரூபாவாக குறைவடைந்துள்ளது. இதேவேளை தற்போது அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வு மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளமையால் மொத்தக் கழிவுகள் உட்பட மிகுதிச் சம்பளமாக தொழிலாளி ஒருவருக்கு 2017 ஆம் ஆண்டு 17,880 ரூபா கிடைக்கப்பெற்ற அதேவேளை, 2021 ஆம் ஆண்டு 8570 ரூபாவே கிடைக்கப் பெற்றுள்ளது**

தோட்ட தொழிலாளியின் மாத சம்பள விபரம்

| விடயம் | வருடம் 2017 | 2018 | 2019 | 2020 | 2021 |
|---|---|---|---|---|---|
| வேலை நாட்கள் | 29 | 22 | 23 | 26 | 22 |
| மேலதிக கிலோ | 42 | 27 | 41 | 68 | – |
| மேலதிக நேரம் | 11 | – | 3 | – | – |
| **வருமானம்** | | | | | |
| அறுவடை | 3780.00 | 2800.00 | 16100.00 | 18200.00 | 13300.00 |
| மேலதிக கிலோ | 14500.00 | 11000.00 | 1640.00 | 2720.00 | – |
| கைகாசு கிலோ | 1050.00 | 675.00 | – | – | – |
| உற்பத்தி திறன் ஊக்குவிப்பு | 870.00 | 690.00 | 1150.00 | 1300.00 | – |
| வரவு ஊக்குவிப்பு | 859.43 | – | 328.11 | – | – |
| மேலதிக ரேட் | 1620.00 | 1290.00 | – | – | – |
| மொத்த வருமானம் | 22679.43 | 16455.00 | 19218.11 | 22220.00 | 13300.00 |
| மொத்தக்கழிவு | 4795.90 | 5718.00 | 4149.45 | 6312.90 | 4727.90 |
| மிகுதிச் சம்பளம் | 17880.00 | 11770.00 | 15070.00 | 15910.00 | 8570.00 |

தகவல் : தொழிலாளர் மாத சம்பளச் சீட்டு




பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 2017 – 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் அறுவடை, மேலதிக கிலோ, கைக்காசு கிலோ, உற்பத்தித் திறன் ஊக்குவிப்பு, வரவு ஊக்குவிப்பு, மேலதிக ரேட் என பல்வேறு வழிகளில் வருமானத்தை பெற்றுக்கொள்வதற்கு கூட்டு ஒப்பந்தத்தின் மூலம் வழியேற்படுத்தப்பட்டாலும் 2021 ஆம் ஆண்டு முதல் கூட்டு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளமையால் மேலதிக வருமானம் எவையும் தொழிலாளர்களினால் பெற்றுக்கொள்ளப் படுவதில்லை.

2016 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு அடிப்படைச் சம்பளமாக 5000 ரூபாவும் விலைக்கேற்ற கொடுப்பனவாக 30 ரூபாவும் உற்பத்தித் திறன் கொடுப்பனவாக 140 ரூபாவும் வரவுக் கொடுப்பனவாக 60 ரூபாவும் என மொத்தமாக 730 ரூபா தினசரி ஊதியமாக வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு அண்ணளவாக 22,679 ரூபாவினை பெற்றுக்கொள்ள முடிந்தது.

2019 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பெருந்தோட்டத் தொழிலாளர் ஒருவருக்கு அடிப்படைச் சம்பளமாக 700 ரூபாவும் விலைக்கேற்ற கொடுப்பனவாக 50 ரூபாவும் என 750 ரூபா வழங்கப்பட்டது. அதனடிப்படையில் தோட்டத் தொழிலாளியொருவர் 2019 ஆம் ஆண்டு 19,218 ரூபாவும் 2020 ஆம் ஆண்டு 22,220 ரூபாவும் அண்ணளவாக பெற்றுக்கொள்ள முடிந்தது. 2021 ஆம் ஆண்டு கூட்டு ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்ட பின்னர் வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. எனவே அரசியல் நோக்கங்களுக்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா தினசரி ஊதியம் வழங்கப்படுமெனக் கூறி ஏமாற்றப்பட்டுள்ளனர்.

தற்போதைய நிலைவரப்படி மாதம் 22 நாட்கள் வேலைநாட்களாகக் கொண்டுள்ள ஒருவர் 22,000 ரூபாவினை வருமானமாகப் பெறவேண்டும். ஆனால் பறிக்கும் கொழுந்துக்கேற்பவே ஊதியம் வழங்கப்படுவதால் மாதாந்தம் 10,000 க்கும் குறைவான தொகையினையே ஊதியமாக பெற்றுக்கொள்ள முடிந்துள்ளது. எனவே தோட்டத் தொழிலாளர்களின் வேதனம் 1000 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது தொடர்பில் அரசாங்கம் பெருமிதம் கொண்டாலும் நடைமுறையில் தொழிலாளர்கள் அவற்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது.


இப்பிரச்சினை தொடர்பாக பெருந்தோட்ட கம்பனிகளுக்கு அழுத்தம் கொடுப்பதற்கு அரசாங்கம் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கவில்லை. தொழிற்சங்கங்களுக்கான சந்தா நிறுத்தப்பட்டது முதல் தோட்டத் தொழிலாளர்களின் நலன்கள் மற்றும் பிரச்சினைகளில் தொழிற்சங்கங்கள் அக்கறை காட்டுவது இல்லை. இப்போது தனித்துவிடப்பட்டவர்களாகவே தொழிலாளர்கள் இருக்கின்றனர். தற்போதைய வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கேற்ப வேதனம் அதிகரிக்கப்பட வேண்டுமென பல்வேறு துறையினைச் சேர்ந்தவர்கள் அரசாங்கத்துக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுத்துவரும் நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு குரல் கொடுப்பதற்கு எவரும் இல்லை. மீண்டும் கூட்டு ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டால் முண்டியடித்துக்கொண்டு தொழிற்சங்கங்கள் தொழிலாளர்களை தேடி வரலாம்.

கூட்டு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட வேதனம்

| விபரம் | 2016 | 2019 | 2021 |
|---|---|---|---|
| அடிப்படைச் சம்பளம் | 500.00 | 700.00 | கூட்டு ஒப்பந்தம் இரத்து |
| விலைக்கேற்ற கொடுப்பனவு | 30.00 | 50.00 | |
| உற்பத்தி திறன் கொடுப்பனவு | 140.00 | – | |
| வரவுக் கொடுப்பனவு | 60.00 | – | |
| மொத்தச் சம்பளம் | 730.00 | 750.00 | |

தொழிலாளர்களின் வேதனம் உள்ளிட்ட ஏனைய சேமநலன்களை தீர்மானிக்கும் வகையில் உருவாக்கப்பட்ட கூட்டு ஒப்பந்தம் நடைமுறையில் இருந்த போது கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் தொழிற்சங்கங்களைத் தவிர ஏனைய தொழிற்சங்கங்கள் ஒப்பந்தத்தில் இருந்து சகலரும் வெளியேற வேண்டுமென தெரிவித்திருந்தன. அவ்வாறு கூட்டு ஒப்பந்தத்திலிருந்து வெளியேறும் பட்சத்தில் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்திருந்தன. ஆனால் தற்போது கூட்டு ஒப்பந்தம் முற்றாக இரத்துச் செய்யப்பட்டுள்ள நிலையில் எவ்வித ஆதரவும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. தொழிலாளர்களிடம் இதுவரை பெற்றுக்கொண்ட சந்தாப் பணம் நிறுத்தப்பட்ட பின்னர் சகலதையும் தொழிற்சங்கங்கள் முடித்துக் கொண்டுள்ளன.

தற்போது ஒரு கிலோ பச்சை தேயிலை கொழுந்துக்கு 50 ரூபா வழங்கப்படுகின்றது. தினசரி பறிக்கும் கொழுந்தின் அளவுக்கு ஏற்ப ஊதியம் வழங்கப்படுகின்றது. தேயிலைத் தோட்டங்களுக்கு உரங்கள், களைகொல்லிகள் என்பன இல்லாமையினால் விளைச்சல் மிகக் குறைவாக இருப்பதுடன், தேயிலைத் தோட்டங்களும் அருகிவரும் நிலை காணப்படுகின்றது. எனவே 1000 ரூபா என்ற அரசியல் இலாபத்துக்காக தோட்டத் தொழிலாளர்கள் அடகு வைக்கப்பட்டுள்ளனர்.




Printed at 267, Raja Mawatha , Ekala , Ja-ela and published by Asian Media Publications (Pvt) Ltd. at No 185, Grand pass Road, colombo -14 on Sunday 12th of December 2021.

சாளரம்

ஞாயிறு தினக்குரல்

ஞாயிறு, டிசம்பர் 12 , 2021




# 17 வருடங்களாக அடையாளம் காணப்படாத மனித உடற்பாகங்கள்


• க.பிரசன்னா

2004 ஆம் ஆண்டு சுனாமி இலங்கை சந்தித்த பாரிய பேரிடராகும். பல மனித உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. பலர் அங்கவீனமானர். பலர் தங்கள் சொந்தங்களை இழந்தனர். பலர் தங்கள் சொத்துக்களையும் இழந்தனர். உலக மக்களே எதிர்பார்க்காத ஒரு சேரகத்தை சுனாமி அலை ஏற்படுத்தியது. இலங்கை சுனாமியால் பாதிக்கப்பட்டு 17 வருடங்களை கடக்கின்ற நிலையிலும் சுனாமியால் ஏற்பட்ட அதிர்ச்சியிலிருந்து மக்கள் மீள்வது கடினமாக இருக்கின்றது. அதேவேளை சுனாமி இன்னும் இனங்காணப்பட முடியாத இழப்புகளை எம்மிடம் விட்டு சென்றிருக்கின்றது.


2004 ஆம் ஆண்டு சுனாமியினால் உயிர்நீத்த பலரின் உடல்களை இறுதி வரையில் இடையாம் காணப்பட முடியாமல் இறுதிக்கிரியைகள் நடத்தி முடிக்கப்பட்ட சம்பவங்கள் இருக்கின்றன. சிலரின் உடல்கள் இறுதி வரையிலும் கிடைக்கப்பெறவில்லை. அதேபோலவே றுஹுண பல்கலைக்கழகத்தில் கடந்த 15 வருடங்களாக சேமித்து வைக்கப்பட்டுள்ள சுனாமியினால் உயிர் நீத்தவர்களின் உடற்கூறுகளை இன்றுவரையும் எவராலும் அடையாளம் காண முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுனாமியினால் உயிர்நீத்தவர்களின் சுமார் 117 உடற் அங்கப் பகுதிகள் இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் இருப்பதாக றுஹுண பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இவ்விடயத்தை எம்மால் விளங்கிக் கொள்ள முடிந்தது.

இலங்கையை தாக்கிய 2004 ஆம் ஆண்டு சுனாமியினால் 31,229 மரணங்கள் ஏற்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் 4093 பேர் காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் 21,411 பேர் காயமடைந்திருந்ததாக உறுதிப்படுத்தப்பட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இவற்றில் மரணித்தவர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்களின் 117 உடற்கூறுகள் றுஹுண பல்கலைக்கழகத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.



UNIVERSITY OF RUHUNA



Information Officer
University of Ruhuna

அவ்வாறு றுஹுண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள 117 உடற்கூறுகளும் எலும்புகளாக மாத்திரம் காணப்படுகின்றது. எலும்புகளை மாத்திரம் வைத்துக் கொண்டு பொது மக்களால் அவற்றை அடையாளம் காண்பது மிகவும் கடினமாகும். இவற்றை அடையாளம் காண்பது சாத்தியமில்லை என்பதால் உடற்கூறுகள் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் சேமித்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்படாத 117 உடற்கூறுகளையும் பல்கலைக்கழகத்தில் கடந்த 15 வருடங்களாக சேமித்து வைத்திருப்பதால் இதுவரை எவ்வித பிரச்சினைகளும் எழவில்லை. இவ்வாறு சேமித்து வைக்கப்பட்டுள்ள உடற்கூறுகளை எதிர்காலத்தில் கல்வி மற்றும் ஆராய்ச்சிகளுக்கு பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கடந்த 15 வருடங்களாக பல்கலைக்கழகத்தில் இந்த உடற்கூறுகளை பாதுகாப்பதற்காக எவ்வித நிதியும் அரசாங்கத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை என்பதுடன் சமூக நலன்கருதி அவை பாதுகாக்கப்படுகின்றன.

அடையாளம் காணப்படாத உடற்கூறுகள் தொடர்பில் அரசாங்கம் எவ்வித தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு அடையாளம் காணப்படாத உடற்கூறுகளை சட்டரீதியாக அகற்றுவதற்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக வினவிய போது பின்வரும் தகவல்கள் வழங்கப்பட்டிருந்தன. சுனாமிக்கு பிந்தைய காலத்தில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் ஒரு பகுதியாக எலும்புகள் சேகரிக்கப்பட்டன. இந்த எலும்புகள் முறையாக பாதுகாக்கப்பட்டு நீண்ட காலத்துக்கு சேமிக்கப்படும். அதனால் இந்த எலும்புத் துண்டுகள் அகற்றப்படாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் இத்தகவல்கள் றுஹுண பல்கலைக்கழகத்தின் தடயவியல் மருத்துவ பிரிவினால் வழங்கப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2004 ஆம் ஆண்டு சுனாமி அனர்த்தத்தினால் உயிரிழந்த மற்றும் காணமல் போனதாக கருதப்படும் உடலகள் தொடர்பிலான விசாரணைகள் முடிவுறுத்தப்பட்டாலும் அடையாளம் காணப்படாத இவ்வாறான உடற்கூறுகளினால் சுனாமியினால் ஏற்பட்ட இழப்புகள் தொடர்பில் எம்மால் ஊகிக்க முடிகின்றது.









# சத்திர சிகிச்சை பிரசவம் காலத்தின் தேவையா?

இன்றைய உலகில் ஐந்தில் ஒரு கர்ப்பிணித் தாய் தனது குழந்தையை சத்திர சிகிச்சை பிரசவம் மூலமே பெற்றுக் கொள்கின்றார்.

சத்திர சிகிச்சை பிரசவம் என்பது மக்கள் மத்தியிலே அதிக அளவில் பேசப்படுகின்ற ஒரு சொல்லாக மாறி விட்டது. இந்த சத்திர சிகிச்சை பிரசவம் பல்வேறு நன்மைகளை மருத்துவ உலகுக்கு அளித்து இருக்கின்றது.

சத்திர சிகிச்சை பிரசவம் வரலாற்றைப் பார்த்தால் இது வரலாற்றில் பல ஆயிரக்கணக்கான வருடங்களாக பழக்கத்தில் உள்ளதாக தெரிகிறது.

அந்தக் காலத்தில் போதியளவு சத்திரசிகிச்சை நுணுக்கங்கள், மயக்க மருந்துகள் மற்றும் நுண்ணுயிர் கொல்லிகள் என்பன இல்லாத பொழுது ஒரு பிரசவத்தில் குழந்தை உயிராபத்தை எதிர் நோக்கி இருந்தால், அங்கே தாயின் வயிற்றை கிழித்து, குழந்தையை வெளியே எடுக்கும் முறையே இருந்தது.

இதன் பின்னர் அதிகளவு குருதிப் போக்கு, கிருமித்தொற்றினால் தாய் மரணம் அடைகின்ற சந்தர்ப்பங்களே அதிகம்.

இன்றைய காலத்தில் மிகவும் ஒழுங்கமைக்கப்பட்ட விதத்தில் சத்திர சிகிச்சை பிரசவங்கள் செய்யப்படுகின்றன. இது ஒரு மிகவும் பெரிய சத்திரசிகிச்சை ஆகும்.

சத்திர சிகிச்சை பிரசவங்களுடன் குருதிப்போக்கு, மயக்க மருந்துகளினால் ஏற்படுகின்ற பக்க விளைவுகள், கிருமித்தொற்று, மாறாத புண், நீண்டநாள் மாறாத வலி, அடுத்த பிரசவமும் சத்திரசிகிச்சை பிரசவமாக இருத்தல் போன்ற பல்வேறு சிக்கல்கள் இணைந்துள்ளன.

இரண்டு வகையான காரணங்களுக்காக சத்திர சிகிச்சை பிரசவங்கள் செய்யப்படுகின்றன.

- திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சை பிரசவம் (Elective caesarean section).
- தேவையின் நிமித்தம் மருத்துவ காரணங்களுக்காக, அவசரமாக செய்யப்படுகின்ற சத்திர சிகிச்சை பிரசவம் (Emergency caesarean section).

பாதுகாப்பான முறையிலேயே இன்றைய நாட்களில் சிசேரியன் சத்திர சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. விசேட வைத்திய நிபுணர்களின் கண்காணிப்பில், பயிற்சி பெற்ற மருத்



துவர்கள் இந்தச் சத்திரசிகிச்சையை செய்கின்றார்கள்.

**சத்திரசிகிச்சை பிரசவத்துக்கு முன்னரான தயார்படுத்தல்**

- திட்டமிடப்பட்ட சத்திர சிகிச்சைச் பிரசவம் பொதுவாக முப்பத்தியெட்டு கர்ப்ப வாரத்தின் பின்னரே செய்யப்படும்.
- தாயின் குருதியில் ஹீமோகுளோபின் (Haemoglobin) அளவு சரிபார்க்கப்படும்.
- சிசு கருப்பையில் இருக்கும் நிலை ஸ்கேன் பரிசோதனை மூலம் அறியப்படும்.
- ஆறு மணித்தியாலங்கள் வாய்வழியாக எதுவும் எடுக்காமல் இருப்பது சிறந்தது.
- கர்ப்பிணிக்கு இரைப்பையில் உள்ள உணவுகள் புரைக்கேறுதலை தடுப்பதற்காக சில ஊசி மருந்துகள் அல்லது குளிசைகள் கொடுக்கப்படும்.
- தாயினுடைய சம்மதம் சத்திர சிகிச்சைக்கு முன்னர் பெறப்படும்

மயக்க மருந்து கொடுக்கும் வைத்தியர் (Anaethetist) உங்களுடன் கதைத்து உங்களுக்கு பொருத்தமான மயக்க மருந்து முறையை தேர்ந்தெடுப்பார்கள்.

பெரும்பாலும் இடுப்புக்கு கீழே விறைப்பை ஏற்படுத்துவதற்காக, முதுகிலே ஒரு ஊசி போடப்பட்டு (Spinal Anaethesia), சத்திர சிகிச்சை பிரசவங்கள் செய்யப்படும். மிக அரிதான சந்தர்ப்பங்களில் கர்ப்பவதியை முற்றாக மயக்கிய பின்னர் செய்யப்படலாம்.

- சத்திரசிகிச்சை செய்யும் பொழுது உங்களுக்கு அந்த சத்திரசிகிச்சை அறையில் நிகழும் சம்பவங்கள், மருத்துவர்கள்,தாதியர்களினது உரையாடல்கள் கேட்கலாம்.
- ஆனால் உங்களுக்கு நோ இருக்காது. தொடுகை உணர்ச்சிகள் இருக்கலாம். பிள்ளையை கர்ப்பப்பையில் இருந்து வெளியே எடுக்கும் பொழுது, நீங்கள் சில நேரங்களில் வயிற்றில் ஒரு விதமான அழுத்தத்தை அனுபவிக்கலாம்.
- சத்திர சிகிச்சை நடந்து முடிந்த பின், உங்கள் குழந்தைக்கு நீங்கள் உடனடியாகவே தாய்ப்பால் கொடுக்கலாம்.

**சத்திரசிகிச்சை பிரசவத்தின் பின்னர்**

- சத்திரசிகிச்சை முடிந்த பின்னர்,நீங்கள் அடுத்த 6 மணித்தியாலங்கள் மிகவும் கவனமாக பராமரிக்க படுவீர்கள்.
- முதுகிலே போடப்பட்ட விறைப்பூசியினுடைய விளைவுகள் நான்கு மணித்தியாலங்கள் இருக்கலாம். நோவை குறைப்பதற்காக வலி நிவாரணிகள் (Pain killers) இதன் பின்னர் உங்களுக்கு தரப்படும்.
- ஆறு மணித்தியாலங்களின் பின் நீங்கள் உணவு ,நீராகாரம் எடுக்க அனுமதிக்கப் படுவீர்கள்.
- இந்த நேரத்தில் நீங்கள் தாய்ப்பால் கொடுக்கலாம்.
- பின்னர் உங்களுக்கு பொருத்தப்பட்ட சிறுநீர் அகற்றுவதற்கான சிறுகுழாய் (Urinary catheter) அகற்றப்படும். நீங்கள் மெதுவாக படுக்கையிலிருந்து எழுந்து உங்களுடைய நாளந்த செயல்பாடுகளை மெதுவாக ஆரம்பிக்கலாம்.
- அதிகளவு நீர் ஆகாரத்தை எடுப்பதாலும், விரைவாக படுக்கையில் இருந்து எழுந்து நடந்து திரியும் பொழுதும் கால்களில் ரத்தம் கட்டி படுதல்( Deep Vein Thrombosis DVT) போன்ற பிரச்சனைகளை தவிர்க்கலாம்.
- மணித்தியாலங்களில் பின்னர் நீங்கள் வீடு செல்ல அனுமதிக்கப் படலாம்.

**சத்திரசிகிச்சை பிரசவங்கள் இன்றைய காலத்தின் தேவையா?**

தாய் அல்லது சேய் அல்லது இருவரினதும் ஆரோக்கியத்துக்கு சுகப்பிரசவத்தால் பாதிப்பு ஏற்படும்பொழுதே, சத்திரசிகிச்சை பிரசவங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. சத்திர சிகிச்சை பிரசவங்கள் இன்று காலத்தின் தேவை கருதி அதிகரித்துள்ளன.

மருத்துவ காரணங்களினால் ஒரு சுகப்பிரசவம் செய்யமுடியாத பொழுது, திட்டமிட்ட சத்திர சிகிச்சை பிரசவம் செய்யப்படும், உதாரணமாக

- கருவில் உள்ள சிசுவின் பொருத்தமற்ற நிலை
- அதிகூடிய குருதியமுக்கம்
- கர்ப்பகால நீரிழிவு

**பெரும்பாலான கர்ப்பவதிகள் பெரும்பாலும் சாதாரண பிரசாரத்தினை மேற்கொள்ள முடியும்.**

- உரிய முறையில் அவர்களை மன உறுதியுள்ளவர்களாகவும், உடல் வலிமையுள்ளவர்களாகவும் தயார் படுத்துதல் முக்கியமானதாகும்.
- பெரும்பாலானவர்களுக்கு பிரசவ வலி தொடர்பான பயமே (Tocophobia) அதிகம்.

அந்த பயத்தை நீக்குவதும் பிரசவ வலியை குறைப்பதற்கான வலி நிவாரணிகளை கொடுத்தால் சிசேரியன் சத்திரசிகிச்சை பிரசவங்களில் எண்ணிக்கை குறைவடையலாம்.



வைத்தியர்.க.குருபரன்
பெண்நோயியல் மகப்பேற்று வைத்தியநிபுணர்
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை சிரேஸ்ட விரிவுரையாளர்
யாழ் மருத்துவபீடம்

தினக்குரல்

மஞ்சரி

ஞாயிறு, டிசம்பர் 12 , 2021

மக்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும் 26



# ஓமென்னும் பேரோசை உள்ளாடும் ஒரு கூத்தன்

மு.பொ

சென்ற வாரத் தொடர்ச்சி..

இன்னும் அவன் எல்லையில்லா
போராட்டக்காரன் தன்
பெருமூச்சை உள்ளிழுத்துக்
கும்பகித்தால் போதும் இந்தப்
பேர் வெளியில் சுழல்கின்ற
கோடிக்கணக்கான
ஞாயிற்றுத் தொகுதிகளும்
பால்வீதிச் சிலிர்ப்புகளும்
அவவற்றின் பின் ஒவ்வொன்றாய்
கும்மி அடித்து வரும்
கோளநிரைக் கூட்டமென்று
விரிகின்ற இப்பேரண்டம்
அவன் நெற்றிக் கண்மின் வெட்டில்
பஸ்பமாய் மாறிப் பின்
அவன் திருவடியில் திருநீறாம்!

எஸ்குமாய் எதற்குள்ளுமாய்
இருக்கின்ற பேராளன்
தன்னை நிறுவுதற்கு
என்றுமே முயன்றதில்லை!
தரிப்பதற்கு ஏதுமின்றி
வரிப்புலியின் தோல் உடுப்பான்
சுடுகாடு அவன் இருக்குமிடம்
சுட்டெரிக்கும் நெற்றிக்கண்
கெட்டவர் முன் தீப்பற்றும்!
தவமென்றால் அவனை மிஞ்சும்
தவசிகள் இங்காருண்டு?
புற்றுக்கள் சூழ்ந்திருக்க
புதைந்திருப்பான் நிஷ்டைக்குள்!
அப்பொழுதும் அவன் உடலின்
வெக்கைக்கு தணிகையென
உச்சிக்குள் கங்கை நல்லாள்
சிவலிங்கத் திருமுழுக்கின்
இன் கிளர்வாய் பெருக்கெடுப்பாள்!
இவனுக்கும் குருவுண்டோ?
ஏனில்லை? மாயவனே
இவன் குருவாம்! அவ்வாறே
மாயவனின் குருவாக
இருப்பவனோ இச்சிவனே!
பரஸ்பர புரிந்துணர்வில்
காப்பவனும் அழிப்பவனும்
கை குலுக்கும் பரிமாற்றம்!
வைஷ்ணவம் சைவமென்று
வைதீகர் சண்டையிட
அன்னாரை எள்ளுதல் போல்
'இராமலிங்கம் நாம்' என்று
இவர் இணைதல் அற்புதமே!

ஆண்டிபோல் திரிபவனின்
ஆழங்கள் அறியாது
அவமதித்தோர் பலருண்டு!
அதை அறிந்த மாயவனே
அன்னார்க்கு அறிவூட்டி
தன் குருவின் மேன்மை சொல்ல
ஆண்டியாய் திரிபவனின்
அடி முடியைத் தேடுகின்ற
போட்டி ஒன்றை முன்வைத்தான்!
அடிதேடும் பாத்திரத்தை
தான் எடுத்தான் மாயவனும்!
முடிதேடும் பாத்திரத்தை
பிரம்மாவும் மேற்கொண்டார்!

மாயவனோ அடிதேடி
பாதாளம் வரை சென்றும்
பயனின்றித் திரும்பிவிட்டார்!
முடிதேடிப் போன பிரம்மா
ஏழுலகிற்கு அப்பாலும்
போயெதையும் காணாது
வெறுப்படைந்து வானுலகை
அண்ணாந்து பார்த்திருக்க
அங்கிருந்தோர் தாழம்பூ
கீழ் இறங்கி வருவதனை
கண்டேனே அதை அணுகி
'எங்கிருந்து வருகின்றாய்? '
என்று பிரம்மா கேட்டவுடன்
'ஈசன் திருமுடியில்
இருந்து இறங்கி வருகின்றேன் '
என்றதுவே தாழம்பூ!
பிரம்மாவின் முகத்தினிலே
பெருமகிழ்ச்சித் தாண்டவமே!

'கண்டுவிட்டேன்! கண்டுவிட்டேன்!
சிவன் முடியைக் கண்டுவிட்டேன்!
அதற்குரிய சாட்சி சொல்ல
தாழம்பூ எனக்குண்டு'
என்றந்தப் பிரம்மாவும்
எடுத்துரைத்துக் கண்சிமிட்ட
அதில் மயங்கி தாழம்பூ
பொய்ச் சாட்சி கிசைந்ததுவே!

பிரம்மாவின் கோணங்கித்
தாண்டவத்தைக் கண்டறிந்த
மாயவனோ உள்நகைத்தான்
எழப்போகும் ருத்திரனின்
தாண்டவத்தை எதிர்பார்த்து!

**சென்றவாரம் இக்கவியின் தலைப்பு 'ஓமென்னும் பேரோசை உள்ளாடும் ஒரு கூத்தன்'எனும் தலைப்பு'ஓமென்னும் பேராசை உள்ளாடும் ஒரு கூத்தன்'என்று தவறுதலாக பிரசுரமாகிவிட்டது.**

ஆ.ர்

# ஈழத்தில் புதையுண்டு கிடக்கும்
## எண்ணற்ற வரலாறுகளை தேடியெடுத்து
## எதிர்கால வெற்றிக்கு ஆயுதமாக்க வேண்டியது அவசியம்

● பாக்கியராஜா மோகனதாஸ்

**ஈழத்து மண் இரத்தம் குடித்த மண். வலிகளை சுமந்த மண். ஏக்கமும் ஆசையும் தீராப் பொருளாகி வீரமும் மானமும் துரோகத்தால் புதையுண்டு போன மண் அதற்கான விடுதலைத் தாகம் குறையாது நீதியை எழுத்துக்களின் வழியேயும் தேடிக்கொண்டிருக்கும். அங்கே உயிர்சாகாத எண்ணற்ற படைப்புக்களும் கதைகளும் கவியும் எழுத வேண்டிய எண்ணற்ற வரலாறுகளும் புதையுண்டு கிடைக்கும். அவற்றை எல்லாம் தேடித்தேடியெடுத்து எதிர்கால வெற்றிக்கு ஆயுதமாக்கி வைக்க நமது ஈழத்து இலக்கியக்காரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழிலக்கியவாதிகளின் தலையாயக் கடமை என்றே எண்ணுகிறேன் என தமிழ்நாடு முகில் பதிப்பக பதிப்பாசிரியரும் கவிஞரும் எழுத்தாளரும் பாடலாசிரியருமான வித்யாசாகர், கவியரங்கத்திற்கு தலைமை வகிக்க சம்மாந்துறை வந்திருக்கையில் பேராளுமை ஞாயிறு தினக்குரலுக்கு அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணல் வருமாறு,**


**கேள்வி : புதுச்சேரியைப் பூர்வீகமாகக் கொண்டு சென்னையில் பிறந்து வளர்ந்து, தற்போது குவைத் நாட்டில் இயந்திரப் பொறியியல் துறையில் தலைமை அதிகாரியாக பணிபுரியும் நிலையில், இலக்கியச் செயற்பாடுகளை முன்னெடுக்க காலம் கை கொடுக்கிறதா ?**


பதில் : நாம் பிறந்த மண்ணில் கற்று உயர்ந்து பணியாற்றி என்னவாக சாதித்தோம் என்பதைக் காட்டிலும்; எனது மக்களுக்கும் தேசத்திற்கும் மக்களின் நன்மைக்காக நானென்ன செய்தேன்(?) என்பதும் மிக முக்கிய ஒன்றாகும்.

பொதுவாக கடமை தவறாது பணியாற்றுவதும், ஒரு பொறியியல் துறையின் மேலாளராகவும் தணிக்கையாளராகவும் இருப்பதும் அதன் தலைமை பொறுப்பின் அதிர்வுகளை இயன்றளவு சிறப்பாக பதிவு செய்துவிட்டு, பின்னர் ஒரு தலைமைச் சார்ந்து நான் உணர்ந்த கற்றறிந்த மேலாண்மைத் தன்மைகளை அறிவோடு இலக்கியமாக பயன்படுத்தவும் எனது இருவேறு அனுபவங்களும் சாத்தியமாக இருப்பதே உண்மையாகும்.

பொதுவானவொரு எல்லோருக்கும் பொருந்தும் படியான சட்டதிட்டங்களை நேர்த்தியாக வடித்திருந்தாலும் அவற்றை உரிய நேரத்தில் செயலாற்ற பணிப்பதும் மிக நல்ல பொருண்மையோடு முடிப்பதுமே மேலாண்மை அமைப்பின் முக்கிய நோக்கமாகும்; அதன் சாராம்சமாக இலக்கிய உயரத்திற்கான சாத்தியக்கூறுகளை உண்டாக்குவதும் இயந்திரப் பொறியியல் சார்ந்த தொழிலின் சாதனைக்குரிய நேரத்தைக் கட்டமைப்பதும் நல்லவொரு படைப்பாளிக்கும் மேலாளருக்குமான கடமை என்றே உணர்கிறேன்.






**கேள்வி : உலகளவில் பல்வேறு நாடுகளுக்குச் சென்று தமிழ்ப்பணிகளை முன்னெடுத்து செயற்படும் தாங்கள், சமகால படைப்பாளர்களின் படைப்புகள் குறித்து கூற விரும்புவது ?**

பதில் : வாழ்தலின் வாசனையில் எழுத்துக்களை வார்ப்பதும், எழுதிய பின் பண்புகள் உணர்ந்து தன்னை செதுக்கிக் கொள்பவனும், சமகால வாழ்வின் கண்ணாடியாக விளங்கும் படைப்புகளை தருபவர்களாகவும் படைப்பாளிகள் இருத்தல் வேண்டும். ஒரு சீர்மிகு பாதையில் வாழ்க்கையை அமைக்க முடிந்தவரின் எழுத்து அத்தகு பாதிப்பை எமது மண்ணிலும் ஏற்படுத்தக்கூடும் என்பதால் எழுதுபவர்கள் சீர்திருத்த சிந்தனைகளை முழுமையாக கொண்டிருப்பது வளரும் படைப்பாளிகளுக்கு உகந்தது. ஆனால், அங்கனம் இருக்க வேண்டும் என்பதை அறியும் முன்னரே எழுத்தை ஆயுதமாக்கி போராடும் பல படைப்பாளிகள் இளைய இரத்தம் பாயும் வேகத்தில் சமூகம் நோக்கியும் எண்ணற்றோர் புறப்பட்டுள்ளது நமக்கு எல்லோருக்குமே இன்றளவில் காணமுடிந்த ஒன்றே.

எழுதுபவராக இல்லாமல் படைப்பாளிகள் வாசிப்பவர்களாகவும் எழுத்தாக வாழ்பவர்களாகவும் இருக்க வேண்டும் என்பது எனது வேண்டுதல்.

எல்லாம் கடந்து, சீர்பெரும் மாற்றுக் கருத்துகளோடும் பல முரண்களோடும் எதுவாக இருந்தாலும் அதை சட்டென எடுத்து சபை முன் வைத்து, ''இந்தா இதோ எனது வாள்; உனது வாளை வெளியே எடு; வா போருக்கு'' என்று சடாரென அழைக்கத் தயாராகும் வீரமும் எதையேனும் செய்து காட்டுவதிலுள்ள ஊக்கமும் அதற்கான பல ஆக்கச் சிந்தனைகளும், உலக தரத்தோடான வீரியமும் இப்போதைய படைப்பாளிகளிடம் அதிகமே உள்ளதையும் காண்கிறேன்.

**கேள்வி : மரபு, நவீனம், பின் நவீனம் என்ற கருத்தாடல்களை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

பதில் : எல்லாவற்றிலும் வகை பிரித்து மேல்கீழ் பார்த்து அனைத்தையுமே அளந்து பேசுபவர்கள் பேசிக்கொண்டே இருக்கிறார்கள். ஆனால், எழுத்தானது வாழ்வின் அந்தந்த கால தன்மைக்கேற்றவாறு தனக்கான வண்ணங்களை பூசிக்கொண்டு அந்தந்த காலத்தின் அழகோடும் அறிவுபெறு நெருப்பாகவுமே எங்கும் வெளிச்சம் பாய்ச்சி உலகை ஆளும் எக்காலத்தினும் மாளாத ஓர் பேராயுதமாக இருப்பதையுமே எப்போதும் காண்கிறேன்.

மரபுவழியில் இலக்கண சீரோடு பல ஆக்கங்களை படைக்க ஒரு காலம், இடம், தேவை என எல்லாமே இப்போதும் உண்டு. அதுபோல, நவீனம், பின்நவீனம் என்பதெல்லாமும் கலையின் தாகம் தீரா இலக்கியத்தின் ஆடையை காலத்திற்கேற்ப மாற்றி மாற்றி உடுத்திக் கொண்டு எப்பொழுதும் தனது அழகு குறையாமல் முழு உயிர்ப்பொருளாக பவனி வருவதையே நாம் எல்லோரும் காண்கிறோம்.

எடுத்துக்காட்டாக சொல்வதென்றால்; இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் சென்ன வள்ளுவத்திற்கும், ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன் இயற்றிய தொல்காப்பியத்திற்கும் இன்றும் பொருள்கூறி உயிர்தந்து என் தமிழன்னைக்கு புகழ்மாலை சூட்டும் ஒரேயொரு படைப்பாளி உயிரோடு இருக்கும் மட்டும், மரபும், நவீனமும் பின்நவீனமும் எழுத்தின் முப்பரிமாணமாக மாறி மாறி நிலைத்தே இருக்கும். வாழ்வியலின் கரு சுமந்து வாடும் அத்தனை எழுத்துக்களும் மாளாது காலம் கடந்தும் நிற்கும்; பாரதி எழுதிய கவிதையைப் போன்று பாரதிதாசனின் நெருப்பு வரிகளாகும்.

**கேள்வி : படைப்பிலக்கிய எழுத்துக்களில் எவ் ஆளுமையாளரின் தாக்கம் வெளிப்படுகிறதென கருதுகின்றீர்கள் ?**

பதில் : எனக்குள் நான் பேச எண்ணுவதை மட்டுமே எனது எழுத்துக்களும் பேசும். அது எனது மக்களின் மொழியாகவும், இந்த மண்ணை ஆள்பவர்களின் மொழியாகவும் இருக்குமே தவிர யார் முகத்தைக் கொண்டும் எனது பெயரில் வராது. அதற்காக நானொன்றும் பெரிய சுயம்பு எல்லாம் கிடையாது. எவர் பேசும் சப்தங்களை கேட்பதற்கு முன்னும் எனக்குள் வீசும் காற்றின் தடமும் எனக்குள் ஊரும் உணர்வின் தரமும் அறிய முற்படுபவனாக இருக்க விரும்புவதால் எனக்குள் என்ன இருக்கிறதென்று மட்டுமே ஆராய எண்ணுகிறேன்.

குறிப்பாக, எல்லோரையும் கற்று ஆய்ந்து மேலும் எல்லோரையும் விட பெரிதாக ஒன்றாக அறிவார்ந்து விளங்க இன்னும் எனக்கு அவ்வளவு சூழலோ நேரமோ புலமையோ வாய்க்கவுமில்லை என்பதே உண்மை. போதிய நேரம் என் வாழ்வில் இனியேனும் இருப்பின் எல்லோரையுமே கற்று எல்லாவற்றின் பொதுநிதித்துவம் அறிந்து ஆகச் சிறந்த ஒரு எழுத்தின் மொழியாக, பொருளாக, எல்லோருடைய ஒற்றைக் குரலாக இருக்கவும் முயல்வேன்.

**கேள்வி : ஈழத்து இலக்கியக்காரர்களுக்கு இலக்கியத் தேவை, நோக்கம் தொடர்பாக கூற விரும்புவது ?**

பதில் : அதிகாரம் ஒரு பக்கத்தில் மட்டுமே ஓங்கும் இடத்தில் வலி இருக்கும். வலிக்குப் பின்னால் அனுபவம் சேர கூறப்படும் கதையோ கவிதையோ சுவாரசியம் கூடி அமையும். ஈழத்து மண் இரத்தம் குடித்த மண். வலிகளை சுமந்த மண். ஏக்கமும் ஆசையும் தீராப் பொருளாகி வீரமும் மானமும் துரோகத்தால் புதையுண்டு போன மண் அதற்கான விடுதலைத் தாகம் குறையாது நீதியை எழுத்துக்களின் வழியேயும் தேடிக்கொண்டிருக்கும். அங்கே உயிர்சாகாத எண்ணற்ற படைப்புக்களும் கதைகளும் கவியும் எழுத வேண்டிய எண்ணற்ற வரலாறுகளும் புதையுண்டு கிடைக்கும். அவற்றை எல்லாம் தேடித்தேடியெடுத்து எதிர்கால வெற்றிக்கு ஆயுதமாக்கி வைக்க நமது ஈழத்து இலக்கியக்காரர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த தமிழிலக்கியவாதிகளின் தலையாயக் கடமை என்றே எண்ணுகிறேன்.

**கேள்வி : ஈழத்து மண்ணை முதன் முதலாக எப்போது தரிசித்தீர்கள், அவ்வகையில் அம் மண்ணில் வாழும் தமிழ் பேசும் உறவுகளின் மனப்பதிவு சார்ந்து கூறவருவது ?**

பதில் : முதன் முதலாக ஈழத்து மண்ணை உச்சிமுகர்ந்த காலம் எதுவென்று அறியா உணர்வே எனக்குள் எப்போதும் உண்டு. அப்படியொரு நீண்ட உறவு எனக்கும் ஈழத்து மண்ணுக்கும் உள்ளதாகவே எப்போதும் உணர்வேன்.

முதல் நாள் எனது விமானம் தரையிறங்கு கையில் குனிந்து ஒரு பிடி மண்ணள்ளி நான் மீண்டும் வந்துவிட்டேனம்மா என்று சொல்லி நெற்றியில் பூசிக்கொண்ட உணர்வை இப்போதும் மறப்பதற்கில்லை. ''கொழும்பு வழியே ஒரு பயணம்'' என்னும் எனது ஈழத்து வரலாற்று நாவலின் உண்மைத் தன்மை ஆராய்ந்து அறியவே எனது முதற் பயணமும் ஈழத்து மண்ணிற்கான முதற் தொடுதலுமாகவும் இருந்தது.

அதற்கு முன்னரும் நானெழுதிய எமது போர்; புரட்சி; நீதி குறித்தெல்லாம் வெளிவந்த ''விடுதலையின் சப்தம்'' எனும் நமது மாவீரர்களின் வாழ்வியல் குறித்த படைப்பு ஒன்று இருந்தாலும் கல்முனை பிரதேசத்தில் வாழ்ந்த அரும்பெரும் படைப்பாளியாக விளங்கிய எனது சகோதரி ஹிதாயா றிஸ்வி என்னும் மூத்த படைப்பாளுமை கொழும்பில் நடத்திய தடாக விழாவில் ''தட்டுங்கள் திறக்கட்டும் தீப்பொறி பறக்கட்டும்'' எனும் கவியரங்கத்திற்கு தலைமை வகிக்க சிறப்பு விருந்தினராக முதன் முதலில் கொழும்பு வந்திருந்தேன். அந்தப் பயணம் தான் மதமெல்லாம் கடந்து மனிதருக்குள் இருக்கும் அன்பின் உணர்வை மட்டுமே வெளிக்காட்டிய மானுடப் புனிதமாக அமைந்திருந்த முதற் பயணமாகும்.

அதன் பின் எனது அரும்பெரும் தம்பி மக்கள் காவலன் செ.மு.ஜெலீசு பல கவியரங்க மேடைக்கு தலைமை தாங்க சம்மாந்துறைக்கும், ஒரு சமத்துவம் இம்மண்ணில் நிலவி விடாதா என்று எப்போதும் உழைக்கும் தாறுசபா தொலைக்காட்சிக்கு நேர்காணல் வழங்க கல்முனைக்கும் அடிக்கடி வருவதுண்டு.

இருப்பினும், ஒவ்வொரு முறை ஈழத்து மண்ணை மிதிக்கையிலும் ஏதோ ஒரு பாடம் கற்கும் சிறுவனைப் போலவே உள்நுழைவேன். காரணம், ஈழத்து மண்தான் எனை எப்போதும் கவிதைகளின் மாண்பு குறையாது வைத்திருந்தது, எனது எழுத்தின் தன்மை சிறக்க, மொழி போற்றி அதன் சீரிளமை காக்க, அன்பின் அரியணையில் ஏற்றி மொழிக்கு மூத்தவனாகவே என்னை மதிப்பு குறையாமல் வைத்திருக்கிறது. அதிலும், ஈழத்தின் கிழக்கு என்பது எனது எழுத்து கிரீடத்தின் முதல் மாணிக்கக்கல் என்பதன் நன்றியை என்றுமே மறுப்பதற்கில்லை.

**கேள்வி : இலங்கை மண்ணில் பல்வேறு கவியரங்குகளை நடத்தியிருக்கிறீர்கள். அவ்வகையில் ஈழத்து கவிதைப் போக்கினதும் கவிதை நாட்டமும் எவ்வாறான நிலையிலுள்ளதாக கருதுகின்றீர்கள் ?**

பதில் : பலாச்சுளையில் ஒன்றை எடுத்து வாயில் போட்டதும் அதன் நறுமணமும் இனிப்பும் உயிர்வரை பரவுவது நம்மால் உணரமுடியும். அதன் பின் அடுத்தடுத்து உள்ளே போகும் சுளைகளால் சுவை எதுவென்று மறந்து இனிப்பு மட்டுமே நாக்கில் ஒட்டிக்கொள்ளும். அது போலத்தான் பல நறுமணங்களின் தன்மையோடும் தனக்கான மரபு மாறா வழியோடும் மான்பு குறைந்திடாத மானம் மிக்கவர்களின் மொழியுமாய் உலகெங்கும் தமிழ் நின்றுகொண்டாலும், அந்த முதல் பலாச்சுளையாக எமது தமிழ் இன்னும் நறுமணம் மாறாது இருக்கிறதெனில்; அது ஈழத்தில் இருப்பதாகவே எனக்கொரு பேரன்பு எப்போதும் ஈழமக்களின் தமிழ் கேட்கையில் உள்ளூறும்.

அப்படிப்பட்ட மண் மணம் மாறாத எம் மனிதர்களின் மொழி வீரியமும் அழகும் தொன்மையின் அற்புதங்களையும் கொண்ட மொழி என்பதை எள்ளளவும் சொல்லத் தயக்கமில்லை. என்றாலும் எதிர்காலம் மொழிக்கான பேராபத்துக்களை கொண்டுவரும் வேகத்திற்கு எமது ஈழத்து படைப்பாளிகள் சற்றும் இணங்காது தனது தனித்தன்மையை விட்டுவிடாது கட்டிக் காத்துக்கொள்ள வேண்டும்.

**கேள்வி : ஈழத்து மண்ணில் மனங்கவர்ந்த ஆளுமைகள் ?**

பதில் : எண்ணற்றோர் உள்ளனர். விதை முளைத்து ஆலவிழுது ஆகி ஊரெல்லாம் பரவி மொழிகாத்து நிற்கும் எண்ணற்றோர் உள்ளனர். இன்றுவரை எங்கோ ஒரு தனிமனிதர் தனக்கான மொழி அடையாளம் கலையாது மொழியறம் மறக்காது வாழ்வதன் பொருட்டே இன்றும் தமிழ் தனது நிலைப்புத்தன்மையை காத்துக் கொள்கிறது. அப்படி தமிழ்வாழ உரமிட்ட நன்றிக்குரிய பெரியோர்கள், யாழ் நூலகம் தீப்பிடித்து எரிந்தாலும் எமது உணர்வுள்மானத்துள் வீரத்துள் காதலுள் கடுகளவு இடை குறையாது பெறுமதிப்போடு உணர்வின் நீக்கமற இருப்பர்.

எடுத்துக்காட்டாக, இப்போது புதிதாக தமிழுலகு அறிந்துவரும் சம்மாந்துறையில் வாழும் தமிழாசிரியர் சந்தக்கவி என்று போற்றப்படும் இசுமாயில் அச்சு முகமதுவின் படைப்புகள் எதிர்கால வரலாற்றோடு நிலைத்திருக்கும் என்பது திண்ணம்.

**கேள்வி : புலம்பெயர் நாடுகளிலிருந்து இலக்கியம் படைப்பவர்களால் உயிர்த்துடிப்பானவற்றை எழுத முடியுமா, இந்நிலை சாத்தியமாகுமா ?**

பதில் : உள்ளூரில் வாழ்பவர்களுக்கு வாழ்வியல் என்பது; வாழும் நிலத்தின் பண்பும் மரபும் சிக்கல்கள் குறித்துமென எழுத பல்வேறு நிலைப்பாடுகள் இருந்தாலும், புலம்பெயர் நாடுகளில் வாழ்பவர்களின் வாழ்வியல் வேறு. புலம்பெயர்ந்தவர்களுக்கு தனது நாடுவிட்டு எங்கோ நாடோடியாய் போன பிரிவின் வலி இருக்கும், தன் உறவுகளின், வீட்டின், சுற்றத்தாரின் அன்பும் கணக்கும், அதோடு தான் வளர்ந்ததன், வாழ்ந்ததன் நினைவும் மிகப்பெரிதாக வலிக்கும்.

புலம்பெயர் நாடுகளில் வாழ்வோருக்கு அன்றைய உணவு போல உறைவிடம் போல மானத்தைப் போல தனது நாடு என்னும் தான் வாழ்ந்த தேசத்தின் அக்கறையும் இன்றியமையாத ஒன்றாக இருக்கும். அத்தோடு அயல் நாடுகளில் படும் இரண்டாம்பட்ச வாழ்வு நிலையின் அன்றாடப் பிரச்சனைகள் மற்றும் மேல்கீழ் இடர்பாடுகள் என எல்லாமே வலியும் நினைவும், முயற்சியும் நம்பிக்கையும், வெற்றியும் தோல்வியும், வசந்தமும் அடிமைத்தனமும் என்று எழுத எண்ணற்ற இலக்கியக் கூறுகள் உலகளாவிய அனுபவப் பாடங்களோடும் உயிர்த்துடிப்போடும் எழுத முயற்சியுடையோருக்கு பெருமளவில் சாத்தியமே.

**கேள்வி : தென்னிந்திய மற்றும் ஈழத்தமிழரிடையே வெளிவரும் படைப்பிலக்கியங்களுக்கிடையே மாற்றத்தை உணர்கின்றீர்களா ?**

பதில் : தாயும் பிள்ளையும் என்றாலும் வாயும் வயிறும் வேறு வேறுதானே. வீடு ஒன்று என்றாலும் உணர்வுகளும் எண்ணமும் கருத்தும் வேறு வேறாக இருப்பது இயல்பு தானே? என்னதான் அறந்தாங்கிய ஒற்றைக்குடி மூத்தக்குடி என்றாலும் உலகளவு பரந்து வாழப் பழகிவிட்டோமே, பாகுபாடுகள் இருக்கத்தானே செய்யும்? இங்கும் பொங்கல் வைக்கலாம் பூரிக்கிழங்கு செய்யலாம் புட்டு அவிக்கலாம் சுவை வேறு வேறாக மாறுதல் நிலத்திற்கேற்ப வாழும் நிலைக்கேற்ப சமைக்கும் விதத்திற்கேற்ப இயற்கையின் மாறா இயல்பன்றோ(?)!! அதுபோல, படைப்பிலக்கியங்களும் அறம் ஒன்று என்றாலும், மூலம் ஒன்று என்றாலும் இலக்கணம் ஒன்றே எனினும் அவரவர் வாழ்வு நிலைக்கு ஒத்த பின்னணியோடு மாறி, அவரவர் வாழ்க்கைதனைக் காட்டும் கண்ணாடியாகத் தானே இருக்கும்? இருக்க வேண்டும் என்பதே இயல்பு.

**கேள்வி : உலகறிந்த பன்முக ஆளுமையாளர் என்ற வகையில் படைப்பாளர்களும் படைப்புகளும் எவ்வாறு இருக்க வேண்டும் என கருதுகின்றீர்கள் ?**

பதில் : படைப்பாளர்கள் தான் செய்ய இயன்றதை செய்யத்தக்க கூறவும், வாழமுடியுமான வாழ்வியலை கற்பிக்கவும், எழுதுவதைக் காட்டிலும் ஒரு முன்னுதாரணமாக வாழப்பழகவும் வேண்டும். இயல்பு நிலை வாழ்க்கையோடும் முன்னேற்ற சிந்தனையோடும் ஆக்கபூர்வ முன்னெடுப்புக்களோடும் பல எதிர்கால வெற்றிகளை தூரக்கண்ணோக்கி படைப்புக்களை இயற்றினாலும் தமிழரின் மாண்பினுள் பெருநிலைப்பாடாக கருதப்படும் பல அறவழிப் பண்புகளை உட்பொருளாக கொண்டு படைப்புகளை சீரமைக்க வேண்டும். மிக குறிப்பாக, எல்லாவற்றையும் கற்பனையோடு மட்டுமே வாழ்வதைக் காட்டிலும் தானும் முதலில் அதுவாக வாழ்ந்து தான் வாழும் வாழ்வியலின் நன்மைகளை முன்வைத்து முரண்களை எடுத்துரைத்து நல்மாற்றங்களை கொணர படைப்பாளிகள் ஆர்வம் கொள்கையில் எழுத்து என்பது தானேயொரு சமுதாய சீர்திருத்தத்திற்கான நல்ல யுகமாக மாறிவிடும்.

படைப்புகள் பெரும்பாலும் சமகால வாழ்வியலின் கண்ணாடியாகவும், எதிர்கால நல்மாற்றங்களின் முதலெழுத்தாகவும் வென்றதன் தோற்றதன் முடிந்த கதைகளின் கதை மாந்தர்களின் ஊர்களின் தெருவின் வீட்டின் ஒரு தேசத்தின் வரலாறாகவும் அமைவது சிறப்பு. குறிப்பாக ஒரு மரத்தை வெட்டி வீழ்த்தும் கத்தியாக மட்டுமின்றி, ஒரு மரத்துண்டினையும் செதுக்கி சிலையாய் வடிக்கும் உளிபோல நேர்மறை சிந்தனைகளைக் கொண்டிருப்பின் அப்படைப்புக்களால் நாளைய உலகின் நல்லெதிர்காலத்தை சீரமைக்க இயலும்.

## மூத்த முற்போக்கு படைப்பாளி கணேசலிங்கன்

# முற்போக்கு, பிற்போக்கு பேதமற்ற நட்புறவை சகல எழுத்தாளரோடும் கொண்டிருந்த படைப்பாளி

முருகபூபதி

இலங்கை வடபுலத்தில் உரும்பிராயில் 1928 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் திகதி பிறந்த கணேசலிங்கன் தனது 93 ஆவது அகவையில் கடந்த 4 ஆம் திகதி சென்னையில் காலமானார்.

சுமார் அறுபதிற்கும் மேற்பட்ட நாவல்கள், பல சிறுகதைகள், கட்டுரை - விமர்சன நூல்கள் - சிறுவர் இலக்கியம் - பயண இலக்கியம் என நூறுக்கும் மேற்பட்ட நூல்களை தமிழ் இலக்கிய உலகிற்குத் தந்துள்ள கணேசலிங்கனின் தற்போதைய வயதிலிருந்து கணக்குப்பார்த்தாலும் வருடத்துக்கு ஒரு புத்தகம் என பிறந்தது முதல் இன்று வரையில் அதிகம் புத்தகங்கள் எழுதியிருக்கின்றார்.

மூத்த தமிழ் அறிஞர் மு.வரதராசனும் (மு.வ) இவரது நெருங்கிய நண்பர். மு.வ. மறைந்த பின்பு அவரது நினைவாகவும் ஒரு நூலை எழுதியிருக்கின்றார்.

'செவ்வானம்' நாவல் கைலாசபதியின் முன்னுரையுடன் வெளியானது. குறிப்பிட்ட நீண்ட முன்னுரையே பின்னாளில் தமிழ் நாவல் இலக்கியம் என்ற விரிவான நூலாகியது.

சர்வதேசப் புகழ் பெற்ற கவிஞர் பாப்லோ நெருடா (இலக்கியத்திற்காக நோபல் பரிசு பெற்றவர்) இலங்கை வந்த சமயம் அவரை வரவேற்கும் எழுத்தாளர்களின் கூட்டத்திற்கு தலைமை தாங்கி சிறப்பித்த பெருமையும் கணேசலிங்கனுக்குண்டு. 'புனா' திரைப்படக் கல்லூரியிலும் அவர் சிறிது காலம் பயிற்சி பெற்றவர். அங்கு பிரபல இயக்குநர் மிருணாள் சென் போன்றவர்களுடன் நட்புறவு கொண்டவர். கமல்ஹாஸன் நடித்து பாலுமகேந்திராவின் இயக்கத்தில் வெளியான கோகிலா (கன்னடம்) திரைப்படத்தின் தயாரிப்பு நிர்வாகியாகவும் இயங்கியிருக்கும் கணேசலிங்கன் , தமிழக சினிமா உலகின் கோலங்களை தமது கவர்ச்சிக் கலையின் மறுபக்கம் என்ற நாவலில் சித்திரித்துள்ளார்.

அவுஸ்திரேலியாவில் பல்கலைக்கழகப் பிரவேசப் பரீட்சைக்கு தமிழும் ஒரு பாடம். தமிழ் மொழிப்பாடப் பரீட்சைக்கு தோற்றும் பல மாணவர்களுக்கு பெண்கள் தொடர்பாக வரும் நேர்முக - எழுத்துப் பரீட்சைகளுக்கு கணேசலிங்கனின் 'பெண்ணடிமை தீர' என்ற நூல் உசாத்துணையாகப் பயன்பட்டது என்ற புதிய தகவலையும் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன். இந்த நூலும் குமரனுக்கு கடிதங்கள், குந்தவைக்கு கடிதங்கள் முதலான நூல்களும் பல ஆயிரம் பிரதிகள் வாசகர் மத்தியில் சென்றுள்ளன.

சாரு மஜூம்தார் என்ற இந்திய சுதந்திர போராட்ட போராளி, பின்னாளில் இடது சாரி இயக்கங்களில் ஈடுபட்டு, நக்சல்பாரி என்ற ஆயுதப் போராட்ட இயக்கத்தை உருவாக்கியவர். அவரது சிந்தனையின் தாக்கத்தினால், கணேசலிங்கன் எழுதிய மண்ணும் மக்களும் என்ற நாவல் இந்திய அரசினால் தடை செய்யப்பட்டது.

நிலமானிய சமூக ஒடுக்குமுறையை சித்தரித்தே 'மண்ணும் மக்களும்' நாவலை எழுதினார். இலங்கையில் - புரட்சி ஏதோ ஒரு வடிவத்தில் தோன்றும் வாய்ப்பு நேரலாம் என்பதை நீண்ட காலத்திற்கு முன்பே நாவலாக எழுதிக் காண்பித்தவர். ஈழத்துத் தமிழ் இலக்கிய உலகில் செ.கணேசலிங்கனின் சிறுகதைகள், நாவல்கள் பல முக்கியமானவை. தடம் பதித்தவை. 'ஆண்மையில்லாதவன்'



போன்ற இவரது பல சிறுகதைகள் குறிப்பிடப்படவேண்டியவை. நாவல்களிலும் 'சடங்கு','செவ்வானம்', 'நீண்ட பயணம்', 'மண்ணும் மக்களும்' போன்றவை முக்கியமானவை. இவரது நாவல்களை வெறும் பிரசாரப் படைப்புகளாக ஒதுக்கி விட முடியாது. ட்ரோல்ஸ்ரோய், தாஸ்த்தாவஸ்கி போன்றவர்கள் தங்களது படைப்புகளில் கையாண்ட மத போதனைகளை வைத்து மட்டும் எவ்விதம் அவர்களது படைப்புகளை கணிப்பிட முடியாதோ, அவ்விதமே செ.கணேசலிங்கனின் படைப்புகளில் ஊடுருவியிருக்கும் பொருளின் தீவிரத்தை வைத்து மட்டும் அவரது படைப்புகளை எடை போட முடியாது.

இலங்கையிலும் தமிழ்நாட்டிலும் குமரன் பதிப்பகம் என்ற பெயரில் நூல் வெளியீட்டு நிறுவனத்தையும் நடத்திக் கொண்டு Front Line சஞ்சிகை ஆசிரியர் இந்து ராமின் நண்பராகவும் திகழ்ந்த கணேசலிங்கன், இந்து குழுமத்தின் நூலகத்திலும் சிறிது காலம் பணியாற்றினார்.

தமிழில் அரசியல் சார்ந்த நாவல்களை எழுதும் ஆற்றல் மிக்கவராக இனம் காணப்பட்டவர். மாக்ஸீய சிந்தனைகளினால் ஆகர்ஷிக்கப்பட்ட கணேசலிங்கன், சிறந்த மனிதநேயவாதி எனவும் விதந்து பேசப்படுபவர். ஆங்கிலத்திலும் நல்ல புலமைமிக்க கணேசலிங்கன், ஸ்ரிபன் செவாக் (Stefan Zweig) எழுதிய Letter from an Un-known Woman என்ற குறுநாவலை தமிழில் அபலையின் கடிதம் என்ற பெயரில் மொழி பெயர்த்துள்ளார்.

கணேசலிங்கனின் முதலாவது நாவல் 'நீண்ட பயணம்'வடமாகாண சாதி ஒடுக்குமுறையை சித்திரித்தது. மற்றுமொரு பிரசித்தி பெற்ற நாவலான 'சடங்கு' பேராசிரியர் கா. சிவத்தம்பியின் முன்னுரையுடன் வெளிவந்து வாசகர்களின் கவனத்தைப் பெற்றது.

வெள்ளவத்தையில் இயங்கிய கணேசலிங்கனின் விஜயலஷ்மி புத்தகசாலை 1983 ஆடிக்கலவரத்தில் முற்றாக எரிந்து நாசமாகியது. இலங்கையில் எழுத்தாளர்களுக்கும் வாசகர்களுக்கும் பெரிதும் உதவிய இந்த புத்தகசாலையை கொடியவர்களிடம் இழந்த போதிலும் சென்னையில் புகலிடம் பெற்று, ஈழத்து படைப்பாளிகளின் நூல்கள் தொடர்ந்து வெளிவருவதற்கு அயராமல் உழைத்தார்.

கொழும்பில் நீண்டகாலம் குமரன் மாத இதழை நடத்தினார். அவ்விதழ் - கலை, இலக்கிய, அரசியல், அறிவியல் ஏடாக வெளியானது. இலங்கையில் மிகுந்த கவனத்தைப் பெற்ற கவிஞரான புதுவை இரத்தினதுரை ஒரு காலத்தில் 'வரதபாக்கியான்' என்ற புனைபெயரில் பல கவிதைகளை எழுதியதும் இந்த குமரன் இதழில்தான். ஹெலிகொப்டர் விபத்தில் கொல்லப்பட்ட முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அஷ்ரப் - தான் குமரன் இதழ்களைத் தொடர்ந்து படித்தே அரசியல் அறிவு பெற்றதாக ஒரு சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுள்ளார்.

ஈழத்தின் முன்னோடி முற்போக்கு எழுத்தாளர் அ.ந. கந்தசாமி அந்திம காலத்தில் நோய்வாய்ப்பட்டிருந்த வேளையில் அவருக்கு அருகே இருந்து பலவிதத்திலும் பணிவிடை புரிந்த முன்மாதிரியாளர் இந்த கணேசலிங்கன்தான். அ.ந.கந்தசாமி எழுதிய வாழ்வுக்கு வழிகாட்டும் உளவியல் நூலான வெற்றியின் இரகசியங்கள்தமிழகத்தில் பாரி நிலைய வெளியீடாக வெளிவரக் காரணமாகவிருந்தார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் எழுத்தாளர் கூட்டுறவு பதிப்பக வெளியீடாக வந்த அ.ந.க.வின் மதமாற்றம்நாடகம் நூலாக வெளிவரவும் கணிசமான ஒத்துழைப்பு நல்கியதோடு, அந்நூலுக்கு நல்லதொரு முகவுரையினையும் எழுதியவர். அ.ந.க.வின் வெளிவராத நாவலான செ.க.வின் வசமிருந்த களனி வெள்ளம்1983 ஆடிக் கலவரத்தில் செ.க.வின் எரிந்த உடமைகளுடன் எரிந்து போனதாகவும் அறியப்படுகிறது. இலங்கையில் கார்ல்மார்க்ஸ் நூற்றாண்டு கொண்டாடப்பட்ட வேளையில் கணேசலிங்கன் வழங்கிய ஆக்கபூர்வமான உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் நேரடியாக கண்ட தோழர் என். சண்முகதாஸன் அவரை மனம் திறந்து பாராட்டியுள்ளார்.

கணேசலிங்கன், பெண்ணடிமைத் தனத்திற்கு - திருக்குறள் விமோசனம் அளிக்கவில்லை என்பதை ஆய்வு மூலம் நிரூபிக்கும் நூல் ஒன்றையும் எழுதி விமர்சகர்களின் கவனத்தை ஈர்த்தவர். பேராசிரியர்கள் க. கைலாசபதி, இந்திரபாலா உட்பட பல முன்னணி விமர்சகர்கள், ஆக்க இலக்கிய கர்த்தாக்களின் நூல்களை பதிப்பித்துமுள்ள கணேசலிங்கனின் மிகப் பெரிய பலம் - அவரிடம் இயல்பாகவே குடிகொண்டிருந்த அமைதியும் அடக்கமும்தான். ஒருவகையில் அவர் ஒரு நிறைகுடம்.

கருத்தை இலக்கியத்தோடு மட்டும் வைத்துக் கொண்டு முற்போக்கு, பிற்போக்கு பேதமற்ற நட்புறவை சகல எழுத்தாளரோடும் கொண்டுள்ள ஒரு - சிலவேளை ஒரே - ஈழத்து எழுத்தாளர் இவர் என்று 'இலக்கு' இதழ் செ. கணேசலிங்கனைப் பற்றி பல வருடங்களுக்கு முன்னரே குறிப்பிட்டுள்ளது.

# சமூகத்திற்கு ஆற்றிய அர்ப்பணிப்புடனான சேவையின் 90 வருடப்பூர்த்தியை சைவ மங்கையர் கழகம் கொண்டாடுகின்றது

## தொண்ணூறு வருடப்பயணத்தில் 'நியூ நோர்மல்' நிலையை நோக்கிய பரிணாமம்

அது 1930 ஆம் ஆண்டு! டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி. அப்போது இலங்கை காலனித்துவ ஆட்சியின் கீழிருந்ததுடன் இந்துக்கள் தமது இந்து தமிழ் அடையாளத்தை இழந்து இக்கட்டான சூழ்நிலையில் இருந்தார்கள். அப்போதுதான் இளம் சைவப்பெண்கள் குழுவினர் தமது மொழி, மதம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை மேலோங்கச்செய்யும் நோக்கில் சைவ மங்கையர் கழகத்தை [கழகம்] ஸ்தாபிப்பதற்குத் தூண்டப்பட்டார்கள். அதன் முதற்கட்டமாக இராமகிருஷ்ண மிஷனின் சுவாமி விபுலானந்தா மற்றும் முதலியார் ராசநாயகம் ஆகியோரின் வழிகாட்டலின்கீழ் தமக்கென ஓர் பெண்கள் அமைப்பை நிறுவதற்கு நடவடிக்கை எடுத்தார்கள். இந்தப் பெண்களுக்கு கட்டடக்கலை வல்லுனர்களான திருமதி ராசமுத்து சதாசிவம், திருமதி சொர்ணகாந்தி நல்லைநாதன் மற்றும் திருமதி பாலாம்பிகை நமசிவாயம் ஆகியோர் தலைமைதாங்கினர்.

இன்று – டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி, பத்து வருடங்களின் பின்னர் எமது 90 ஆவது வருடப்பூர்த்தியை முன்னிட்டு கடந்த 90 வருடங்களில் 'கழகத்தினதும் அதன் ஏனைய கட்டமைப்புக்களினதும் வெற்றிகள்'(Achievements - The Kahagam and Its Institutions) என்ற எமது கதையை முன்வைக்கின்றோம். அதனை எழுத்து வடிவில் ஆவணப்படுத்துவதன் ஊடாகவே கழகத்தின் ஆரம்பம், குறிக்கோள்கள், அந்தக் குறிக்கோள்கள் எவ்வாறு ஈடேற்றப்பட்டன?, அவற்றின் தற்போதைய நிலையை நாம் எவ்வாறு நோக்குகின்றோம்? என்பது குறித்து எதிர்கால சந்ததியினர் அறிந்துகொள்ளமுடியும். எம்மைச்சூழ நிகழ்ந்து கொண்டிருக்கும் பல்வேறு மாற்றங்களுக்கு மத்தியில் அதனைச் செய்வதற்கு மிகப்பொருத்தமான சந்தர்ப்பம் இதுவாகும்.

மூன்று பிரதான குறிக்கோள்களை அடிப்படையாகக்கொண்டு கழகம் ஸ்தாபிக்கப்பட்டதாக அதன் ஸ்தாபகச்செயலாளர் கழகத்தின் வெள்ளிவிழா சஞ்சிகையில் குறிப்பிட்டுள்ளார். 'கழகம் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடகாலத்திற்குள்ளாகவே நாம் பெண்களுக்கான பாடசாலையொன்றை ஸ்தாபிப்பதற்கான முக்கிய தீர்மானத்தை மேற்கொண்டோம்'. புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கல்வி நிலையம் 'ஒரு பெண்ணுக்குக் கல்வி கற்பிப்பதால் நீங்கள் ஒரு குடும்பத்திற்குக் கற்பிக்கின்றீர்கள்' என்ற மகாத்மா காந்தியின் கூற்றை நினைவுபடுத்துகின்றது.

தூரநோக்கு சிந்தனையுடைய இந்த அறிவார்ந்த பெண்களால் மேற்கொள்ளப்பட்ட இரு முக்கிய தீர்மானங்களைக் கூறவேண்டும். அவை முறையே,

1.மாணவர்களுக்கான கல்வித்திட்டத்தில் மொழியும் மதமும் மிகமுக்கியமானதாகும்

2.குறிப்பாக பெண்களுக்கான கல்வி செயற்திட்டத்தில் அழகியல் கல்வியின் முக்கியத்துவம்

இந்தத் தீர்மானங்களும் 1932 இல் வித்தியாலயம் ஸ்தாபிக்கப்பட்டமையும் பெண்களுக்கு மிகவும் பழமையான இந்து பாரம்பரியத்தில் சங்கீதம் மற்றும் நடனம் ஆகிய பாடவிதானங்களை உள்ளடக்கியதாகத் தற்போது வழங்கப்பட்டுவரும் கல்வியின் தொடக்கப்புள்ளியாக அமைந்தது.

ஏழு மாணவர்களுடன் உதயமான சைவ மங்கையர் வித்தியாலயம், 1933 ஆம் ஆண்டில் கொழும்பு 6, 34 ஆவது வீதியில் அமைந்திருந்த அதன் சொந்தக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டது. மெட்ராஸ் பெண்கள் கிறிஸ்தவக் கல்லூரியின் இளம் பட்டதாரியின் திறமைக்கும் நிர்வாக ஆற்றலுக்கும் அங்கீகாரத்தை வழங்கும் வகையில் பாடசாலையின் அதிபராக நாகம்மாள் காசிப்பிள்ளை நியமிக்கப்பட்டார்.

கழகம் ஸ்தாபிக்கப்பட்ட 1930 களில் அது மிகுந்த செயற்திறனுடன் இயங்கியது. பிறநாட்டு கலாசாரமும் மதமும் தலைத்தூக்கியிருந்த அக்காலப்பகுதியிலே தம்மையும் தம்மைச்சூழ இருப்பவர்களையும் மேம்படுத்திக் கொள்வதற்காகப் பெண்கள் ஒன்றாகக் கைகோர்த்தார்கள். அக்காலப்பகுதியில் இலங்கைக்கு வருகைதந்த மகாத்மா காந்தி, கமலா சட்டோபாத்யாய், சரோஜினி நாயுடு ஆகியோர் அப்பெண்கள்மீது நேர்மறையானதும் வலுவானதுமான தாக்கத்தை ஏற்படுத்தினார்கள். அவர்கள் திருக்குறளைக் கற்றுக்கொண்டார்கள். இராமகிருஷ்ணமிஷனின் சுவாமிஜிகள் ஊடாக மதரீதியான போதனைகளை ஏற்பாடுசெய்தார்கள். முதல் பெண் கவுன்ஸிலர்களான திருமதி நேசம் சரவணமுத்து மற்றும் திருமதி அடெலின் மொலமுரே ஆகியோரைக் கௌரவிப்பதற்காக அவர்கள் தமிழ் பெண்கள் அமைப்புடன் இணைந்துகொண்டார்கள்.

1930 களில் பண்டித் ஜவகர்லால் நேரு, கமலா நேரு, பரோடா மற்றும் மைசூர் ஆகிய நகரங்களின் மகாராணிகள், திருமதி விஜயலக்ஷ்மி பண்டித் போன்ற தலைசிறந்த ஆளுமைகளை வரவேற்கும் மாபெரும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. அதுமாத்திரமன்றி சுத்தானந்த பாரதி, ஸ்வாமி ஷிவானந்தா, ஸ்வாமி ராமதாஸ் மற்றும் அன்னை கிருஷ்ணாபாய் போன்ற மதரீதியான ஆளுமைகளைச் சந்திக்கும் வாய்ப்பும் அவர்களுக்குக் கிடைத்தது.

அதனைத்தொடர்ந்து சிலகாலத்தில் கல்வித்திணைக்களத்தின் நிதியுதவியைப் பெறுவதெனின் பாடசாலைக் கல்விப் பாடவிதானத்திலிருந்து சங்கீதமும் நடனமும் நீக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டமைக்கு அமைவாக கன்னங்கரா இலவசக்கல்விச் செயற்திட்டத்தின்கீழான நிதியுதவி மூலம் முகாமைத்துவத்தின் வழிகாட்டலுடன் செல்வி காசிப்பிள்ளை பாடசாலையைக் கட்டியெழுப்பினார்.

1945 ஆம் ஆண்டில் பாடசாலைக்கல்விப் பாடவிதானத்திலிருந்து நீக்கவேண்டியேற்பட்ட இந்து கலாசாரம், சங்கீதம் மற்றும் நடனம் ஆகியவற்றுக்குப் புத்துயிரூட்டும் விதமாக கழக உறுப்பினர்கள் இணைந்து கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டியப் பாடசாலையை நிறுவினார்கள். பல்வேறு இசைக்கருவிகள், சங்கீதம் மற்றும் நடனம் ஆகியவற்றைப் போதிக்கும் வகையில் அப்போது நாட்டிலிருந்த ஒரேயொரு பாடசாலை அதுவாகும்.

இந்த கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டியப் பாடசாலை மிகுந்த சிறப்புடன் புத்தொளிபெற்று விளங்கியது. 1950 களின் நடுப்பகுதியில் பாடசாலையின் இசைவாத்தியக்குழுவும் நடனக்குழுவும் சென்னையில் நடைபெறும் சங்கீத நிகழ்வில் பங்கேற்பதற்காக அழைக்கப்பட்டன. அதனைத்தொடர்ந்து திருமதி இந்திரா காந்தியின் அழைப்பின்பேரில் புதுடில்லியிலுள்ள விக்னன்



பவனில் கர்நாடக சங்கீதத்தையும் பரதநாட்டியத்தையும் அரங்கேற்றுவதற்காகவும் அக்குழுவினர் சென்றனர்.

மேலும் 1940 களின் இறுதியில் – 1950 களின் ஆரம்பத்தில் அடையாரிலிருந்து மரியா மொன்ரிசோரி இலங்கைக்கு வருகைதந்திருந்த நிலையில், 1951 ஆம் ஆண்டில் பாலர் பாடசாலையைத் திறந்துவைப்பதற்காக அவரை அழைப்பதற்கு கழகத்தினால் இயலுமாக இருந்தது. அவர் விரும்பியதைப்போன்று அந்தப் பாலர் பாடசாலை இன்றளவிலே சிறுவர்களுக்கு நேயமான ஓர் இல்லமாக வளர்ச்சிகண்டிருக்கின்றது.

1958 ஆம் ஆண்டு மேமாதம் தொடக்கம் ஜூன்மாதம் வரையிலான காலப்பகுதியில் தமிழர்களை மிகமோசமாகப் பாதித்த இனங்கலவரங்களின் விளைவாக கழகம் அதன் முதலாவது சவாலை எதிர்கொண்டது. கொழும்பில் வசித்த பெரும்பாலான தமிழர்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள அவர்களது சொந்த வாழ்விடங்களுக்கே திரும்பிச்சென்றார்கள். அதன் காரணமாக பாடசாலையில் மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சிகண்டது. மேலும் சில இனக்கலவரங்கள் தமிழர்களை வெகுவாகப் பாதித்ததுடன் அதன் விளைவுகளை எதிர்கொள்கின்ற முடிவிடமாகக் கழகம் காணப்பட்டது. இருப்பினும் 'காலமும் கரையை வந்தடையும் அலையும் யாருக்காகவும் காத்திருப்பதில்லை' என்ற பழமொழிக்கு அமைவாக, மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்து பாடசாலையின் செயற்பாடுகளில் நெருக்கடிகள் ஏற்பட்டபோதிலும், காலப்போக்கில் அவையனைத்தும் மீண்டும் பழைய நிலைக்கே திரும்பின.

1960 ஆம் ஆண்டில் கழகத்திற்கென திருமதி தம்பையாவினால் 'சிவானந்தா நிலையம்' என்ற பெயரில் வழிபாடு மற்றும் மன அமைதிக்கான பயிற்சி மண்டபமொன்று நிர்மாணிக்கப்பட்டது. பாடசாலையினால் இந்த மண்டபம் காலை கூட்டுப்பிரார்த்தனைக்காகப் பயன்படுத்தப்பட்டது.

1960 இல் நாட்டிலுள்ள மதரீதியான பாடசாலைகள் அரசாங்கத்தினால் கையகப்படுத்தப்பட்டபோது, வித்தியாலயத்தை அரசாங்கத்திடம் கையளிக்காமல் இருப்பதற்கும் அதனைக் கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலையாக நடாத்திச்செல்வதற்கும் கழகம் தீர்மானி;த்தது. ஆனால் இந்து அமைப்புக்கள் அனைத்தும் ஏனைய இந்து பாடசாலைகளை அரசாங்கத்திடம் கையளித்தன.

அதற்கடுத்த சில வருடங்கள் மிகவும் கடினமான காலப்பகுதியாகக் அமைந்திருந்தது. கட்டணம் அறவிடாத பாடசாலையாக இயங்கும் அதேவேளை, அதன் மாதாந்த செலவுகளை ஈடுசெய்வதற்கான நிதியைத் திரட்டிக்கொள்வது என்பது மிகவும் சிக்கலானதாகக் காணப்பட்டது. இருப்பினும் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அவற்றைக் கடந்து கழகம் முன்நோக்கி நகர்ந்துகொண்டிருந்தது. 1977 இல் நோர்வேயைச் சேர்ந்த அரச சார்பற்ற அமைப்பொன்று எமக்கான மீட்பராக வந்தது. அதனைத்தொடர்ந்து 1980 ஆம் ஆண்டில் இவ்வாறான பாடசாலைகளுக்கு உதவுவதற்கு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் மூலம் வித்தியாலயம் அரசாங்கத்தினால் உதவியளிக்கப்படும் தனியார் பாடசாலையாக மாறியது.

முதற்தரக்கட்டமைப்பாகத் திகழ்ந்த இப்பாடசாலைக்கு அதனோடு இணைந்ததாக விடுதி வசதி அவசியம் என்று அதிபர் கருதியமையால் 1972 ஆம் ஆண்டில் 'மங்கையர் இல்லம்' ஸ்தாபிக்கப்பட்டது. நாட்டில் போர் இடம்பெற்ற அக்காலப்பகுதியில் இந்த விடுதி வித்தியாலயத்தின் மிகமுக்கிய அங்கமாகத் திகழ்ந்ததுடன் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் பாடசாலையில் இணைந்துகொண்ட மாணவர்கள் அவ்விடுதியில் தங்கினார்கள். அதிலிருந்து சில வருடங்களில் கணவரை இழந்ததன் பின்னர் தனியாக வாழ்ந்துவந்த எமது கழக ஸ்தாபகர் திருமதி நமசியவாயத்தின் இல்லத்தில் முதியோர்களுக்கென 'பாலாம்பிகை நமசிவாயம் இல்லம்' நிறுவப்பட்டது.

1980 களின் நடுப்பகுதியில் எமது ஸ்தாபகர்களுக்கான 3 நினைவுப்பலகைகளுடன் வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள் மற்றும் அலுவலக அறைகள் உள்ளடங்கலாக வித்தியாலயக் கட்டடத்தை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்கு சில தூதரகங்கள் நிதியுதவி வழங்குவதற்கு முன்வந்ததைத் தொடர்ந்து கழகம் சடுதியாக வளர்ச்சிகண்டது. 1990 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் எமது பாடசாலை 1 ஏ.பி தரத்திலான தேசிய பாடசாலையாக அங்கீகாரம் பெற்றது.

மேலும் மாணவர்களுக்குக் கல்வியைப் போதிக்கின்ற மொழியில் ஆங்கிலத்தையும் இணைத்துகொள்வதன் அவசியத்தை முகாமைத்துவம் உணர்ந்துகொண்டதைத் தொடர்ந்து கல்விசார் அடிப்படையிலும் பாடசாலை வளர்ச்சிகண்டது. அதன்படி ஆரம்பக்கல்வி தாய்மொழியான தமிழிலேயே இருக்கவேண்டும் என்பதை மனதிலிருத்திக்கொண்டு மூன்றாம் தரத்திலிருந்து உயர்தரம் வரையிலான மாணவர்களுக்கு ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன. எமது ஆரம்ப ஸ்தாபகர்களால் இடப்பட்ட மிகவும் வலுவான அடித்தளத்தைப் பின்பற்றி காலப்போக்கில் வித்தியாலயம் நன்கு விரிவடைந்தது.

தற்போது எமது பாடசாலையில் 2,400 இற்கும் அதிகமான மாணவர்கள் கல்வி பயில்வதுடன் 120 ஆசிரியர்கள் பணிபுரிகின்றார்கள். கல்வியைப் போதிப்பதில் தேசிய ரீதியிலான பாடவிதானம் பின்பற்றப்படும் அதேவேளை, தற்போதைய போட்டித்தன்மை வாய்ந்த உலகில் முகங்கொடுக்கநேரும் சவால்களை எதிர்கொள்வதற்கான மேலதிக செயற்திறனை மாணவர்கள் மத்தியில் வளர்த்தெடுப்பதிலும் விசேட கவனம் செலுத்தப்படுகின்றது. இவை தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தரப்பரீட்சை மற்றும் க.பொ.த உயர்தரப்பரீட்சை ஆகியவற்றில் எமது மாணவர்கள் பெற்றுக்கொள்ளும் பெறுபேறுகளில் பிரதிபலிக்கின்றன.

நாம் கடந்த வருடம் எமது 90 ஆவது வருடத்தில் காலடியெடுத்துவைத்தபோது கொரோனா வைரஸ் பரவல் காரணமாக கழகத்தினால் நிறுவப்பட்ட வித்தியாலயம், பாலர் பாடசாலை, விடுதி, கர்நாடக சங்கீதம் மற்றும் பரதநாட்டியப் பாடசாலை, வழிபாடு மற்றும் மன அமைதிக்கான பயிற்சி நிலையம், முதியோர் இல்லம் உள்ளிட்ட அனைத்துக் கட்டமைப்புகளினதும் வழமையான செயற்பாடுகள் வெகுவாகப் பாதிக்கப்பட்டன.

இருப்பினும் முடக்கத்திற்கு மத்தியிலும் வித்தியாலயமும் முதியோர்களையும் தொழில்புரியும் பெண்களையும் உள்ளடக்கிய முதியோர் இல்லமும் செயற்திறனுடன் இயங்கிவருகின்றன.

கொரோனா வைரஸ் பரவலானது கைகளை அடிக்கடி கழுவுதல், முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளியைப் பேணுதல், தடுப்பூசி பெற்றுக்கொள்ளல் உள்ளிட்ட புதிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களுடன் இணைந்ததாக நாட்டின் கல்வி முறைமையை முழுமையாக மாற்றியமைத்திருக்கின்றது. எதுஎவ்வாறெனினும் ஆரம்ப நாட்களில் சின்மயா மிஷனின் நிகழ்நிலை வகுப்புக்களுடனான எனது அனுபவம், கல்வித்துறையில் அதிபர் கொண்டிருக்கும் அனுபவம் மற்றும் ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்பு ஆகியவற்றின் மூலம் பாலர் பாடசாலை தொடக்கம் உயர்தர வகுப்புக்கள் வரையிலான வித்தியாலயத்தின் கல்விச்செயற்பாடுகளை நிகழ்நிலை மூலமான 'நியூ நோர்மல்' டிஜிட்டல் யுகத்திற்கு ஏற்ப வழிநடத்துவதற்கு எம்மால் இயலுமாக இருந்தது. கற்பித்தல் மற்றும் கற்றல் நடவடிக்கைகளில் சலிப்பேற்படுவதைத் தவிர்ப்பதற்காக வித்தியாலயத்தின் மாணவர் மன்றங்கள் சார்ந்த செயற்பாடுகளும் நிகழ்நிலை ஊடாக முன்னெடுக்கப்படுகின்றன.

முன்னைய நிலையிலிருந்து தற்போதைய 'நியூ நோர்மல்' நிலைக்கு மாற்றமடைவதற்கான எமது இயலுமைக்காக முகாமைத்துவத்தரப்பினரும் அதிபரும் ஆசிரியர்களும் பெற்றோர்களிடமிருந்தும் பொதுமக்களிடமிருந்தும் பாராட்டைப் பெற்றிருக்கின்றார்கள் என்று என்னால் பெருமையுடன் கூறமுடியும்.

கழகம் அதன் 90 வருடங்களைப் பூர்த்திசெய்து மற்றுமொரு மைல்கல்லை அடைந்திருக்கும் இத்தருணத்தில் அதன் கடந்தகால நிகழ்வுகளை மீட்டிப்பார்ப்பது எனக்கு மிகுந்த மகிழ்வைத் தருகின்றது. இந்த ஸ்தாபக தினத்தில் இறையாசியுடன் எதிர்காலத்தை முன்னிறுத்தி எமது சேவைகளைத் தொடர்வதற்கு நாம் உறுதிபூணுவோம்.

**சிவானந்தினி துரைசுவாமி,**
**கழகத்தலைவர்.**

copyright

# சங்ககாலத்திற்கு முன்னரே தோன்றிய தமிழ் உண்மையை உரக்கச் சொன்ன யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு!

**செல்வநாயகம் ரவிசாந்**

**சென்ற வாரத்தொடர்ச்சி...**

தமிழ்நாட்டின் தேனி மாவட்டத்தில் ஆனைப்பட்டுத் தாலுகாவில் உள்ள புலிமான் கோம்பை எனும் இடத்தில் 2006 ஆம் ஆண்டில் மூன்று வீரக் கற்களைக் கண்டறிந்தனர். தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக கல்வெட்டியல் மற்றும் தொல்பொருளியல் துறைசார்ந்த அறிஞர் கே.ராஜன், ஜதீஸ்குமார் ஆகியோரால் இவை கண்டறியப்பட்டன. மூவரும் இக் கற்களின் வரலாற்றுச் சிறப்பினைப் பற்றி ஒரு விரிவான கட்டுரையை எழுதியுள்ளனர். சங்கப் பாடல்களின் காலத்தை ஐயமின்றிக் கூறுவதற்கு இந்தக் கற்கள் பெரிதும் உதவுகின்றன.

பொருந்தல் எனும் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொடு குழிகளின் மாதிரியொன்றில் உள்ள நெல் கி.மு.490 ஆக கணக்கிடப்பட்டுள்ளது. அதனுடன் காணப்பட்ட எழுத்து தமிழ்ப் பிராமி என அடையாளம் காணப்பட்டது. இரண்டாவது மாதிரியிலும் இதேநிலை காணப்படுவதால் கி.மு.5 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்ப் பிராமி எழுத்துக் காணப்பட்டது எனப் பேராசிரியர் ராஜன் இந்த ஆய்வில் குறிப்பிடுகின்றார். இதுவரை காலமும் கி.மு.3 ஆம் நூற்றாண்டிலேயே தமிழ்ப் பிராமி எழுத்துக்கள் பயன்படுத்தப்பட்டது என நம்பி வந்தோம். இத் தொல்லியல் கண்டுபிடிப்பால் தமிழ்மொழி கி.மு-5 ஆம் நூற்றாண்டிலேயே எழுத்து வடிவத்தைப் பெற்றது என நம்பக் கூடியதாக உள்ளது.

புதுச்சேரிப் பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத் துறைப் பேராசிரியர் முனைவர் க.ராஜன் தமிழ்நாடு பழனிக்கு அருகில் உள்ள பொருந்தல் எனும் இடத்தில் தன் ஆய்வு மாணவர்களுடன் இணைந்து மேற்கொண்ட அகழ்வாய்வு முடிவுகள் தமிழில் எழுத்துப் பயன்பாடு குறித்த கால ஆய்வில் மிக இன்றியமையாத பங்களிப்பைச் செய்திருக்கின்றது. சங்க காலத்துடன் தொடர்புடைய பொருந்தலில் பேராசிரியர் ராஜன் மேற்கொண்ட இரண்டு கட்டமான அகழ்வாய்வுகளில் கிடைத்துள்ள அரிய மணி வகைகளும், 'வைர' எனும் தமிழ்ப் பிராமி அதாவது தற்போது 'தமிழி' எனச் சூட்டப்படுகின்றது. தமிழ்ப் பிராமி எழுத்துப் பொறிப்புக் கொண்ட பழந்தமிழ்ச் சொற்களுடன் கூடிய மட்கலங்களும், உணவுக்காகப் பயன்படுத்தப்பட்ட நெல்மணிகளும், கம்பு போன்றதொரு தானிய வகையும் கிடைத்திருப்பதாக அவர்கள் தமது அகழ்வாய்வு முடிவுகளைப் பகிர்ந்து கொண்டனர். அங்கு எட்டாயிரத்திற்கும் அதிகமான கிடைத்த மணிகள் போன்ற பொருட்களும், ஒரு மக்கலத்தில் உள்ள எழுத்துப் பொறிப்பும் கி.மு-490 ஐச் சார்ந்தது எனச் சொல்லப்படுகின்ற அவ்வேளையில் தான் அந்தக் கலத்திற்குள் உள்ள நெல் ஒன்றையும், வேறு பொருட்களையும் அமெரிக்காவிற்கு கரிமத் தேர்வுக்காக அனுப்பிய போது அக்காலம் கி.மு-490 எனச் சொல்லியிருக்கிறார்கள். தமிழ் எழுத்து வடிவு என்பது மௌரியர்களிடமிருந்து பெறப்பட்டது. மௌரிய அரசனான அசோகனின் காலமான கி.மு-3 ஆம் நூற்றாண்டே தமிழ்ப் பிராமி எழுத்து வடிவக் காலம் என இதுவரை காலமும் சொல்லப்பட்டு வந்த கருத்துக்களை உடைப்பதாகப் பொருந்தலில் கிடைத்த எழுத்துப் பொறிப்பு . பொருந்தல் அகழ்வாய்வில் கிடைத்த இன்று 'தமிழி' எனவும் 'தொல்வளம் தமிழ்' எனவும் குறிப்பிடப்படும் தமிழ்ப் பிராமி எழுத்துக்களான 'வைர' எனும் சொல் சங்ககால வரலாற்றை கி.மு-500 அளவுக்கு முன்னோக்கி நகர்த்துகின்றது. இது எங்களுடைய தமிழ் இலக்கிய வரலாற்றுக் காலம் தொடர்பான இன்னொரு முன்னேற்றமாகும்.

சுமார்-2200 ஆண்டுகளுக்கு முன்னர் வைகைக் கரை நாகரிகம் சிறந்து விளங்கியதற்கான சான்றுகள் தற்போது கீழடி அகழ்வாய்வில் எமக்குக் கிடைத்துள்ளன. வைகை நதியின் தென்கரையில் மதுரையிலிருந்து சுமார் 20 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள வரலாற்றுச் சிறப்பு மிக்க கீழடிக் கிராமம் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்துள்ளது.

எங்கள் உணவு, உடைகள் பற்றி சங்கப் பாடல்களில் நாங்கள் ஓரளவு தரவுகள் பெறுகின்றோம். ஆனால், வாழ்விடம் பற்றிய விடயம் வருகின்ற போது உயர்நிலை மக்களின் வாழ்விடம் பற்றிய சில குறிப்புக்கள் மாத்திரமே வருகின்றன. இந்தநிலையில் தான் கீழடியில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் அகழ்வாய்வுகளில் பல கட்டடங்கள் கண்டறியப்பட்டுள்ளன. அந்தக் கட்டடங்கள் மூலமாக ஒரு நகர நாகரீகம் இருந்தமைக்கான அத்தனை அடிப்படை ஆதாரங்களும் தற்போது வெளிப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இதுவரை இடம்பெற்ற அனைத்து அகழ்வாராய்ச்சிகளும் தமிழகத்தின் ஆற்றங்கரை நாகரிகத்தின் இருப்புப் பற்றித் தான் வெளிப்படுத்தின. ஆனால், கீழடி வைகை ஆற்றுப் படுகை நாகரிகத்தினை எங்களுக்கு முழுமையாக வெளிக் கொணர்ந்து காட்டும் என நம்புகின்றோம். இதுவரை காலமும் ஐயத்துக்கு இடமாகவிருந்த பல ஆய்வுகளைக் கீழடி அகழ்வாய்வு தெளிவுபடுத்துவதாக அமைந்துள்ளது என்றார்.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவரும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினரும், மேற்படி ஆய்வு மாநாடு நடைபெறுவதற்கு வழிசமைத்துக் கொடுத்தவருமான செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் குறித்த மாநாட்டில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில், சங்க இலக்கியம் தொடர்பாக இவ்வருடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வுமாநாடு இடம்பெறுகின்றது. உண்மையில் சங்க இலக்கிய ஆராய்ச்சியில் மிக முக்கிய பங்கு வகித்தவர் சி.வை.தாமோதரம்பிள்ளை. இலங்கையின் முதலாவது பி.ஏ. பட்டதாரிகளாக சிறுப்பிட்டியில் பிறந்து ஏழாலையில் வளர்ந்த




சி. வை.தாமோதரம்பிள்ளையும், சுதுமலையைச் சேர்ந்த கரோல் விஸ்வநாதபிள்ளையும் காணப்படுகின்றார்கள். இரண்டும் சைவர்கள். எனினும், உயர்கல்விக்காக அமெரிக்க மிஷனரியை நாடினார்கள்.அவர்கள் பி.ஏ பட்டத்தைப் பெறுவதற்காக கிறிஸ்தவத்தைத் தழுவிக் கற்க வேண்டிய இக்கட்டான நிலையிருந்தது. சங்க இலக்கியம் ஏடுகளாக எத்தனையோ கிராமங்களிலிருந்தன. சிலர் அவற்றைக் கொடுக்க மறுத்தார்கள். எனினும், சி.வை. தாமோதரம்பிள்ளை அவை அழிந்து போய்விடக் கூடாது என்பதற்காக சங்க இலக்கிய ஏடுகள் பல இடங்களில் செல்லரித்துப் போயிருந்தன. அவற்றையெல்லாம் இலுப்பெண்ணை தடவி வெளிச்சத்தில் பார்த்து தாங்களே மிகுதிச் சொற்களைத் தொகுத்து சங்க இலக்கியத்தை அச்சேற்றுவதற்கு முயற்சி செய்த பெருந்தகை சி.வை.தாமோதரம்பிள்ளை.

இந்தியாவில் சங்க இலக்கிய தொடர்பான ஆய்வுமாநாடுகள் நடாத்தப்படும் போது சி.வை.தாமோதரம்பிள்ளையை அடக்கி வாசிக்கின்றார்கள். சி.வை.தாமோதரம்பிள்ளைக்குப் பின்னர் உ.வே.சுவாமிநாதய்யர் சங்க இலக்கியத்தைப் பாதுகாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். உ.வே.சுவாமிநாதய்யரை அங்கு தூக்கி வைத்திருக்கின்றார்கள். அனால், இந்தப் பணியைத் தொடக்கி வைத்த சி.வை. தாமோதரம்பிள்ளையை அடக்கி வாசிப்பது வேதனையானது.

சங்க இலக்கியக் காலம் என வரையறுக்கப்பட்ட காலத்திற்கு அப்பாலேயே தமிழ்மொழி உலகளாவிய ரீதியில் சிறப்புப் பெற்றிருந்தது என்பதற்கு கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட நாகரிக அடையாளங்கள் சான்று பகர்கின்றன. கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை ஜேர்மன் நாட்டுக்கு அனுப்பினார்கள். அவற்றை டெல்லியில் கொண்டுபோய்ப் பாதுகாக்க வேண்டும் என்ற போது இந்தியாவில் இருக்கின்ற இளம் தமிழ்ப் பிள்ளைகள் எங்கேயும் கொண்டு செல்லக் கூடாது எனச் சண்டை பிடித்தார்கள். தற்போது கீழடியில் கண்டுபிடிக்கப்பட்ட பொருட்களை மதுரைக்கு அருகில் வைத்துப் பாதுகாக்கின்றார்கள். சங்க இலக்கியத்துடன் தான் தமிழ் இலக்கியம் ஆரம்பமானது என்ற வரலாறு கீழடியுடன் அற்றுப் போகின்றது. எனவே, சங்கப் பாடல்களை மாத்திரம் வைத்துக் கொண்டே நாங்கள் சரித்திரம் பேசுவதில் இனி அர்த்தமில்லை. சங்ககாலத்திற்கு எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழ் இருந்திருக்கின்றது. தமிழர்களிடம் உயர்ந்த நாகரீகம் இருந்திருக்கின்றது. மதுரைக் கண்டுபிடிப்புப் பயன் தந்திருக்கின்றது.

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 48 ஆண்டுகளைச் சந்தித்திருக்கும் நிலையில் எதிர்காலத்தில் வேறு மொழி கற்பிக்கக் கூடிய பலரை அழைத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எங்கள் ஆய்வுகளையெல்லாம் மொழிபெயர்க்கச் செய்து பயன்பெற வேண்டும். நாங்கள் தமிழில் மாத்திரம் நிறைய விடயங்களை எழுதி வைத்துப் பயனில்லை. எங்கள் ஆய்வுகளை உலக அரங்கிற்கு கொண்டு செல்ல வேண்டும். அதற்கு இத்தகைய மாநாடுகள் வித்திட வேண்டும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இதேவேளை, கடந்த-2000 ஆம் ஆண்டு ஜனவரி மாதம்-10 ஆம் திகதி ''வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்'' எனும் கருப் பொருளில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையின் ஏற்பாட்டில் முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் நடைபெற்றது. இவ்வருடம் கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக இரண்டாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு காலம் தாழ்த்தி இடம்பெற்றதுடன் இம்முறை மாநாட்டில் வெளிநாட்டு ஆய்வாளர்களும் கலந்து கொள்ளவில்லை. மட்டுப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகச் சமூகத்தினர் மற்றும் கல்வியியலாளர்களே இம்முறை மாநாட்டில் கலந்து கொண்டனர்.

எனினும், எதிர்வரும் காலங்களில் வருடம் தோறும் ஜனவரி-10 மற்றும் 11 ஆம் திகதிகளில் அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு உலகத் தமிழர்களை ஒருங்கிணைத்துப் பாரியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தமிழ் வளர்ச்சி, இசை வளர்ச்சி போன்றவற்றிற்குத் தான் தேடிய சொத்தில் 1/3 பங்கை எழுதி வைத்துள்ளார் சிங்கப்பூர் கந்தையா கார்த்திகேசு. எனவே, இந்த நிதி வருடம் தோறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டைச் சிறப்பாக நடாத்துவதற்கு உறுதுணையாக அமையும். இவ்வாறான மாநாடுகள் மூலம் எங்கள் ஆய்வுகளும், செம்மொழியான தமிழ்மொழியின் பெருமையும் உலக அரங்கிற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். தற்போது தமிழைச் சிறப்புப் பாடமாக கற்கின்ற மாணவர் கூட்டம் என்றுமில்லாதவாறு குறைந்திருக்கும் நிலையில் இத்தகைய மாநாடுகள் மீண்டும் தமிழ் மொழி உணர்வை உண்டாக்கிப் பெரியதொரு மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்.

# 34 வருட ஆசிரியர் சேவையிலிருந்து ஓய்வு



கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் தேசிய ஆண்கள் பாடசாலையில் ஆசிரியராக கடமையாற்றிய எஸ்.டபிள்யூ.ஜோர்ச் அவர்கள் தனது 34 வருட கல்விப் பணியிலிருந்து கடந்த 2 ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார். தனது ஆரம்பக் கல்வியை யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திலும் இடைநிலை உயர்தரக் கல்வியை யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்ற இவர் தனது பட்டப்படிப்பினை யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் 1981 - 1985 காலப்பகுதியில் பூர்த்தி செய்தார்.

1987 ஆம் ஆண்டு கண்டி இராமகிருஷ்ணா மத்திய கல்லூரியில் ஆசிரியப் பணியை ஆரம்பித்த இவர், 1994 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமாவில் தேர்ச்சி பெற்று ஆசிரியப் பணிக்கு வலுச் சேர்த்து புதுப் பொலிவுடன் கல்விப் பணியில் ஆர்வமுடன் ஈடுபட்டார். நவீன சிந்தனையுடனும் இளமைத் துடிப்புடனும் எதிர்பார்ப்பு எதுவுமின்றி சேவையாற்றிய இவரை உதவி அதிபர் பதவி அலங்கரித்தது. கண்டி இராமகிருஷ்ணா கல்லூரியில் 2000 ஆம் ஆண்டு வரை உதவி அதிபராக பணியாற்றிய இவரது காலத்தில் கல்லூரி பல்துறை வளர்ச்சியைக் கண்டதுடன், இவருடைய அரும்பணி காரணமாக ஆசிரியர், மாணவர்கள் மனதில் இன்றுவரை நிலை பெற்று வாழ்கின்றார்.

2000 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை கொழும்பு முகத்துவாரம் இந்துக் கல்லூரியில் உதவி அதிபராக தனது பணியைத் தொடர்ந்தார். பொறுப்புக்களை கடமை உணர்வுடனும் தியாக சிந்தையுடனும் நிறைவேற்றி அக்கல்லூரியின் ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் மனதில் நீங்கா இடம்பிடித்தார்.

மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கும் கல்வித்துறை முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்து அரும்பணியாற்றினார். விசேடமாக மாணவர்களின் ஒழுக்க நெறிகளை வழிப்படுத்துவதுடனும் ஆசிரியர் - மாணவர் - பெற்றோர் - பழைய மாணவர்களின் உறவினை மேம்படுத்துவதிலும் ஈடுபட்டார். இவரது 13 வருட பணிக் காலம் அக்கல்லூரியின் முன்னேற்றமான காலம் எனக் கூறினால் மிகையாகாது.

2013 ஆம் ஆண்டு முதல் கொட்டாஞ்சேனை புனித அந்தோனியார் தேசிய பாடசாலையில் 8 வருடங்கள் உயர்தர பகுதி தலைவராகவும், மாணவ தலைவர்களின் பொறுப்பாசிரியராகவும் கடமையாற்றினார். 34 வருட ஆசிரிய சேவையில் உயர்தர மாணவர்களுக்கான கணக்கியல் பாட ஆசிரியராகவும் வணிக கல்வி ஆசிரியராகவும் சேவையாற்றினார். கற்பித்தலின் உச்சப்பயனை பெறுவதற்காக சிறந்த ஆளுமையுடன் உழைப்பை வழங்கிய பெருந்தகையான இவரின் அயரா முயற்சியினால் அதிக மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தெரிவானார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கல்விப் பணியை மெருகூட்டும் முகமாக பரீட்சைத் திணைக்கள மதிப்பீட்டுப் பணிகளில் தன்னை ஈடுபடுத்தினார். கல்வி பொதுத்தராதர உயர்தர கணக்கியல் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளில் 16 வருடங்கள் உதவிப் பரீட்சகராகவும் 15 வருடங்கள் மேலதிக, பிரதம பரீட்சகராகவும் கட்டுப்பாட்டு பரீட்சகர் குழுவில் இணைந்து 14 வருடங்கள் கடமையாற்றினார். கல்வி பொதுத்தராதர சாதாரண தரத்தில் வணிக கல்வி பாடத்தில் 26 வருடங்கள் உதவிப் பரீட்சகராகவும் 2 வருடங்கள் பிரதம பரீட்சகராகவும் கட்டுப்பாட்டு பரீட்சகர் குழுவின் அங்கத்தவராகவும் பணி செய்தார்.

எந்நேரமும் மிகவும் சுறுசுறுப்பாகவும் சீரிய எண்ணங்களின் வெளிப்பாட்டுடனும் எல்லோரையும் அரவணைத்து பணியாற்றுவதில் இவருக்கு நிகர் இவரே. சிறந்த ஆசிரியராக, உதவி அதிபராக, பகுதி தலைவராக பல்வேறுபட்ட சூழலில் சிறந்த நிர்வாகியாக கடந்த 34 வருடங்களாக கல்விச் சமூகத்திற்கு தனது பணியை மன நிறைவுடன் பூர்த்தி செய்த எஸ்.டபிள்யூ ஜோர்ச் ஆசிரியரின் ஓய்வு, கல்விச் சமூகத்திற்கு மிக பெரிய பேரிழப்பாகும். அவரது பணி தொடர வேண்டும் எனவும் இன்னமும் பல கல்வியியலாளர்களை உருவாக்குவதில் அவர் தொடர்ந்தும் தன்னுடைய கல்விப் பணியை சிறப்புற தொடர வேண்டும் என்பதே அவருடன் பணியாற்றிய ஆசிரியர், மாணவர்களின் பெரு விருப்பமாகும்.

**அதிபர், ஆசிரியர்கள்**
**கொ/ புனித அந்தோனியார் தேசிய பாடசாலை**
**கொழும்பு - 13**

# 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி விருதினை வென்றுள்ள செல்வரட்ணம் நிமால்




Metropolitan Institute of Business Management (MIBM)இன் பிரதம நிறைவேற்று அதிகாரியான செல்வரட்ணம் நிமால் அவர்கள் அமெரிக்காவிலுள்ள Business World International Organization (BWIO) ஆல் ஒழுங்கு செய்யப்பட்ட விருது வழங்கும் விழாவில் Micro Sector of the Education Industry இன் 2020ஆம் ஆண்டுக்கான சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரிக்கான (CEO) தங்க விருதினை அண்மையில் பெற்றுள்ளார். இவ்விருது வழங்கல் விழாவானது கடந்த நவம்பர் மாதம் 28ஆம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் இடம்பெற்றதோடு நீர்பாசனத்துறை கௌரவ அமைச்சர் சமல் ராஜபக்ஷ அவர்களின் கரங்களால் இவ்விருதினை திரு.நிமால் அவர்கள் பெற்றுக்கொண்டார். இந்நிகழ்வின் இணை பிரதம அதிதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார்.

BWIO விருது என்பது நிறுவனங்களது சாதனைகள் மற்றும் அதன் வெற்றிப்பாதைகளை உலகுக்கு வெளிப்படுத்தக்கூடிய ஒரு நிறுவனமாக செயற்படுவதோடு மாத்திரமன்றி இதன் முழுமையான ஆய்வுகள் மற்றும் சிறப்பான தெரிவுச் செயன்முறைகள் காரணமாக உலகெங்கிலும் இவ்விருதிற்கு சிறந்த அங்கீகாரத்துடனான நன்மதிப்பு கிடைக்கப்படுகின்றன. இத்தெரிவுச் செயன்முறையில் வளர்ச்சி, புத்தாக்கம், பணியிட கலாசாரம், வழங்கப்படும் உற்பத்திகள் மற்றும் சேவைகள், தலைமைத்துவம், வியாபார நெறிமுறைகள், நிர்வாகம், சமூகப் பொறுப்பு, நற்பெயர் மற்றும் ஏனைய ஒப்பான மூலக்கூறுகள் என்பன இதில் உள்ளடக்கப்படுகின்றன.

செல்வரட்ணம் நிமால் அவர்கள் Metropolitan Institute of Business Management (MIBM) இன் பிரதம நிறைவேற்று அதிகாரியாவார். இங்கு ஏழு முகாமைத்துவ கற்கைநெறிகள், மூன்று புகைப்படம் சார் கற்கைநெறிகள், இரண்டு மொழிகளையுடைய கற்கைநெறிகள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கற்கைநெறிகள் போன்ற பெருமளவு கற்கைநெறிகள் குறித்த துறையில் சிறப்பு நிபுணத்துவமும் அனுபவமும் வாய்ந்த விரிவுரையாளர்களால் கற்பிக்கப்படுகின்றன.

பெருநிறுவன குழுமங்களின் முகாமைத்துவ துறையில் 30 ஆண்டுகால அனுபவத்தை உடைய இவர் தொழிற்துறையில் பொறியியலாளராவதோடு சந்தைப்படுத்தல் மற்றும் வியாபார நிர்வாகத்திலும் சிறப்புத் தேர்ச்சியினை உடையவர். PhotoKina Limited (KG Group) இல் உற்பத்தி முதல் தொழில்நுட்ப முகாமையாளராகவும், Hayleys Consumer Product Limited இன் வணிகப் பிரிவின் தலைவராகவும், Photo Technica Pvt Ltd இல் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார்.

இவர் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ பிரிவின் வியாபார நிர்வாகத்திலும் (இந்தியா), பொது முகாமைத்துவத்திலும் (அமெரிக்கா) இரண்டு சிறப்பு முதுமாணி பட்டங்களைப் பெற்றுள்ளார். அத்துடன் முகாமைத்துவம் மற்றும் புகைப்படம் சார் கற்கைகளுக்கு விரிவுரையாளராக பணியாற்றியுள்ளதோடு இலங்கை மற்றும் இந்தியாவில் தலைமைத்துவ கருத்தரங்குகளையும் மேற்கொண்டுள்ளார்.

சர்வதேச லயன்ஸ் கழகத்தில் செயற்படு உறுப்பினராவதோடு செல்வரட்ணம் நிமால் அவர்கள் சர்வதேச லயன்ஸ் கழகத்தால் வழங்கப்படும் மூன்று தலைமைத்துவ கௌரவப் பதக்கங்களையும் பெற்றுள்ளார். 2013ஆம் ஆண்டு அவரது சிறந்த சமூக சேவைகளை அங்கீகரிக்கும் வகையில் அவருக்கு தேசமான்ய என்ற மதிப்பு மிக்க தேசிய பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும் 2021ஆம் ஆண்டு அகில இலங்கை சமாதான நீதவானாகவும் நியமிக்கப்பட்டார்.

சிறந்த பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற விருதை பெற்றுள்ள நிமால் அவர்கள் இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில், ஒன்லைன் கற்கையே எதிர்காலம் என்பதை நாங்கள் அடையாளங் கண்டுள்ளதோடு கொரோனா நோய்த் தொற்றானது முழுமையாக நீங்கப்பட்டாலும்; இவ் ஒன்லைன் கற்கையானது நிறுத்தப்படமாட்டாது என்று கூறியுள்ளார். மேலும் MIBM ஒன்லைன் கற்கைகளுக்கு தமது முதலீடுகளை உட்செலுத்தியுள்ளதோடு தொற்று நோய்க்கு முன்பிருந்ததைப் போலல்லாது தற்பொழுது நாடு பூராகவும் உள்ள மாணவர்கள் ஒன்லைன் கற்கைகளுக்கு விருப்பத்துடன் சமூகமளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆரம்ப நாட்களில் ஒன்லைன் கற்கைகளில் மாணவர்களதும் விரிவுரையாளர்களதும் அணுகுமுறைகள் மற்றும் மனநிலைகள் வேறுபட்டதாக காணப்பட்டாலும் முறையான பயிற்சிகள் மூலம் அவர்கள் தங்களை இசைவாக்கப்படுத்திக்கொண்டனர்.

மேலும் MIBM ஆனது தலைமைத்துவ இலக்குகளை அடைவதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதோடு நாட்டின் முன்னேற்றத்திற்கு தலைமைத்துவ பண்புகளுடனான எதிர்கால முகாமையாளர்களை தயார்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் உருவாக்குகின்றது என்றும் குறிப்பிட்டார். சிறந்த வணிக உத்திகளால் மாத்திரமே நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்த முடியும். அதற்கு சிறந்த தலைவர்கள் தேவை. அதனையே MIBM மேற்கொள்கின்றது என்றும் குறிப்பிட்டார். தற்பொழுது வெளிநாட்டு விருது வழங்கும் நிறுவனத்துடன் Strategic Partnrship இனை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் விரைவில் MIBM இம் மைல்கல்லை அடையும் என்றும் நிமால் அவர்கள் குறிப்பிட்டார். இவரின் தலைமைத்துவத்தின் கீழ் MIBM இன் கற்கைகளானது ஒன்று முதல் பதினைந்தாக அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


இவர் புனித அந்தோனியார் கல்லூரி, வத்தளை மற்றும் இந்து கல்லூரி, யாழ்ப்பாணம் ஆகிய பாடசாலைகளின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# திராவிடர் எழுச்சிக் குரல்களின் தாக்கம்

மன்னர் காலத்திற்குப் பின்னர் ''நாம் தமிழ் இனம்'' என்ற பிரக்ஞை தமிழ்நாட்டில் சுதந்திர இயக்க போராட்டங்களுடன் இணைந்தே மீண்டும் எழுச்சி பெற்றது. இதன் பிரதிபலிப்புகள் இலங்கையிலும் காணப்பட்டன. இத்தகு எழுச்சி தமிழ் நாட்டில் பார்ப்பனருக்கு எதிரான எழுச்சியுடன் ஆரம்பமாகிறது . இவ்வெழுச்சிக்கு அடிநாதமான காரணமாக ''தமிழன்'' மற்றும் ''திராவிடன்'' என்ற மனவெழுச்சியினால் ஏற்பட்ட பிரவாகமாக இருக்கிறது.

இந்த மனவெழுச்சியுடன் இணைந்து பிராமணர்களுக்கு எதிரான ''சுயமரியாதை'' இயக்கம் 1925 ஆம் ஆண்டு ஆரம்பமானது. இந்த எழுச்சியின் தந்தையாக இருந்தவர் ''ஈவேரா'' என்று சுருக்கமாக அழைக்கப்படும் ஈ . வே. ராமசாமி நாயக்கர் ஆவார் . இவர் பின்னர் தந்தை பெரியார் என்றும் அழைக்கப்பட்டார். இவர் 1879 ஆம் ஆண்டு ஒரு வர்த்தகரின் குடும்பத்தில் பிறந்தார். சிறு வயது முதலே இவர் ஜாதி கட்டுப்பாடுகளை மீறி அதனை உடைத்தெறிவதில் முனைப்பு காட்டினார். அதன் பின்னர் இந்திய தேசிய காங்கிரஸில் இணைந்து இந்திய விடுதலைப் போராட்டத்தில் இணைந்து கொண்ட போதும் மெட்ராஸ் காங்கிரஸ் தலைவர்களின் பார்ப்பனிய செயற்பாடுகளுக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தினார் . காங்கிரஸ் தலைமைத்துவத்திற்குள் காணப்பட்ட பார்ப்பனிய மேட்டுக்குடி எண்ணங்கள், சமூக பிற்போக்குத்தனங்கள்,கடவுள் தத்துவம் , மூடநம்பிக்கைகள், சமூக ஒடுக்குமுறைமை என்பவைகளுக்கு எதிராக செயல்படத் தொடங்கினார். அரசியல் விடுதலை மூலம் பார்ப்பனிய தலைமைகள் உருவாவதை கடுமையாக எதிர்த்தார் .

இதனால் பார்ப்பனியர்கள் அல்லாத ஏனைய சமூக அடிமட்ட பிரிவினரை ஒன்றுதிரட்டி மூடநம்பிக்கைகளுக்கு எதிரான ஒரு சமூகத்தை உருவாக்கப் பாடுபட்டார். அவர் தனது கொள்கைகளை இந்தியாவுக்கு வெளியிலும் பரப்புரைகள் செய்வதற்காக 1932 ஆம் ஆண்டு இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். அந்த விஜயத்தின்போது கொழும்பு , கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் செய்து இந்துத்துவ கடவுள் நம்பிக்கைகளுக்கு எதிராகவும் மூடநம்பிக்கைகளுக்கு எதிராகவும் இந்து சமயத்தில் பிராமணிய ஆதிக்கத்துக்கு எதிராகவும் பகுத்தறிவு வாதத்தை முன்வைத்து பிரசங்கங்கள் மேற்கொண்டார் . அவரது வாதங்கள் சாதி ஒடுக்குமுறைக்கு எதிராக மக்கள் அணிதிரள வேண்டும் என்பதையும் வலியுறுத்தியது .பெரியாரின் பகுத்தறிவு வாத கருத்துக்கள் இலங்கையின் ஒடுக்கப்பட்ட , அடக்கப்பட்ட மக்கள் மத்தியில் பெரிதும் பிரபல்யம் பெற்றது. அதன் காரணமாக யாழ்ப்பாணத்திலும் மலையகத்திலும் திராவிட இயக்கங்கள், சங்கங்கள் தோன்றின. 1930களை தொடர்ந்தும் 1940களின் முற்பகுதியிலும் பெரியாரின் பகுத்தறிவுவாத இயக்கம், பிராமணியத்துக்கு எதிரான போராட்டம், சுயமரியாதை போராட்டம் என்பன தமிழ்நாட்டில் பலமாக வேரூன்றியது. அதனுடன் சேர்ந்து அறிஞர் அண்ணாதுரையின் திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்து ''தமிழ் நாடு தமிழனுக்கே'' என்ற கோஷத்தை முன்வைத்தனர். அத்துடன் இந்திய தேசிய காங்கிரஸில் வேரூன்றிக் கொண்டிருந்த ஆரியர் மேலாதிக்கத்துக்கு எதிராகவும் இவர்கள் கோஷங்களை பலமாக முன்வைத்தனர்.


ஏ. இளஞ்செழியன்

இத்தகைய தமிழர் எழுச்சிகள் 1930களிலும் மற்றும் 1940களிலும் தமிழர்தம் கலாசாரம், சமூக சீர்திருத்தம் போன்றவற்றின் அவசியம் தொடர்பில் உரத்துக் குரல் எழுப்பக் காரணமாக அமைந்தன . இந்தக் குரல்கள் இலங்கையின் தலைநகர் கொழும்பிலும் மலைநாட்டின் பெருந்தோட்டப் பகுதிகளிலும் கூட ஒலிக்கத் தொடங்கின. பெரியாரின் சுயமரியாதை இயக்கம் மற்றும் திராவிட இயக்கம் என்பன கொழும்பிலும் மலைநாட்டிலும் எழுச்சிக் குழுக்களை உருவாக்கியது. இத்தகைய குழுக்களில் சமையல் தொழில் புரிபவர்கள், சவரத் தொழிலாளர்கள், வீட்டுப் பணியாளர்கள், ரிக்சா ஓட்டுபவர்கள் , உணவகப் பணியாளர்கள், வீட்டுத் தோட்ட வேலையாளர்கள், போத்தல், சாக்கு ,இரும்பு சேகரிப்பவர்கள் முதலானோர் பங்குபற்றினர். விரைவிலேயே இந்த இயக்கம் பெருந்தோட்டத்துறைக்கும் பரவியது. 1945 ஆம் ஆண்டில் இத்திராவிட இயக்கத்துக்கு இலங்கை திராவிட கூட்டமைப்பு என்று பெயரிடப்பட்டது. அது 1948 ஆம் ஆண்டு இலங்கை திராவிடக் கழகம் என்று உருமாற்றம் அடைந்தது. 1949 ஆம் ஆண்டு அது திராவிட முன்னேற்றக் கழகமாக மாறி டி .எம் .கே. என்று சுருக்கமாக அழைக்கப்பட்டது . இது பின்னர் ஏ . இளஞ்செழியனை செயலாளராகக் கொண்டு தனது கூட்டங்களை கண்டி, தலவாக்கலை போன்ற நகரங்களில் ஏற்பாடு செய்தது. இளஞ்செழியன் ஒரு ஹோட்டல் தொழிலாளியாகவே தனது வாழ்க்கையை ஆரம்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் எழுச்சி அடைந்த தேசிய மக்கள் இயக்கங்களின் செயல்பாடுகள் மற்றும் மக்களை பெரும் திரளாக இணைத்துக்கொண்டு முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள் என்பன இலங்கை தேசிய விடுதலைப் போராட்டத்திலும் பிரதிபலித்ததுடன், இந்திய பெருந்தோட்டத் தொழிலாளர் மத்தியிலும் செல்வாக்கு செலுத்தியதனை அவதானிக்கக் கூடியதாக இருந்தது . அவ்வப்போது இந்தியாவிலிருந்து இலங்கைக்கு விஜயத்தை மேற்கொண்ட செல்வாக்குமிக்க இந்தியத் தலைவர்களின் இலங்கை வருகை , இலங்கையில் வசித்த இந்திய வம்சாவழி மக்களின் மோசமான வாழ்க்கை நிலையை வெளி உலகத்திற்கு எடுத்துச் சொல்ல பெறும் வாய்ப்புகளாக அமைந்தன. குறிப்பாக அவர்கள் இலங்கை மத்திய மலைநாட்டில் கூலித் தொழிலாளர்களாக கடுமையான கெடுபிடிகளுக்கு மத்தியில் தொழில் புரிந்த மக்களைப் பற்றி வெளியுலகத்திற்கு பிரசாரம் செய்தார்கள் . இதனால் எல்லாம் அந்தத் தொழிலாளர்கள் எந்தளவுக்கு உரிமைகள் மறுக்கப்பட்டு விலங்குகள் போல் நடத்தப்படுகிறார்கள் என்பது வெளியுலகத்திற்கு தெரிய வந்தது.

இந்திய தேசிய விடுதலை அமைப்புகளுக்கு அப்பால் சமூக சீர்திருத்தம் , சமூக ஒடுக்குமுறை , உயர் சாதி - கீழ் சாதி வேறுபாடுகள், தீண்டாமை முதலான சமூக பாகுபாடுகளுக்கு எதிராக போராட்டங்கள் மேற்கொண்ட பல அமைப்புகளும் இலங்கை வாழ் பெருந்தோட்ட மக்கள் மத்தியில் சமூக விழிப்புணர்வு ஏற்படுவது தொடர்பில் கரிசனை கொண்டிருந்தன. பிற்காலத்தில் ஏற்பட்ட பல்வேறு சமூக மாற்றங்களுக்கு இவை அடிப்படை ஊக்குவிப்புகளாக அமைந்தன . எனினும் மகாத்மா காந்தி தென்னாபிரிக்காவில் வசித்த காலத்தில் அங்கிருந்த இந்திய தோட்டத் தொழிலாளர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கும் அடக்குமுறைகளுக்கும் எதிராக போராட்டங்கள் மேற்கொண்டதுபோல் இலங்கையின் மத்திய மலைநாட்டில் இவ்விதம் இந்தியத் தொழிலாளர்கள் துன்பப்படுகிறார்கள் என்று தெரிந்திருந்தும் அதுபற்றி அவரது இலங்கை விஜயத்தின்போது ஒன்றுமே குறிப்பிடவில்லை. அவர் இந்தியா சென்ற பின்னரும் அது தொடர்பில் ஒன்றுமே செய்யாமல் விட்டது ஒரு குறைபாடாகவே தென்படுகிறது என்று பல ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எது எப்படி இருந்த போதும் இலங்கையின் பிரித்தானிய அரசு அதிகாரிகளும் பெருந்தோட்ட சொந்தக்காரர்களும் அரசு இயந்திரத்துக்குள் கடுமையான சட்டஷெஷெதிட்டங்களை அமுல்படுத்தி தொழிலாளரை கசக்கிப் பிழிந்து பெருந்தோட்டத் துறையிலிருந்து உச்ச இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முயற்சித்தனரேயன்றி உற்பத்தி செயற்பாடு எவ்வாறு செயலாற்றுகின்றது, தோட்ட உட்கட்டமைப்பு எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது, தொழிலாளர் என்ன நிலையில் இருக்கிறார்கள், அவர்கள் எவ்வாறெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது பற்றி துளி அளவிலாவது அவர்கள் கவனம் எடுத்துக்கொள்ளவில்லை. எனினும் இந்த நிலைமையிலும் கூட தமக்கு எதிரான ஒடுக்குமுறை , உரிமை மறுப்பு மற்றும் பல்வேறு அநீதிகளுக்கு எதிராகவும் போராட வேண்டும் என்ற ஒரு தலைமைத்துவ உணர்வை இவர்கள் மத்தியில் ஏற்படுத்த யாரும் முயற்சிக்கவில்லை.

மறுபுறத்தில் இந்திய தேசிய தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்து அவர்கள் பேசிய கருத்துக்கள் ''நாம் இந்தியர்'' என்ற உணர்வை இவர்களுக்கு ஏற்படுத்தியதுடன் ஏகாதிபத்திய எஜமானர்களுக்கு எதிரான எதிர்ப்பு உணர்வை அவர்களது உள்ளங்களில் தோற்றுவித்து காலனித்துவத்திற்கு எதிரான அணிக்கு ஆதரவு வழங்க அவர்களைத் தூண்டின. அதேசமயம் திராவிட இயக்கக் கருத்துக்களால் கவரப்பட்ட அவர்கள் சாதியத்திற்கு எதிராகவும் பிராமணியத்துக்கு எதிராகவும் போராட அவர்களைத் தூண்டியது . ஆனாலும் இந்தத் தலைவர்கள் யாருமே தொழிலாளர் உரிமை மறுப்புக்காக பெருந்தோட்டத் தொழிலாளர்களும் போராட வேண்டும் என்ற உணர்வை அவர்கள் மனதில் தோற்றுவிக்க தவறிவிட்டனர்.

இந்த நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்ட தோட்டத் துரைமார்கள் தொடர்ந்தும் தமது சட்டதிட்டங்களை கிடுக்கிப் பிடியாக இறுக்கி தொழிலாளர்களை தோட்டங்களில் இருந்து வெளியே செல்லாமலும் அதேசமயம் வெளியிலிருந்து தோட்டங்களுக்கு யாரும் சென்றுவிடாமலும் இருக்க மிகக் கடுமையான பாதுகாப்பு சட்டங்களை அமுல்படுத்தி தொடர்ந்தும் தொழிலாளர்களை அடிமை போன்று நடத்தி வந்தார்கள் . அத்தகைய சட்டதிட்டங்களை யாரும் மீறினால் அவர்களை சட்டங்கள் கொண்டு தண்டிக்கவும் அவர்கள் கரங்களில் அதிகாரம் என்ற ஆயுதம் எப்போதுமே மின்னிக் கொண்டிருந்தது.

**(தொடரும்)**



இரா. சடகோபன்

# திட்டமிட்ட வியாபாரம் கூட சறுக்கலாம் திடீரென தொடங்கு, பணம் குவிக்கலாம்

தேயிலைக் கொழுந்து பறிக்கும் சில இடங்களில் இப்போதும் நாம் காணக்கூடிய காட்சிதான், தங்கள் கைக் குழந்தைகளை சேலையில் சுற்றி முதுகோடு சேர்த்துக் கட்டியபடி வேலை செய்யும் தாய்மார்களை. முன்னர் வயல் வேலை செய்யும் பெண்கள் கூட இவ்வாறுதான் குழந்தைகளை மார்போடும், இடுப்போடும் துணிகளால் இணைத்துக் கட்டியபடி வேலை செய்வார்கள். குழந்தைகளை வைத்துக்கொண்டு வேலை செய்வது நகரத்து அம்மா, அப்பாக்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. குழந்தைகளின் தாத்தா, பாட்டி கிராமங்களில் இருந்து நகரத்திற்கு வர பெரிதும் விரும்புவதும் இல்லை. வேலைக்காரப் பெண்களை நியமித்தாலும் அவர்களுக்கு சம்பளம் கொடுப்பது ஒருபுறமிருக்க, அவர்கள் குழந்தைகளை பொறுப்போடு அன்பாகப் பார்த்துக்கொள்வார்களா என்பதும் கேள்விக்குறியே. இவை அனைத்துக்கும் பதிலாகக் கிடைத்திருக்கும் ஒரு நவீன வடிவம்தான் பேபி கெரியர் அல்லது பேபி வியரிங் எனப்படும் பைகள். உதவிக்கு ஆள் இல்லாத நகரத்துப் பெற்றோருக்கு இன்று கைகொடுத்து உதவுகிறது பேபி கெரியர். வெறும் 50 ஆயிரம் ரூபா முதலீட்டில் தொடங்கிய இந்த பிஸ்னஸில் இன்று ஒன்றரைக் கோடி ரூபாவுக்கு டர்ன் ஓவர் செய்கிறாள் சென்னையை பூர்வீகமாகக் கொண்ட பைரவி மணி.

திட்டமிட்டு, பல மாதங்கள் காத்திருந்து, மார்க்கெட்டை தெளிவாகத் தீர்மானித்து, பல நிபுணர்களிடம் ஆலோசனைப் பெற்று, வெகு நேர்த்தியான முன்னெச்சரிக்கையோடு தொடங்குகிற பிஸ்னஸ் கூட சிலவேளை நம்மைக் கவிழ்த்து விடுவதுண்டு. இது எதனையும் பின்பற்றாமல் திடீரென தொடங்குகிற வியாபாரம் கூட சிலவேளை நம்மை உச்சத்திற்கு கொண்டு போய் சேர்த்துவிடும். பைரவி மணி இதில் இரண்டாவது வகையைச் சேர்ந்தவள். திடீரென தட்டிய ஒரு பொறிதான் இன்று அவளை ஒரு தொழில் முனைவோராக உயர்த்தியிருக்கிறது. ''கோல் கோல் (KOL KOL)'' என்ற பெயரில் டில்லியில் பேபி கெரியர் நிறுவனத்தை நடத்தி வரும், கோவாவில் வசிக்கும் தமிழ்ப் பெண்தான் பைரவி மணி. அவள் சொல்லும் வெற்றிக் கதையைக் கேட்போம்.

நான் பக்கா தமிழ்ப் பெண்தான். எனது பூர்வீகம் சென்னை. மும்பையில் கம்யூனிகேஷன் கோர்ஸ் முடித்துவிட்டு ஈவென்ட் மேனேஜ்மென்ட் கம்பனியில் வேலை பார்த்தேன். ஒரே மாதிரியான வேலையை தொடர்ந்து பார்ப்பதில் எனக்கு விருப்பமில்லை. புதிது புதிதாக வேறு எதையாவது பண்ண வேண்டும். அதனால் வேறு, வேறு பணி என்று நான்கைந்து இடங்களில் வேலை செய்தேன். ஒரு கட்டத்தில் எல்லா வேலையும் போரடிக்கத் தொடங்கியது. திடீரென்று பேக்கிங் துறையில் ஆர்வம் உண்டானது. கேக் செய்வதில் உண்டான விருப்பத்தால், குழந்தைகளுக்கான பிறந்த நாள் கேக், திருமண நிகழ்வுக்கான வெடிங் கேக், கிறிஸ்மஸ் கேக் என்று வகை வகையாக செய்து அமர்க்களப்படுத்தினேன். திருமணம், குடும்பம், கர்ப்பம் என்று தொடர் நிகழ்வுகளால் தொடர்ந்து பேக்கிங் செய்ய முடியாமல் ஒரு சின்ன இடைவெளி ஏற்பட்டது.


பைரவி மணி

அந்த சந்தர்ப்பத்தில்தான் அம்மா எனக்கொரு அறிவுரை சொன்னார். ''இப்போது உண்டான இடைவெளி தொடர்ந்துவிடும் சாத்தியம் உண்டு. எதையும் விட்டுவிட்டால் மீண்டும் அதைச் செய்வது அவ்வளவு இலகுவானதல்ல. குழந்தை பிறந்து கொஞ்ச நாள்ளேயே நீ எதாவது பண்ணாதுவிட்டால் இரண்டு, மூன்று வருடங்களுக்கு உன்னால் எதையுமே பண்ண முடியாது. குழந்தையைப் பார்த்துக் கொள்வதிலேயே காலம் ஓடிடும்'' என்று சொன்னார். அந்த வார்த்தைகளை சரியாக மனதில் உள்வாங்கிக் கொண்டேன். என் மகன் அத்வைத் பிறந்து சரியாக 45 நாட்கள் மட்டுமே ஓய்வாக இருந்துவிட்டு மீண்டும் பேக்கிங்கை ஆரம்பித்தேன். நிறைய ஆர்டர்களும் வந்துகொண்டிருந்தது. கிட்டத்தட்ட 10 மணி நேரம் நின்றுகொண்டே கேக் செய்ய வேண்டியிருக்கும். கைக் குழந்தையை வைத்துக்கொண்டு அவ்வளவு நேரம் நிற்பது சவாலாக இருந்தது. ''பேசாம பேக்கிங்கை விட்டு விடுவோமா'' என்று கூட யோசித்தேன்.

எனது கஷ்டத்தை உணர்ந்துகொண்ட எனது நண்பி ஒருவர் குழந்தையை மாட்டிக்கொள்ளும் பேபி கேரியர் ஒன்றை எனக்குத் தந்துதவினார். வெளிநாட்டில் இருந்து தருவிக்கப்பட்ட அந்த பேபி கெரியர் இந்திய மதிப்பில் பத்து, பன்னிரெண்டாயிரம் ரூபா மதிப்பு கொண்டது. இரண்டு நாள் கூட அதைப் பயன்படுத்த என்னால் முடியவில்லை. எனக்கு பயங்கர முதுகு வலி உண்டானது. என் குழந்தைக்கும் அது சௌகர்யமாயிருக்கவில்லை. அதன் பிறகு என் அம்மாவின் பழைய புடவைக்குள் குழந்தையைச் சுற்றி எனது முதுகில் கட்டிக்கொண்டு வேலையைத் தொடர்ந்தேன். இயற்கை தந்த ஒரு வரம் தாய்ப்பால் கொடுப்பது. அதன்மூலமாக தாய், சேய் இருவருக்கும் இயல்பாகவே ஒரு பிணைப்பு, நெருக்கம் உண்டாகிவிடுகிறது. அந்த நெருக்கம் அப்பாக்களுக்கு கிடைப்பதில்லை. தனக்கும் அந்த நெருக்கம் வேண்டுமென்று எனது கணவரும் என்னைப் போல துணியில் சுற்றி குழந்தையை அணைத்தபடி இருப்பார். துணி சுற்றல் அவருக்கு அவ்வளவு வசதியாயிருக்கவில்லை. அதை போட்டோவில் பார்த்த அவருடைய அமெரிக்கத் தோழி அங்கிருந்து பெறுமதி வாய்ந்த ஒரு பேபி கேரியரை அனுப்பி வைத்தார்.

அதில் குழந்தையை உட்கார்ந்த நிலையில் தூக்கி வைத்திருக்க முடியுமென்றாலும், அது மிகத் தடிப்பான துணியில் செய்யப்பட்டிருந்தது. வெயில் நாட்களில் காற்று உள்ளே புக முடியாததால் குழந்தைக்கு கஷ்டமாக இருந்தது. அழும் குழந்தையை கொஞ்ச நேரமாவது தூக்கி வைத்திருக்க அருகில் ஆருமில்லாத எம்மைப் போன்றவர்களுக்கு இந்த பேபி கேரியர் உதவுமென்றாலும், 15 ஆயிரம் ரூபா கொடுத்து அதை வாங்க அனைவராலும் முடியுமா? அப்போதுதான் எனக்குள் ஒரு ஸ்பார்க் உண்டானது. எல்லோராலும் வாங்கிப் பயன்படுத்தக் கூடிய பேபி கேரியரை ஏன் நானே உருவாக்கக் கூடாது? கொஞ்சமும் தாமதிக்காமல் தடாலடியாகக் களத்தில் குதித்தேன். பருத்தித் துணியில் நிறைய மாடல்களில் முயற்சி பண்ணினேன். மாதிரியாக என் குழந்தையை வைத்தே டிசைன் பண்ணினேன். நான் உருவாக்கியதை காட்டி கிட்டத்தட்ட நூறு பெற்றோர்களிடம் கருத்து கேட்டதோடு, அவர்கள் எதிர்பார்ப்புக்கள், குழந்தைகளின் பருமன், வயசு என்று பல விடயங்களையும் கருத்தில் கொண்டு 2014 ஆம் ஆண்டு எனது பேபி கேரியரை அறிமுகம் செய்தேன். எனது குழந்தை முதன் முதலாக உதிர்த்த வார்த்தை அம்மா கிடையாது. 'கோல் கோல்' என்ற குரல் எழுப்பினான். அதனால் அந்த வார்த்தையையே எனது தயாரிப்புக்கு பெயராகச் சூட்டினேன்.

எதையும் தயாரிப்பது பெரிதல்ல. அதை மக்களிடம் கொண்டுபோய் சேர்ப்பதுதான் கடினம். பேபி கேரியரின் உபயோகம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது பெரும் சவாலாக இருந்தது. எமது நாடு இன்னும் பழமை, பாரம்பரியம் என்றுதான் பேசிக்கொண்டிருக்கிறது. அவர்களிடம் நவீனமான விடயங்களை புரிய வைக்கும் போது எழும் கேள்விகள் ஏராளம். முதலில் இந்த கேரியர் உபயோகிப்பது நல்லதா? கெட்டதா? என்ற வினா. குழந்தையை சுதந்திரமாக வளரவிடாமல் நாங்களே அணைத்தபடி இருந்தா அது எப்படி வளரும்? அது வளர்ச்சிக்குத் தடை தானே? நிற்கவோ, நடக்கவோ தயங்காதா? விழுந்து, உருண்டு, பிரண்டாதானே சொந்தக்கால்ல நிக்கிற துணிவு வரும்?.... இப்படி கேள்விகள் அடுக்கடுக்காகப் புறப்படும். அதற்கெல்லாம் பொறுமையா, நிதானமா பதில் சொல்லியாக வேண்டும். பெரியவர்கள் உதவி இல்லாமல் தனித்திருக்கும் பெற்றோர் இதன் பயனைத் தெரிந்துகொண்டு உடனடியாகவே வாங்கி விடுவார்கள்.

தாத்தா, பாட்டி இருக்கிற வீடுகள்தான் எனக்கு சோதனைக் களம். அவர்கள் கேரியர் பயன்படுத்துவதை அவ்வளவு ஈசியாக ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களிடம் பேசி, அங்குள்ள குழந்தைகளுக்கு அதைப் போட்டுக் காட்டி புரியவைப்பதற்கு அதிகம் மெனக்கெட வேண்டும். அவர்களைத் திருப்திப்படுத்திவிட்டால் குழந்தையின் பெற்றோர்களிடம் பேச வேண்டிய தேவையே இருக்காது. இன்னும் சொல்லப் போனால், கேரியர்ல வைத்து வளர்க்கப்படும் குழந்தைகளின் உடல், மூளை வளர்ச்சியெல்லாம் மிகச் சிறப்பாக அமைந்துவிடுகிறதென சர்வதேச ஆராய்ச்சி முடிவுகளும் தெரிவிக்கின்றன. குழந்தைப் பருவத்தில் வழங்கப்படும் பாதுகாப்பு வலயம், வளர்கின்ற போது நட்பு வட்டத்திலும் உறுதுணையாக இருப்பதோடு, தீய செயல்களின் பக்கம் அவர்கள் கவனம் செல்லாதிருக்கவும் ஊக்குவிக்கப்படுகிறார்கள். சமுதாயத்தோடு சேர்ந்து வாழவும் மனம் பக்குவப்பட்டுவிடுகிறது.

''சாதாரணமாக ஒரு குழந்தையை இடுப்பில் தூக்கி வைத்திருக்கும் போது, குழந்தையின் எடை காரணமாக சிரமம் உண்டாகும். பிறகு அதை மற்றப்பக்க இடுப்புக்கு மாற்ற வேண்டும். ஆனால் கேரியரில் அந்தக் கவலை இல்லை. குழந்தையின் வெயிட், நமது முதுகு, நெஞ்சு, தோள்பட்டை என்று சமமாகப் பிரித்து வழங்கப்படுவதால் கொஞ்சமும் வலி உண்டாகாது. சொல்வதைவிட உபயோகித்துப் பார்க்கும் போதுதான் அதன் பயனை முழுமையாக உணர முடியும். பேபி கேரியரை தயாரிக்க வேண்டும் என்ற முடிவெடுத்தாலும் எப்படி? எங்கே? என்ற கேள்வியோடு நின்ற எனக்கு, டில்லியில் டெய்லரிங் யுனிட் வைத்திருந்த எனது நண்பி தனது இடத்தை வாடகைக்கு தந்துதவினார். 10 ஆயிரம் ரூபாவில் பாவித்த (செகண்ட் ஹேண்ட்) தையல் மெஷினை வாங்கினேன். ஒரே ஒரு தையல்காரரை வேலைக்கமர்த்தி வேலையை ஆரம்பித்தேன். மெட்டீரியல், டெய்லர் சம்பளம் எல்லாம் சேர்த்து மொத்தமாக 50 ஆயிரம் ரூபா முதலீட்டில் ஆரம்பித்ததுதான் கோல் கோல் பேபி கேரியர் பிஸ்னஸ். ஆரம்பத்தில் மாசத்திற்கு வெறும் 10 கேரியர்கள் மட்டுமே என்னால் தைக்க முடிந்தது. ஆனால் இப்போது 20 மெஷின்கள், 18 டெய்லர்களோடு மாதத்திற்கு 600 கேரியர்கள் விற்கிறேன். 2300 ரூபாவில் இருந்து 7000 ரூபா வரை பல தரத்தில் உருவாக்கப்படுகின்றன. டர்ன் ஓவர் ஒன்றரைக் கோடி இந்திய ரூபாக்கள். உருவாக்குபவற்றை விற்றதோடு என் வேலை முடிந்துவிடுவதில்லை. பயன்படுத்துவதை போட்டோ, வீடியோ எடுத்து அனுப்பச் சொல்லி, பயன்படுத்துவதில் ஏதாவது பிழை இருந்தால் திருத்தி சரியான வழிகாட்டுகிறேன். எப்போதும் அவர்களோடு தொடர்பினைப் பேணி வருவதோடு, அவர்களின் திருப்தியையும் பெற்றுக்கொண்ட பின்னரே அடுத்த வேலையை தொடங்குவேன்'' என்கிறாள் திடீர் தொழில் தொடங்கிய சக்ஸஸ் பெண் பைரவி மணி.



கவிஞர் எம். பிரேம்ராஜ்

தினக்குரல்

# சினிகுரல்

ஞாயிறு, டிசம்பர் 12, 2021

## நயனின் படத்துக்கு வித்தியாசமான பெயர்



நயன்தாரா டிரீம் வாரியர்ஸ் நிறுவனத்துக்காக இரண்டு படங்களை நடிக்கிறார். அதில் ஒரு படத்தை எலி இயக்குநர் யுவ்ராஜ் இயக்க, மற்றொரு படத்தை வெங்கட் பிரபுவின் உதவியாளர் விக்னேஷ் இயக்கு கிறார். இந்த படத்தின் படப்பிடிப்பு தற்போது நடந்து வருகிறது. இந்தப் படத்தின் பெரும்பாலான காட்சிகள் ஒரு பஸ்சுக்குள் நடப்பது போன்று உருவாக்கப்பட் டுள்ளதாம். அதற்காக ஒரு பஸ்ஸை வாங்கி சிக்கன மாக படப்பிடிப்பை நடத்தி முடித்துள்ளார் இயக்குநர். இந்த படத்தின் பின் தயாரிப்புப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. இந்நிலையில் இந்த படத்துக்கு ஒ க்ஸிஜன் என்பதைக் குறிக்கும் ஓ2 என பெயர் வைத்துள்ளார்களாம். விரைவில் தலைப்பு அதிகார பூர்வமாக அறிவிக்கப்படும் என சொல்லப்படுகிறது.



## பா.ரஞ்சித் படத்தில் விக்ரம்

விக்ரம் தற்போது கோப்ரா, மகான், பொன்னியின் செல்வன் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். இப்படங்கள் அடுத்தடுத்து வெளியாகவுள்ளன . இதையடுத்து, பா.ரஞ்சித் இயக்கும் படத்தில் விக்ரம் நடிக்க போவதாக ஏற்கனவே தகவல் வெளியானது. இந்நிலையில், விக்ரமின் அடுத்த படத்தை பா.ரஞ்சித் இயக்க இருப்பதாக அதிகாரபூர்வ அறிவிப்பு வெளியாகியுள்ளது. இந்த புதிய படத்தை ஸ்டூடியோ கிரீன் சார்பில் ஞானவேல் ராஜா தயாரிக்க இருக்கிறார். இப்படத்திற்கு தற்சமயம் சீயான் 61 என்று அழைக்கப்பட்டு வருகிறது.இந்த அறிவிப்பு விக்ரம் ரசிகர்களிடையே உற்சாகத்தை ஏற்படுத்தியுள்ளது.




## வேகமெடுக்கும் "நானே வருவேன்"

இயக்குநர் செல்வராகவன்,தனுஷ், யுவன்சங்கர் ராஜா ஆகிய மூவரும் இணையும் புதிய படம் நானே வருவேன். சுமார் பத்தாண்டுகளுக்குப் பிறகு மூவரும் ஒன்றாக இணைந்து பணியாற்றவுள்ளனர், புதுப்பேட்டை படத்திற்குப் பிறகு இவர்கள் இணைந்துள்ளதால் பெரும் எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது. மேலும் செல்வராகவனின் ஆஸ்தான ஒளிப்பதிவாளர்களில் ஒருவரான அரவிந்த் கிருஷ்ணாவும் பல ஆண்டுகளுக்குப் பிறகு இந்த படத்தில் இணைந்தார்.ஆகஸ்ட் மாதமே தொடங்க இருந்த படப்பிடிப்பு தாமதமாகிக் கொண்டு வந்த நிலையில் இப்போது தொடங்கி நடைபெற்று வருகிறது. இநிலையில் முடிந்துள்ள முதல் கட்ட படப்பிடிப்பில் முக்கியமானக் காட்சிகளை செல்வராகவன் படமாக்கி முடித்துவிட்டாராம். மேலும் தொடர்ந்து நடக்கும் படப்பிடிப்பு ஜனவரி மாதத்தில் முடியவுள்ளதாம்.

## நடக்கிற காரியமா பாஸ்?

இயக்கு ர் பாலாதான் தமிழ் சினிமாவில் சூர்யாவுக்கு என்று நந்தா படத்தின் மூலமாக ஒரு அடையாளத்தைக் கொடுத்தார். அதன் பின்னர் அவர் இயக்கிய பிதாமகன் படத்திலும் சூர்யாவுக்கு ஒரு முக்கியமான வேடத்தைக் கொடுத்து அவரிடம் இருந்த நகைச்சுவை நடிப்பையும் வெளிக்கொண்டு வந்தார். இதனால் சூர்யா தனது சினிமா காட்பாதராக பாலாவை நினைத்து வந்தார்.இப்போது பாலாவுக்கு சினிமாவில் போதாத காலம் என்பதால் அவருடைய இயக்கத்தில் நடிக்க சம்மதித்துள்ளார். அதுமட்டுமில்லாமல் அந்த படத்தை தயாரிக்கவும் உள்ளாராம். இந்த படத்தை மூன்று மாதத்தில் முடித்துக் கொடுக்க வேண்டும் என 2டி எண்டர்டெயின்மெண்ட் நிறுவனம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டு கையெழுத்து வாங்கியுள்ளார்களாம். ஏனென்றால் ஒவ்வொரு படத்தையும் 2 வருடம் வரை ஜவ்வா இழுத்து போதும் போதும் என்று ஆக்கிவிடுவார் என்பது பாலாவின் வரலாறு.

## தயாராகும் சங்கமித்ரா

நகைச்சுவை, காதல், பேய் படங்களை எடுப்பதில் பிரபலமான சுந்தர்.சி முதல் தடவையாக 8ஆம் நூற்றாண்டில் நடந்த உண்மை சம்பவத்தை மையமாக வைத்து சங்கமித்ரா என்ற சரித்திர கதையை படமாக்குவதாக சில வருடங்களுக்கு முன்பு அறிவித்தார். இதில், ஜெயம்ரவி, ஆர்யா, சுருதிஹாசன் உள்ளிட்டோர் நடிப்பதாக தெரிவிக்கப்பட்டு, அதன் போஸ்டர்களும் கேன்ஸ் திரைப்பட விழாவில் அறிமுகம் செய்யப்பட்டன. இந்த படத்துக்கு 400 கோடி ரூபா வரை செலவாகலாம் என்று மதிப்பிடப்பட்டது. பாகுபலி, பொன்னியின் செல்வன், கே.ஜி.எப் படங்களுக்கு இணையாக கிராபிக்ஸ் காட்சிகள் வைக்கவும் முடிவு செய்தனர். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய 3 மொழிகளில் ஒரே நேரத்தில் படப்பிடிப்பை நடத்த திட்டமிட்டனர். ஆனால் பண பிரச்சினையால் நீண்ட நாட்களாக படப்பிடிப்பை தொடங்காமல் கிடப்பில் போட்டனர். தற்போது சங்கமித்ரா பட பணிகளை மீண்டும் தொடங்க படக்குழுவினர் தயாராகி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது.




## மக்கள் மனதில் இடம் பிடிக்க வேண்டும்

பாடகி சனா



**இனிமையான குரலுக்கு சொந்தக்காரர். கருத்த பெண்ணே பாடல் மூலம் பிரபலமாகி பல தமிழ் மக்களுக்கு அறிமுகமானவர். 24, மாறா உள்ளிட்ட படங்களிலும் பிற மொழி படங்களிலும் பாடி இளைஞர்கள் மனதை கொள்ளை கொண்ட சனா மொய்முட்டி மனம் திறந்தபோது...**

**உங்களை பற்றி சிறு குறிப்பு ?**
நான் பிறந்தது கேரளா. வளர்ந்தது மும்பை. கம்பியூட்டர் இன்ஜினியரிங் முடித்திருக்கிறேன்.

**எப்போது தொடங்கியது இந்த இசைப் பயணம்?**
அம்மா நன்கு பாடுவார். அதனால் எனக்கும் ஆர்வம் ஏற்பட்டது. 7 வயதில் மேடையேறி பாடினேன். பின் பள்ளி மேடை, இன்ஜினியரிங் படிக்கும் போது கல்லூரி மேடை என எனது பயணம் தொடங்கியது

**புது மெட்டு பாடல் ஆர்வம் எப்படி வந்தது ?**
சிறுவயதில் பாடும் போது அதை பதிவு செய்து கேட்டு பார்ப்பேன். பல மொழிகளிலும் நிறைய பாடல்கள் கேட்பேன். அப்போதுதான் பழைய பாடல்களை புது மெட்டில் பாடும் எண்ணம் வந்தது. பழைய பாடல்களை புது மெட்டில் பாடி மக்களை முணுமுணுக்க வைக்க எண்ணினேன்.

**கருத்த பெண்ணே பாடல் அனுபவம்?**
1994ல் வெளியான தேன்மாவின் கொம்பத் எனும் மலையாள படத்தின் பாடல் அது. எளிமையான அந்த தானி, கிளாசிக் என கலந்து வெளியிட்டேன்.

**மறக்க முடியாத அனுபவம்?**
2011 முதல் புது மெட்டில் பாடல் பாடி வருகிறேன். அதில் பல பாடல்கள் வரவேற்பை பெற்றிருக்கின்றன . இருந்தாலும் கருத்த பெண்னே பாடல் டிரெண்டிங்கில் இருந்தது. மலையாள பாடலாக இருந்தாலும் தமிழ் ரசிகர்கள் அந்த பாடலை கொண்டாடினர். இது எனக்கு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது.

**எந்தெந்த மொழிகளில் பாடுகிறீர்கள்?**
தமிழ், மலையாளம், ஆங்கிலம், தெலுங்கு, ஹிந்தி, கன்னடம், மராத்தி, பெங்காலி, பஞ்சாபி மொழிகளில் பாடி வருகிறேன்.

**இசைக் குழு மூலம் என்ன செய்து வருகிறீர்கள்?**
இசைத் துறையில் இயங்க முடிவெடுத்து இன்ஜினியரிங்க் முடித்த பின் சுயாதீன இசைக் கலைஞராக எண்ணினேன். அதற்கு குழுவை அமைப்பது கடினமாக இருந்தது. ஆனால் அதில் வென்றேன். இசை குழுவில் அனைவரும் தமிழர்கள். பல மாநிலங்கள், நாடுகளில் மேடை நிகழ்ச்சிகள் செய்திருக்கிறோம். சமீபத்தில் டுபாய் சென்று இசை நிகழ்ச்சி நடத்தினோம்.

**உங்களது சாதனை என்று கருதுவது?**
ஏ.ஆர்.,ரஹ்மான் இசையில் பாடியது. அவருடன் பணியாற்றிய அனுபவம் மறக்க முடியாதது.

**எதிர்கால திட்டம்?**
நிறைய பாடல்கள் பாட வேண்டும். மக்கள் மனதில் நீங்கா இடம் பிடிக்க வேண்டும்.

## மீண்டும் களமிறங்கும் கப்டன்?

தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருந்தவர் புரட்சிக்கலைஞர் கப்டன் விஜயகாந்த். இவரது படங்கள் வசூலில் சாதனை படைத்தன. இவரது நடிப்புக்கு தனி ரசிகர்கள் பட்டாளமே உள்ளனர். தனது ரசிகர்களுக்கும் ஏழை எளிய மக்களுக்கும் இவர் ஏராளமான உதவிகள் செய்துள்ளார்.சில ஆண்டுகளுக்கு முன் தேமுதிக என்ற அரசியல் கட்சியைத் தொடங்கிய அவர் சில ஆண்டுகளில் எதிர்க்கட்சித் தலைவர் என்ற சாதனை படைத்தார்.சமீப நாட்களாக நடிகர் விஜயகாந்த் உடல் நடல்க்குறைவால் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அரசியல் முக்கிய நிகழ்வுகளில் மட்டும் பங்கெடுத்து வருகிறார்.இந்நிலையில், உடல்நலம் குணமடைந்து விரைவில் அவர் சினிமாவில் நடிக்கவுள்ளாதாகத் தகவல் வெளியாகிறது.மேலும், விஜய் மில்டன் இயக்கத்தில், விஜய் அன்டனி நடிக்கவுள்ள மழை பிடிக்காத மனிதன் என்ற படத்தில் விஜய்காந்த் சிறப்பு வேடத்தில் நடிக்கவுள்ளதாகக் கூறப்படுகிறது



## தமிழரசன் வருகிறார்

சமீபத்தில் சுரேஷ் கோபி மலையாளத்தில் நடித்த காவல் என்கிற படம் வெளியானது. இந்தநிலையில் தற்போது ஆறு வருடங்கள் கழித்து மீண்டும் தமிழுக்கு வந்துள்ள சுரேஷ் கோபி, விஜய் அ ன் டனியுடன் இணைந்து நடித்துள்ள ;தமிழரசன் படம் அடுத்து வெளியாகவுள்ளது. ஜெயம் ரவியை வைத்து தாஸ் என்கிற படத்தை இயக்கிய பாபு யோகேஸ்வரன் இந்தப்படத்தை இயக்கியுள்ளார். ரம்யா நம்பீசன் கதாநாயகியாக நடிக்கிறார். தற்போது இந்தப்படத்தில் தனக்கான டப்பிங்கை தானே பேசி வருகிறார் சுரேஷ்கோபி. மேலும் இந்தப்படம் இம்மாதம் வெளியாக இருக்கிறது என்கிற தகவலையும் அவர் தெரிவித்துள்ளார். அதிரடி பொலிஸ் கதையாக உருவாகி வரும் இந்தப்படத்தில் டாக்டர் வேடத்தில் நடித்திருக்கிறாராம் சுரேஷ்கோபி.



## சிவகார்த்திகேயன் எழுத... விஜய் பாட

கோலமாவு கோகிலா, டாக்டர் படங்களின் இயக்குநரான நெல்சன் இயக்கத்தில் விஜய் நடிக்கும் படம் பீஸ்ட். விஜய்க்கு ஜோடியாக பூஜா ஹெக்டே நடித்து வருகிறார். இயக்குநர் செல்வராகவன், மலையாள நடிகர் ஷைன் டாம் சாக்கோ, யோகிபாபு, விடிவி கணேஷ், லிலிபுட் புருக்கி, நடிகை அபர்ணா தாஸ், அங்கூர் அஜித் விகால் உள்ளிட்டோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்து வருகின்றனர். இந்நிலையில் இப்படத்தில் அனிருத் இசையில் உருவாகியுள்ள முதல் சிங்கிள் விரைவில் வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்த பாடலின் சிறப்பு என்னவென்றால், நடிகர் சிவகார்த்திகேயன் அந்த பாடலை எழுதியுள்ளார். அதோடு விஜய் இந்த பாடலை பாடியுள்ளார். விஜய், சிவகார்த்திகேயன், அனிருத் கூட்டணியில் இப்பாடல் உருவாகி வருவதால் ரசிகர்களிடையே எதிர்பார்ப்பு அதிகரித்துள்ளது.

## கமல் ஜோடியாகும் தமன்னா?



இந்தியன் 2 படத்தில் கதாநாயகியாக நடிக்கும் காஜல் அகர்வாலுக்கு திருமணம் முடிந்து தற்போது கர்ப்பமாக இருப்பதால் படத்தில் நடிக்க முடியாது என்று வெளியேறி விட்டதாக கூறப்படுகிறது. எனவே அவருக்கு பதில் வேறு கதாநாயகியை நடிக்க வைக்க படக்குழுவினர் முடிவு செய்துள்ளனர். திரிஷா நடிக்க வாய்ப்பு உள்ளதாக பேசப்பட்டது. தற்போது காஜல் அகர்வாலுக்கு பதில் கமல்ஹாசன் ஜோடியாக நடிக்க தமன்னாவிடம் பேசி வருவதாக தகவல் வெளியாகி உள்ளது. காஜல் அகர்வால் நடித்த காட்சிகளை நீக்கி விட்டு தமன்னாவை ஆரம்பத்தில் இருந்து நடிக்க வைக்க படக் குழு முடிவு செய்து இருப்பதாகவும் கூறப்படுகிறது.

## விமர்சனம்

**நடிகர் - மோகன்லால்**
**நடிகை- கீர்த்தி சுரேஷ்**
**ஒளிப்பதிவு-திரு**
**இயக்குநர் - பிரியதர்ஷன்**
**இசை - ராகுல் ராஜ்**

16 ஆம் நூற்றாண்டில் கேரளாவில் சாமுத்ரி ராஜ்ஜியத்தில் கடற்படை தளபதியாக விளங்கிய குஞ்சாலி மரைக்காயரின் கதையை மையமாக வைத்து 'மரைக்காயர்: அரபிக் கடலின் சிங்கம்' என்ற படம் உருவாக்கப் பட்டுள்ளது.

சிறுவயது முதலே அம்மாவின் செல்லப் பிள்ளையாக வளர்கிறார் முஹம்மது அலி என்கிற குஞ்சாலி மரைக்காயர் (மோகன் லால்). இவருக்கு திருமணம் நடப்பதற்கு முதல் நாள், மணபெண்ணான கல்யாணி பிரியதர்ஷன் உட்பட ஒட்டுமொத்த மரைக் காயர் குடும்பத்தையும் போர்ச்சுகீசிய படைகளின் உதவியுடன் எதிரிகள் கொல்கின்றனர்.

இந்த தாக்குதலில் தனது சித்தப்பாவுடன் தப்பித்து ஒரு நாடோடியைப் போல வாழ்கிறார் மோகன்லால். ஆட்சியாளர்களிடமிருந்து உணவு தானியங்களை கொள்ளையடித்து ஏழை மக்களுக்கு கொடுக்கிறார். போர்ச்சுகீசியப் படைகளை சமாளிக்க முடியாமல் திணறும் சாமுத்ரி அரசர் மோகன்லாலின் உதவியை நாடுகிறார். இறுதியில் மோகன் லால், சாமுத்ரி அரசருடன் இணைந்து போர்ச்சுகீசிய படைகளை வீழ்த்தினாரா? இல்லையா? என்பதே படத்தின் மீதிக்கதை.

குஞ்சாலி மரைக்காயராக மோகன்லால். கதைக்களத்துக்கு ஏற்ப ஒட்டுமொத்த படத்தையும் ஒற்றை ஆளாக தாங்கிப் பிடிக்கிறார். இந்த கதாபாத்திரத்தில் வேறு யாரையும் நினைத்துப் பார்க்க முடியாதபடி சின்ன சின்ன அசைவுகளில் கூட அசத்துகிறார். நெடுமுடிவேணு, சுனில் ஷெட்டி, அர்ஜுன், அசோக் செல்வன், பிரபு, கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியர், ஹரீஷ் பெரடி என படத்தில் ஏகப்பட்ட நடிகர்கள். இவர்கள் அனைத்தும் கொடுத்த வேலையை சிறப்பாக செய்து இருக்கிறார்கள்.

இளவயது மரைக்காயராக வரும் ப்ரணவ் மோகன்லாலுக்கு இது பேர் சொல்லும் படமாக அமைந்திருக்கிறது. குறைந்த நேரமே படத்தில் வந்தாலும் தனக்கு கொடுக்கப்பட்ட பாத்திரத்துக்கு நியாயம் செய்துள்ளார்.

படத்தில் இத்தனை நடிகர்கள் இருந்தும் அவர்கள் யாருக்குமே பாத்திரப் படைப்பு சரியாக அமையாமல் போனது சோகம். கீர்த்தி சுரேஷ், மஞ்சு வாரியர், அர்ஜுன், பிரபு, ஹரீஷ் பெரடி, சுனில் ஷெட்டி என அனைவரது கதாபாத்திரங்களும் சரியாக பயன்படுத்தபடவில்லை.

1996 ஆம் ஆண்டு மோகன்லால் - பிரியர்தர்ஷன் கூட்டணியில் வெளியான 'சிறைச்சாலை' படத்துக்குப் பிறகு திட்டமிடப்பட்ட இப்படம் ஏறக்குறைய 25 ஆண்டுகளுக்குப் பிறகு உருவாகி இருக்கிறது. திரைக்கதையில் சுவாரஸ்யம் இல்லாதது படத்திற்கு பலவீனம். படத்திற்கு பெரிய பலம் கிராபிக்ஸ் காட்சிகள். இதற்கு துணையாக நின்ற கலை இயக்குநர் சாபு சிரில் மற்றும் ஒளிப்பதிவாளர் திரு ஆகியோருக்கு பெரிய பாராட்டுகள். அதுபோல், படத்தில் போர்க்களக் காட்சிகள் மெய்சிலிர்க்க வைக்க வைக்கின்றன.




## கிசு கிசு குரல்

சின்னத்திரையில் இருந்து பெரியத்திரைக்கு வந்த நடிகை, தற்போது பல படங்களில் பிசியாக நடித்து வருகிறாராம். இதைப்பார்க்கும் மற்ற நடிகைகள், எப்படி பட வாய்ப்பை பிடிக்கிறார் என்று தெரியாமல் இருக்கிறார்களாம். நடிகைகள் வாய்ப்பு தேடும் இடங்களில் எல்லாம், சின்னத்திரை நடிகைக்கே முன்னுரிமை கொடுக்கிறார்களாம். இதனால் சில நடிகைகள் பொறாமை பட்டு அவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து, நடிகையின் படங்களை அபகரிக்க முயற்சி செய்கிறார்களாம்

தமிழ் சினிமாவில் பல படங்களில் தன் இசையால் ரசிகர்களை கவர்ந்தவர் தற்போது படங்களில் பிசியாக நடித்து வருகிறாராம். அப்படி இவர் நடித்த படம் ஒன்று கொஞ்சம் ஆபாச காட்சிகள் நிறைந்த படமாக வந்திருக்கிறதாம்.இதில் நடித்த அனுபவம் நடிகருக்கு பிடித்து இருப்பதால், தன்னிடம் கதை சொல்ல வரும் இயக்குனர்களிடம் அந்த மாதிரி கதைகள் சொல்லுங்கள் என்று அடம் பிடிக்கிறாராம்.

நட்சத்திர அந்தஸ்தை பெற்ற மூன்றெழுத்து நடிகை ஒருவர், திருமணத்துக்கு பின் சினிமாவிற்கு முழுக்கு போட்டார். தற்போது அவருக்கு மீண்டும் சினிமாவில் நடிக்க ஆர்வம் வந்திருக்கிறதாம். இதையறிந்த சில பட அதிபர்கள் அந்த நடிகையை சந்தித்த போது அவர்களிடம், ''இனி மேலும் நான் கதாநாயகியாகத்தான் நடிப்பேன். அக்காள், அண்ணி, அம்மா வேடங்களில் நடிக்க மாட்டேன்...'' என்ற நடிகை போட்ட நிபந்தனைக்கு ஏற்றபடி கதைகளை தேர்ந்தெடுத்து வருகிறார்களாம்.

## இறந்துவிடுவேன் என்று நினைத்தேன்



காதல் திருமணம் செய்துகொண்ட நடிகை சமந்தாவும், நாக சைதன்யாவும் பிரிவதாக அறிவித்தனர். இவர்களது பிரிவு குறித்து பல்வேறு யூகங்கள் வலம் வந்தன. ஆனால் இருவரும் வெளிப்படையாக பிரிவதற்கான காரணத்தை தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் சமீபத்தில் ஒரு பேட்டியில் தனது விவாகரத்து குறித்து சமந்தா மனம் திறந்துள்ளார். அதில், நான் மிகவும் பலவீனமான பெண் என்று நினைத்தேன். எங்கள் பிரிவுக்கு பிறகு நான் உடைந்து, இறந்துவிடுவேன் என்று நினைத்தேன். ஆனால் இப்பொழுது நான் தைரியமான பெண்ணாக இருப்பதற்கு நான் பெருமைப் படுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.




## கிராமத்து பெண்ணாக மாற ஆராய்ச்சி செய்த ராஷ்மிகா

தெலுங்குத் திரையுலகில் கவர்ச்சி பொம்மையாக வலம் வருபவர் ராஷ்மிகா. தமிழில் சுல்தான் படத்தில் மட்டுமே நடித்தார். மீண்டும் இந்தப் பக்கம் எப்போது வருவார் என தமிழ் ரசிகர்கள் காத்திருக்கிறார்கள். ராஷ்மிகாவின் அடுத்த பெரிய வெளியீடாக புஷ்பா படம் வெளிவரவுள்ளது. அல்லு அர்ஜுன் ஜோடியாக வள்ளி என்ற கிராமத்துப் பெண் கதாபாத்திரத்தில் இப்படத்தில் நடித்துள்ளார் ராஷ்மிகா. இயல்பாகவே நல்ல சிவப்பாக இருக்கும் ராஷ்மிகா இந்தப் படத்திற்காக கருப்பு நிற மேக்கப்புடன் கிராமத்துப பெண்ணாக மாறியிருக்கிறார். நகரத்திலே பிறந்து வளர்ந்த பெண்களுக்கு கிராமத்துப் பெண்களின் பழக்க, வழக்கம், நடை, உடை அவ்வளவு சீக்கிரம் வராது. அதனால் இந்தப் படத்தில் நடிப்பதற்காக பிரத்யேக பயிற்சிகளை மேற்கொண்டாராம் ராஷ்மிகா. இது பற்றி சமீபத்திய பேட்டி ஒன்றில், இந்தக் கதாபாத்திரத்தில் நடிப்பதற்காக நிறைய ஆராய்ச்சிகளை மேற்கொண்டேன். கிராமத்து பெண்களின் பழக்கங்கள் அவர்களது முகபாவங்கள் எப்படி இருக்கும் என்பதை கற்றுக் கொண்டேன். திருப்பதி அருகில் உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்று அங்குள்ள பெண்களுடன் பழகினேன், பேசினேன். அவர்களது வாழ்க்கை முறை எப்படி உள்ளது, உடல்மொழி எப்படி உள்ளது என்றும் கூர்ந்து கவனித்து தெரிந்து கொண்டேன் எனத் தெரிவித்துள்ளார்

நடிகர் அபிஷேக் பச்சன் மற்றும் ஐஸ்வர்யா ராய் தம்பதிகளுக்கு ஆராத்யா பச்சன் என்ற மகள் உள்ளார். அவரிம் 10ஆவது பிறந்தநாளை மாலை தீவில் சிறப்பாக கொண்டாடினர். அந்த புகைப்படங்களை அபிஷேக் பச்சன் தன்னுடைய சமூகவலைதளப் பக்கத்தில் பகிர்ந்திருந்தார். அப்போது சிலர் ஆராத்யாவை மோசமாக விமர்சிக்கும் சிலகருத்துக்களை பதிவு செய்தனர். இதுகுறித்து இப்போது பேசியுள்ள அபிஷேக் பச்சன் 'நான் ஒரு நடிகன் என்பதால் என்னுடைய நடிப்பு பற்றி விமர்சனங்கள் வந்தால் அதை ஏற்று மாற்றிக்கொள்வேன். ஆனால் என்னுடைய மகளை கேலி செய்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. அப்படி செய்பவர்கள் என் முகத்துக்கு நேராக செய்யட்டும்' எனக் கூறியுள்ளார்.

## அபிஷேக் பச்சனின் கோபம்



## மாநாடு-2 வரும்

வெங்கட்பிரபு இயக்கத்தில் சிம்பு நடித்து திரைக்கு வந்துள்ள மாநாடு படம் அரங்கம் நிறைந்த காட்சிகளாக ஓடிக்கொண்டி ருக்கும் நிலையில் சமூகவலைதளத்தில் ரசிகர்களுடன் கலந்துரையாடினார் வெங்கட்பிரபு. அப்போது மாநாடு படத்தை வெற்றிப்படமாக்கியதற்காக ரசிகர்களுக்கு நன்றி தெரிவித்தார். மாநாடு படத்தில் எஸ்.ஜே.சூர்யா நடித்த வில்லன் வேடத்தில் நடிக்க தெலுங்கு நடிகர் ரவிதேஜாவிடமும் பேசினோம். அவர் வேறு படங்களில் பிசியாக இருந்ததால் எஸ்.ஜே.சூர்யாவை நடிக்க வைத்தோம். தற்போது மாநாடு படத்தை பார்த்துள்ள ரவிதேஜா தெலுங்கில் இந்த படத்தை ரீ மேக் செய்தால் வில்லனாக நான் தான் நடிப்பேன் என்று கூறியிருக்கிறார். மாநாடு படத்தின் இறுதியில் மீண்டும் சிம்புவிற்கு டைம் லூப் வருவது போல் வைத்துள்ளோம். அப்படி சிம்புவிற்கு வரும்போது எஸ்.ஜே.சூர்யாவிற்கான காட்சிகளும் மீண்டும் வரும் என்று தெரிவித்துள்ள வெங்கட்பிரபு கூடிய சீக்கிரமே மாநாடு 2இற்கான அறிவிப்பு வெளியாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

## சரத்குமார்– சுஹாசினி இணையும் படம்

குடும்பங்கள் கொண்டாடும் கதையம்சம் உள்ள ஒரு படத்தில் சரத்குமார்-சுஹாசினி இருவரும் மண் சார்ந்த முக்கிய கதாபாத்திரங்களில் நடிக்கிறார்கள்.ரோஷ்குமார் தயாரிக்க, பாலுச்சாமி டைரக்டு செய்கிறார். இப்படத்தை பற்றி அவர் கூறும்போது, இந்த காலத்துக்கு தேவையான கதையம்சம் கொண்ட படம் இது. இந்த கதையை சரத்குமார் கேட்டதும் உடனடியாக நடிக்க சம்மதித்தார். இது எனக்கான கதை என்றார்.மண்ணின் மகளாக மீனாட்சி என்ற கதாபாத்திரத்தில் சுஹாசினி மணிரத்னம் நடிக்கிறார். இன்னொரு முக்கிய வேடத்தில் அஷ்வதி நடிக்கிறார். இவர்களுடன் நந்தா, சிங்கம் புலி, சித்திக், கஞ்சா கருப்பு ஆகியோரும் நடிக்கிறார்கள். இது அனைத்து தரப்பினரையும் கவரும் சிறந்த திரைப்படமாக இருக்கும் என்றார்.



## மீண்டும் தமிழில் அனுஷ்கா?

மீண்டும் தமிழில் நடிக்கவுள்ளாராம் அனுஷ்கா. ஏ.எல்.விஜய் இயக்கிய தெய்வத்திரு மகள், தாண்டவம் படங்களில் முதன்மை கதாபாத்திரத்தில் நடித்தவர் அனுஷ்கா. நீண்ட இடைவெளிக்குப் பின்னர், மீண்டும் விஜய் இயக்கத்தில் நடிக்க அனுஷ்கா ஒப்பந்தமாகி உள்ளார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

## சினி.. மினி.. செய்திகள்



அடுத்தப்படம் என்பது வெற்றியைத் தொட்டாக வேண்டும், அதோடு படத்தை விரைந்து முடிக்க வேண்டும் என்று ரஜினி விரும்புகிறார். இதற்குச் சரியான இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமார் என்பது ரஜினியின் விருப்பமாக இருக்கிறது. பல மாதங்களாகவே ரவிக்குமாரிடம் தனது ஒரு கதை தயார் செய்யும்படி ரஜினி பேசி வந்திருக்கிறார். அதனால் அடுத்தப்படம் தன் ஆஸ்தான இயக்குநர் ரவிக்குமார் என்று ரஜினி தரப்பில் கூறுகிறார்கள்.



இயக்குநர் பாரதிராஜா தன் வாழ்க்கையில் லட்சியமாக நினைத்துக் கொண்டிருந்தது குற்றப் பரம்பரை படத்தை எடுப்பதைத்தான். இடையில் பாலா எடுக்கப்போவதாகத் தகவல் வர, இருவருக்கும் கருத்து மோதல் வந்தது. அதன் பிறகு குற்றப்பரம்பரை பற்றி இருவருமே பேசவில்லை.தற்போது சசிகுமார் குற்றப்பரம்பரையினர் குறித்த படத்தை எடுக்கவுள்ளதுடன் அவரே நடிக்க இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

தமிழ் சினிமாவில் இளம் இசையமைப்பாளராகவும், நடிகராகவும் வலம் வருபவர் ஜி.வி.பிரகாஷ். இவர் தற்போது சீனு ராமசாமி இயக்கத்தில் உருவாகி வரும் இடி முழக்கம் படத்தில் நடிக்கிறார்.இந்நிலையில், ஜி.வி.பிரகாஷ் நடிக்கும் அடுத்த படத்தின் பூஜை போடப்பட்டுள்ளது. இதற்கு ரெபல் (Rebel) என்று தலைப்பு வைத்திருக்கிறார்கள். ரெபல் தலைப்பில் ஏற்கனவே பிரபாஸ் நடிப்பில் தெலுங்கு படம் ஒன்று வெளியாகி வெற்றி பெற்றது குறிப்பிடத்தக்கது.



## பிரபலங்கள் பொது சொத்து



தமிழில் பிரபல நடிகையாக இருக்கும் பூர்ணா, சினிமா அனுபவங்கள் குறித்து பூர்ணா அளித்துள்ள பேட்டியில், "பிரபலங்கள் பொது சொத்து என்பது எனது கருத்து. வளர்த்துவிட்ட ரசிகர்கள் சொல்லும் நேர்மறை, எதிர்மறை கருத்துகளை ஒரே விதமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.சில எதிர்மறை கருத்துகளை வைத்து என்னை நான் மாற்றிக்கொண்டு இருக்கிறேன். எனக்கு இந்த ஆண்டு முதல் நல்ல கதாபாத்திரங்கள் வந்தன. நாயகியாக மட்டுமே நடிக்க வேண்டும் என நான் முடிவு செய்து வரவில்லை. நான்கைந்து காட்சிகளில் வந்தாலும் நடிப்புக்கு வாய்ப்பு இருக்கும் கதாபாத்திரம் கிடைத்தால் போதும். ஷோபனா, ரேவதி, சுஹாசினி மாதிரி எந்த கதாபாத்திரமாக இருந்தாலும் செய்ய வேண்டும் என்ற முடிவோடு வந்தேன். சினிமாவிற்கு வந்த புதிதில் நான் சில தவறுகள் செய்தேன். ஆனால் இப்போது ஜாக்கிரதையாக நல்ல கதாபாத்திரங்களை தேர்ந்தெடுத்து நடிக்கிறேன் என்றார்

Copyright

# இந்த டிசம்பர் பொழுதில் இவருக்கு கோலாகலப் பிறந்த தினம்

# ஒரு முண்டாசுக் கவிஞரின் முஸ்லிம் நேசம்

● தமிழ்மணி மானா மக்கீன்

ஒவ்வொரு டிசம்பரிலும் இலக்கிய நெஞ்சங்களுக்கும் ஆர்வலர்களுக்கும் இன்பமயமான தினம், திகதி பதினொன்று.

அன்றே ஒரு 'முண்டாசுக் கவிஞ'னின் பிறப்பு.

139 ஆண்டுகளுக்கு முன் - 1882 இதே டிசம்பரில் 11 இல் அவன் உலகுக்கு வந்தான். 'சுப்ரமணியன்' என அறியப்பட்டவன், பின்னர் பிறந்த ஊர் எட்டயபுரத்தின் செல்லப் பெயர். 'இளசை'யையும் இணைத்துப் பிரபலமானான். வாலிபத்தைத் தாண்டிய நிலையில் 'ஸ்ரீமான் சுப்ரமணிய பாரதி' என்று பிரகாசிக்கத் தொடங்கினான்.

'இன்னுமின்னும் நீடு வாழ்க' என வாழ்த்தி அவன் பரிணாமம் ஒன்றைப் பகிர்ந்துகொள்ள பெரிதும் ஆர்வப்பட்டுப் பேனா பிடிக்கிறேன்.

உண்மையில் முண்டாசுக் கவிஞனது பரிணாமம் ஒன்றா, இரண்டா, ஒவ்வொன்றும் பிரமிப்பானதே.

அதிலே அவனை ஆட்கொண்ட முஸ்லிம் நேசம் முதன்மையிடத்திலுள்ளது. பிற சிலருக்கு அது கடைசியானதாகவோ அவசியமற்றதாகவோ அமையலாம். அது இப்பேனைக்கு பொருட்டன்று.

தமிழகத்தில் இன்சுவை தரும் தாமிரபரணி ஆறு பெருக்கெடுத்தோடும் திருநெல்வேலிச் சீமையிலே, கடையத்திலே, பொட்டல் புதூர் தெற்கு புதுமனைத் தெருவிலே 1920.06.22 ஆம் நாளில், ஞாயிறு மாலை ஒரு முஸ்லிம் சபை, முண்டாசு கட்டிய ஒரு பிராமண சுப்ரமணியனின் 'இஸ்லாம் மார்க்கத்தின் மகிமை பற்றிய பேச்சை கேட்கக் கூடியிருக்கிறது.

அந்த சுப்ரமணியனும் தவறாமல் சமுகமளித்துச் சொல்கின்றான் இப்படி:

'இன்றைய மாலையில் எடுத்துக் கொண்ட இந்த விடயத்தைப் பற்றி பேச முன்பு,' நான் அல்லாஹ்வின் மீது பாடிக் கொணர்ந்திருக்கும் தமிழ்ப் பாட்டை இங்கு வாசித்துக் காட்ட அனுமதி தரும்படி வேண்டுகின்றேன். ஏற்கனவே அறபி பாஷையில் 'பாத்திஹா என்ற ஜபம் ஓதி முடிந்துவிட்டது. அதற்கு அனுசரணையாக இந்தத் தமிழ் பாட்டைப் பாடுகிறேன் எனக் கூறிவிட்டு, அல்லா,அல்லா,அல்லா என உரத்த குரலில் பல்லவி ஒன்றைப் பாடுகிறான். தொடர்ந்து சரணங்களாக பன்னிரெண்டு வரிகள் இப்படிப் பாடி அசத்துகிறான்.

1. பல்லாயிரங் கோடி கோடி யண்டங்கள்
எல்லாத் திசையினுமோ ரெல்லையில்லா வெளிவானிலே
நில்லாது சுழன்றோட நியமஞ் செய்தருள் நாயகன்
சொல்லாலு மனத்தாலும் தொடவொணாத பெருஞ்சோதி (அல்லா)

2. கல்லாது வராயினு முண்மை சொல்லாதவ ராயினும்
பொல்லாத வராயினுந் தவமில்லாதராயினும்
நல்லாருரை நீதியின்படி நில்லாதவராயினும்
எல்லோரும் வந்தேத்து மளவில் யமபயங்கெடச் செய்பவன் (அல்லா)

3. ஏழைகட்கும் செல்வர்கட்கும் இரங்கியருளும் ஓர் பிதா
கோழைகட்கும் வீரருக்குங் குறைதவிர்த்திடும் ஓர் குரு
ஊழி யூழி அமரராயிவ் வுலகின் மீதிலின்புற்றே
வாழ்குவீர் பயத்தை நீக்கி வாழ்த்துவீர் அவன் பெயர் (அல்லா)

இவ்வாறு பாடிப் பரவசப்படுத்திய பிறகு இறைதூதர் நபி (ஸல்) அவர்கள் பற்றிய தன் பரந்த அறிவையும் சபையினருக்கு வெளிப்படுத்துகிறான்.

அந்த நெடுநேர உரையின் சில தகவல்கள் இப்படி அமைந்திருந்தன.

பல வருடங்களுக்கு முன் நான் ஓர் ஆங்கிலேய பண்டிதர் எழுதிய புஸ்தகம் ஒன்றை படித்துக் கொண்டிருந்தேன். அதில் முஹம்மது நபியின் சரித்திரத்தைக் குறித்த சில விசயங்கள் காணப்பட்டன. அவற்றைப் படித்துப் பார்த்தபோது நான் அற்புதம் உண்டாகி பரவசம் அடைந்தேன்.

முஹம்மது நபி மஹா சுந்தர புருஷர், மஹா சூரர், மஹா ஞானி, மஹா பண்டிதர், மஹா லௌகீக தந்திரி. வியாபாரமானாலும் யுத்தமானாலும் முஹம்மது நபி கவனித்தால் இந்த விடயத்தில் வெற்றி மிகவும் உறுதி. ஆதலால் அவர் மிகவும் அபிமானிக்கப்பட்டார்.

பகைவர் விரட்டி வந்தபோதும் பதற்றம் அடையாமல் 'இறைவன் காப்பாற்றுவான்' என்ற மனவுறுதியோடிருந்த நபிகளாரின் வரலாற்று நிகழ்ச்சி,'நம்பிக்கையே காமதேனு, நம்பினோர் கெடுவதில்லை' என்ற தத்துவத்தை விளக்குகின்றது.

குர்ஆன் இஸ்லாம் மார்க்கத்திற்கு வேதம். இதை முஹம்மது நபி தம்முடைய வாக்காகச் சொல்லவில்லை. கடவுளின் வாக்கு. தேவ தூதரின் மூலமாக தமக்கு எட்டியதென்றும் தாம் அதை ஒரு கருவிபோல நின்று உலகத்தார்க்கு வெளியிடுவதாகவும் சொன்னார்.

இவரது முழுப் பிரசங்கத்தையும் 1920 ஜூன் 24 இல் வெளியான 'சுதேச மித்திரன் நாளேடு மிகச் சிறப்பாக பிரசுரித்திருந்தது.

அதற்கு அடுத்த மாதம் ஜூலையில் 'கதாரத்ன காரம் என்ற மாத இதழிலும் (சுதேச மித்திரன் வெளியீடு) பிரசுரமானது.

அந்த முண்டாசுக்கவி இந்து சமயத்தில் அழுத்தமான பிடிப்பும் ஆழ்ந்த நம்பிக்கையும் கொண்டவர். இந்து சமய தெய்வங்களாகிய சிவனையும் சக்தியையும் கண்ணனையும் காளியையும் விநாயகரையும் முருகனையும் கலைமகளையும் திருமகளையும் பாமாலை சூட்டிப் போற்றி வணங்கியவர்.

ஆயினும் இறையோனாகிய அல்லாஹ்வைப் போற்றியதுடன் இயேசு கிறிஸ்து நாதரையும் புகழத் தவறவில்லை.

சமயப் பொதுமை, சமரச நோக்குக்குச் சான்றாக சுதேச மித்திரன் நாளேட்டில் பல கட்டுரைகளில் இந்து-முஸ்லிம் ஒற்றுமையை வலியுறுத்தி அவன் பேனை உழுதிருக்கிறது.

115 ஆண்டுகளுக்கு முன் 1906 ஜூன் 23 இல் சுதேச மித்திரன் ஏட்டில் 'நமது முஹமதிய சகோதரர்கள் எனத் தலைப்பிட்டு எழுதிய கட்டுரையில் இடம்பெற்றுள்ள இந்தப் பந்தி வைர வரிகளாகும்.

'இந்தியாவின் வருங்காலப் பெருமைக்கும் சிறப்புக்கும் இத்தேச ஜனங்களில் பெரும்பாலானோர் ஹிந்துக்கள், முஹம்மதியர் என இரு பகுதிப்பட்டு நிற்பது பெரும் தடையாகவே இருக்கிறதென்பதை ஒளித்துப் பிரயோஜனமில்லை. விரோதங்களை நீக்கி இரண்டு ஜாதியருக்குள்ளே சிநேக உணர்ச்சியும் சகோதரப்பான்மையும் ஏற்படுத்துவது இத் தேசாபிமானிகளின் முக்கிய கடமையாகும்.

இதேபோல் ஆகஸ்ட் 11.1906 அன்று 'சுதேச மித்திரன் கட்டுரையில் இன்னொரு கருத்தையும் முன்வைத்துள்ளார்.

பொது மாதாவாகிய பாரத தேவியின் பொது நன்மையைக் கவனிக்க வேண்டுமே அல்லாமல் ஜாதி, மத, குல பேதங்களைப் பாராட்டி தேசத்தை மறக்கும் மனிதனை பாரத தேவி சர்வ சண்டாளர்களாகவே கருதுவாள்.

இது நமது அருமை சின்னஞ் சிறு மரகதத் தீவுக்கும் பொருந்துமே.

மேலும் பல தலைப்புகளில் ஹிந்து-முஸ்லிம் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அன்னவரது 139 ஆம் ஆண்டு பிறந்த நாளுக்கு வாழ்த்தாக அமையப்பெறும் இந்த எழுத்துக்களை ஒரு சிறுகதை தகவலுடன் நிறைவு செய்வோமா!

நம்புங்கள்! ஒரு சிறுகதைத் தகவல்! அதுவும் முஸ்லிம் சமூகத்தின் விசேட பிரியாணியைப் போல் இஸ்லாமியச் சிறுகதையின் பூர்வீகம் பற்றியது!

பாரதியாரைப் பொறுத்தவரையில் மகா



கவிஞர் மட்டுமல்லர். மகத்தான படைப்பிலக்கியவாதி என்றும் கணிக்கப்படுகிறார்.

முஸ்லிம் கலாசாரப் பின்னணியில் முதல் சிறுகதையைப் படைத்த பெருமையும் நமது முண்டாசுக் கவிஞருக்கே!.

1920.05.29 இல் (நான் பிறந்த மாதம், திகதியில்) அதே நாளேட்டில் 'ரயில்வே ஸ்தானம்' என்ற ஒரு தலைப்பில் ஒரு சிறுகதையைப் பிரசவித்து வரலாற்றில் ஓர் ஏடாக்கிவிட்டார். அச் சிறுகதையானது, முஸ்லிம் ஒருவர் உடன் பிறந்த மூன்று சகோதரிகளை ஒரே சமயத்தில் மணமுடித்து அதனால் அடையும் அவதியைச் சித்தரிக்கிறது. முஸ்லிம்களின் வாழ்க்கைச் சிக்கலை மையப்படுத்தி தமிழில் எழுதப்பட்ட முதல் சிறுகதையாக இதனைக் கருதலாம் என்கிறார் சென்னை, புதுக்கல்லூரி தமிழ்த்துறைத் தலைவராக இருந்த பேராசிரியர், எனது இனிய ஹ.மு.நத்தர்ஷா அவர்கள். கடைசியாக இன்னொரு முக்கிய தகவலையும் இணைக்கிறேன்.

'திருநெல்வேலி ஜில்லா கடையத்தில் இருக்கும்போது அடுத்த சிற்றூரான பொட்டல் புதூரிலிருந்து முஸ்லிம் சகோதரர்கள் வந்து பேசிவிட்டுச் செல்வார்கள். 'அல்குர்ஆனைத் தமிழில் மொழிபெயர்க்கும்படி ஒரு நண்பர் கேட்டுக்கொண்டார். அல்குர்ஆனின் சந்தத்துக்கு இணங்க 'விஷ்ணு பிதரம் சரணம் என்று தொடங்கும் ஒரு சமஸ்கிருதப் பாடலை பாரதி எழுதினார் என்று பாரதியாரின் திருமகளாகிய தங்கம்மாள் பாரதி ஒரு கட்டுரையில் எழுதி இருப்பதும் ஈண்டு எண்ணத்தக்கது. மொழி பெயர்க்கும் அளவிற்கு பாரதியார் அல்குர்ஆனை அறிந்திருந்தார் என்ற செய்தி நமக்கு அளவற்ற வியப்பையும் அகமகிழ்வையும் தருகின்றது.

ஆக மொத்தத்தில், 'மனிதனாகப் பிறந்த எல்லோரும் ஓர் குலம், ஓரினம் என்பதையே முண்டாசுக் கவிஞரின் சிந்தனைகளும் அவர்தம் கட்டுரைகளும் காட்டி நிற்கின்றன என்பதை புரிய முடிகின்றது. 'நீடு வாழ்க என வாழ்த்த வைக்கிறது.

---

## குறுக்கெழுத்துப் போட்டி–இல.427

12.12.2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 | 07 |
| 08 | 09 | 10 | 11 | ■ | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | ■ |
| 22 | ■ | ■ | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | ■ | 35 |
| ■ | 37 | 38 | ■ | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | ■ | 49 |

*அடைக்கப்பட வேண்டிய சதுரங்கள் 12,21,23,24,34,36,39,48*

### இடமிருந்து வலம்

*1 - புலமை, கல்வித்திறம்*
*10 - இவை ஒன்பது, ஜோதிடத்தில் முக்கியமானவை*
*13 - கூட்டல் அடையாளம்*
*15 - சூரியன் மறையும் காலம், மறைவு (குழம்பி)*
*25 - வெப்பம், ஆசை*
*29 - வீண் பேச்சுப் பேசுபவன் (குழம்பி)*
*37 - கயிறு, சுருள் (திரும்பி)*
*40 - அமைதி, தணிவு (குழம்பி)*
*43 - நடுத்தரம், ஏழுஸ்வரங்களில் மத்தியில் வருவது (குழம்பி)*

### மேலிருந்து கீழ்

*1 - அண்மையில் இலங்கையர் ஒருவர் கொடூரமாகக் கொல்லப்பட்ட நாடு*
*2 - பாதுகாப்பு, கவசம் (தலைகீழ்)*
*3 - பீதாம்பரம், நீர் (தலைகீழ்)*
*4 - ஒரு தாள வாத்தியம், இதற்கு இருபக்கமும் அடி (குழம்பி)*
*6 - உறக்கம் (குழம்பி)*
*7 - மேகம், காற்று, பசையை ஆங்கியலத்தில் உச்சரிக்க வருவது (தலைகீழ்)*
*19 - முடிவு, இறப்பு (குழம்பி)*
*28 - எல்லை, குருடு (தலைகீழ்)*
*30 - சூரியன் , வட்டம்*
*31 - மேக மூட்டம், மயக்கம் (குழம்பி)*

**விடைகளை அனுப்பவேண்டிய முகவரி**

**குறுக்கெழுத்துப் போட்டி இல- 427**
**ஞாயிறு தினக்குரல்**
**இல. 185, கிராண்ட்பாஸ் வீதி**
**கொழும்பு - 14**

**உங்களின் விடைகளை மேலுள்ள கூப்பனில் நிரப்பி தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி அனுப்பி வைக்கவும். சரியான விடை அனுப்புபவர்களில் அதிர்ஷ்டசாலிகளான மூவருக்கு முறையே 500, 350, 250 ரூபா பணப்பரிசு வழங்கப்படுவதுடன், 10 பேர் பாராட்டைப் பெறுவர். உங்கள் தொலைபேசி இலக்கத்துடன் பெயர், முகவரிகளை தமிழிலும் ஆங்கிலத்திலும் எழுதி அனுப்புதல் வேண்டும். (தொலைபேசி இலக்கத்தை குறிப்பிடாதவர்கள் பரிசு பெறும் வாய்ப்பை இழக்க நேரிடும்).**

---

## குறுக்கெழுத்துப் போட்டி– இல.419

17.10.2021

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01 வி | 02 லை | 03 யே | 04 ற் | 05 ற | 06 ம் | ■ |
| 08 த் | 09 தி | 10 இ | ■ | 12 ம் | 13 ப | 14 ய |
| 15 தி | 16 ல் | 17 டி | 18 லா | 19 ல | 20 க | 21 ங் |
| 22 யா | ■ | 24 று | 25 பு | 26 இ | 27 ப் | 28 மா |
| 29 ச | 30 ரி | ■ | 32 அ | 33 ல் | ■ | 35 க |
| 36 ம் | 37 ட | 38 அ | 39 ரி | ■ | 41 பு | 42 ல் |
| ■ | 44 க | 45 ணி | 46 ப் | 47 பு | ■ | 49 ம் |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.419 இற்கான விடைகள்**

| இடமிருந்து வலம் | மேலிருந்து கீழ் |
|---|---|
| 1 - விலையேற்றம் | 1 - வித்தியாசம் |
| 8 - இத்தி | 2 - தில்லை |
| 12 - பயம் | 3 - இடியேறு |
| 15 - தில்லாலங்கடி | 5 - இல்லறம் |
| 24 - இறுமாப்பு | 6 - கப்பம் |
| 29 - சரி | 14 - மாங்கல்யம் |
| 32 - அல் | 18 - அலாரிப்பு |
| 36 - அரிடம் | 30 - கடரி |
| 41 - புல் | 38 - அணி |
| 44 - கணிப்பு | |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.413இல்**

**பரிசு பெறுவோர் விபரம்**

**முதற்பரிசு 500 ரூபா பெறுபவர்**
*ம.பாலசுப்பிரமணியம்*
*இல. 120/11-1/1*
*காளிவீதி, தெகிவளை*

**இரண்டாம் பரிசு 350 ரூபா பெறுபவர்**
*நா. சந்திரலீலா*
*அருளம்பலம் ஒழுங்கை,*
*நல்லூர், யாழ்ப்பாணம்*

**மூன்றாம் பரிசு 250 ரூபா பெறுபவர்**
*த. சிவபாக்கியவதி*
*இல.513/74, திருமலை வீதி*
*மட்டக்களப்பு*

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி. சி. தியாகேஸ்வரி - கோப்பாய்
சி. அருந்ததி - பதுளை
திருமதி. யோ.யோகா - திருக்கோவில்
திருமதி. ஆ. ருக்மணிதேவி - புத்தூர்
திருமதி. சி. தவநாயகி - மட்டக்களப்பு
ச. லிரோஜன் - யாழ்ப்பாணம்
திருமதி. ம. தயாநிதி - மட்டக்களப்பு
இரா. துஷாராகாந்தி - கொழும்பு - 13
சி. பாலசுந்தரம் - சண்டிலிப்பாய்
எம்.எவ்.எம். றிம்ஸாத் - கிண்ணியா

---

**என் பக்கம் - 140**

# கண்ணில் பட்டவற்றை கடந்து போகாமல்

**கணபதி சர்வானந்தா**

**சு.வி** என்ற பெயரால் அறியப்படுபவர் கவிஞர் சு. வில்வரெத்தினம். 1950 இல் யாழ். புங்குடுதீவில் பிறந்தவர். 1970 களிலே எழுத ஆரம்பித்து 1980 களில் முக்கியமான எழுத்தாளராகப் பரிணமித்தவர். தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு அவர் வழங்கிய ஒப்பற்ற பங்களிப்புக்காக நாட்டுப் பற்றாளர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர் என இணையத்தில் அவர் பற்றிய பல விடயங்களுண்டு.

ஈழத்தின் இலக்கிய சிந்தனையாளராகிய மு. தளையசிங்கத்தின் கருத்துக்களால் அவர் ஈர்க்கப்பட்டார். கவிஞர் சு. வில்வரெத்தினத்தின் கவிதைகளில் பெரும்பானாவை உயிர்த்தெழும் காலத்துக்காக என்ற தொகுதியாக 2001 இல் வெளியானது. மரணத்துள் வாழ்வோம் என்ற தொகுதியிலும் இவரது கவிதைகள் இடம் பெற்றுள்ளன. Lutesong and Lament: Tamil Writing from Sri Lanka என்ற தொகுப்பிலே இவரது கவிதை ஒன்று ஆங்கில வடிவில் பிரசுரமானது. தமிழ்த் தேசியத்தின்பால் உறுதியான பற்றுக்கொண்ட கவிஞர் தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார்.

அவரது காற்றுவழிக் கிராமம் என்னும் கவிதைத் தொகுதி 1995 ஆம் ஆண்டில் இலக்கிய அமைப்பொன்றினால் தேர்வு செய்யப்பட்டுச் சிறந்த கவிதை நூலுக்கான விருதினைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் அவர் கவிதைகளையும் பாடல்களையும் சிறப்பாகப் பாடும் வல்லமை பெற்றவர். 1991 இல் திருகோணமலைக்கு இடம் பெயர்ந்து அங்குள்ள கல்வித் திணைக்களத்தில் பணியாற்றினார். சிறிது காலம் நோய்வாய்ப்பட்டிருந்த கவிஞர் அவர்கள் டிசம்பர் 9, 2006 அன்று தனது 56வது வயதில் காலமானார்.

சூழல் நேயப் பணியாளரான அவரது உறவினர் திரு.குணாளனை அண்மையில் சந்தித்தபோது அவர் பற்றி உரையாடினேன். அவர் குறிப்பிட்டுச் சொன்னதன் பின்னர் அவர் படைப்புகளை இணையத்தில் தேடினேன். அகங்களும் முகங்களும் [கவிதைத் தொகுதி, 1985]காற்றுவெளிக் கிராமம் [கவிதைத் தொகுதி – 1995]காலத்துயர் [கவிதைத் தொகுதி]நெற்றிமண் [கவிதைத் தொகுதி, 2000]உயிர்த்தெழும் காலத்துக்காக [கவிதைத் தொகுதி, 2001]வாசிகம் [2006] போன்றவற்றை அவர் எழுதிய படைப்புகளாகக் கண்டேன். அவற்றுள் அவர் 2006 இல் எழுதிய வாசிகம் என்ற நூல் மிகவும் சிறியது. எண்ணிம நூலகத்தில் கிடைக்கிறது. அதனை விரைவாகப் படிக்கலாம். நூல் சிறியதெனினும் அதன் உள்ளடக்கம் பெரியது.

வாசிகம் என்ற தலைப்பின் கீழ் பிரசுரிக்கப்பட்ட அந்த நூலில் வாசிப்பு கலாசாரம் பற்றிய வரி – வடிவமங்கள் என்று அடிக் குறிப்பொன்று இடப்பட்டிருப்பதைக் காணலாம். கூடல் வெளியீடாக ஒக்டோபர் 2005 இல் அதன் முதலாவது பதிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது. அந்த நூலுக்காக அவர் எழுதியுள்ள முன் எழுத்திலே .

இது ஒரு கைவிளக்கு. வாசிப்புப் பண்பாட்டிற்கான வழி துலக்கும், ஒரு சொல் விளக்கு : சொல்லக விளக்கு.

வாசிப்பு என்ற சொல்லிற்குப் பொருள், இசைப்பாட்டு, இசைக் குழல், சுவாசம், இருப்பிடம் எனப் பல படுவதாக நா.கதிரவேற்பிள்ளையின் தமிழ் அகராதி தெரிவிக்கிறது. வாசிகம் என்ற இசைப்பாட்டிற்கு அபிநயம் செய்வது பரதநாட்டிய உலகில் மரபு.

வாசிகம் புவனம் எனத் தொடங்கும் வட மொழி வாசிகப் பாவிற்கு முதன்முதலில் அபிநயம் செய்தே பரதநாட்டிய அளிக்கை தொடங்கும். பரத நாட்டிய மரபில் பரிச்சயமான வாசிகம் என்னும் சொல் வாசிப்புப் பண்பாட்டிலும் பரிச்சயமானதே

வாசி என்பதற்கு சுவாசம் என்றும் ஒரு பொருள் உண்டு. சுவாசம் என்பதற்குத் தமிழ் சொல் மூச்சு.சும்மா மூச்சல்ல உயிர் மூச்சு. மூச்சில்லாவிட்டால் பேச்சில்லை.மூச்சுப் பேச்சற்றுக் கிடக்கிறான் என்றால் ஏறக்குறைய செத்துப்போய்க் கிடத்தல்தான். இன்றை எமது பண்பாட்டு காவுகைக்கும், பரம்பலுக்கும் மூச்சாயிருப்பது வாசிப்பு. கவிதை , நாவல், சிறுகதை எனப் பல்வேறு இலக்கிய வகைமைகளுக்கும் , புதிய வடிவப் பரிசோதனைகளுக்கும், பல்வேறு அறிவுத்துறைசார் ஈடுபாட்டிற்கும், அவற்றின் மீதான வாசிப்பின் பயன்பேறாக உருவாகும் சிந்தனை வளர்ச்சிக்கும், அறிவியல் – கலைப்பார்வைகள் இணைந்த பண்பாட்டு வளர்ச்சிக்கும் மூச்சாயிருப்பதும் வாசிப்புப் பண்பாடுதான். .

பள்ளி மாணவர், பல்கலைக் கழக மாணவர், இளைய பரம்பரையினர் , பல் துறைசார் தொழில்துறையினர் எனப் பல தரத்தவரையும் அவரவர் துறை சார்ந்தும், அதற்கு அப்பாலான கலை,பண்பாட்டு, இலக்கிய, அறிவுத்துறை ஈடுபாடு கொள்ள வைக்கும் தூண்டற் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியம். இதற்கு முன்னோடியாக அருகி வரும் வாசிப்புச் சூழலில் வாசிப்புப் பண்பாட்டை உருவாக்குவதற்கான முன் முயற்சிகளில் இதுவும் ஒரு முயல்வு.

நல்ல இதழியற் சூழல் , நல்ல புத்தக வாசிப்புச் சூழல், நல் இலக்கிய ஆக்கச் சூழல் எல்லாவற்றிலும் இருளின் நிழல் படிந்து வருகிறது. இதை விலக்கி துலக்கிடச் செய்யும் துணையாகவும், தூண்டியாகவும் இந்த சொல்லக விளக்கு முன் எழுகிறது.கவிதைப் பாங்கும் இழையோட , புதிய பரிசோதனைகளினதும் கலவை வார்ப்பாக இப்படைப்பு உள்ளதால் இதனை வரிவடிமங்கள் என்று அழைக்கிறேன்.

புதிய சொல் வார்ப்புகள்தான் இந்த வடிமங்கள். வாசிப்புக் கலாசாரத்திற்கான வடிமம். வாசக ஈர்ப்பும், பதிவும், பரவுகையும் வேண்டி உங்கள் முன் விரிகிறது – வாசிப்புக் காலசாரம் என்ற சொல்லின் சுருக்கமான வாசகமே வாசிகம். வாசியுங்கள்.

சு.வில்வரெத்தினம் , திருக்கோணமலை. – விஜயதசமி – 2005

என்ற முன்னெழுத்தைத் தொடர்ந்து கவிஞர் சு.வில்வரெத்தினம் அவர்கள் அந்நூலில் எழுதிய எழுத்துகள் அனைத்தும் வாசிப்புப் பற்றியதே. நூலின் 11வது பக்கத்தில் நல்லதை நாடுதல் எனத் தொடங்கி 62வது பக்கத்திலே பின் வாசிப்பு என்ற தலைப்போடு முடித்திருக்கிறார். பின் வாசிப்பு என்பது , வாசிப்பின் பின்னரான விடயமா அல்லது வாசிப்புக்குப் பின்னர் சிந்திக்க வேண்டிய விடயமா? என்றதை வாசகர்கள் தீர்மானிக்கலாம்.




# 12.12.2021 முதல் 18.12.2021 வரை

**இவ்வாரக் கிரக நிலை**

சூரியன் – விருச்சிகம் 16.12.2021 முதல் தனுசு
சந்திரன் – மீனம், மேடம், இடபம்
செவ்வாய் – விருச்சிகம்
புதன் – தனுசு
குரு – கும்பம்
சுக்கிரன் – மகரம்
சனி – மகரம்
ராகு – இடபம்
கேது – விருச்சிகம்
யுரேனஸ் – மேடம்
நெப்டியூன் – கும்பம்

**இவ்வார விசேடம்**

13.12.2021 திங்கட்கிழமை – இறுதிக் கார்த்திகை சோமவாரம். விரதமிருந்து சிவபெருமானை சிறப்பாக வழிபட உகந்த தினமாகும்.

14.12.2021 செவ்வாய்க்கிழமை – ஏகாதசி விரதம். உபவாசமிருந்து மகாவிஷ்ணுவை மனதில் இருத்தி வழிபட உகந்த தினமாகும்.

16.12.2021 வியாழக்கிழமை – மார்கழி மாதப்பிறப்பு. சூரிய பகவான் விருச்சிக ராசியினின்றும் நீங்கி, தனு ராசியில் சஞ்சரிக்கும் காலமாகும். இந்த மார்கழி மாதத்தில் திருமணம்,திருமணப்பதிவு, பொன்னுருக்குதல், வீடு கட்டுதல், குடிபுகுதல் போன்ற சுபகருமங்கள் தவிர்க்கப்படும். மேலும் இன்று பிரதோஷ விரதம். விரதமிருந்து மாலைவேளையில் சிவ வழிபாட்டை மேற்கொள்வதால் பாவங்கள் யாவும் நீங்கப் பெறும். கார்த்திகை விரதமும் இன்று வருகின்றது.

18.12.2021 சனிக்கிழமை – பூரணை விரதம். ஆலயங்களில் இடம்பெறும் தீப பூஜை, சத்திய நாராயண பூஜை என்பவற்றில் கலந்து வழிபாடாற்றுவதால் மனநிறைவு காணப்படும்.

**இவ்வார சுப, அசுப நாட்கள்**

12.12.2021 ஞாயிற்றுக்கிழமை – நவமித்திதி வியாபித்திருப்பதால் நற்கருமங்கள் அகற்றப்படும்.

13.12.2021 திங்கட்கிழமை – பகல் 10.43 முதல் 12.19 வரை திருமணம், திருமணப்பதிவு, வீடு கட்டுதல், குடிபுகுதல் என்பன மேற்கொள்ளலாம்.

14.12.2021 செவ்வாய்க்கிழமை – வாரம் நன்றாக இல்லாமையால் நற்கருமங்கள் நீக்கப்படும்.

15.12.2021 புதன்கிழமை – அவசர கருமங்கள் மட்டும் மேற்கொள்ளலாம்.

16.12.2021 வியாழக்கிழமை – யோகம் நன்றாக இல்லாமையால் நற்கருமங்கள் நீக்கப்படும்.

17.12.2021 வெள்ளிக்கிழமை – நற்கருமங்களுக்கு உகந்த தினமன்று.
18.12.2021 சனிக்கிழமை – அவசர கருமங்கள் மட்டும் செய்யலாம்.

## மேடம்

மேட ராசியினருக்கு இவ்வாரம் யோசனையான வாரம் ஆகும். எதிர்பார்த்த பணம் வரத் தாமதமாகும். குடும்பச் செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். நண்பர்கள், உறவினர்கள் உதவமாட்டார்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்கள் வரவு குறையும். பொருட்கள் விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கும். செய்யும் தொழிலில் தொய்வுநிலை காணப்படும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் குறையும். உத்தியோகத்தர்களுக்கு தொழிலில் வெறுப்பும், கவனக்குறைவும் உண்டாகும். அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக நேரும். உத்தியோகம் பார்க்கும் பெண்களுக்கு பல இடைஞ்சல்கள் உண்டாகும். திருமண காரியங்கள் பின்தள்ளிப் போகும். விவசாயத்தில் பயிரழிவுகள் உண்டாகும். வழக்கு விவகாரங்கள் தோல்வியில் முடியும். பூர்வீக சொத்துகளால் உறவினர்களுடன் வீண் பகைமை உண்டாகும். நண்பர்களும் வீண் தொல்லை தருவார்கள். தொழிலாளர்களுக்குள் போட்டிகள் உண்டாகும். தொழில் வாய்ப்புகள் குறையும். வீட்டில் பெரியவர்களின் உடல்நலக்குறைவால் மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். பயணத்தின் போது உடமைப் பொருட்கள் தொலைந்துபோக வாய்ப்புள்ளது. கவனம் தேவை. வெளிநாட்டுப் பயண முயற்சி தோல்வியைத் தரும். கடன் சுமையால் மனதில் யோசனை, கவலை உண்டாகும். அடைவு வைத்த நகைகளை மீட்க முடியாமல் போகும். கலைஞர்கள் படவாய்ப்பின்றி அல்லல்படுவர்கள். பிள்ளைகளால் கவலை உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் சிக்கல்கள் ஏற்படும்.

## இடபம்

இடப ராசியினருக்கு இவ்வாரம் இன்பமான வாரம் ஆகும். பணம் தாராளமாகப் புழங்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். நினைத்தவை நிறைவேறும். உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனுசரணையாக இருப்பார்கள். பெண்களுக்கு ஆடை, ஆபரணங்கள் சேரும். இதுவரை பிரிந்திருந்த உறவினர்கள் மீண்டும் ஒன்றுசேர்வார்கள். வியாபாரம் அபரிதமான வளர்ச்சி அடையும். உத்தியோகத்தர்கள் அதிகாரிகளின் நன்மதிப்பைப் பெறுவார்கள். சிலருக்கு ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். வெளிநாட்டு உறவினர்கள் வரவால் வீட்டில் களிப்பும், கலகலப்பும் அதிகமாகும். சிலர் நண்பர்களுடன் சேர்ந்து உல்லாசப் பயணம் செல்வார்கள். பெண்களுக்கு திருமண காரியங்கள் சுபமாய ஒப்பேறும். கலைஞர்கள் வெளியூர்ப்பட வாய்ப்புகளைப் பெறுவார்கள். சமூகத்தில் மதிப்பு, மரியாதை அதிகரிக்கும். மாணவர்கள் ஆசிரியர்களுடன் சேர்ந்து கல்விச் சுற்றுலாப் பயணத்தை மேற்கொள்வார்கள். சிலருக்குப் புதிய தொழில் வாய்ப்புகளால் வருமானம் அதிகரிக்கும். சிலர் தொழில் விஷயமாய் வெளிநாடு செல்வார்கள். வெளிநாட்டு உறவினரிடமிருந்து வீட்டிற்குத் தேவையான மின் உபகரணப் பொருட்கள் வந்து சேரும். வீட்டை நவீனமயமாக்கி அழகுபடுத்துவார்கள். சிலர் சொந்த வீட்டிற்கு குடிபோவார்கள். அயலவர்களும் பூரண ஒத்துழைப்பு தருவார்கள்.

## மிதுனம்

மிதுன ராசியினருக்கு இவ்வாரம் விருத்தியான வாரம் ஆகும். பொருளாதாரம் வளமாக இருக்கம். குடும்ப ஒற்றுமை பலப்படும். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். உத்தியோகப் பணியில் இவர்களின் சுறுசுறுப்பு அதிகாரிகளின் அன்பைப் பெறச் செய்யும். வியாபாரத் தொழில் விருத்தி அடையும். அரசாங்க காரியங்களில் இவர்களின் பங்கு சிறப்பாக அமையும். நடனக் கலைஞர்கள் வளர்ச்சி அடைவார்கள். வெளியூர்ப் பயணம் தவிர்க்க முடியாமல் போகும். பெண்கள் சுயதொழிலில் வளம் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியிலும் விளையாட்டிலும் சிறந்து விளங்குவார்கள். மனதளவில் எதை செய்ய நினைத்தாலும் அதை செயல்படுத்த இவர்களின் முயற்சி நன்மையைத் தரும். பணியாளர்கள் உழைப்பிற்குத் தகுந்த வளம் பெறுவார்கள். பெண்களின் விளையாட்டு ஆர்வம் பயனுள்ளதாக அமையும். பெண்களின் திருமண வாய்ப்பு சிலருக்கு அமையும். செய்யும் தொழிலில் முன்பை விட முன்னேற்றம் காண்பார்கள். பொது நலனில் அக்கறை கொண்டு செயல்படுவார்கள். சொந்த வீடு வாங்கும் எண்ணம் நிறைவேறும். வாகன வசதிகள் சேரும். ஆடை, ஆபரணங்கள் சேர்க்கை உண்டாகும். பெண்கள் அடைவு வைத்த நகைகளை மீட்பார்கள். சகோதர உறவு பலப்படும். உறவினர்கள், நண்பர்கள் பக்கபலமாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் அனுகூலம் உண்டாகும்.

## கடகம்

கடக ராசியினருக்கு இவ்வாரம் ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். வசதிக்குத் தகுந்த தொழில்களில் முதலீடு செய்து நல்ல லாபம் பெறுவார்கள். இவர்கள் எதிர்பார்த்த தகவல்கள் இவர்களுக்கு நன்மையாகவும், பொருளாதார மேன்மையும் பெற்றுத்தரும். இவர்களின் தைரியமே வெற்றிக்கு வழிவகுக்கும். கலைத்துறையினர் போட்டியின்றி எல்லா நிகழ்ச்சிகளிலும் சிறந்து விளங்குவார்கள். குடும்பத்தில் சுபகாரியம் இனிதே நடக்கும். வியாபாரத்தில் ஆக்கபூர்வ முன்னேற்றம் உண்டாகும். வளமான வாழ்வுக்கு வழிவகைகளை ஏற்படுத்திக் கொள்வார்கள். பெண்கள் சுயதொழிலில் கவனமுடன் செயல்பட்டு அதிக லாபம் பெறுவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைவார்கள். வெளியூர்ச் செய்தி நல்ல பலனைத் தரும். பணிபுரியும் இடத்தில் நினைத்தபடி செயல்களில் வளம் பெறுவார்கள். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு இவர்களுக்கு பயனுள்ள தகவல்களைப் பெற்றுத் தரும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். இதுவரை விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புகள் உண்டாகும். பொதுவாழ்வில் பிறருக்கு உதவி செய்வதை விரும்புவார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அரசியல்வாதிகள் அரசியலில் முக்கியத்துவம் பெறுவார்கள். இவர்களுக்கு தொழில் சார்ந்த நோக்கங்கள் நிறைவேறும். தாயார் வழிச் சொத்துகள் கைக்கு வந்து சேரும்.

## சிம்மம்

சிங்க ராசியினருக்கு இவ்வாரம் அலைச்சல் மிகுந்த வாரம் ஆகும். பணம் தட்டுப்பாடாக இருக்கும். செலவுகள் அதிகரிப்பால் கடன் வாங்க அலைவார்கள். சிலர் கொடுத்த கடனை மீளப் பெறுவதற்காக அலைந்து திரிவார்கள். படித்து முடித்த சிலர் திறமைக்கேற்ற வேலை தேடுவார்கள். வியாபாரிகள் வெளியூர் வர்த்தகத் தொடர்புகளைத் தேடித் திரிவார்கள். சிலர் உடல் நலக்குறைவால் மருத்துவ உதவியை நாடுவார்கள். விவசாயி கமச் செய்கையை விரிவுபடுத்துவதற்கு வங்கிகளின் உதவியை நாடுவார்கள். கலைஞர்கள் வெளியூர்ப்பட வாய்ப்புகளைத் தேடித் திரிவார்கள். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்புகளைத் தேடுவார்கள். சிலர் தொழில் நிமித்தம் குடியிருக்க வாடகை வீடு தேடித் திரிவார்கள். சிலர் வெளிநாடு செல்ல எண்ணி முகவர்களின் உதவியை நாடுவார்கள். பெற்றோர் தம் பிள்ளைகளை ஆரம்பப் பள்ளியில் சேர்ப்பதற்கு அலைந்து திரிவார்கள். உத்தியோகத்தர்கள் தொழில் சம்பந்தமாய் நிறைய அலைய வேண்டிவரும். சில பெற்றோர் தம் திருமணமாகாத பிள்ளைகளுக்காக வரன் தேட 'திருமண சேவை'களின் உதவியை நாடுவார்கள். சிலரின் வீடுகளின் பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போனதால் காவல் நிலையத்தின் உதவியை நாடுவார்கள்.

## கன்னி

கன்னி ராசியினருக்கு இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. தனவரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். தேகசுகம் பாதிப்படையும். மருத்துவச் செலவுகள் அதிகமாகும். குடும்பத்தில் வாக்குவிரோதம், சச்சரவுகள் தோன்றி மறையும். புத்திரர் கவலை, துன்பம் அதிகரிக்கும். வர்த்தகர்களுக்கு முதலீடுகள் எதிர்பார்த்த லாபம் தரமாட்டாது. பங்கு வியாபாரம் நம்பிக்கை மோசடிக்குள்ளாக வேண்டிவரலாம்.உத்தியோகத்தர்களுக்கு வேலைப் பொறுப்பும் செலவும் அதிகரிக்கும். கீழ் உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு குறையும். விவசாயிகளுக்கு உற்பத்திச் செலவுகள் அதிகமாகும். கடன்பளு ஏறும். தொழிலாளர்களுக்கு செய் தொழிலில் பிரச்சினைகள் அதிகரிக்கும். முதலாளிகள் தொழிலாளர் கருத்து வேற்றுமைகள் வளரும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறைவடையும். சஞ்சலபுத்தி, தடுமாற்றம், மறதி முதலான குணங்கள் மாணவர்களுக்கு ஏற்படுதலால் பரீட்சைத் தேர்ச்சிகளும் திருப்தி தராமல் போகலாம். பெண்களுக்கு விவாகப் பேச்சுக்களில் தடை, தாமதங்களின் மேல் ஒப்பேறும். வங்கிகளின் உதவிகள் குறையும். எதிர்பார்த்த லாபங்களுக்குப் பதில் நட்டமே ஏற்படும். பெண்களுக்கு வாக்கு விரோதமான சம்பவங்கள் ஏற்படும். குடும்பப் பெண்களுக்கும் உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்குள் அவமானங்கள் ஏற்படவும் கூடும். தொழிலாளர்களுக்கு தொழில் இழப்பும் ஊதியக் குறைவும் உண்டாகும். பயணத்தின் போது மிகவும் அவதானமாக இருக்க வேண்டும். உறவினர்கள்,நண்பர்கள் ஓரளவு உதவுவார்கள். யாருடனும் அளவுடன் பேசிப்பழகுதல் நன்மை தரும்.

## துலாம்

துலா ராசியினருக்கு இவ்வாரம் யோகமான வாரம் ஆகும். பணம் பல வழிகளிலும் வந்துசேரும். குடும்பத்தில் அன்னியோன்யம் அதிகரிக்கும். தொழில் சார்ந்த முயற்சிகள் நல்ல பலனைத் தரும். வெளிநாட்டுச் செய்திகளும் வெளிநாட்டு நண்பர்களின் தொடர்பும் நல்ல பலனை பெற்றுத் தரும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். அரசாங்கப் பணி சிலருக்கு கிடைக்க வாய்ப்பு அமையும். குடும்பத்தில் முக்கிய காரியங்களை முன்னின்று நடத்துவார்கள். குறுகிய காலத்தில் நல்ல முன்னேற்றம் காண்பார்கள். புதிய தெம்புடன் செயல்படுவார்கள். அரசியலில் ஈடுபாடு இவர்களின் மதிப்பை உயர்த்தும். முக்கிய பிரமுகர்களின் சந்திப்பு இவர்களின் வாழ்வில் வளம் பெறச் செய்யும். விவசாயத் தொழிலாளர்கள் முன்னேற்றம் காண்பார்கள். அரச, வங்கிகளின் உதவிகள் கிடைக்கும். சொந்த வீடு வாங்கும் வாய்ப்பு உண்டாகும். வாகன வசதிகள் சேரும். கலைத்துறையினர் பேச்சிலும் செயலிலும் சிறந்து விளங்குவார்கள். பெண்கள் தங்கள் தேவைகளை நிறைவேற்றிக்கொள்வார்கள். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். சிலருக்கு வெளியூர்ப் பயணம் செய்ய வேண்டிவரும். பெண்களுக்கு திருமண யோகம் உண்டாகும். பெண்கள் சுயதொழிலில் முன்னேற்றம் அடைவார்கள். வேற்று மதத்தவரின் உதவி இவர்களுக்கு நல்ல பலனை பெற்றுத் தரும். உத்தியோகத்தர்கள் விரும்பியபடி பதவி உயர்வு தானாகக் கிடைக்கும்.

## விருச்சிகம்

விருச்சிக ராசியினருக்கு இவ்வாரம் சுபீட்சமான வாரமாகும். தன லாபம் பெருகும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்து சுபீட்சம் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பார்கள். செய்யும் தொழிலில் இருந்துவந்த தேக்கநிலை மாறி நினைத்தபடி எல்லாம் சிறப்பாக அமையும். பெண்களின் வேலைவாய்ப்பு முயற்சிகள் நிறைவேறும். சுயதொழிலில் வளம் பெறுவார்கள். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். அரசாங்க காரியங்கள் அனுகூலமாக அமையும். அரசியல்வாதிகளின் வளர்ச்சி சிறப்பாக அமையும். முதலீடு இல்லாத தொழிலில் நல்ல வருமானம் கிடைக்கும். பசுமையை விரும்பி விவசாய விளைநிலங்கள் மூலம் ஆதாயம் பெறுவார்கள். வீடு, வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சொத்துப் பிரச்சினைகள் தீர்ந்து கைக்கு வந்து சேரும். பெண்களின் திருமண காரியங்கள் சுபமாய் ஒப்பேறும். உத்தியோகத்தில் பணியாளர்களின் விருப்பங்கள் நிறைவேறும். சகோதர வழி உதவிகள் கிடைக்கும். சிலருக்கு அரசாங்கத்தில் பணிபுரியும் வாய்ப்பு கிட்டும். சிலருக்கு லாட்டரிச் சீட்டுகளால் அதிர்ஷ்டம் உண்டாகும். சிலர் விரும்பியபடி வெளிநாட்டுப் பயணத்தை மேற்கொள்வார்கள். உறவினர்கள் வீட்டு சுபநிகழ்ச்சிகளில் கலந்து மகிழ்வார்கள். வேலை தேடுவோருக்கு திறமைக்குத் தகுந்த வேலை கிடைக்கும். கலைஞர்களுக்கு வெளியூர்ப்பட வாய்ப்புகளால் வருமானம் அதிகரிக்கும்.

## தனுசு

தனுசு ராசியினருக்கு இவ்வாரம் சலனம் மிகுந்த வாரமாகும். பணமுடை ஏற்படும். மனதில் இனம் புரியாத கவலை, யோசனை அதிகரிக்கும். குடும்பச் செலவுகள் அதிகரிக்கும். என்ன செய்வதென்று தடுமாறுவார்கள். குடும்பத்தில் குழப்பநிலை நீடிக்கும். வியாபாரத்தில் தொய்வுநிலை காணப்படும். வாடிக்கையாளர்கள் வரவு குறையும். தொழிலில் அலைச்சல்கள் அதிகமாகும். நினைத்த காரியங்கள் நிறைவேறாமற் போகும். உத்தியோகத்தில் சக பணியாளர்களுடன் வாக்கு விரோதம் உண்டாகும். தொழிலில் கவனக் குறைவும் வெறுப்பும் ஏற்படும். அதிகாரிகளின் கண்டனத்துக்கு ஆளாக வேண்டிவரும். விவசாயத்தில் பயிரழிவால் ஆதாயம் குறையும். மாணவர்கள் உயர்கல்வி பயில்வதில் தடை, தாமதம் ஏற்படும். பெண்களுக்கு பொறுப்புகள் அதிகரிக்கும். சுயதொழிலில் போட்டிகள் உண்டாகும். திருமண காரியங்கள் குழம்பிய நிலையில் இருக்கும். உறவினர்கள், நண்பர்களுடன் வீண் பகைமை உண்டாகும். பயணங்களால் செலவுகள் அதிகரிக்கும். அயலவர்கள் வீண் பிரச்சினைகள் தருவார்கள். வெளிநாட்டு பயண முயற்சி ஏமாற்றத்தைத் தரும். தொழிலாளர்கள் தொழில் வாய்ப்பின்றி மிகவும் அல்லல்படுவார்கள். கலைஞர்களுக்கு மக்களிடையே வரவேற்பும் பட வாய்ப்புகளும் குறையும். கொடுக்கல், வாங்கலில் பிரச்சினைகள் உண்டாகும்.

## மகரம்

மகர ராசியினருக்கு இவ்வாரம் சமபலன்கள் காணப்படுகின்றன. வரவும் செலவும் சரிசமமாக இருக்கும். குடும்ப அமைதி பேணப்படும். எடுக்கும் முயற்சிகள் தடை, தாமதமாகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் குறையும். தொழிலில் பிரயாசை, அலைச்சல்கள் அதிகமாகும். உறவினர்கள், நண்பர்கள் ஓரளவு உதவிகரமாக இருப்பார்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை, பொறுப்புகள் அதிகரிக்கும். அடுத்தவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். உடலாரோக்கியம் பாதிப்படைந்து, மருத்துவச் செலவுகள் அதிகமாகும். பயணங்களின் போது உடமைப் பொருட்களில் அவதானம் தேவை. தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் குறையும். கலைஞர்கள் சுயமுயற்சியால் பட வாய்ப்புகளைப் பெறுவார்கள். வெளிநாட்டுப் பயணம் அதிக பிரயாசையின் மேல் அனுகூலமாகும். திருமண காரியங்கள் முயற்சியின் மேல் ஒப்பேறும். நண்பர்கள், உறவினர்கள் உதவிகரமாக இருப்பார்கள். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை. அடுத்தவர் விவகாரங்களில் தலையிடுவதைத் தடுக்கவும். புதிய முயற்சியைத் தள்ளிப்போடுவது நல்லது. விவசாயத்தில் விருத்தி குன்றும். வங்கிகளின் உதவிகள் குறையும். அரசியல்வாதிகளின் மதிப்பு, செல்வாக்கு குறையும்.

## கும்பம்

கும்ப ராசியினருக்கு இவ்வாரம் நன்மையான வாரமாகும். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். உறவினர்கள், நண்பர்கள் நல்லாதரவு தருவார்கள். எண்ணிய கருமங்கள் துல்லியமாய் நிறைவேறும். தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரத்தில் நல்ல வருமானம் கிடைக்கும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும். பதவி உயர்வு, ஊதிய உயர்வு, வசதியான இடமாற்றம் என்பன கிடைக்கும். பெண்களின் ஆசைகள் நிறைவேறும். ஆடை, அணிமணிச் சேர்க்கை உண்டாகும். வீடு, வாகன வசதிகள் சேரும். தொழிலதிபர்கள் தொழிலாளர்களின் ஒத்துழைப்பால் முன்னேற்றமும் போதிய வருமானமும் பெறுவார்கள். கலைஞர்களின் புகழ் மேலோங்கும். வெளியூர்ப்பட வாய்ப்புகளால் வருமானம் பெருகும். வாழ்க்கைத்தரம் உயரும். சுயதொழில் புரியும் பெண்களின் ஆதாயம் பெருகும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புகள் அதிகரிக்கும். சிலருக்கு வெளிநாட்டு தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். மாணவர்கள் கல்வித் தேர்வில் சிறந்த மதிப்பெண்களைப் பெறுவார்கள். பெண்களுக்கு திடீர் திருமண வாய்ப்புகள் வரும். வழக்கு விவகாரங்கள் வெற்றியடையும். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண்டாகும்.

## மீனம்

மீன ராசியினருக்கு இவ்வாரம் மேன்மையான வாரமாகும். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். எடுக்கும் முயற்சிகள் வெற்றியடையும். பணியில் சிறந்து விளங்குவார்கள். காரியத்தில் கவனம் செலுத்தி புதிய பாதையை ஏற்படுத்திக் கொள்வார்கள். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றிக் கொள்வார்கள். இவர்களுக்கு பாரமாக இருந்த காரியங்கள் கூட சிரமமின்றி நடக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பான முன்னேற்றம் காண்பார்கள். பெண்களின் வேலை வாய்ப்பு முயற்சிகள் நிறைவேறும். பொது விடயங்களில் ஈடுபாடு கொள்வார்கள். சுயதொழிலில் வளம் பெறுவார்கள். சகோதர உறவு வலுவடையும். கலைத்துறையினர் நடன, இசை, பாடல் சார்ந்த கலையில் முன்னேற்றம் அடைவார்கள். வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். அரசியலில் தனித்திறமையை நிலைநாட்டுவார்கள். பெண்களின் செயற்பாடுகளில் தைரியம் இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடக்கும். தொழிலிலும் உத்தியோகத்திலும் உயர்ந்த நிலையை அடைவார்கள். வெளியூர்ப் பயணம் மூலம் இவர்களின் தொழிலை விரிவுபடுத்திக் கொள்வார்கள். உத்தியோகத்தில் எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். உறவுகளை கவரும் விதமாக சில பொது நிகழ்ச்சிகள் ஏற்பாடுகளை சிறப்பாக செய்வார்கள். சிலர் திட்டமிட்டபடி வெளிநாட்டுப் பயணம் அனுகூலமாகும். சமூகத்தில் இவர்களின் செல்வாக்கு, அந்தஸ்து உயரும்.




# அந்திம கிரியைகளை செய்ய முடியாதவர்கள் ஆத்ம சாந்தி கிரியைகளை எப்படி செய்வது?

**கேள்வி – திரு. அருள்ராஜ் – சண்டிலிப்பாய்**

**குருஜி இந்த இரு ஜாதகங்களின் நிலைப்படி என் கேள்விக்கு உரிய விளக்கம் தாருங்கள்.**

*பதில் - பொதுவாக பலருக்கு இந்தக் குழப்பநிலை உண்டு. சூரியன், செவ்வாய், சேர்க்கை இருந்தால் திருமண வாழ்வில் சிக்கல், குழப்பம் அமையும் என்கின்ற பயம், மனச்சஞ்சலம். நான் இது பற்றி விளக்கம் முன்பும் கொடுத்து இருக்கின்றேன். ஒரு பெண்ணின் ஜாதக அமைப்பில் சூரியன், செவ்வாய், சேர்க்கை, ஜென்ம லக்னம், 2ம், 4ம், 7ம், 8ம், 12ம் இடங்கள் இருந்தால் இதேபோல தோஷநிலையில் அதாவது குறிப்பிட்ட இந்த ஸ்தான அமைப்பில் இருந்தால் எந்த பாதிப்பும் இல்லை. பெண்ணுக்கு அல்லது ஆணுக்கு சூரியன், செவ்வாய் 5ம், 9ம், 10ம், 11ம்,3ம் இடங்களில் அமைந்து இருந்தால் எந்தப் பாதிப்பும் இல்லை. இதை நன்கு புரிந்து கொண்டு செயற்படுங்கள். மற்றும் உங்கள் இரு ஜாதக அமைப்பும் பெரும் சிறப்பாக பொருத்தமாக அமையவில்லை. மத்திமமான பொருத்த நிலையே உண்டு. உங்களில் இரு ஜாதகத்திற்கும் சூரியன், செவ்வாய், எந்த பாதிப்பு நிலையும் இல்லை.*

**கேள்வி – முருகையா – யாழ்ப்பாணம்**

**குருஜி - இன்றைய கொரோனா தொற்றினால் அதிகமான உயிர்பலிகள் அமைந்தது. கொரோனா நோயின் உச்சக்கட்ட காலத்தில் பல உயிர்களுக்கு அந்திம கிரியைகளும் செய்ய முடியாத நிலையை அடைந்தோம். இவர்களின் இந்த ஆத்ம சாந்தி கிரியைகளை நாம் எப்படி செய்து கொள்ள முடியும்? விளக்கம் தாருங்கள்.**

*பதில் - இது உலகத்தோடு அமைந்த விடயமாகும். ஒரு நாட்டில் பெரும் இயற்கை அனர்த்தங்களின் மூலமாக பூதவுடல் கிடைக்காமல் அல்லது அந்த பூத உடலுக்கு உரிய கிரியை செய்ய முடியாத நிலை அமையும் போது அந்த ஆத்மாவை நினைந்து வைக்கல் மூலம் உருவம் அமைத்து அக்னி மூட்டி எரித்த உரிய அந்திம கிரியைகளை செய்யலாம். இதில் உங்கள் தவறு எதுவும் இல்லை. இதனால் நீங்கள் கவலை கொள்ளத் தேவையில்லை. இது ஒரு அனர்த்தநிலை. இயற்கை தந்த அழிவு. எனவே இந்த தொற்று நோயின் மூலம் பூத உடலை பெறமுடியாது போனவர்கள் 3மாதம், 6மாதம் எனும் கணக்கில் இறந்த திதியை குறித்து அத்தினத்தில் மேற்படியான அந்திம கிரியைகளை செய்து கொள்ளலாம். பித்திரு கடன் செய்யவும் செய்விக்கவும். பூர்வ ஜென்ம பலன் வேண்டும். இது சாஸ்த்திர நியதி. உலகம் எவ்வளவுதான் அறிவியல் கொண்டு வளர்ந்தாலும் இறைவனின் சில சூட்சுமங்களை மனிதராகிய நாம் காணவும் முடியாது, வெற்றி கொள்ளவும் முடியாது.*

**கேள்வி – சிவசத்தியம் – கிளிநொச்சி**

**குருஜி வணக்கம். இன்றைய காலம் போரினால்,இயற்கை அனர்த்தத்தினால் மற்றும் பலவித அனர்த்தங்களினால் அன்றாட வாழ்வியலை நடாத்த முடியாதவர்கட்கு பலவித அமைப்புகள் உதவி புரிகின்றார்கள். அதற்கு உரிய விளம்பரமும் செய்கின்றார்கள். இது சரியா?**

*பதில் - 'வலது கை கொடுப்பது இடது கைக்கு தெரியக் கூடாது'என ஒரு முதுமொழி உண்டு. ஒருவரின் தலை விதியை இன்னொருவர் முற்று முழுதாக தீர்த்து விட முடியாது. இதிலே இறைவன் நியதி, சூட்சுமம் பலவும் உண்டு. தர்மம் என்பது ஒவ்வொரு மனிதனும் செய்ய வேண்டிய வாழ்வின் அறம். ஒருவர் கோடிக் கணக்கில் தர்மம் செய்தாலும் மற்றவர் ஒரு ரூபா தர்மம் செய்தாலுல் பலன் ஏற்றுதான் தம்மிடம் உள்ள வசதியை வைத்தே அவரவர் தர்மம் அமைகின்றது. ஆனால் மனப்பூர்வாக இதயசுத்தியோடு செய்யும் தர்மமே நம்மை காக்கும். நமது கர்ம வினைகளை நீக்கும். தற்கால வாழ்வில் போட்டி நிறைந்தது. நீங்கள் செய்யும் தர்மம் விளம்பரம் செய்யும் போது அதற்கு போட்டியாக மேலாக மற்றவர் செய்வார். இதனால் ஒரு ஏழையின் குடும்பம் ஒரு நாளோ ஒரு வாரமே நன்மையடையும்.*

தேவகுருஜி பதில்கள்
தினக்குரல்
இல.185 கிராண்ட்பாஸ் வீதி
கொழும்பு - 14

# நிதியியல் மோசடிகள் - நேர்மையில் மறைந்துள்ள சூழ்ச்சி

## உண்மைச் சம்பவம்



ஏ.பி.எல்.ஜே துலாஞ்ஜலி திலகரத்ன
உதவிப் பணிப்பாளர், நிதியியல் உளவறிதல் பிரிவு, இலங்கை மத்திய வங்கி

21 வயதேயான ஆஷா என்ற இளம் பெண்ணுக்கு இருந்த ஒரேயொரு கனவு தனது மேற்படிப்பை வெளிநாட்டில் தொடர வேண்டுமென்பதாகும். அவளது கனவை நனவாக்குவதற்கு புலமைப்பரிசிலொன்றிற்காக விண்ணப்பிப்பதற்கு வெளிநாட்டவரான முனைவர் கார்ள் என்பவருடன் அவள் தனது நட்பை வளர்த்துக்கொள்கின்றாள். வழமையாக முகம் தெரியாதவர்களில் நம்பிக்கையற்ற ஆஷா, தனது கனவை நிறைவேற்ற முனைவர் கார்ள் ஆதரவளிக்க முன்வந்தமையால், அவரை நம்புவதற்கு அவள் தயங்கவில்லை. அவர்கள் தங்களது தொலைபேசி இலக்கங்களைப் பகிர்ந்து சமூக வலைத்தளத்தில் நண்பர்களாக மாறுகின்றனர்.

அவர்களுடைய நட்பு நாளடைவில் மலர்ந்துஒரு நாள் தங்க நகையொன்றையும் 100,000 டொலர் பெறுமதியுடைய பணப்பரிசையும் அவளுக்காக அனுப்ப வேண்டியுள்ளதெனமுனைவர் கார்ள் ஆஷாவிடம் தெரிவிக்கின்றார். அவர் அப்பரிசின் புகைப்படத்தை அவளுக்கு அனுப்பி, வெகுவிரைவில் பரிசை அனுப்புவதாக வாக்குறுதியளிக்கின்றார் ஆஷாவும் மிகவும் மனம் மகிழ்ந்ததுடன் முனைவர் கார்ளின் நண்பரென தன்னை அறிமுகப்படுத்திய ஹரி என்பவரிடமிருந்து மூன்று நாட்களுக்குப் பின்னர் அழைப்பொன்றைப் பெறுகின்றாள். தான் கட்டுநாயக்க,பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருப்பதாகவும் பரிசை அப்புறப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதாகவும் அழைத்தவர் கூறினார். தீர்வைக் கட்டணங்களாக உள்ளூர் வங்கிக் கணக்கொன்றிற்கு ரூ.100,000 தொகையை வைப்புச் செய்யுமாறு ஆஷாவிடம் கோருகின்றார். ஆஷா எவ்வித சிந்தனையுமின்றி, அவளது நண்பரான முனைவர் கார்ள் மீதும் அவர் அனுப்பிய புகைப்படத்தின் மீதும் நம்பிக்கை வைத்து சொல்லப்பட்ட தொகையை வைப்புச் செய்கின்றாள். சிறிது நேரத்தில், ஹரி மீண்டும் ஆஷாவைத் தொடர்பு கொண்டு,இலங்கைச் சுங்கத்திலிருந்து டொலர் பெறுமதியுடைய பணப்பரிசை அப்புறப்படுத்திப் பெற்றுக் கொள்வதற்கு சுங்கத்தீர்வைக் கட்டணமாக ரூ.295,000 தொகையை அதே வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்யுமாறும் கோருகின்றார்.

ஆஷா, முனைவர் கார்ளிடம் இதனைப் பற்றி விசாரித்த போது அவர் அதனை உறுதி செய்ததன் பின்னர், அத்தொகையை அவள் வைப்புச் செய்கின்றாள். பின்னர் அதே நாளன்று ஹரி ஆஷாவை மீண்டுமொருமுறை தொடர்புகொண்டு நாட்டிற்குள் டொலர்களை கொண்டுவருவதற்கு ரூ.900,000 கட்டணம் செலுத்தி ஐக்கிய நாடுகளிடமிருந்து இசைவு பெற்றுக்கொள்ளப்பட வேண்டுமென தெரிவிக்கின்றார். ஹரி தான் கூறியதை உறுதிசெய்யும் பொருட்டு ஐக்கிய நாடுகளின் இசைவுச் சான்றிதழின் புகைப்படமொன்றை ஆஷாவிற்கு அனுப்புவதுடன்; ஆஷாவும் அச்சான்றிதழில் ஐக்கிய நாடுகளின்உத்தியோகபூர்வ இலச்சினை இருப்பதனை நம்பி, குறித்த பணத்தொகையை அதே வங்கிக் கணக்கிற்கு வைப்புச் செய்கின்றாள். மேலும், ஐக்கிய நாடுகள் இசைவு வழங்கும் செயன்முறைக்கு சுமார் மூன்று நாட்கள் எடுக்குமென்று ஹரி ஆஷாவிற்கு தெரிவிக்கின்றார். மூன்று நாட்களின் பின்னர், ஹரி ஆஷாவிற்கு அழைப்பினை ஏற்படுத்தி, அவளது பரிசைப் பெற்றுக் கொள்ளும் இறுதிப் படிமுறையாக, டொலர் பெறுமதியுடைய பணப்பரிசை இலங்கை ரூபாவாக மாற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கிக்கு ரூ.500,000 கொடுப்பனவுசெய்ய வேண்டுமெனக்கூறி,இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றின் புகைப்படத்தையும் அவளுக்கு அனுப்புகின்றார். ஒட்டுமொத்த செயன்முறையின் போதும் அவளுக்கான அவரின் பரிசு மிக விரைவில் கிடைக்குமென்றும் வெளிநாட்டிலிருந்து பரிசில்களை அனுப்பும்போது ஏற்படுகின்ற வழமையான கிரயங்கள் தான் இத்தகைய அனைத்து தீர்வைக் கட்டணங்கள் என்றும் உறுதியளிக்கும் வகையில் தொடர்ந்தும் அவளுக்கு குறுஞ்செய்திகளை அனுப்பிக் கொண்டிருக்கும் முனைவர் கார்ளை அவள் நம்புகின்றாள்.

சற்று நேரத்தில், ஹரி ஆஷாவிற்கு மீண்டும் அழைப்பினை ஏற்படுத்தி, இப்பரிசானது ஆரம்பத்தில் உறுதிப்படுத்தப்பட்ட 100,000 டொலர் பணப்பரிசிற்கு மேலதிகமாக மற்றுமொரு 900,000 டொலர் பெறுமதியான பணப்பரிசை உள்ளடக்குகின்றதென சற்றுமுன்னர் இலங்கைச் சுங்கம் அவருக்கு அறிவித்துள்ளதென்று தெரிவிக்கின்றார். இருப்பினும், ஆரம்பத்தில்; 100,000 டொலர்களை மாத்திரமே முனைவர் கார்ள் வாக்குறுதியளித்த காரணத்தால், ஆஷாஹரியை நம்பவில்லை. புதிய பணப்பரிசு பற்றி அவள் முனைவர் கார்ளிடம் விசாரித்த போது அவளை வியக்க வைக்க வேண்டும் என்பதற்காகவே புதிய பணப்பரிசு பற்றி தான் எதனையும் வெளிப்படுத்தவில்லை என கூறுகின்றார்.

எனினும், இச்சந்தர்ப்பத்தில் முனைவர் கார்ள் மூலம் வழங்கப்பட்ட வாக்குறுதியிலுள்ள நம்பிக்கை, நேர்மை பற்றியும் ஹரி என்பவரினால் கோரப்பட்டவைகள் பற்றியும் ஆஷா சந்தேகிக்க தொடங்குகின்றாள். தற்போது வரையிலும் மொத்தமாக ரூ.1,795,000 பெறுமதியான பணத்தொகையினை அறிமுகமற்ற மற்றும் சந்தித்திராத நபர்களுக்குச் செலுத்துவதில் அவள் சோர்வும் விரக்தியுமுற்றாள். இறுதி முயற்சியாக, அவள் இலங்கை மத்திய வங்கியைத் தொடர்பு கொண்ட போது பாரியளவிலான நிதியியல் மோசடியால் பாதிக்கப்பட்டுள்ளாளென்று அறிந்து கொள்கின்றாள். அதனைத் தொடர்ந்து, தொடர்புடைய சட்ட அமுலாக்க அதிகாரிகளுக்கு அறிவிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றாள். இருந்தபோதிலும், தற்போது அவள் தனது சேமிப்புக்கள், தனது கனவு, மக்களின் மீதுள்ள நம்பிக்கை, தன்னம்பிக்கை அனைத்தையுமே இழந்துவிட்டாள்.

டிடி. மோசடி என்றால் என்ன?

தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கும் இவ்வுலகில், நேர்மை மற்றும் ஏமாற்றம் போன்ற மனிதச் செயற்பாடுகள் எண்ணற்ற வழிமுறைகளூடாக தொடர்ந்தும் முன்னேற்றம்கண்டு வியாபிக்கின்றன. இத்தகைய செயற்பாடுகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு மனிதர்களினால் பயன்படுத்தப்படும் வேறுபட்ட வழிகளும் முறைகளும் பல்வேறு சகாப்தங்களாகநடந்தேறுகின்றன. மோசடி என்பது, மனிதர்களின் ஏமாறும் தன்மை மூலம் செயல்வடிவம் எடுக்கின்ற அத்தகைய ஒரு வழிமுறையாகும்.

**மிகுதி அடுத்த வாரம்**

# Keells உடன் இணைந்து பிரத்தியேக சலுகையை வழங்கும் Pelwatte




Pelwatte Dairy Industries நிறுவனமானது, கிறிஸ்மஸ் மற்றும் டிசம்பர் பண்டிகைக் காலத்தைவரவேற்கும்வகையில், Keells உடனான பிரத்தியேக கூட்டாண்மையுடன் 2021 டிசம்பர் 01 முதல் 31 வரை 15% சலுகைதள்ளுபடியில் அவர்களின்பிரத்தியேகதயாரிப்பானஉப்பிடப்பட்டவெண்ணெயை (Salted Butter) வழங்குகிறது.

இந்தச்சலுகைகுறித்து Modern Trade விற்பனை முகாமையாளர் சமிந்தபத்திரணகருத்துத்தெரிவிக்கையில், ''சமையலறைகளில் மகிழ்ச்சியும் உற்சாகமும்நிறைந்தகாலப்பகுதியேஇதுவாகும், குடும்பங்கள், நண்பர்கள், சமூகங்கள் ஒன்றுகூடிஉணவைவெளிப்படுத்தும்காலம்இதுவாகும். அத்துடன்பெல்வத்த, அவர்கள் விரும்பும் தயாரிப்புகளை அனுபவிக்கும் வாய்ப்பை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகிறது.'' என்றார்.

பெல்வத்தவெண்ணெய், உள்நாட்டில் கிடைக்கும் பாலில்இருந்து பெறப்படும் கொழுப்பைப்பயன்படுத்திஉற்பத்திசெய்யப்படுவதுடன், அதிக ஊட்டச்சத்துக்களை கொண்டுள்ளதுடன்மிக ஆரோக்கியமானதாகவும் இருக்கிறது. வெண்ணெயானது, புதியபாலில்உள்ளகொழுப்பிலிருந்து, எவ்விதசுவையூட்டிகளும்இடப்படாமல்தயாரிக்கப்படுகிறது. இதுசுமார் 84% கொழுப்பைக்கொண்டுள்ளது.வெண்ணெய்உற்பத்திச்செயன்முறையானது, கொழுப்பின்சதவீதத்தைஅதிகரிக்கிறது, எனவே கொழுப்பின் சதவீதத்தை கட்டுப்படுத்த தரநிலைப்படுத்தல்செயல்முறைபயன்படுத்தப்படுகிறது. இதுவே பெல்வத்தவெண்ணெய்இயற்கையானதுஎன்பதற்குமற்றொரு காரணமாகும். அவை மிகஉயர்ந்ததரநிர்ணயத்துடன், எவ்வித செயற்கை பதனூட்டிகளும் இன்றிதயாரிக்கப்படுவதுடன்நீண்டநாட்களுக்கு பழுதடையாத வகையிலான ஆயுளையும் கொண்டுள்ளது.

Pelwatte Dairy ஆனதுநாட்டின் உள்நாட்டு பால்தேவையை பூர்த்திசெய்தல் எனும்நோக்கத்தைஎப்போதும்கொண்டுள்ளது. அதேநேரத்தில் உள்ளூர் பால்பண்ணையாளர்களின்சமூகபொருளாதாரநிலையையும்அது மேம்படுத்துகிறது. நாடுபாலில்தன்னிறைவை அடைவதை பிரதான இலக்காக கொண்டுள்ளஅதேவேளையில், விவசாயிகள், அவர்களது வாழ்வாதாரம் மற்றும்அவர்களதுகுடும்பங்களுக்குபல்வேறுவழிகளில்பெல்வத்தபால்பண்ணைஉதவுவதுடன், அவர்களை வலுவூட்டி அவர்கள் தங்கள் சொந்த வாழ்க்கையைவாழவழிவகுப்பதுடன், நாட்டின் செழிப்பிலும் கவனம் செலுத்துகிறது.

# ஆரிவேலைகளில் சிறந்துவிளங்கும் வெள்ளவத்தை ஈட்ன் கலெக்ஷன்ஸ் நிறுவனத்துக்கு BWIO விருது




இந்துமற்றும் கிறிஸ்தவதிருமணவைபவங்களில் மணப்பெண்ணை அலங்கரிப்பதற்கு தவிர்க்கமுடியாத அங்கமாக மாறியுள்ள ஆரிவேலைப்பாடுகளை (Aari Work) செய்துகொடுப்பதில் தலைநகரில் தனித்துவமான நிறுவனமாக விளங்கும் வெள்ளவத்தைஈட்ன் கலெக்ஷன்ஸ் (Eden Collections) நிறுவனம் , Buisiness World International (BWIO) விருது வழங்கும் விழாவில் ஆரிவேலைத் துறையில் சிறியஅளவிலானபிரிவின் சிறந்த இளம் தொழில்முயற்சியாளருக்கான ப்ளெடினம் விருதைவென்றுள்ளது. Buisiness World International நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி விருதுவிழாஅமைச்சர் சமல் ராஜபக்ச,முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன மற்றும் முன்னாள் அமைச்சர் அர்ஜுன ரணதுங்கஆகியோரின் தலைமையில் கொழும்பு தாஜ் சமுத்ராஹோட்டலில் அண்மையில் வெகுவிமரிசையாகநடைபெற்றது. பல்வேறுதுறைகளில் சாதனை படைத்த தொழில்முயற்சியாளர்கள் பலர் இதன் போது விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

Fashion Design துறையில் எனக்கிருந்தஆர்வத்தின் விளைவாகவேநான் இந்த நிறுவனத்தை ஆரம்பித்தேன்.2017 ஆம் ஆண்டுசிறியஅளவில் ஆரம்பிக்கப்பட்டு இன்றுநாடறிந்தஒருநிறுவனமாகவளர்ச்சிஅடைவதற்கும் இவ்வாறு விருதுகளை வெல்வதற்கும் இத்துறையின் மீதுஎனக்கிருந்தஈர்ப்பால் அதனை செவ்வனேசெய்தமையேகாரணமாகும். ஆரிவேலைப்பாடுகள் என்பது மிகநுணுக்கமாகவும் நேர்த்தியாகவும் செய்யவேண்டிய ஒருதொழிலாகும். தொழில் என்பதைவிடவும் அதுஒருகலை. ஒருநாளைக்குஎத்தனைஆடர்கள் வந்தாலும் அத்தனையையும் என் கைப்படவேசெய்வதைநான் வழக்கமாககொண்டுள்ளதால் எமதுநிறுவனத்தை சுற்றி ஏராளமான வாடிக்கையாளர்கள் உருவாகியுள்ளார்கள். இத் தொழில் என்னை பொறுத்தவரைக்கும் தியானத்தில் ஈடுபடுவதற்குசமன்.எனவிருதுவென்றஈட்ன் கலெக்ஷன்ஸ் நிறுவனத்தின் உரிமையாளர் திருமதிசங்கீதா பிரபாலன் குறிப்பிட்டார். பொதுவாகவேவண்ணமயமாகவிளங்கும் திருமண வைபவங்களின் அழகுக்குஅழகுசேர்க்கும் வகையில் மணமகளின் திருமண ஆடைகளுக்கு தரமானமுறையில் ஆரிவேலைப்பாடுகளைசெய்துகொடுப்பதில் முன்னணியில் திகழும் ஈட்ன் கலெக்ஷன்ஸ் நிறுவனத்துக்குநாடெங்கிலும் ஏராளமானவாடிக்கையாளர்கள் உள்ளார்கள்.

# வர்த்தக உலக சர்வதேச விருதுகள் 2020 இல் குளோபல் லைப் ஸ்டைல் லங்கா பிளாட்டினத்தை வென்றது




விதி விலக்கான வர்த்தகத் தலைமைத்துவம் மற்றும் தர முகாமைத்துவ முறைமைகளை அங்கீகரிக்கும் முகமாக வர்த்தக உலக சர்வதேச நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் நடைப்பெற்று முடிந்த வர்த்தக உலக சர்வதேச விருதுகள் நிகழ்வில் குளோபல் லைப்ஸ்டைல் லங்காவுக்கு Global Lifestyle Lanka பிளாட்டினம் விருது வழங்கப்பட்டது.

கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைப்பெற்ற விருதுகள் வழங்கும் நிகழ்வானது உலக வர்த்தக சிறப்பு மற்றும் புத்திசாலித்தனத்தை அங்கீகரிப்பதாக இருந்ததுடன் வெற்றிகரமான வர்த்தக நடவடிக்கைகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டதானது ஆற்றல் மற்றும் வர்த்தக தலைமைத்துவத்தை பிரதிபலிப்பதாக இருந்தது.

இந்த உலக வர்த்தக நிகழ்வில் 10 நாடுகளைச் சேர்ந்த 300க்கு மேற்பட்ட முன்னணி வர்த்தக சமூகங்கள் கலந்து கொண்டதுடன் வர்த்தக உலக சர்வதேச விருதுகள் பல்வகை இலக்குகள் அதாவது சமூகப்பொறுப்புத் திட்ட நடவடிக்கைகள் மற்றும் சாதகமான விளைவுகளை சமூகத்தில் உண்டு பண்ணும் வர்த்தக செயற்பாடுகளை அங்கீகரிக்கும் வகையில் வழங்கப்பட்டது.

இந்த விருதினை நிறுவனத்தின் சார்பில் குளோபல் லைப் ஸ்டைல் லங்காவின் பிரதம செயற்பாட்டு அதிகாரியான டாக்டர்.சோளமுத்து சிவராஜா பெற்றுக்கொண்டார்.

இவ்விருது வழங்கும் விழாவில் பிரதம அதிதிகளாக முன்னாள் ஜனாதிபதி கௌரவத்துக்குரிய மைத்திரிபால சிறிசேன மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் தேசிய பாதுகாப்பு ,உள்விவகாரங்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ ராஜாங்க அமைச்சரான கௌரவத்துக்குரிய சமல் ராஜபக்ஸ ஆகியோர் கலந்து கொண்டனர்.

குளோபல் லைப் ஸ்டைல் லங்காவானது அவர்களது விதிவிலக்கான தலைமைத்துவ தரம்,முகாமைத்துவ முறைமைகள்,புத்தாக்கம்,படைப்பாற்றல் கூட்டாண்மை சமூக பொறுப்பாண்மை மற்றும் மதிப்பீட்டின் தொடர்புடைய அளவுகோலின் அடிப்படையில் விளைவு ஆவணங்கள் ஆகியவற்றுக்காக அங்கீகரிக்கப்பட்டது.

இவ்விருது தொடர்பாக டாக்டர்.சோளமுத்து சிவராஜா தெரிவிக்கையில் சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்டதானது வர்த்தக முன்னிறுத்துகை மற்றும் குளோபல் லைப் ஸ்டைல் லங்காவின் செயற்பாடுகளின் நோக்கத்துக்கும் வலு சேர்ப்பதாக கூறினார்.

# லக்மீ எக்ஸ் போர்ட்ஸ் லங்கா நிறுவனத்தினால் அதன் மேலுமொரு ஊழியருக்கு புது வீடு அன்பளிப்பு




எம்மவர் குணமும் எம்மவர் சுவையும் என்றவாசகத்தின் கீழ் மக்களினது சுகாதாரத்துக்காகவும் போசாக்குக்காகவும் தம்மை அர்ப்பணித்துள்ள,தடயம் பட்டாசோயாமீற் உள்ளிட்ட தரமான பல்வேறு உற்பத்திகளை சந்தைக்கு வழங்கும் வரையறுக்கப்பட்டலக்மீ எக்ஸ்போர்ட்ஸ் லங்காதனியார் நிறுவனத்தின் பூரணஅனுசரணையுடன் அந் நிறுவனத்தின் பணியாட்டொகுதி அங்கத்தவரானதிருவிதுசலக்மாலுக்கு புது வீடொன்றைநிர்மாணித்துஅதன் திறப்புகுறித்தபயனாளிக்குஅண்மையில் கையளிக்கப்பட்டது. இதன் புது மனை புகும் கிரகப்பிரவேசநிகழ்வுக்கு இராஜாங்கஅமைச்சர் செஹான் சேமசிங்கஉள்ளிட்டஏராளமானசிறப்புவிருந்தினர்களுடன் லக்மீஎக்ஸ்போர்ட்ஸ் ஊழியர்களில் சிலர், விதுசலக்மாலின் குடும்பஅங்கத்தவர்கள் மற்றும் உள்ளூர்வாசிகளும் கலந்துகொண்டனர். லக்மீநிறுவனம் எப்பொழுதும் தமது ஊழியர்களின் நலனோம்புகைதொடர்பாக கூடுதல் அக்கறைகொண்டுள்ளது. இப்பணிஅதன் மேலுமொருநீட்சியாகும். நாம் இரண்டாவது தடவையாக ஊழியரொருவருக்கு வீடொன்றைகையளித்துள்ளோம். தொடர்ந்தும் இவ்வாறான திட்டங்களைமுன்னெடுப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்என லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் அதிபர் உசான் உடுமுல்லதெரிவித்தார்.

அனுராதபுரம்,தலாவபிரதேசத்தில் சிறிய தொருதொழில் முயற்சியாகவெறும் 5 கிலோ சோயாமீற் உடன் 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட லக்மீ எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனமானது,மிகக் குறுகிய காலத்திலேயே உள்நாட்டு சந்தையை வெற்றிகொண்டபெரும் நிறுவனமாகதடம் பதித்துள்ளது. தற்பொழுதுதடயம் பட்டாசோயாமீற்,ப்ளெக் சிக்கன் சோயாமீற்,லக்மீசோஸ் வகைகள்,மெஜிக் மிக்ஸ் நூடில்ஸ்,பொல்டாதேங்காய் வினாக்கிரிஉள்ளிட்ட 55 நுகர்வுப் பொருட்கள் லக்மீ இல்லத்திலிருந்துசந்தைக்குவருகின்றன. ISO 14001:2015 ISO 22000:2005 HA-C-CP GMP போன்றதரச் சான்றிதழ்களைவென்றுள்ளலக்மீஎக்ஸ்போர்ட்ஸ் லங்காநிறுவனத்தின் தடயம் பட்டாவர்த்தகநாமம் 2018 ஆம் ஆண்டுக்கான ஸ்லிம் விருதுவிழாவில் சிறந்த வர்த்தக நாமத்துக்கான விருதை வென்றுள்ளது. அத்தோடு, ஊழியர்களுக்குபணியாற்றுவதற்குசிறந்தநிறுவனமாக Great Place to Workவிருதையும் வென்றுள்ளமைகுறிப்பிடத்தக்கது.

லக்மீஎக்ஸ்போர்ட்ஸ் லங்காநிறுவனம் அண்மையில் லக்போசஎன்றபெயரில் சீனி சேர்க்கப்படாத ஒரே மேலதிகசத்துணவையும் சந்தைக்குஅறிமுகப்படுத்தியுள்ளது.

# இலங்கையில் Delo ஒற்றை எண்ணெய் வடிகட்டலில் (Single Oil Drain) 30,000 கி.மீ.களை உறுதி செய்துள்ளது




1992 ஆம் ஆண்டு முதல் இலங்கையின் மசகு எண்ணெய் சந்தையில் முன்னோடியாகத் திகழும் செவ்றொன் லுப்ரிகன்ட்ஸ் லங்கா பிஎல்சி, தனது தயாரிப்பு விருத்தி மற்றும் தொழில்நுட்பத்தில் புதிய வளர்ச்சியை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. மசகு எண்ணெய் சந்தையில் எண்ணெய் வடிகட்டல் (oil drain)இடைவெளியில் 30,000 கிலோமீற்றர்கள்✸ வரை இயங்கும் ஆற்றலை உறுதி செய்துள்ளது. இதனூடாக இலங்கையிலுள்ள டீசல் என்ஜின் பாரஊர்தி உரிமையாளர்களுக்கு தமது வாகனங்களின் பராமரிப்பு சேவைக்காலத்தை நீடித்துக் கொள்ளக்கூடிய வசதி வாய்ப்புடன் மேலும் பல அனுகூலங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

2020 ஆம் ஆண்டில், இலங்கையின் புகழ்பெற்ற வாகனத் தொடரணி செயற்பாட்டாளர்களான Freight Link Auto Ezone உடன் இந்த தொழில்நுட்பம் தொடர்பான பரிசோதனைகளை Delo முன்னெடுத்திருந்தது. சிங்கப்பூரைச் சேர்ந்த சுயாதீன ஆய்வுகூடத்தின் உதவியுடன், இரு வாரங்களுக்கு ஒரு தடவை வாகனங்களில் இந்த பரிசோதனைகளை மேற்கொண்டிருந்ததுடன், இந்த பரிசோதனையின் பெறுபேறாக, இரு பரிசோதனை சுழற்சியில் 30,000 கிலோமீற்றர்கள் எனும் பெறுபேறு எய்தப்பட்டிருந்தது. ISOSYN தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, முன்னணி ஒயில்கள் மற்றும் உயர் செயற்திறனை வழங்கும் சேர்மானங்களை ஒன்றிணைத்து என்ஜின் உதிரிப்பாகங்களுக்கு பாதுகாப்பை வழங்கச் செய்துள்ளதுடன், Delo பாவனையாளர்களுக்கு ஒப்பற்ற வினைத்திறன் அனுகூலத்தையும் வழங்க முன்வந்துள்ளது. இதில் ஒற்றை எண்ணெய் வடிகட்டலில் 30,000 கிலோமீற்றர்கள், நீடித்த என்ஜின் பாதுகாப்பு, நம்பிக்கை, நீடித்த பாவனை மற்றும் சேமிப்பு போன்றன அடங்குகின்றன.

இந்தப் புத்தாக்கமாக தொழில்நுட்ப மேம்படுத்தல் என்பது வியாபாரங்களுக்கு உறுதியற்ற இந்த காலப்பகுதிகளில் சேமிப்புகளை மேம்படுத்திக் கொள்ள உதவுவதுடன், பராமரிப்பு செலவுகளில் 17% சேமிப்பை வழங்குவதுடன், தொழிற்பாட்டு செலவுகளில் வீழ்ச்சியையும், நிறுவனசார், சிறிய மற்றும் நடுத்தரளவு வாகனத் தொடரணி செயற்பாட்டாளர்களுக்கு கடினமான பொருளாதார சூழ்நிலைகளில் நிவாரணத்தை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது. வாகனத் தொடரணி செயற்பாட்டாளர்களுக்கு கிடைப்பனவு, தங்கியிருக்கும் திறன் மற்றும் நீடித்த பாவனை போன்றவற்றை இந்த புதிய அபிவிருத்தி உறுதி செய்வதுடன், குறைந்தளவு சேவைகள் மற்றும் பழுதுபார்ப்புகளுடன் தமது வாகனங்களை இயக்குவதற்கு உதவியாக அமைந்துள்ளது. அதனூடாக, என்ஜின்களுக்கு சேதங்களை தாங்கிக் கொள்ள முடிவதுடன், அதிகளவு வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடியதாகவும் அமைந்திருக்கும். மேலும், நீடித்த வடிகட்டல் இடைவெளிகளினூடாக நிலைபேறாண்மையை ஊக்குவிக்கும் வகையில் இந்த புதிய மேம்படுத்தல் அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுவதுடன், பாவித்த எண்ணெய் கழிவகற்றலை குறைப்பதுடன், சூழல் பாதுகாப்பை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமான ஆதரவை வழங்க உதவியாக அமைந்திருக்கும்.

இந்தத் திட்டம் தொடர்பில் செவ்றொன் லுப்ரிகன்ட்ஸ் லங்கா பிஎல்சியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான நஜாம் சம்சுதீன் கருத்துத் தெரிவிக்கையில், எமது வாடிக்கையாளர்களுக்கு எப்போதும் சிறந்த தயாரிப்புகளை வழங்கி அவர்களின் வாகனங்களை பேணுவதற்கு பங்களிப்பு வழங்கி, உயர்ந்த அனுகூலங்களைப் பெற்றுக் கொடுப்பதில் நாம் எப்போதும் கவனம் செலுத்துகின்றோம். வாகனத் தொடரணி செயற்பாட்டாளர்களின் சிக்கல்களை நாம் புரிந்து கொண்டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடைய சிக்கல்களை குறைப்பதற்காக கடுமையாக உழைத்துள்ளோம். தொழிற்துறைக்கு ஆதரவளிக்க நாம் எம்மை முழுமையாக அர்ப்பணித்துள்ளதுடன், bumper to bumper சேவைகள், பொருத்தமான பயிற்சிகள் மற்றும் cloud-அடிப்படையிலான சரக்குக் கையாளல் சேவைகளை வழங்கி பரிபூரண வாகனத் தொடரணி செயற்பாட்டாளர்களுக்கான தீர்வுகள் வழங்குநராக திகழ்வதுடன், சரக்குக் கையாளல் மற்றும் வாகனத் தொடரணி வியாபாரச் செயற்பாடுகளை மேம்படுத்துவதற்கு பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கின்றோம். என்றார்.




கொரோனா வருவதற்கு சரியாக ஒன்பது மாதங்களுக்கு முன் தாஜ்மகாலுக்குப் போயிருந்தேன்.

நீண்ட காலக் கனவு அது.

காலையில இளம் சிவப்பு நிறத்திலும் மதியத்தில் வெள்ளை நிறத்திலும் மாலையில் தங்க நிறத்திலும் நிலவு வெளிச்சத்தில் பளிங்கு போல மின்னும் அந்த அதி அற்புத கலைவடிவக் கட்டடத்தை சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருந்தேன்.

மாலையில் ஜமுனை நதிக்கரை வீசும் காற்றை அனுபவித்தபடி அதன் அருகில் அமர்ந்திருந்தபடியும்... பசும் புற்தரையில் ஒருக்களித்துப் படுத்தபடியும்... அதன் அழகை அனுபவிக்கும் சுகமே தனி.

16ம் நூற்றாண்டின் ஒரு காதல் சின்னம் அடுத்த ஐந்து நூற்றாண்டுவரை அசையாது நின்று அந்த மொகாலய சாம்பிராஜ்யத்தின் பெருமையைச் சொல்லிக் கொண்டிருந்த வேளையில் அந்த இரண்டு சமாதிகளின் கீழறையில் இருந்து இருவர் மெதுவாக கதைக்கும் குரலகள் கேட்டன.

செவிப்பறைக்கு சாணை தீட்டிக் கொண்டேன்.

அது சாஜகானினதும் மும்தாஜினதும் குரல்கள் தான்.

அன்பே... இந்தக் காதல் சின்னத்தை நீங்கள் எனக்காக தானே கட்டினீர்கள்?

'உம்.....'

உங்கள் தாத்தா ஜலால்-உத்-தின்-முஹமட் அக்பர் தனது காதல் மனைவியான மனைவியான ஜோதா பேகத்தை என்றுமே இஸ்லாம் மதத்தை தழுவும்படி நிர்ப்பந்திக்கவில்லை. அவளது கண்ணன் வழிபாட்டுக்கும் காளி வழிபாட்டுக்கும் துளசிமாட வழிபாட்டுக்கும் என்றும் அவர் தடை விதிக்கவில்லை. போருக்குச் செல்லும் போதெல்லாம் ஆராத்தி எடுத்து வெற்றித் திலகமிட்டு வழி அனுப்ப அனுமதித்திருந்தார்

அது எங்கள் மொகாலய சாம்ராஜ்ஜியத்திற்குப் பெருமை தானே. என் பூட்டி அமீதா பானு பேகம் கூட ஆராத்தி எடுத்து வெற்றித் திலகமிட்டு வழி அனுப்புவதை என் பாட்டியிடம் கற்றுக் கொண்டு அவர் இல்லாத சமயங்களில் அவ்வாறு செய்தாரே

ஆனால்....

சொல்லு. மும்தாஜ்.. என்ன ஆனால்

அவரோ தனது மகனின் காதலி என்று தெரியாமல் நாதீரா என்ற நடன மங்கைக்கு அனார்க்கலி என்று பெயர் சூட்டினார்

எதற்காக நாதீரா என்ற அழகான பெயரை அனார்க்கலி என்று மாற்றீனார் என்று உங்களுக்குத் தெரியுமா தெரியும்.

அனார்க்கலி என்பது மாதுளம் மொட்டு என்று அர்த்தம். அவர் மாதுளம் மொட்டின் நிறத்தில் இருந்ததாலும் அது விரியும் பாங்கில் அவர் நடனத்தின் சாயல் இருந்ததாலும்... அவரது உடல் லாவகமாக வளைந்து வளைந்து ஆடியதாலும் அவருக்கு அவர் அந்தப் பெயரை அளித்திருந்தார்

ஆனால் அவ்வாறு ஒரு ஆடலரசிக்கு அழகான பெயரைச் சூட்டி அழகுபார்த்த அவரே...

நீ எங்கே வருகிறாய் என்று புரிகிறது மும்தாஜ். அவளைக் கல்லறைக்குள் வைத்துக் கட்டியதை குறை கூறப்போகின்றாயா?... அவளை அதே கல்லறையின் சுரங்க வாசலினால் தப்பிக்க வைத்துவிட்டது உனக்குத் தெரியாதா?

தெரியும். ஆனாலும்.....

என்ன ஆனாலும்?;

அவர் தப்பிக்க வைத்தாரோ இல்லையோ என்பதல்ல என் விவாதம். என் மாமனார் சலீம்... அவரின் காதலி அனார்க்கலி... இருவரின் காதலுக்கு அவர் கல்லறை கட்டி விட்டாரே. அந்த மாதுளம் மொட்டின் உணர்வுகளை மதிக்கவே இல்லையே. உங்கள் காதலுக்கு உலகம் வியக்கும் இந்த தாஜ்மகால் சாட்சி. ஆனால் உங்கள் தந்தை மன்ஜு சலீம் அக்பர் என்ன செய்தார்? அனார்க்கலியின் காதலுக்கு லாகூரில் சின்னதொரு கல்லறை மட்டுமே கட்டினார். பின்பு என் காதலியின் முகத்தை இன்னோர் தடவை தரிசிக்க அல்லா அருள் புரிவார் என்றால் நான் இறந்த பின்பும் கூட நான் அவருக்கு நன்றிக்கடன் உடையவனாக இருப்பேன் என்ற வாசகத்தை பொறித்தார். வேறு என்ன செய்தார்?

சாஜகான் மௌனமானார்.

மும்தாஜ் தொடர்ந்தார்.

உங்கள் காதலை விட உங்கள் தந்தையின் காதல் எந்த வகையில் குறைந்தது? பணமும் அதிகாரமும் எல்லாக் காலகட்டத்திலும் சரித்திரத்தை காலின் கீழே போட்டு நசித்துக் கொன்றது மட்டுமல்ல... அதனை சரித்திரத்தில் இருந்து மறக்கவும் மறக்கடிக்கவும் செய்கிறதல்லவா??

அதன் பின் எனக்கு எதுவும் கேட்கவில்லை.

ஆனால் மாதுளம் மொட்டுகளை எங்கெங்கு காண்கின்றேனோ அப்போதெல்லாம் அனார்க்கலியின் நினைவு மட்டும் என் முன்னே வந்து போகும்.

அவ்வாறே மறந்து போன... அல்லது மறக்கடிக்கப்பட்ட நிகழ்வுகள் என் கண் முன்னே தோன்றி மறையும் பொழுதும் இந்த மாதுளை மொட்டுகள் என் கண்முன்னே வந்து போகும்.

எனக்கு அறிவு தெரிந்த பருவம் தொடக்கம் 1971 வரை எங்கள் வீட்டுக்கும் எங்கள் மாமா வீட்டுக்கும் எப்போதும் ஒரு சண்டை வருவதுண்டு.

இலங்கையின் பாராளுமன்ற தேர்தல் பொழுது தொடங்கி தேர்தல் முடிந்த பின்பும் மழை விட்டாலும் விடாத தூறலாக அந்தக் கட்சி சண்டைகள் சில காலம் தொடரும்.

எனது தந்தையார் தமிழ் காங்கிரஸ் கட்சியின் ஆதரவாளர். சட்டத்தரணி பொன்னம்பலத்தின் ஆதரவாளர். மாமா வீட்டாரோ மற்ற ஊர்க்காரர்களோ தந்தை செல்வநாயத்தின் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள்.

பொன்னம்பலத்தாருக்கோ செல்வநாயகத்தாருக்கோ எங்கள் தந்தையையும் தெரியாது. எங்கள் மாமாவையும் தெரியாது. ஆனால் இரு குடும்பங்களுக்கும் தேர்தல் காலத்தில் இரு வீட்டாருக்கும் பொதுக்காணியாக இருந்த கிணற்றடியில் அரசியல் சண்டை நடந்து கொண்டேயிருக்கும்.

அம்மாக்கும் மாமிக்கும் இவர்கள் இருவரின் சண்டையால் மனங்கள் கலங்கியபடியே இருக்கும். ஆனால் மச்சான்மார், மச்சாள்மார் நாங்கள் அனைவருமே இந்தச் சண்டைகளை ரொம்ப ரசித்தபடியும் கொஞ்சம் பயந்தபடியும் இருப்போம்.

அவ்வாறு சண்டை வரும் போதெல்லாம் கிணறு தூரும் பொழுது மேலே வரும் தொலைந்து போன பொருட்கள் போல பழைய பழைய குடும்ப விவகாரங்கள் எல்லாம் மேலே வரும்.

ஆச்சி சொன்ன அளவு அம்மாக்கு நகைகள் போடாதது.. சீதனம் கொடுத்த பொழுது மாமியின் காணி ஈட்டில் இருந்தது... கல்வீடு என்று தரகர் சொன்னதில் முன் ஹோல் மட்டுமே சீமெந்துக் கல்லால் கட்டியிருந்தது. பின் அறை இரண்டும் களிமண்ணால் கட்டியது... இத்தியாதி... இத்தியாதி

தேர்தல் முடிந்த பின்பும் சில மாதங்களுக்கு அந்தச் சண்டைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் - இரண்டு குடும்பத்தில் ஏதோ ஒரு குடும்பத்தில் ஒரு நல்ல காரியம் அல்லது கெட்ட காரியம் நடக்கும் வரை.

ஆனால் 1972ம் ஆண்டு இரண்டு கட்சிகளும் இணைந்து தமிழர் கூட்டணி என்ற கட்சி உருவாகிய பொழுது இரண்டு வீட்டுச் சண்டைகளும் ஓய்ந்து விட்டன.

இரண்டு வீட்டுச் சுவரிலும் செல்வநாயகத்தாரும் பொன்னம்பலத்தாரும் கை குலுக்கும் கலண்டர்கள் தொங்கிக் கொண்டிருக்கும்.

அந்த சின்ன வயதில் யோசித்தேன் - இவ்வளவு நாட்களும் நடந்த சண்டைகள் எல்லாம் புஸ்வானமாகி விட்டதே?... அம்மாவும் மாமியும் வடித்த கண்ணீரும் வீண்தானே??என்று.

அப்பாவைக் கேட்டாலும் சரி... மாமாவைக் கேட்டாலும் சரி... எனக்கே புரியாத அரசியலில் பதில் சொன்னார்கள்.

ஒன்று மட்டும் புரிந்தது - அவர்களைக் கேட்டு எதுவுமே நடப்பதில்லை என.

அவர்கள் சொன்னார்கள். இவர்கள் கேட்டார்கள் என்பது தான் நிஜம்.

அனைத்து தொகுதிகளிலும் வாக்களித்து எங்களைப் பாராளுமன்றம் அனுப்பினால் உங்களுக்கு தமிழீழம் பெற்றுத் தருவோம் என்றார்கள்.

அப்பாவும் மாமாவும் வாக்களித்தார்கள். அவ்வாறே அப்பாவும் மாமாவும் சொன்னதால் அம்மாவும் மாமியும் வாக்களித்தார்கள்.

எதுவுமே கிடைக்கவில்லை.

எங்களை அவர்கள் மறந்து விட்டார்கள் - அனார்கலியை மறந்தது போல.


கிணற்றடியில் நின்ற மாதுளையில் அணில்கள் கொறித்தவையே அதிகமாய் இருந்தன.

ஆனால் ஒவ்வோர் ஆண்டும் பூக்கும் மாதுளை மொட்டுகள் அழகாகவே இருந்தன.

விடுதலைத் தீ இளைஞர்கள் மத்தியில் கொழுந்து விடத் தொடங்கிய கால கட்டம் அது.

எதிரியை நோக்கி நீட்டப்பட வேண்டிய துப்பாக்கிகள் தங்கள் தங்கள் சகோதர இயக்கங்களையும் நோக்கிச் சுட்ட காலகட்டம்.

எனது பெரியப்பா மகன் என் சொந்த



மச்சானுக்கு மரண தண்டனை விதித்ததும்... பின்பு அது பின்னொருநாள் கடற்கரையில் பனைகளுக்கிடையில் வைத்து நிறைவேற்றப் பட்டதும் எங்கள் குடும்பத்தில் நேர்ந்த மிகப் பெரிய சோகம்.

அந்தச் சோகம் இன்றுவரை எங்கள் குடும்பத்தில் மறையவே இல்லை.

அந்தச் சோகம் மாற முதல் என் நண்பியும் முதல் காதலியுமான செல்வராணி இயக்கத்துக்குப் போய் விட்டாள். அவளைப் பற்றி பின் எங்களுக்கு எந்த தகவல்களும் இல்லை.

83 யூலை கரிய நாளாகியது. ஆனால் 1984 ஏப்ரல் மாதம் உத்தியோக பூர்வபட்சமாக தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ விடுதலை இயக்கம், ஈழ புரட்சிகர மாணவர் இயக்கம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னனி என்பன ஒன்றிணைந்த ஈழப் போராட்ட அமைப்பான ஈழ தேசிய விடுதலை முன்னணியில் இணைந்தன.

தலைவர்கள் செல்வநாயமும் பொன்னம்பலமும் கை கோர்த்தபடி வலம் வந்த கலண்டர்கள் போல இப்போ நான்கு இயக்கத் தலைவர்களும் எங்கள் வீட்டு வாசலில் கலண்டரில் கை கோர்த்தபடி நின்றிருந்தார்கள்.

இது முன்பே நடந்திருந்தால் எங்கள் மாமாவீடு இழவு வீடாக மாறியிராது என்று கவலைப்பட்டுக் கொண்டேன்.

என் காதலியையும் இழந்திருக்க மாட்டேன்.

செல் அடித்தாக்குதல்களால் மாதுளம் மொட்டுகளும் மாம்பிஞ்சுகளும் கருகியிராது.

பனைகளும் தென்னைகளும் முறிந்திராது.

மீண்டும் யுத்தங்களும்... சாமாதானப் பேச்சுவார்த்தைகளும்... பிரகடனங்களும்மா தொடர்ந்து கொண்டே வந்தன. இறுதியில் ஆயுதங்களும் விடுதலைக்கான குரல்களும் மௌனமாகும் வரை.

சூனியம் கவிந்த பூமியாயிற்று.

எல்லாத் தியாயங்களும் கல்லறைகளுக்குள் அடங்கி விட்டன.

போருக்கு பலம் சேர்த்த புலம் பெயர் தொப்புள் கொடி உறவுகளும் மௌனமாகி விட்டிருந்தன.

முள்ளிவாய்க்கால் தனது சோகத்தை ஏற்றுக் கொண்டு சுற்றுலாத் தலமாகி விட்டது.

போராட்டத்தில் இழப்புகள் இயல்பானவை என ஒவ்வோர் வீட்டு படலையிலும் எழுதி தொங்க விடப்பட்டன.

உள்ளே வறுமை தாண்டவமாடியது.

அனைத்து இழப்புகளையும் தியாகங்களையும் மறந்து விட்டு உலகம் உருளத் தொடங்கியது.

சொல்லாத சேதிகள் பல இலக்கியங்களாக உருவெடுத்து உலகத்தின் முன்னே வலம் வரத் தொடங்கின.

மீண்டும் தேர்தல்கள்ளா
வாக்குறுதிகள்ளா
ஏமாற்றங்கள்ளா
எத்தனையோ மறக்கப்பட்ட தியாகிகளின் கல்லறைகள் ஆங்காங்கே.

2021

ஆயுதங்கள் மௌனமாகி பன்னிரண்டு ஆண்டுகள் ஆகிய போதும் போராட்டங்கள் ஒயவில்லை.

ஆயுதமில்லாத போராட்டங்கள் பல பல வடிவங்களில் - அரசியலில்.. தேர்தல்களில்... எழுத்துலகில்...

என் தந்தையும் மாமாவும் சிக்கிக் கொண்டது போல எதனிலும் சிக்கிவிடக் கூடாது என்று அதி ஜாக்கிரதையாக இருந்தாலும் அஜாக்கிரதையாக எங்கேயாவது சிக்கி விடுவேனோ என்று பயமாக இருக்கின்றது.

இலக்கிய உலகம் அமைதியாக இருக்கும் கடல் போன்றது. இறங்கிப் பார்த்தால் சுழிகளும் சுறாக்களும் இருக்கும். இதனிடையே சிக்கிக் கொள்ளாமல் நீந்துவதுக்கு கற்றுக் கொள்ள வேண்டும் கற்றுக் கொண்டது ஞாபகம் வருகிறது.

எங்குதான் கசப்பும் துரோகமும் வன்மமும் இல்லை. இதெல்லாம் நிறைந்திருக்கும் சமூகத்திலிருந்து தானே எழுத்தாளனும் வருகின்றான் என எவர் எவரோ என்னை மிரட்டுகின்றார்கள்.

அக்பரின் முதல் பேகம் ருக்கையா கருவுற்ற பொழுது அதனை வஞ்சகமாக அழித்தது அவரின் மகாமந்திரியான பெரிய தாயாரான மகாமங்காவே.

அவரது அடுத்த பேகமான ஜோதிபா அக்பரின் இரட்டைக் குழந்தைக்கு நஞ்சூட்டிக் கொலை செய்தது அவரின் தங்கையின் கணவனே.

அடுத்துப் பிறந்த இளவரசர் சலீமுக்கு இளம் வயது முதல் அபினுக்கு அடிமையாக்கியது முதல் பேகமான ருக்கையா பேகம்தான் .

இளவரசர் சலீம் தன் தந்தைபோல் பார் போற்றும் மொகாலய பேரரசராக தலைதூக்க முடியாததுக்கு இந்த அபினும் அனார்கலியின் இழப்பும் தான்.

கைகுலுக்கிக் கொண்டு காலை வாரும் இன்றைய ஜனநாயங்களை நினைக்க மனம் கொஞ்சமாக இல்லை... ரொம்பவே பயமாகத் தான் இருக்கின்றது.

கொரோனா மரணங்கள் உலகம் முழுக்க.

அதே கொரோனா மீண்டும் புது வடிவம் எடுக்கத் தொடங்கி விட்டது.

அகத்தைக் காட்டும் அனைவரின் முகத்திற்கும் முகமூடிகளையும் அது கொடுத்து விட்டது.

கண்களையும் உதடுகளையும் பார்த்துக் கதைக்க முடியாதவாறு முகமூடிகள்.

வீட்டிற்குள் சிறைவைக்கப்பட்ட வாழ்வுக்கு அதே கொரானா தந்த சின்ன ஆறுதல் பரிசு தான் Zoom சந்திப்புகள்.

நண்பர்கள் இடையில்...

குடும்பங்களுக்கு இடையில்...

தொழில் சந்திப்புகளுக்கு இடையில்...

இலக்கிய அரசியல் கூட்டங்கள் இடையில்....

கவியரங்கங்கள்......

பட்டி மன்றங்கள்.....

புதிய நண்பர்களையும்.....

பழைய நண்பர்களையும்....

மறந்து போன பல உறவுகளையும்....

மறக்க வேண்டிய உறவுகளையும் இந்த Zoom கள் ஞாபகப்படுத்திக் கொண்டு நகர்ந்து கொண்டு இருக்கின்றன.

ஆனால் காலம் எதனையும் முற்றாக மறந்து விடுவதில்லை.

எதுவும் கடந்து போகலாம்...... ஆனால் நினைவுகள் இலகுவில் கடந்து போய்விடாது. காயங்களையும் தழும்புகளையும் நினைப்பூட்டிக் கொண்டே நகர்ந்து கொண்டிருக்கும்.

குழாய்க் கிணறு வந்தாலும் தூர்ந்து போய் கவனிப்பாரற்று இருக்கும் எங்கள் வீட்டுக் கிணறுா கண்ணாடிச் சட்டத்துள் கறுப்பு வெள்ளை படத்தில் அப்பாவும் மாமாவும்... எந்தப் படங்களும் இல்லாது என் மனத்தில் நிழலாடும் என் மச்சானின் முகம்... அவனைப் பனங்காணியுள் இருந்து தூக்கி வந்து எங்கள் மாமாவீட்டு வாசலில் கிடத்தியது.... இயக்கத்துக்குப் போன என் இளம் வயதுக் காதலி...

மனம் சஞ்சலப்படும் நாட்களில் ஏனோ மாதுளைப்பூக்களும்... மாதுளம் மொட்டுகளும்.... மாதுளம் பிஞ்சுகளும்... பௌர்ணமி நிலவில் பால் வெண்மை நிறத்தில் மின்னும் தாஜ்மஹால் மீது அனார்கலி தன் சோகம் ததும்பும் முகத்துடன் கால்களையும் கைகளையும் வானத்தை நோக்கி வீசியபடி நடனமாடுவது போலவும்.... காட்சிகள் என் கண் முன்னே தோன்றி மறைந்து கொண்டு இருக்கின்றன. ஆக்ரா நதிக்கரையில் உள்ள பசிய புல் வெளியை விட்டு எழுந்து வர மனது மறுத்தது.

# அச்சம் தவிர்... பாரதியே!

**பாரதியின் 139 ஆவது பிறந்த தினக் கவிதை**



*நீ இப்புவியில் இன்றிருந்தால்*
*- அகவை*
*நூற்றில் முப்பத்*
*தொன்பதுவாம்*
*தீப்பிழம்பாகத் தீமைகளைத்*
*தீய்க்கும் உந்தன்*
*பண்பொதுவாம்!*

*மெல்லத் தமிழினிச் சாகுமென*
*பேதையுரைத்த மொழி*
*சொன்னாய்*
*அல்ல வாழும் அது நிலையாய்*
*அறிவாய் பாரதி இதை*
*நன்றாய்!*

*முண்டாசுத் தலை மீசைக்காரா*
*முரண்பாடுண்டு*
*எனக்குன்னோடு!*
*அண்டம் வாழும் நாள்*
*வரைக்கும்*
*அழகு தமிழ் நிலைத்தே*
*இருக்கும்!*

*எழில் பொழியும்*
*தமிழணங்கின்*
*ஏற்றமிகு கவின் சிறப்பைத்*
*தொழில் நுட்ப வளர்ச்சியுடன்*
*தொலைதூரம் கொண்டு*
*செல்வோம்!*

*செம்மொழியின்*
*சிறப்புகளைச்*
*செய்மதியின் துணையுடனே*
*அம்புலிக்கும் அனுப்பி*
*வைப்போம்*
*அங்கும் ந(ா)ம் தமிழ்*
*வளர்ப்போம்!*

*ஷெல்லி, பைரன்,*
*டான்ஸ்டாயும்*
*செகப்பிரியராம்*
*ஷேக்ஸ்பியரும்*
*அள்ளித் தந்த இலக்கியங்கள்*
*அனைத்துமிங்கு*
*தமிழிலுண்டு!*

*ஆத்திசூடி, கொன்றை*
*வேந்தன்,*
*அகத்தியன், இளங்கோ பற்றிப்*
*பேத்திகூடப் ''பேஸ்புக்''*
*பார்த்துப்*
*பேசுவதே தமிழின் வெற்றி!*

*கம்பனொடு, வள்ளுவனும்,*
*கணியன் பூங்குன்றனாரும்*
*எம்வீட்டுக் கூடத்துக்குள்*
*''என்டனா''வழியே குடியமர்வர்!*

*குறுந்தொகையைப்*
*பெருந்தொகையின்றி*
*குறுஞ்செய்தியில்*
*குறிப்பெடுப்போம்!*
*அருந்தமிழின் அற்புதத்தை*
*'அன்டிரோய்ட்'டில்*
*அறிந்திடுவோம்!!*

*அகநானூறை முகநூலினூடே*
*'ஐ' போனில் கற்றிடுவோம்!*
*தகவல்துறை பரிமாற்றத்தைத்*
*தனித் தமிழில் பெற்றிடுவோம்!!*

*உமறுப்புலவர் சீறாமை,*
*உமர்கய்யாம் ருபையாத்தை*
*குமரிக்கண்டம்,*
*கொள்ளிடத்தைக்*
*''கூகுலு''க்குள்*
*கண்டெடுப்போம்!*

*அன்று நீ பிறந்த காலம்*
*''இணையம்''*
*என்றொன்றில்லை - தமிழ்*
*நின்று நிலைத்திடுமோவென்ற*
*நின் நினைப்பில் தவறுமில்லை!*

*இக்காலம் அவ்வாறன்று - இது*
*இருபத்தோராம் நூற்றாண்டு!*
*திக்கெட்டும் விஞ்ஞானந்தான்*
*துறந்திடு அஞ்ஞானந்தான்!!*

*பார் அறியப் பகர்வேன் யான்*
*பல்லாண்டு வாழுமே தமிழ்!*
*பாரதியே அச்சம் தவிர் நீ*
*புவிதனில் சாகாது தமிழ் இனி!!*

**கலைஞர், கவிஞர்**
**எம்.எஸ். அப்துல் லதீப்**

# English for Grade 06,07 & 08

**Activity 01**

*Read the letter and answer the questions.*

No: 210,
Beach Road,Matara.
12/11/2020.

Dear Sanduni,

Hope you are fine. How do you spend the day? I play a lot with my sister and help my mother in the evening. Also I read my textbooks and did work book activities.

I started gardening with my grandfather. It is an interesting hobby. We grew brinjal, chilli and capsicum in our garden. We are expecting to get the harvest next week. It will be enjoyable.

Sincerely,
Madavi

*Look at the letter given answer the questions.*

a). Who wrote this letter?
.................................................................................

b) To whom did she write the letter?
.................................................................................

c) Where does Madavi live?
.................................................................................

d). How does Madavi spend the day?
.................................................................................

e). What is Madavi's new hobby?
.................................................................................

**Activity 02**

*Let's Read with Pictures*

Look at the picture and underline the correct answer.
i. Is it a picture of a house? Yes/No
ii. Is it a rainy day? Yes /No
iii. How many flowers are there? Two/ Three
iv. Is the door open in this house? Yes/ No



**Tom's House:**- This is Tom's house. He is a small boy. He lives with his mother. His house is small and very nice. It has a small garden . Everybody likes his house

*Read it carefully and mark True/False.*

1. This is Jim's house. ( )
2. He lives with his mother. ( )
3. He is a small boy. ( )
4. His house is very big. ( )
5. It has a big garden. ( )

Ms.Premalatha Selvanathan

## Simple Essay

**rabbit**



The rabbit is a domestic animal. But they are also found in the forest. Rabbits dig burrow into the ground and live there. Rabbits usually graze into grass fields, and to hide from their predators, they go to their dug burrow. They are popularly called 'Bunny.' Its body is oval-shaped, having a neck and head on it. He has four legs, of which two are small, and two are big helps him in the running fast. And his sturdy legs help him in jumping as he can jump very far. He has two bright eyes, which help him to be safe from his predators. Rabbit is a vegetarian or herbivorous animal that eats grass, fruits, leaves, vegetables, etc. They usually graze in grass fields for a long time. The life span of the rabbit is almost 8 to 10 years. Rabbits are very active from daytime to evening.

# ஆலமரம் தந்த மாற்றம்!



நீலிபுரம் என்னும் ஊரில் நெடுமாறன் பண்ணையார் என்னும் செல்வந்தர் வசித்து வந்தார். அவருக்கு ஏராளமான விளை நிலங்கள் இருந்தன. ஆடம்பரமான பங்களாவும் இருந்தது. விவசாய நிலத்திலும், பங்களாவிலும் நிறைய பேர் வேலை செய்து வந்தார்கள்.

அங்கு வேலை செய்வோருக்குக் கூலியைத் தவிர கூடுதலாக பத்து பைசா கூடத் தரமாட்டார். கோயில் திருவிழா என்று ஊரில் உள்ளவர்கள் நன்கொடை கேட்டுச் சென்றாலும், குறைவான தொகையே கொடுப்பார். எச்சைக் கையால் காக்கை ஓட்டாத அவரை கஞ்சன் என்றே ஊர் மக்கள் அழைத்தனர்.

நெடுமாறன் பண்ணையார் எங்கு சென்றாலும் தன் குதிரை வண்டியில் தான் செல்வார். ஒரு நாள் குதிரை வண்டியில் பக்கத்து ஊருக்குச் சென்றபோது, வண்டியின் அச்சாணி உடைந்து போக, வண்டி ஓட்டுபவன் அதைச் சரி செய்ய முயன்றான். அப்போது பண்ணையார் ஆலமரத்து நிழலில் சற்று நேரம் இளைப்பாறினார்.

அப்போது அந்த ஆலமரத்தில் பல பறவைகள் அழகான கூடு கட்டியிருப்பதைக் கண்டார். கிளைகளில் அணில்கள் அங்குமிங்கும் ஓடி பழுத்திருந்த பழங்களைப் பறித்துப் பசியாறுவதையும் கண்டார். மரத்தின் கீழே உதிர்ந்து கிடந்த காய்ந்த சருகுகளை வெள்ளாடுகள் மேய்வதைக் கண்டார்.

அந்த ஆலமரத்து நிழலில் வழிப்போக்கர்கள் சிலர் படுத்துத் தூங்குவதையும் கண்டார். மூதாட்டி ஒருத்தி சுள்ளிகளைப் பொறுக்கி சேகரிப்பதையும் கண்டார். ஒரு கிளையில் பூத்திருந்த பூக்களில் வண்டுகளும், வண்ணத்துப் பூச்சிகளும் தேன் அருந்தி மகிழ்வதையும் கண்டு ரசித்தார்.

அப்போது அவர் சிந்தனையில் இந்த மிகப்பெரிய ஆலமரம் தனக்காக இல்லாமல் மற்றவர்களுக்காக நிறைய பலன் தரக்கூடியதாக இருக்கிறது. இந்த மரத்தால் மனிதர்கள் மட்டுமின்றி ஏராளமான உயிரினங்களும் பயன்பெறுகின்றன.

எல்லாருக்கும் எல்லாமும் தரும் இந்த ஆலமரம் போல தான் இல்லாமல் தன்னுடைய செல்வங்களைத் தான் மட்டுமே வைத்து வாழ்வது முறையா? என்று அவரது கல் மனம் சற்று நெகிழ்ந்து கேள்வி எழுப்ப, அந்த மனமே அது முறையல்ல என்ற பதிலையும் தந்தது.

உடனே மனம் மாறினார் பண்ணையார். தன் பங்களாவுக்கு வந்ததும் தன் செல்வங்களைத் தன்னிடம் கூலி வேலை செய்வோருக்கும், ஏழைகளுக்கும் வாரி வழங்கினார். அவர் மனம் என்றும் இல்லாத மகிழ்ச்சியில் திளைத்தது.

பண்ணையாரின் மனமாற்றத்தை கண்டு மக்கள் வியப்படைந்தனர். காரணம் தேடினர்.

ஆனால், தன் மன மாற்றத்திற்கு ஆலமரம்தான் காரணம் என்பது பண்ணையாருக்கு மட்டுமே தெரிந்த உண்மை

# விடுகதைகள்



1.இவனைக் கொண்டு சரியென்றாலும் அழிக்கலாம், தவறு என்றாலும் அழிக்கலாம். யார் இவன்?
2.ஆட்டுவித்தால் ஆடுவான், ஆட்டாவிட்டால் தொங்கிக் கொண்டு கிடப்பான் அவன் யார்?
3.மண்ணை வைத்து வீடு அமைப்பான், மரத்தை அரித்து உணவு சமைப்பான். அவன் யார்?
4.சிதறிக் கிடக்குது அழகான புள்ளிகள், அதை வைத்துக் கோலம் போடத்தான் ஆளில்லை அது என்ன?
5.அழகிக்கு வரும் அதிசய வியாதி, பாதி நாள் குறைவாள், பாதி நாள் வளர்வாள் அவள் யார்?
6.இந்தக் கோட்டையை ஆள அரசன் இல்லை. ஆனால் பகல் காவல்காரன் ஒருவன், இரவுக் காவல்காரன் ஒருவன் இருக்கிறார்கள் அவன் யார்?
7.நீ பார்த்தால் இவனும் பார்ப்பான், நீ சிரித்தால் இவனும் சிரிப்பான், பைத்தியக்காரன் அல்ல அவன் யார்?
8.கழற்றிப் போட்ட சட்டையை ஒருநாளும் மீண்டும் அணிய இவனுக்கு மனம் வராது அவன் யார்?

**விடைகள்**
1.ரப்பர், 2.ஊஞ்சல், 3.கரையான், 4. நட்சத்திரக் கூட்டம், 5.நிலா,
6. பரந்த வானம், சூரியன், சந்திரன், 7. முகம் பார்க்கும் கண்ணாடி, 8.பாம்பு


# சொல் ஜாலம்

கீழே உள்ள குறிப்புகளைக் கொண்டு, சொற்களைக் கண்டு பிடித்து, கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் வரிசைக்கு ஒன்றாக சொற்களை நிரப்பவும். ஒவ்வொரு வரிசையிலும் வட்டமிட்டுக் காட்டப்பட்டுள்ள கட்டத்தில் உள்ள எழுத்துகளை எடுத்து ஒன்றாகக் கோர்த்தால் அரச பரம்பரையைச் சேர்ந்த ஒருவரைக் குறிக்கும் சொல் கிடைக்கும். விடைக்குப் போகாமல் கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்...

| | | | | |
|---|---|---|---|---|
| ○ | | | | |
| | | | ○ | |
| ○ | | | | |
| | ○ | | | |
| ○ | | | | |

1. ஒரு குழு அல்லது அமைப்பை இப்படியும் அழைப்பார்கள்.
2. முதல் தேதியானால் அப்பா கொண்டு வருவது...
3. அஞ்சாதவன், அசராதவன், திறமையானவன்...
4. கல்வித் தேவதை...
5. இப்படி இருந்தால், கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் சேர்க்கலாம்...

விடை:
கட்டங்களில் வரும் சொற்கள்
1. இயக்கம், 2. சம்பளம், 3. வல்லவன், 4. சரஸ்வதி, 5. சிக்கனம்.
வட்டங்களில் சிக்கிய எழுத்துகள் மூலம் கிடைக்கும் சொல் : இளவரசி.





# கடதாசி அலங்காரம்

**தேவையான பொருட்கள்**
- விருப்பமான நிற A4 பேப்பர்
- கம் அல்லது பசை




# 6 வித்தியாசங்களை கண்டுபிடித்து மகிழுங்கள்...



# சிறுவர் கைவண்ணம்



த. ய்சோதரன்
தரம் - 10
பாடசாலை - யா,
இளையதம்பி
இந்து
வித்தியாலயம்

Copyright